கழக
வெளியீடு



தமிழ் இலக்கிய வரலாறு

தமிழ் இலக்கிய வரலாறு

ஆசிரியர் :
எம் ஆர் அடைக்கலசாமி, எம் ஏ,
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
இலயோலாக் கல்லூரி, சென்னை

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
79, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை-1.

1982

1982 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD.,

கிளைகள் :

திருநெல்வேலி-6. மதுரை-1 கோயமுத்தூர்-1.
கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

கழக வெளியீடு : ககசுகு

முதற்பதிப்பு (ஆசிரியர்): சனவரி, 1960
முதற்பதிப்பு (கழகம்): ஆகஸ்ட்டு 1976
மறுபதிப்புகள் :
மார்ச்சு 1981, திசம்பர் 1981, மே 1982.

THAMIZH ILAKKIA VARALAARU

அப்பர் அச்சகம், சென்னை - 600 001. (II/1)



மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

டாக்டர் மு. வரதராசனார்

M.A., MO L., PH.D.,

அவர்கள் அன்புடன் அளித்த

அணிந்துரை

தமிழ் இலக்கியம்பற்றிய வரலாறு இலக்கியக் கல்விக்கு இன்றியமையாதது. ஆதலின், சென்னைப் பல்கலைக் கழகத்தார் B. A., B. Sc., வகுப்புகளில் தமிழ் கற்பவர்க்குப் பொதுவான தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய அறிவு வேண்டும் எனப் பாடத் திட்டம் அமைத்துள்ளனர். இதுவரையில், இலக்கிய வரலாறாக வந்துள்ள நூல்கள், புலமை பெறுவார்க்கும், ஆராய்ச்சி செய்வார்க்கும், துணையாக உள்ளனவே அல்லாமல், மாணவர்க்கு உதவி செய்வனவாக இல்லை. அவ் வகையில் உதவி புரியும் நோக்கத்தோடு திரு. எம். ஆர். அடைக்கலசாமி, M. A., இந் நூலை இயற்றியுள்ளார். அந் நோக்கம் நன்கு நிறைவேறியுள்ளது என்பது என் கருத்து.

இந் நூலில், தமிழ் இலக்கிய வரலாற்றைச் சங்க காலம் முதல், இன்றைய நிலை வரையில், சில காலங்களாகப் பொருத்தமுற வகுத்துக்கொண்டு விளக்கியுள்ளார். அவ்வக்காலத்து நூல்களைப்பற்றி மாணவர்க்குத் தேவையான அளவிற்குக் குறிப்புக்களையும், விளக்கங்களையும் தந்துள்ளார். நூலின் சிறப்பியல்பு விளங்கத்தக்க வகையில், ஆங்காங்கே சில பாட்டுக்களையும் தந்து சுவை புலப்படுத்தியுள்ளார். நூலாசிரியர் சிலரின் காலத்தை வரையறை செய்யுமிடத்துக் கருத்து வேறுபாடுகள் உள்ளவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு, இயன்ற வரையில், நடுநிலையாக இருந்து உண்மையை விளக்கியுள்ளார்.

நூல், நல்ல வகையில் பாகுபாடும், விளக்கமும் பெற்றுத் தெளிவாக அமைந்துள்ளமையால், இந் நூலாசிரியர் திரு. அடைக்கலசாமியின் முயற்சி வெற்றிபெறும் என்று நம்புகிறேன்.

மு. வரதராசன்.

என்னுரை

கடல் கோளும் கறையானும் அழித்தது போக எஞ்சிய தமிழ்ச் செல்வங்களையெல்லாம், அனைவர்க்கும் புரியும் முறையில் அச்சேற்றி, இன்று தமிழகமெங்கும் பரப்பிய பெருமை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரையே சாரும்.

தமிழகமெங்கும் கல்லூரி மாணவர்கள் மத்தியில், சென்ற பதினைந்து ஆண்டுகளாகச் சீர்படப் பரவி நன்கு வேர்விட்டுத் தழைத்துள்ள நூல், நான் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்று நூல். இந் நூலை 1976 ஆம் ஆண்டு தங்கள் வெளியீடாகக் கொணர்ந்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர், இந்த ஆறுண்டுக் காலத்தில் அடுத்தடுத்து நான்கு பதிப்புகளை அச்சேற்ற விரைவது, இந்நாலின் செல்வாக்கையும், கழகத்தாரின் செயல்திறத்தையுமே நன்கு பறைசாற்றுகின்றது.

இன்று வரும் இப் புதிய பதிப்பு, ஒரு திருந்திய பதிப்பு!

என் உள்ளத்தை அள்ளிய வள்ளுவர், ஓர் அறவோர் மட்டும் அல்லர்; கற்பனைத் திறம் மிகுந்த ஓர் அற்புதக் கவிஞரும் ஆவார் என்பதற்கான ஒரு கட்டுரையை இப் பதிப்பிலே இணைத்துள்ளேன்

சிலம்பை இயற்றிய இளங்கோவடிகள் எத்தகைய காலச் சூழ்நிலையில் வாழ்ந்திருப்பார் என்பது இன்றுவரை தீராத சிக்கலாகவே உள்ளது; அறிஞர்கள் மத்தியில் எழுந்துள்ள அத்தகைய சிலப்பதிகாரச் சிந்தனைகளையெல்லாம் ஒன்று திரட்டி இப் பதிப்பிலே மிகச் சிறப்பாகவே சேர்த்துள்ளேன்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் மிகுதியும் கதை இலக்கியமே. இக் கதை இலக்கியத்தின் இரு கூறுகள் சிறுகதையும், நாவலுமே. அவற்றின் வளர்ச்சியை மிகமிக விரிவாகவே இப் பதிப்பிலே எழுதியுள்ளேன்.

மிகுதியும் திருந்திய இப் பதிப்பு, மாணவச் செம்மல்களுக்கு மிகவும் பயன்படும் என்று உளமார நம்புகிறேன்.

ஆசிரியன்

அடைக்கலம்

பதிப்புரை

இலக்கிய வரலாறுகள்—இலக்கிய ஆராய்ச்சிகள்—இலக்கியத் திறனாய்வுகள் என்ற பெயர்களில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நூல்கள் பல வெளிவரக் காண்கின்றோம்.

ஒரு மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கு இப்படிப்பட்ட நூல்கள் தேவையே யெனினும் இவை இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுவோர்க்கும் திறனாய்வு செய்வோர்க்கும், ஆராய்ச்சிக் கட்டுரைகள் (Thesis) எழுதுவோர்க்கும் மட்டுமே பயன் படத்தக்கன. ஆனால், கல்லூரிகளில் இளங்கலை பயிலும் மாணவர்கள், அதிலும் தமிழ் மாணவர்கள் இதுதான் தமிழ் இலக்கியம்—இவைதாம் தமிழ் இலக்கியங்கள்—இவைதாம் அவற்றின் வரலாறுகள் என்று திட்டவட்டமாகவும், தெளிவாகவும் புரிந்துகொள்ளவும், புரிந்துகொண்டவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவும் ஒரு நூல் தேவையன்றோ?

அதுதான் 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் இந் நூல். இதனைத் திரு. அடைக்கலசாமி, எம். ஏ, அவர்கள் மாணவர்க்குப் பயன்படும் வகையில், 'சங்க காலம்' முதல் இற்றை நாள் இலக்கியங்கள் ஈறுகப் பல தலைப்புக்களில் தொகுத்தும் பகுத்தும் எழுதியுள்ளார்.

இதன் பல பதிப்புக்கள் முன்னரே வெளிவந்துள்ள போதினும், இப் பதிப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டும், விடுபட்ட செய்திகள் சில சேர்க்கப்பட்டும் தலைப்புக்களும், உட்டலைப்புக்களும், செய்திகளும் கூடுமான வரையில் தூய தமிழில் ஆக்கப்பட்டும், மாணவர்கள் விரும்பிக் கற்கும் வகையில் செம்மைப்படுத்தப்பட்டும் உள்ளன. கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் இதனை ஏற்றுப் போற்றித் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை புரிவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார்.

உள்ளுறை

தமிழ் இலக்கிய வரலாறு

1. தோற்றுவாய்

இலக்கியம் என்றால் என்ன ?

அறிந்த கருத்துக்களையும், உணர்ந்த உணர்ச்சிகளையும் அளந்து உரைப்பதற்குப் பயன்படும் கருவியே மொழியாகும். அம் மொழி பேசும் மக்களின் முடிந்த கொள்கைகளையும், முதிர்ந்த குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டு திகழும் இயல்புடையதுதான் இலக்கியம்.

இலக்கிய வளம் இல்லாத மொழி, மலர் பூக்க இயலாத மலட்டுக் கொடியாகும்.

''கற்பனையை அறிவிற்குத் துணையாகக் கையாண்டு, இன்பத்தை உண்மையோடு இணைத்துக்கூறும் கலையே இலக்கியக் கலையாகும்'' என, அறிஞர் ஜான்சன் வகுத்துரைக்கின்றார்.[1]

அறிவே அடிப்படை; கற்பனை அதன் துணை. உண்மையே உள்ளீடு; இன்பமே அதன் விளைவு'' என்கின்றார்.

இத்தகைய இயல்புமிக்க இலக்கியங்கள் பல்வற்றை ஈன்றெடுத்த பெருமை, நம் தாய்மொழியாகிய தமிழ்மொழியைச் சாரும்.

அவ் விலக்கியங்கள் அரும்பி மலர்வதற்கு அடிப்படையாக விளங்குபவை, அவற்றைத் தோற்றுவிக்கத் துணையாக இருந்த நிலமும், நாடும், அந் நாட்டில் வாழ்ந்த மக்களின் வளமும் வாழ்வும் ஆகும்.

எனவே, இலக்கியங்கள் மலர்ந்து வளர்ந்த வரலாற்றை முறையாகக் கற்கும் முன்னர், அவற்றின் தாயகமான தமிழ

1. Poetry is the art of uniting pleasure with truth by calling imagination to the aid of reason.—Dr. Johnson.

கத்தின் பழமைமையயும், அதில் பிறந்து சிறந்த தமிழ் இனத்தின் பொருமைமையயும் ஒன்றன்பின் ஒன்ருகக் காணபோம்.

1. தமிழகத்தின் பழைமை

வேறு பல இடங்களிலிருந்து தமிழ்மக்கள் இங்குக் குடியேறியவர்கள் என்ற கருத்தை மறுத்து, 'தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழக மக்கள், தமிழகத்திலேயே பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த ஆதிமக்களே ஆவர்' என இன்றைய ஆராய்ச்சியாளர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். "தமிழகத்தில் உள்ள ஆறுகள், அருவிகள், குன்றுகள், நகர்கள், குக்கிராமங்கள் அனைத்திற்கும் வழங்கும் தூய தமிழ்ப் பெயர்களே, தமிழ்மக்களின் பிறந்தகம் தமிழகமே ஆகும் என்ற உண்மையை வலியுறுத்தும் சான்றுகள் ஆவன" என்றும் உரைப்பர், சர் ஜான் ஈவான்ஸ் என்ற மேனாட்டு அறிஞர். தமிழகத்தின் பழைமைபற்றிப் பேசுங்கால் "மனித இனமே, தென்னிந்தியாவிலிருந்தே தோன்றியிருத்தல் வேண்டும்; மக்கள், உலகம் முழுவதும், இங்கிருந்தே பரவியிருத்தல் வேண்டும்" எனக் கூறுகிருர் டாக்டர் கிரியர்ஸன். டாக்டர் பர்குஸன் போன்ற ஆராய்ச்சியாளர்களும் இக் கருத்தையே ஆதரித்து மொழிகின்றனர்.

2. தமிழ் இனத்தின் பெருமை

இத்தகைய பழம் பெருமை வாய்ந்த தமிழக மக்கள் விந்திய மலையைத் தாண்டி வடநாட்டோடும், மேனாட்டோடும், கலங்கட்டிக் கடல் கடந்து கிரேக்க ரோம நாடுகளோடும், வணிகம் நடத்திப் புகழ் பெற்றுள்ளனர். பர்மா, மலேயா, இலங்கை, இந்தோ சீனம் போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பலவற்றை வென்று அரசாட்சி செய்தும் உள்ளனர்; அரசு, வணிகம் முதலியவற்ருல் தமிழக மக்கள் வெளிநாடுகளில் நிலைநாட்டியிருந்த செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் வரலாற்று ஏடுகள் சான்றுகளோடு பரக்கப் பேசுவதைக் காணலாம். அவற்றைப் பல பகுதிகளாகக் காண்போம்.

தமிழகமும் வட இந்தியாவும்

வரலாறு அறியாக் காலத்திற்கு முன்பே தமிழகத்திற்கும் வடஇந்தியாவிற்கும் பல்வேறு வகையான உறவுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு ஏற்பட்ட உறவால் இருநாட்டு மக்களும் ஒருவரையொருவர் நன்கு அறிந்து பல்வேறு குறிப்புக்களை எழுதி வைத்துள்ளனர்.

இலக்கியச் சான்றுகள்

[1]வால்மீகி தமது இராமாயணக் காப்பியத்தில் தென்னகத்தை ஆளும் முடியுடை மூவேந்தரைப்பற்றிக் கூறுகிருர். அவர் குறிப்பிடும் "கவாடம்" என்பது, பாண்டியர்களுடைய தலைநகரான கவாடபுரத்தைக் குறிப்பதாகும் எனத் தலை சிறந்த வடமொழி உரையாசிரியராகிய கோவிந்தாராஜர் அறிவிக்கிருர். திரௌபதியின் திருமண விழாவிற்குச் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஒருசேர வந்ததுடன், தருமன் நிகழ்த்திய ராஜசூய வேள்வியைக் கண்டுகளித்தனர் என்றும் பாரதத்தின் பழம்பெரும் காப்பியமான மகாபாரதம் கூறுகிறது.

ஐவருள் ஒருவரான அருச்சுனன், மணிப்பூர் மன்னனின் மகளான சித்திராங்கதையை மணந்தனன்; அம் மங்கை பாண்டிய மன்னனின் மகளாவள்; அம் மணிப்பூர் தென்னகத்தைச் சேர்ந்த மணலூராகும் என வடமொழி வாணர்கள் இயம்புகின்றனர்.

பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்ற சேர அரசன் பாரதப் போரில் பங்கு பெற்ற படைவீரர்களுக்கு உணவளித்தான் என்று புறநானூறு மொழிகின்றது. சோழ அரசர்கள், பாரத வீரர்களுக்குச் சோறு அளித்தனர் எனக் கலிங்கத்துப் பரணி சிறப்பித்துப் பாடுகிறது. இவ்வாறு தொன்று தொட்டு வரும் பழம்பெருங் குடியினர் சேர, சோழ, பாண்டியர்கள் என்ற

---

1. ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணி விபூஷிதம்
யுத்தம் 'கவாட'ம் பாண்டியனாம்.........
—வால்மீகி இராமாயணம், கிட்கிந்தா காண்டம்.

உண்மையைப் பரிமேலழகரும், தமது உரையில் கூறிச் செல்லுவதைக் காணலாம்.

வரலாற்றுச் சான்றுகள்

கி. மு. 4ஆம் நூற்றாண்டில் வடநாட்டை ஆண்ட சந்திரகுப்தரின் அமைச்சரான சாணக்கியர், கபாடபுரத்துறையில் குளித்த முத்தின் வகையைப் "பாண்டிய கவாடகம்" என்று தம் நூலாகிய அர்த்த சாத்திரத்தில் எழுதுகிறார். [1]பாடலிபுரத்தைப்பற்றியும் அந் நகரையாண்ட நந்தர்கள், [2]மௌரியர்கள்பற்றியும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

கி. மு. 350இல் வாழ்ந்த வடமொழி இலக்கணப் பேரறிஞராகிய காத்தியாயனர், சோழ பாண்டிய அரசர்களைப்பற்றித் தம் நூலிலே குறிப்பிடுகிறார். கி. மு. 150இல் வாழ்ந்த பதஞ்சலி என்பார், காஞ்சிபுரத்தைப்பற்றியும், கேரளத்தைப்பற்றியும் கூறுகிறார். கி. மு. 273—232இல் இந்தியாவை ஆண்ட பேரரசரான அசோகர், தம்மெல்லைக்கு உட்படாமல் 'சோழ பாண்டிய கேரள புத்திரர்கள்' தனியரசு புரிவதாகத் தம கல்வெட்டுக்களிலே குறித்திருக்கிறார்.

எனவே, இக் குறிப்புக்கள், தமிழகத்திற்கும் வடநாட்டிற்கும் பன்னெடுங் காலத்திற்கு முன்பே நெருங்கிய தொடர்பிருந்தது என்பதைத் தெளிவாக உணர்த்துவதை அறியலாம்.

தமிழகமும் தென்கிழக்கு ஆசியாவும்

கி. பி. 11ஆம் நூற்றாண்டில், ஒரு சோழ அரசன் சுமத்திராவின் மேல் படையெடுத்தான் என்ற உண்மையை, அந் நூற்றாண்டைச் சேர்ந்த லுபாடுவா (Lubadu) கல்வெட்டு கூறுகிறது. கி. மு முதல், இரண்டாம் நூற்றாண்டுகளிலேயே

1. பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர் சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை – (அக. 245)

2. முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர் – (அக. 281)

சுமத்திராவிற்கும் தமிழகத்திற்கும் இடையே தொடர்பு ஏற்பட்டுள்ளதென, வரலாற்று அறிஞர்கள் இயம்புகின்றனர். சயாம் நாட்டை ஆளும் அரச குடும்பத்தினரின் அவையைச் சார்ந்த அந்தணர்கள், இராமேசுவரத்திலிருந்து சென்று குடியேறிய தமிழ்மக்களே ஆவர். இவர்கள் அந்நாட்டு ஆலயங்களில், தமிழகக் கோயில்களில் அன்றுடம் நடைபெறும் சடங்குகளையும், விழாக்களையுமே இன்றும் கொண்டாடுகின்றனர். தமிழ்ப் பாசுரங்களான திருப்பாவை, திருவெம்பாவைப் பாக்களைக் கோயில்களிலும் மன்னர்களின் முடிசூட்டு விழாக்களிலும், மற்ற நகரக் கொண்டாட்டங்களிலும் பாடி மகிழ்கின்றனர். இன்றும் சயாம் நாட்டில் வழங்கிவரும் இராமாயணக் கதையில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் தமிழ் மொழிச் சொற்களாக விளங்குவதைக் காணலாம். இந் நாட்டு மக்கள் மணிமேகலையைக் கடல் தெய்வமாகக் கருதி வழிபடுவது அக் மக்கள்மீது தமிழ்மொழி கொண்டிருக்கும் ஆதிக்கத்தையே வலியுறுத்துவதாகும்.

மொழியோடு தமிழகத்துச் சிற்பக்கலையும் மாமல்லபுரத்திலிருந்து சயாம் நாடு சென்றுளதென வங்க வரலாற்று ஆசிரியர் மஜும்தார் கூறுகின்றார். இந்நாட்டு மக்கள், சோழர் காலக் கலையைக் கற்று எண்ணற்ற செப்புச் சிலைகளையும், பல்லவர் காலக் கலையைப் பின்பற்றிக் கணக்கற்ற விட்ணுபடிவங்களையும் வடித்துள்ளனர். இன்றும் அந்நாட்டுப் பொருட்காட்சிசாலைகளில் அநேக அகத்தியர் கணேசர் உருவங்கள் அமைந்த சிற்பங்களையும் சிலைகளையும் கண்ணுக்கு விருந்தாக வைத்திருப்பதைக் காணலாம்.

இந் நாடுகளில், தமிழகச் சமயமான சைவமதம் பெருவழக்காக உள்ளது; இலிங்க வழிபாட்டு முறை பெரிதாக நடைபெறுகிறது. எல்லா நாடுகளிலும் சிறப்பாக, இந்தோனேசியாவில் சைவசித்தாந்த தத்துவம் மிகுதியாகப் போற்றப்படுகிறது.

தமிழக மக்கள் மலேயா இந்தோசீனம் போன்ற நாடுகளுக்குச் சென்று, புத்தமதக் கொள்கைகளையும், முகமதிய

மதத்தையும் பரப்பினர் என்பது நம்மில் அநேகருக்குப் பெருவியப்பாக இருக்கும்.

தமிழகமும் மேனுடுகளும்

பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழ்மக்கள மேற்கத்திய நாடுகளான பாபிலோனியா, எகிப்து, சுமேரியா, இத்தாலி, கிரேக்கம் முதலியவற்ருேடு அரசியல் வணிகத் தொடர்பு கொண்டு விளங்கினர். தமிழக வணிகர்கள் அகில், சந்தனம், வாசனைப்பொருள்கள், முத்துக்கள், பொன், வைரம், மஸ்லின் துணிகள் முதலியவற்றை உலகின் பல பாகங்களுக்கும் கொண்டு சென்றனர். வெளி நாட்டு வணிகர்கள், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி போன்ற தமிழகத் துறைமுகங்களுக்குப் பொன்னும் மதுவும் கொண்டுவந்தனர். யவனர்கள் அழகிய புலிச் சங்கிலிகள், பாவை விளக்குகள் போன்றவற்றையும் போர்ப் பொறிகளையும் தமிழகத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். சிலர், தமிழ்நாட்டு மன்னர்களிடம் தங்கிப் பணிபுரிந்தனர். பலர் தமிழகத் துறைமுகங்களிலே கூட்டம் கூட்டமாகத் தங்கி வாழ்ந்தனர்.

கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சிறப்பாக விளங்கிய சுமேரிய தேசத்து அரசர்களின் தலைநகரமான, "ஊர்" என்னும் பகுதியில் நமது தமிழகத்தைச் சார்ந்த தேக்கு கிடைத்துள்ளதென வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். கி. பி. முதல் நூற்ருண்டில் வாழ்ந்த ஸ்டிராபோ என்ற புகழ் பெற்ற யாத்திரிகர், பாண்டிய மன்னனெருவன் உரோமப் பேரரசரான அகஸ்டசு சீசரிடம் தூது ஒன்று அனுப்பியதாகக் குறிப்பிடுகிருர். கி. பி. 60இல் எழுந்த (ஆசிரியர் பெயர் தெரியாத) பெரிப்ளூஸ் என்ற வரலாற்று நூல் தமிழ்நாட்டைப் பற்றியும், தமிழ்நாட்டு வணிகத்தைப்பற்றியும் விரிவாகக் கூறுகிறது. இத்தாலிய நாட்டினர், நமது நாட்டு வணிகப் பொருள்களுக்கு ஈடாக 55,000.000 உரோம நாணயங்களை அஃதாவது 75, 000, 000 ரூபாய்களை வழங்கி நாட்டை வறுமைக்கு

ஆளாக்கிவிட்டனர் என, கி. பி. முதல் நூற்றுண்டில் வாழ்ந்த டாலமி என்பவர் வருந்திக் கூறுகின்ருர்.

இவ்வாறு தமிழ்மக்கள் வட நாட்டோடும் மேனுட்டோடும் கிழக்கிந்திய நாடுகளோடும் கொண்டிருந்த அரச, வணிக உறவு பண்டைத் தமிழகத்தின் பழம் பெருமையை நன்கு நிலைநாட்டக் காணலாம்.

நிலத்தின் பழைமையையும், இனத்தின் பெருமையையும் அறிந்த நாம், இனி, தமிழ்மொழியின் சிறப்பைக் காண் போம்.

3. தமிழ்மொழியின் சிறப்பு

உலகில் சிறப்போடு வழங்கிய உயர்தனிச் செம்மொழி களில் (classical languages) தமிழ்மொழியும் ஒன்ருகப் போற்றப் படுகிறது. ஆனல், கிரேக்கம், சமக்கிருதம் போன்ற மொழிகள் எல்லாம், வழக்கு இழந்தோ, அன்றி, முற்றிலும் சிதைந்தோ ஒழியப் பழைமைக்கும் பழைமையாய், புதுமைக்கும் புதுமையாய், இருவழக்கும் பெற்று, இலக்கிய வளமும் கொண்டு என்றும் குன்ருத சீரிளமைத் திறத்தோடு இன்றும் விளங்குவது, காலத்தால் மூத்த கன்னித் தமிழ் ஒன்றே யாகும். அத்தகைய பழைமையும், வளமையும் கொண்ட தமிழ் மொழியில் தோன்றிய இலக்கியங்கள் உலகச் சிறப்புடையன வாகும்.

உலகப் பேரிலக்கியங்களோடு ஒப்பிடத்தக்க உயர்வு பெற்றுத் திகழ்பவை தமிழ்மொழியில், சிறப்பாக, சங்க இலக்கியங் களில் அமைந்த அகத்துறைப்பாக்கள் (Love poetry) என அறிஞர்கள் நவிலுகின்றனர்.

தமிழ்மொழியில் வழங்கும் அறத்துறை இலக்கியங்கள் (The ethical poetry) போன்று உலகில் வேறு எங்கணும் இல்லையென்று மேனுட்டறிஞர்களாகிய பெசுகி, போப் முதலியோர் வியந்து மொழிகின்றனர்.

மனித உள்ளத்தைப் புனிதப்படுத்தும் மாண்புமிக்க எண் ணற்ற பக்தி இலக்கியங்கள் (Literature of devotion) தமிழ்மொழி

யில் சிறந்து காணப்படுவதுபோல், உலகில் வேறு எம் மொழியிலும் இல்லை. வணிகத்தின் மொழி ஆங்கிலம் என்றால், தூதின் மொழி பிரஞ்சு என்றால், காதலின் மொழி இத்தாலியம் என்றால், தத்துவத்தின் மொழி செருமானியம் என்றால், உலகிலே பக்தியின் மொழி தமிழாகும் எனப் பறைசாற்றுகிறார் தமிழ்த் தூதுவர் தனிநாயகம் அடிகள்.

சைவர்களும், வைணவர்களும், சமணர்களும், புத்தர்களும், கிறித்தவர்களும், முகமதியர்களுமாகத் தங்கள் தங்கள் சமய இலக்கியங்களைப் படைத்து மகிழ்ந்த ஒரே உலக மொழி, தமிழ் மொழி ஒன்றேயாகும். பழம் பெருமை வாய்ந்த லத்தீனுக்கோ வடமொழிக்கோகூட இத்தகைய சிறப்பு அமைந்தது இல்லை.

திராவிட புத்தமதத்தின் தலைசிறந்த சமயக் காப்பியமான மணிமேகலை தமிழ்மொழியில் அமைந்திருப்பது, தமிழ் இனத்திற்கே பெருமை தருவதாகும்.

இந்தியாவின் தலைசிறந்த தத்துவஞானிகளாகிய சங்கரர், இராமானுசர், இராமானந்தர் ஆகிய மூவரும் தென்னிந்தியாவில் தோன்றியவர்களாவர். இவர்கள் தமிழக மக்களின் சிந்தனைக்குப் பெரிதும் கடமைப்பட்டவர்கள் என்று "டாக்டர் ஆல்பர்ட் சுவைட்ஸர்" "இந்திய சிந்தனையும் அதன் வளர்ச்சியும்," (Indian Thought and its development) என்ற தமது நூலில் குறிப்பிடுகிறார்.

உலகியலறிவை உணர்த்தும் சிறப்பில், திருக்குறளுக்கு ஒப்பான இலக்கியம் உலகிலேயே வேறு எதுவும் இல்லையென்று, இவ்வறிஞரே ஆணித்தரமாக அறிவிக்கின்றார்.

தமிழ்மொழியின்கண், உயர்திணையில், ஆண் பெண் அடிப்படையில்தான் பால் பாகுபாடு செய்வது வழக்கம். ஆனால், வடமொழியிலும், இன்னும் பல மேனாட்டு மொழிகளிலும் சொல்லை அடிப்படையாக வைத்தே பால் பாகுபாடு செய்வது விந்தையாக இருக்கும். அந்தப் பாகுபாடும், காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டேயிருக்கும். இவ்வாறு தமிழ்மொழியில் அறிவின் அடிப்படையில் அமைந்த திணை, பால் பாகுபாட்டைப் பேரறிஞர் கால்டுவெல் பெரிதாகப் பாராட்டுகின்றார்.

"தமிழ்மொழியில் வரும் சுட்டுவினைப் பெயர்களின் அழகான தத்துவார்த்தமான ஒழுங்குமுறை உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை; இவ் வொழுங்குமுறை செம்மையாக அமையப்பெற்ற மொழி, தமிழ்மொழி ஒன்றே" எனவும், "ஏகார, ஓகாரங்கள் வினைப் பொருளில் வருதல், திராவிட மொழிகளைத் தவிர வேறு எந்த உலக மொழியிலும் இல்லை; அவை வடமொழிக்கே தெரியாதவை" எனவும், அறிஞர் ராபர்ட் கால்டுவெல் வியந்து கூறுகின்றார்.

இத்தகைய பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட தமிழ் மொழியின் தொன்மையையும் ஓரளவு காண்போம்.

4. தமிழ்மொழியின் தொன்மை

தமிழ்மொழியினின்றும் தெலுங்கு மொழி, சங்க காலத்திலே பிரிந்துவிடக் கன்னடமொழி கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் பிரிந்திருக்கக்கூடும். ஏனென்றால், இந் நூற்றாண்டில் வாழ்ந்த செயங்கொண்டார், தெலுங்குந் தமிழும் கலந்த மொழியே கன்னடமாகும் எனத் தெளிவாகக் கூறுகின்றார். "வடகலை தென்கலை, வடுகு, கன்னடம், இடமுள பாடையர் தோன்றினராயினும்" என்று கூறிய கம்பர், மலையாளமொழியைக் குறிப்பிடாமை, அம் மொழி மிகப் பிற்காலத்தில் தோன்றியதென்ற உண்மையை எடுத்துரைப்பதாகும். இவ்வாறு பிரிந்த தென்னிந்திய மொழிகள் எல்லாம், வடமொழியோடு ஒன்றாகக் கலந்து, தத்தம் இயல்பை அறவே இழகக, இன்றுவரை தனித்தன்மைபெற்றுத் தூய்மையாகத் திகழும் இந்திய மொழி தமிழ்மொழி ஒன்றேயாகும்.

வடமொழியிலிருந்து சொற்கள் தமிழ்மொழியில் கலந்தாலும், அவை முற்றிலும் வடிவம் மாறித் தமிழோடு தமிழாகத் திரிந்துவிட்டன. "உலகம்" "ஐப்பசி" "புரட்டாசி" போன்ற சில வடமொழிச் சொற்கள், இவ் வுண்மைக்குத் தக்க சில எடுத்துக்காட்டுக்களாகும்.

தமிழ்மொழியின் தொன்மை குறித்துக் கால்டுவெல் சில சான்றுகள் காட்டுகின்றார்.

பழங்கன்னடம், மலையாளம், துளு, கோண்டு, துதம், கூ போன்ற பல மொழிகள் பெரிதும் தமிழ்மொழியை ஒத்துள்ளன.

திராவிட மொழிகளில் வழங்கும் சொற்கள் பலவும், தமிழ் மொழியில் வருகின்றன.

கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் வழங்கும் நாடுகளில், மிகப் பழைமையானவையாகக் கருதப்படும் கல்வெட்டுகள் யாவும், வடமொழியில் விளங்கத் தமிழ்நாட்டில் மட்டுமே பழங் கல்வெட்டுகள் தூய தமிழில் அமைந்துள்ளன.

கி. பி. 7, 8 ஆம் நூற்றுண்டுகளில் எழுதப்பட்ட மலையாள மொழிக் கல்வெட்டுகள் தமிழ்மொழியின் இலக்கண இயலையும், மரபுச் சொற்களையும் தழுவி விளங்குவதை நோக்க, மலையாள நாட்டில் அப்பொழுது அரியாசனமொழி தமிழாகவும், பேச்சு வழக்கு மொழி, மலையாளமாகவும், வழங்கியிருத்தல் வேண்டுமெனக் கால்டுவெல் குறிப்பிடுகிருர்.

தொல்காப்பியர் காலத்திலேயே "செந்தமிழ்" என்ற பாகுபாடு ஏற்பட்டமை, தமிழ்மொழியின் தொன்மையை நன்கு வலியுறுத்துவதாகும்.

இத்தகைய சிறப்பும் தொன்மையும் மிக்க தமிழ்மொழியில் தோன்றிய இலக்கியங்களின் பழைமைபற்றிக் கூற முனைந்த ஜே. பிளாக் (J. Block) என்ற மேனுட்டறிஞர் "ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு, தெலுங்கு மொழியில் இலக்கியம் இல்லை, பழங் கன்னடத்தில் இலக்கிய நூல்கள் ஐந்நூறு ஆண்டுகட்கு முன்புதான் தோன்றின. ஆனுல், தமிழ்மொழியில் தோன்றிய இலக்கிய நூல்களோ, மிக மிகப் பழைமையானவையாகும்" என்று எடுத்துரைக்கின்ருர்.

5. தமிழ் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

சங்க காலம் (கி. மு. 3000—கி. பி. 100)

பழந்தமிழ் நாட்டு மக்கள், வேற்று நாட்டாருடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்பே, தமிழ் இலக்கியம் தோன்றி வளரத் தொடங்கியது. அதனால், பழந்தமிழ் இலக்கியம் பிற நாட்டு இலக்கியத்தின் கலப்போ, சார்போ இல்லாமல் தமிழகத்தின் சொந்தக் கலையாய்ச் சங்ககாலத்தில் வளர்ந்த தெனலாம். தமிழ்மக்களின் அன்றாட வாழ்க்கை நெறியையும், நாட்டின் இயற்கை வளத்தையுமே அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியங்கள் திகழ்ந்தமையால், அவை அகப்பொருள் இலக்கியங்களெனவும், புறப்பொருள் இலக்கியங்களெனவும் இருவகைப்பட்டு எழுந்தன. 'எட்டுத் தொகை' 'பத்துப் பாட்டு' என்ற ஒப்பற்ற இலக்கியங்கள் இக்காலத்து எழுந்தனவாகும்.

இவ் விருவகை இலக்கியங்களுக்கும் முந்திய நூலாக விளங்கும் சிறப்பினையுடையது 'தொல்காப்பியம்' என்ற இலக்கண நூலாகும்.

சங்கம் மருவிய காலம் (கி. பி. 100—500)

சமணமும், பௌத்தமும் தமிழகத்தில் காலூன்றி வேர் விட்டுத் தழைத்த காலத்தில், வடவர் வழக்கும், வாழ்க்கை முறையும் பெருவழக்காயின. புராணக் கதைகளும் மக்களிடையே பரவ முற்பட்டன. இத்தகைய பிற மரபுகள், பண்டைத் தமிழர் வாழ்க்கை நெறியோடு கலந்து மயங்கிய காலத்தில், 'சிலப்பதிகாரம்' 'மணிமேகலை' ஆகிய இரட்டைக் காப்பியங்கள் மலர்ந்தன.

கி. பி. மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில், அந்நியரான களப்பிரர் படையெடுப்பால், தமிழர் ஆட்சி தகர்ந்தது. தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழர் நாகரிகம் தாழ்வுற்றது.

தமிழ் வாழ்வு குலைந்த நிலையில், அறவொழுக்கங்களையே பெரிதாகப் போற்றும் நீதிநூல்களும் எழுந்தன. இவற்றைப் "பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்" என்பர். உலகப் புகழ் வாய்ந்த *திருக்குறளும் இந் நூல் வகையில் சார்ந்ததாகும். சங்க மரபு தழுவிய அகப்புற நூல்களும், இத் தொகை நூல்களில் இல்லாமல் இல்லை.

பல்லவர் காலம் கி. பி. (600 800)

பல்லவர்கள் படையெடுப்பால், தமிழகத்தில் களப்பிரர்கள் ஆட்சி மறைந்தது. பிற மதங்களான சைன, புத்த மதங்களின் மேல் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு, சைவ வைணவ மதங்களை மன்னர்களும் மக்களும் போற்றி வளர்க்க முற்பட்டனர். இத் தகைய காலத்தில் பக்தி இலக்கியங்களும், நாலாயிர திவ்வியப் பிரபந்தமான வைணவ இலக்கியங்களும் தோன்றித் தமிழைப் பக்தி மொழியாக்கின.

சோழர் காலம் (கி. பி 800 – 1200)

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு தொடங்கி, பதின்மூன்றும் நூற்றாண்டுவரை, தமிழகத்தை மட்டுமன்றித் தென்கிழக்கு ஆசியா முழுவதையும் வென்று ஆதிக்கம் செலுத்திச் சோழர்கள் அரசாண்டனர். தமிழ்வாழ்வு தலைதூக்கிய இக்காலத்தில் பெருங்காப்பியங்களும், சிறு காப்பியங்களும், இதிகாசங்களும், புராணங்களுமாக எண்ணற்ற நூல்கள் தோன்றின. இக் காலத்தில் உரையாசிரியர்கள் பலரும் தோன்றித் தமிழ் உரை நடைக்கு வழி காட்டினர்.

நாயக்கர் காலம் (கி. பி. 1200—1600)

சோழர்கள் வீழ்ச்சிக்குப் பின்னர் நாயக்க மன்னர்கள் ஆட்சியைக் கைப்பற்றி நாடாண்டனர். இவர்கள் காலத்தில் பிரபந்த நூல்களே (சிற்றிலக்கியங்களே) பெருவழக்காகத் தோன்றின. காளமேகமும், குமரகுருபரர், சிவப்பிரகாசர்

*மறைமலையடிகள் முதலியோர் கருத்துப்படி திருவள்ளுவர் காலம் 2000 ஆண்டுக்கு முற்பட்டது.

போன்ற புலவர்களும் நூல்கள் இயற்றித் தமிழ்ப் பயிரைச் செழுமைகுன்ருது இக் காலத்தில் வளர்த்தனர்.

ஐரோப்பியர் காலம் (கி. பி. 1600—1946)

எனினும், ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர்தான் தமிழ் இலக்கியத்தில் புத்துணர்ச்சியும், மறுமலர்ச்சியும் ஏற்பட்டன எனலாம்; வாழ்க்கையோடு ஒட்டிய கவிதைகளைப் பாரதி போன்ருேர் படைத்துத் தந்தனர். வேதநாயகம் பிள்ளை போன்ருேர் புதின இலக்கியத்திற்கு வித்திட்டனர். மேடை நாடகங்கள் நாடெங்கும் அரங்கேறின. பத்திரிகைகள் தோன்றிச் சிறு கதைகளையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் ஆதரித்து வளர்த்தன. அறிவியல் புதுமைகளான வானெலியும் திரைப்படமும் தோன்றி முத்தமிழும் வளரத் தொண்டாற்றின.

இவ்வாறு, ஒவ்வொரு காலத்திலும் தோன்றிய இலக்கிய வகைகளை, இனி விரிவாகக் காண்போம்.

உ. சங்க காலம்

(கி. மு 300—கி. பி. 100)

முன்னுரை

தமிழகத்தின் வடஎல்லை வேங்கடமாகவும், தெற்கெல்லை குமரி முனையாகவும், கிழக்கு மேற்கு எல்லைகள் கடல்களாகவும் விளங்கின. இவ்வெல்லைக்குள் சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு, தொண்டைநாடு, கொங்குநாடு எனப் பல நாடுகள் இருந்தன. சேர, சோழ, பாண்டிய நாடுகளை முடிமன்னர் களும், பிற நாடுகளைக் குறுநில மன்னர்களும் ஆண்டனர்; "தமிழகத்திலேயே பிறந்து வளர்ந்து தாமும் தமிழராக இருந்த காரணத்தால்தான், தமது மொழியும் நாட்டுமொழியு மாகிய தமிழைத் தம் உயிர்போலக் கருதிக் காத்தனர். அம் மொழியில் வல்ல புலவரையும், பாணரையும், கூத்தரையும் பேணிப் போற்றினர்; அவர்கள் வாயிலாக முத்தமிழையும் வளப் படுத்தினர். தமிழக வேந்தர், தம் குடிகளின் நல்வாழ்வு வழு வாது, செம்மையாக ஆட்சி புரிந்ததால், தமிழர் வாழ்வு எல்லாத் துறைகளிலும் வளமுற்று விளங்கியதெனலாம்.

1. சங்கம் நிலவிய காலம்

தமிழக வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியரையும் இன்னும் பல சிற்றரசர்களையும் குறிப்பிடும் சங்க நூல்கள், பல்லவர்களைப்பற்றி ஒரு சிறிதும் குறிப்பிடவில்லை. பல்லவர்கள் கி. பி. 3ஆம் நூற்றாண்டிலிருந்து 9ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆண்டனர். எனவே சங்ககாலம் பல்லவர் கால மாகிய கி. பி. 3ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாக இருக்க வேண்டும். சங்க காலத் தமிழமக்கள், கிரேக்கரோடும், எகிப்திய ரோடும், உரோம மக்களோடும் வணிகத் தொடர்புகொண்டிருந்த தாகச் சங்க நூல்கள் கூறுகின்றன. மெகஸ்தனிஸ், டாலமி,

பிளினி போன்ற மேனுட்டு ஆசிரியர்கள் எழுதிச் சென்ற குறிப்புகள், இவ் உண்மைகளை வற்புறுத்துகின்றன. மேலும் கோயமுத்தூர், சேலம் மாவட்டங்களில் கண்டெடுக்கப்பட்ட கிரேக்க உரோம நாணயங்களும், அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட பண்டைய புதை பொருள்களும் சங்கநூல்கள் கூறும் உண்மைக்குச் சான்று பகருகின்றன. எனவே, திட்டவட்டமாகக் கூற முடியா விட்டாலும், கி. மு 3ஆம் நூற்ருண்டிற்கும், கி. பி 2ஆம் நூற்ருண்டிற்கும் இடைப்பட்ட காலமே சங்க காலமாகும் என ஒருவாறு சுட்டிக் காட்டலாம்.

2. சங்க வரலாறு

பதின்மூன்ரும் லூயி என்ற பிரெஞ்சுப் பேரரசன், தன் மொழியைப் பேணிப் பாதுகாக்க, 1525ஆம் ஆண்டு பிரெஞ்சுக் கலைக் கழகத்தை (Royal Academy of the French) தோற்று வித்தான். ஆனுல், வளமான வாழ்வு கண்ட நம் பண்டைத் தமிழ்மக்களோ, தம் தாய்மொழியாகிய தமிழை வளர்க்க, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே பல சங்கங்களை நிறுவி யுள்ளனர். சிறப்பாகப் பாண்டிய மன்னர்கள், தங்கள் தலை நகரங்களில் சங்கங்களை ஏற்படுத்தித் தமிழ் வளர்த்தனர் என்ற கருத்து, தொன்று தொட்டு வழங்கி வருகின்ற ஒன்ருகும். தமிழ் வளர்த்த முச் சங்கங்களைப்பற்றிய முழுக் குறிப்பையும் முதன் முதலாக எடுத்துணர்த்திய பெருமை 'இறையனுர் அகப் பொருள்' எனும் நூலுக்கு நக்கீரர் எழுதிய உரையையே சாரும். சங்கத்தொகை நூல்களைப்பற்றி விளக்கமாகப் படிப் பதற்கு முன்னர் அந் நூல்கள் அரங்கேறுவதற்குத் துணையாகத் திகழ்ந்த சங்கங்களைப்பற்றிய விவரத்தையும், அவைபற்றிய விவரத்தையும் அவற்றைப்பற்றி விரித்துரைக்கும் இறையனுர் அகப்பொருள் உரையையும் விளக்கமாகக் காண்போம்.

இறையனுர் அகப்பொருள் உரை

இவ் வுரை தோன்றிய வரலாற்றையே, ஒரு கதையாகக் கூறுவர். பாண்டியநாடு பன்னீராண்டு மழையின்றி வருந்திய

போது, ஆதரிக்க முடியாத பாண்டிய மன்னன், தன் அவைக் களப்புலவரை அழைத்து, பஞ்சம் நீங்கும்வரை வளம் படைத்த நாடுகளைத் தஞ்சம் அடைந்து வரும்படி விடுத்தான். சென்ற புலவர்களும் பன்னிராண்டு கழிந்த பின்றை, மழை பெய்து செழிப்புற்ற பாண்டியநாடு வந்தடைந்தனர். அப் புலவர் பெருமக்களில், பொருளிலக்கணம் கற்ற புலவர் ஒருவரும் இலர். அதைக் கண்டு ஆருத் துயரடைந்த பாண்டிய மன்னனின் துயர் நீங்க, ஆலவாய்ப் பெருமானுர் களவு கற்பு என்ற இரு இயல்களும், 60 சூத்திரங்களும் கொண்ட அகப்பொருள் நூலொன்றை மூன்று செப்பேடுகளில் எழுதிப் பாண்டியனுக்குக் கிட்டுமாறு செய்தனர். அதற்குப் புலவர்கள் நாற்பத் தொன்பதின்மரும் உரை இயற்றினர். அவ் வுரைகளில், நக்கீரனுர் உரையே சிறந்ததென உருத்திரசன்மன் எனும் ஐயாண்டு நிரம்பிய மூங்கைப் பிள்ளை தெரிந்தெடுத்ததாகக் கூறுவர். இதுவே, அவ் வுரை தோன்றிய கதையின் சுருக்கமாகும்.

எனினும், நக்கீரர் உரைத்த இவ் வுரை, நக்கீரரால் எழுதப்பட்டதன்று; செவிவழிச் செய்தியாகக் கேட்ட பத்தாம்தலை முறையினரான முசிறி நீலகண்டனுரால் எழுதப்பட்டதென அந் நூலுரையே கூறுகின்றது. பாண்டிய மன்னன் நெடுமாறனைப் பற்றிய 'பாண்டிக் கோவை' எனும் நூலிலிருந்து, மேற்கோட் செய்யுட்களை இந்நூல் எடுத்தாளுவதால், இவ் வுரை, கி. பி. 7ஆம் நூற்றூண்டிற்கு முன்னர்த் தோன்றியிருக்க முடியாதென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

3 சங்கம் பற்றிய ஆராய்ச்சி

உரை கூறும் முச்சங்கங்கள்

இறையனுர் அகப்பொருள்உரை கூறும் முச்சங்கங்களைப் பற்றிய முழு விவரங்களையும் அடியிற் காண்க :

முச்சங்கம்பற்றிய மூவேறு கருத்துக்கள்

அகப்பொருள் உரைகூறும் அம் முச்சங்களைப்பற்றி மூவகை கருத்துக்கள் நிலவுகின்றன.

கி. மு.

சங்கம்	இடம்	ஆதரித்த அரசர்கள்	காலம்	பாடிய புலவர்கள்	சங்க உறுப்பினர்	இயற்றிய நூல்கள்	சில புலவர்கள்
முதல்	கடல் கொண்ட தென் மதுரை	89 காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை	4449	4449	549	பெரும் பரிபாடல் முது நாரை முது குருகு களரியா விரை அகத்தியம்	அகத்தியர் சிவபெருமான் முருகவேள் முரஞ்சியூர்முடி நாகராயர் நிதியின் கிழவர்
இடை	கபாடபுரம்	59 வெண்டேர்ச் செழியன் முதல் முடத் திருமாறன் வரை	3700	3700	59	பெருங்கலி, குருகு, வெண்டாளி வியாழமாலை (அகவல்) அகத்தியம் தொல்காப்பியம் மா புராணம் பூத புராணம் இசை நுணுக்கம்	அகத்தியர் தொல்காப்பியர் மோசி வெள்ளூர்க் காப்பியனார் சிறுபாண்டரங்கன் திரையன் மாறன் கீரந்தை
கடை	இன்றைய மதுரை	49 முடத் திருமாறன் முதல் உக்கிரப்பெரு வழுதி வரை	1850	449	49	நெடுந்தொகை குறுந்தொகை நற்றிணை புறநானூறு ஐங்குறு நூறு பதிற்றுப் பத்து நூற்றைம்பது கலி, பரிபாடல், கூத்து, வரி குற்றிசை பேரிசை அகத்தியம் தொல்காப்பியம்	சிறுமேதாவியார் சேந்தம் பூதனார் பெருங்குன்றூர் கிழார் இளந்திருமாறன் நல்லந்துவனார் மருதனிள நாகனார் நக்கீரனார்

முச்சங்கம் முழுப் பொய்

தமிழகத்தில் "சங்கம் என்ற ஒன்றே இருந்திருக்க முடியாது" என K. N. சிவராஜ பிள்ளை, P. T. சீனிவாச ஐயங்கார் போன்ற ஆராய்ச்சியாளர்கள் ஆணித்தரமாக அறிவிக்கின்றனர். திரு. ஐயங்கார் அவர்கள் குறிப்பிடும் காரணங்களில் சில:

(i) "புத்த சமண மதச் சங்கங்களைப் போன்று மொழி வளர்க்கத் தமிழகத்திலும் பல சங்கங்கள் இருந்தன என்று எடுத்துரைக்கவே இத்தகைய பொய்க் கதைகளைப் புனைந்துள்ளனர்."

(ii) "கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த காஷ்மீர ஆசிரியர் வாசுகுப்தர் சிவசூத்திரம் என்ற நூலைச் சிவ பெருமான் அருளால் பெற்றார் என்னும் கதை, நாட்டில் வழங்க முற்பட்ட காலத்தில்தான், இறையனார் களவியலுரை தோன்றிய கதையும் எழுந்திருத்தல் வேண்டும்" எனக் கருதுகின்றார்.

(iii) "கிடைத்த சங்கத் தொகை நூல்களையெல்லாம் 'குறுந்தொகை,' 'நெடுந்தொகை' என்று தொகுத்துப் பெயரிட்ட பின்னர்தான், இக்களவியலுரை நூல் தோன்றியிருத்தல் வேண்டும்" என்கிறார்.

(iv) "இவ்வுரையாசிரியர் கூற்றுப்படி முதன்முதல் தோன்றியது 'அகத்தியம்' என்ற இலக்கண நூல் என்றால், அதற்கு முன்பே பற்பல இலக்கியங்கள் நிலவியிருக்க வேண்டும்; அவற்றைப்பற்றிய ஒரு குறிப்பையும் இந் நூல் கூறவில்லையே."

(v) "சங்கங்களில் சிவன், முருகன், குபேரன் போன்ற கடவுளர்களும் கலந்துகொண்டனர் என்று கூறுவது கற்பனையே யன்றி வரலாற்று உண்மையாகாது."

(vi) "59 அரசர்கள் 3700 ஆண்டுகளும், 89 அரசர்கள் 4400 ஆண்டுகளும், 49 அரசர்கள் 1850 ஆண்டுகளும் வாழ்ந்தனர் என்பது நம்புதற்குரியன அல்ல; முதற் சங்கத்தில் 4400 புலவர்கள் 4400 ஆண்டுகள் இருந்தனர் என்பதும், இடைச்சங்கத்தில், 3700 புலவர்கள் 3700 ஆண்டுகள் இருந்தனர் என்பதும் ஏற்பதற்குரியனவல்ல; இவ் வுண்மைகள், சங்கம் இருந்த கதை, செயற்கையாகப் புனையப்பட்டது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றனவேயன்றி வேறல்ல எனவும், அறிஞர்கள் இருவரும் எடுத்துரைக்கின்றனர்.

(vii) மேலும், திரு. சிவராஜ பிள்ளை என்பார், "தமிழ் மக்கள் கடல்கொண்ட நாடுகளையும், 49 என்ற எண்ணாலேயே குறிக்கின்றனர்; வேளிர் பரம்பரையும், 49 என்றே கூறுகின்றனர்; அது போன்றே, சங்க உறுப்பினர்களையும் 49 என்றே கணக்கிட்டுள்ளனர்"—இவ்வாறு மொழிவதும் கற்பனையின்பாற் பட்டதேயாகும் எனக் கருதுகின்றார்.

(viii) "பற்பல கிழார்களும், வணிகர்களும் கடைச் சங்க காலத்தில் பாவியற்றும் புலவர்களாக விளங்கியிருக்க அவர்களையெல்லாம் புறக்கணித்து, அந்தணர்கள் பெயரையே களவியல் உரையில் தந்துள்ளமை, அந்த நூல், ஆரிய வல்லாண்மையின் விளைவாகவே எழுந்துள்ளது என்ற உண்மையைத்தான் காட்டுகிறது; அதனால்தான், வடமொழி யெழுத்துக்கள் 49 என்ற அடிப்படையை மேற்கொண்டு சங்க உறுப்பினர்களும் 49 என மொழிந்திருக்கவேண்டும்" எனப் பிள்ளையவர்கள் காரணம் காட்டுகின்றார்கள்.

(ix) "புலவர்கள் ஒன்றுகூடித் தம் புலமையை நிலை நாட்டுதல் என்பது, தற்காலக் கருத்தாகும்; போரும் பூசலுமாயிருந்த அப் போராட்டக் காலத்தில், பன்னாட்டுப் புலவர்கள் ஒன்றுகூடித் தலைமை வகித்துத் தமிழ்வளர்த்தனர்" என்பது நம்புதற்குரியதன்று.

(x) "பண்டைக் காலத்தில் சங்கம் நிலவியதற்கு எத்தகைய ஆதாரமும் இல்லை; 'சங்க இலக்கியங்கள்' என

அழைக்கப்படும் நூல்களிலேயே சங்கம் இருந்து புலவர்கள் ஆராய்ந்ததற்கு, எத்தகைய சான்றுகளும் இல்லை."

(xi) "சங்கம் என்ற சொல்லே, தமிழ்ச் சொல் அன்று."

எனவே, இங்கு "சங்கம் நிலவியதற்கு ஆதாரமே இல்லை" எனப் பல்வேறு காரணங்களைக் காட்டி "முச் சங்கம் இருந்த செய்தி, முழுப்பொய்யாகும்" என இருவரும் வாதாடுகின்றனர்.

ஒரு சங்கம் உண்மை

"முதல் இரு சங்கங்கள் இருந்தன என்பது, நம்ப முடியாத அபூத கற்பனையாகும்" எனத் திரு. சேஷகிரி சாஸ்திரியார், ஶ்ரீராமச்சந்திர தீட்சிதர் போன்ற வரலாற்றுப் பேராசிரியர்கள் கருதுகின்றனர். "உலக வரலாறு கற்ற அறிஞர் எவரும், இவற்றை வரலாற்று உண்மையென ஒரு காலும் ஒப்பார்" என வலியுறுத்திக் கூறுகிறார் திரு. சேஷகிரி சாஸ்திரியார் அவர்கள்.

அதற்கு அவர்கள் கூறுகின்ற காரணங்களுள் சில :

(i) "தொல்காப்பியம் ஒன்றைத் தவிர, வேறெந்த முதற் சங்க நூலோ, இடைச் சங்க நூலோ, எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை;"

(ii) "அகத்தியம் என்ற ஒரு நூலோ, முச்சங்கங்களிலும் அரங்கேறியதாகவும், தொல்காப்பியமோ, இடை, கடை என்ற இரு சங்கங்களிலும் விளங்கியதாகவும், அகப் பொருள் உரை கூறுகின்றது."

(iii) "வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த காளிதாசன், பாரவி, பவபூதி, பாணன், தண்டி ஆகிய வடமொழிக் கவி ஞர்களை யெல்லாம் போசராசன் அவையில், ஒரு காலத்தில் இருந்ததாக வடமொழி வாணர்கள் கூறுவதுண்டு. அது போல, கடைச்சங்க நூலான புறநானூற்றுப் பாக்களைப் பாடிய முடிநாகராயர், வான்மீகியார், மார்க்கண்டேயனார், கோதமனார் போன்ற புலவர்களை முதற் சங்கப் புலவரென

வும், கடைச்சங்க நூலான குறுந்தொகைப் பாவைப் பாடிய பனம்பாரனாரையும், நற்றிணைப் பாவைப் பாடிய முடத்திருமாறனையும் இடைச்சங்கப் புலவரெனவும், களவியலுரை மொழிகின்றது"

(iv) "கடைச்சங்கத்தில், 3 பாண்டிய மன்னர்களே இருந்தனராக உரைநூலார் கூறுகின்றார். ஆனால், உண்மையில் 6 பாண்டிய மன்னர்களும், 6 சோழ மன்னர்களும் செய்யுள் இயற்றினார்களெனக் காண்கிறோம்."

இத்தகைய கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்து பார்க்குங்கால், தமிழகத்தில் முச்சங்கங்கள் அல்ல ஏதேனும் ஒரு சங்கமே நிலவியிருத்தல் கூடும் என்பது தெளிவாகப் புலப்படுகிறதென இவ்வறிஞர்கள் வாதாடுகின்றனர்.

தோன்றும்தோட்டு முன்றே

"இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும், பன்னெடுங்காலத்திற்கு முன்னே வழங்கி வந்த முச்சங்க உண்மையைத்தான் சுட்டிக்காட்டுகின்றாரே யன்றி, ஒவ்வொன்றையும் வரலாற்றுத் தெளிவோடு வரையறுத்துக் கூறுவதாக நாம் கொள்ளுதல் கூடாது; முச்சங்கச் செய்தியும் பரம்பரை பரம்பரையாக வழங்கி வருகின்ற காரணத்தினால்தான், அடியார்க்கு நல்லார், பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள், களவியல் உரைகாரர் கூறுகின்ற கருத்துக்களை மறுப்பின்றி ஏற்றுள்ளனர்" என இக்கூற்றினை ஏற்போர் தமக்கு ஆதாரமாகக் கூறுவர்.

4. சங்கம் இருந்ததற்கான சான்றுகள்

தமிழகத்தில் சங்கம் நிலவியதற்கான நான்கு வகைச் சான்றுகளைக் காண்போம்.

சங்கம் இருந்த கபாடபுரத்தை, வடமொழிக் காப்பிய ஆசிரியர்களான வால்மீகியும், வியாசரும் குறிப்பிடுகின்றனர். கபாடபுரத்தைப்பற்றிச் சாணக்கியரும், தம் நூலில் கூறுகின்றார். முதல், இடைச் சங்கங்கள் கடல்கோளால் அழிந்துவிட்டன. இத்தகைய கடல்கோள்கள், பண்டைக் காலத்தில் திகழ்ந்து பழந்தமிழகத்தின் பல பகுதிகளை அழித்த

உண்மையை, கலித்தொகை[1] சிலப்பதிகாரம்[2] போன்ற பழந் தமிழ் நூல்கள் எடுத்து மொழிகின்றன.

கடல் பகுதியை ஆராய்ந்து கண்ட ஹெக்கல் போன்ற மேனாட்டு அறிஞர்களும் இவ்வுண்மையை வற்புறுத்து கின்றனர்.

முதலிரண்டு சங்கங்கள்பற்றிய முழு விவரங்களையும் தெளிவாகக் கூறுவதற்குப் போதிய சான்றுகள் இல்லை யென்றாலும், சங்கம் என்ற ஒன்று, இருந்துவந்த செய்தியைப் பழந்தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாகக் கூறி வந்துள்ளனர்.

(i) பரம்பரைக் கதைகள்

பாண்டிய அரசன் ஒருவன், கடைச்சங்கத்து உறுப்பின ராக விளங்கிய நாற்பத்து ஒன்பதின்மரின் உருவங்களைச் சிலைகளாகக் கோயில்களில் நிறுவிப் பொய்யாமொழி என் னும் புலவரைப் பாடச் சொல்ல, அப் புலவரின் பா நலத்திலே ஈடுபட்டு, அப் பதுமைகள் தலையசைத்ததாக, இரு பழம் பாக்கள் கூறுகின்றன. பழைய அகவல் பாட்டொன்றும், இவ் வுண்மையை எடுத்துரைக்கிறது. சங்கம் நிறுவிப் புலவர்கள் கூட்டமாக நூல்கள் இயற்றினர் எனப் பெரியபுராணம் குறிக்கிறது. கம்பர் சங்க முத்திரை பெற்ற பின்னரே, தம் காவியத்தை அரங்கேற்றினர், எனக் கதை வழங்குகிறது. வைணவத்தின் இருகூறாக விளங்கும் வடகலை, தென்கலைக் குருபரம்பரைச் செய்திகள் 'திருவாய் மொழி' சங்கப் பலகை ஏறியதெனக் கூறுகின்றன; பழையதும் பிந்தியதுமான இரண்டு திருவிளையாடற் புராண நூல்களும் சங்கப் பலகை தந்த படலம் எனச் சங்கத் தோற்றத்தை. முப்பத்தெட்டுப் பாக்களிலே விரித்துரைக்கின்றன.

---

1. "மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்"
—முல்லைக்கலி.

2. "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள."
—காடுகாண் காதை

(ii) இலக்கியச் சான்றுகள்

1. தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே —புறம் 58.

2. ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை —புறம் 72.

3. பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்
அறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அந்தமிழ் மூன்றும் தெரித்த காலை
—அகநானூறு (உரைப்பாயிரம்)

4. பொத்தி யாண்ட பெருஞ் சோழனையும்
வித்தை யாண்ட இளம் பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று
—பதிற்றுப்பத்து.

5. தமிழ் வையைத் தண்ணம் புனல் —பரிபாடல், 6.

6. சேதுமொழி சித்த செவிசெறு வாக
முதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர்

7. தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மதுரை

8. தொல் லாணை நல்லாசிரியர்,
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவி னெடியோன் —மதுரைக்காஞ்சி.

9. தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை
—சிலப்பதிகாரம்.

10. தென்தமிழ் மதுரை —மணிமேகலை

11. சங்க முகத்தமிழ்
சங்க மலி தமிழ் —திருமங்கையாழ்வார்.

12. நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண் —நாவுக்கரசர்.

13. உயர்மதிற் கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்
—மாணிக்கவாசகர்.

14. தலைச்சங்கப் புலவனார் தம்முன் —சேக்கிழார்.

15. சங்கத்தமிழ் மூன்றும் தா. —ஒளவையார்.

வான்மீகி இராமாயணத்தில், இடைச்சங்கம் இருந்த கபாடபுரத்தைச் சுட்டிப் "பாண்டியனுடைய கபாடத்தைக் காண்பீராக" என்று வானர வீரர்களுக்குக் கூறியதாக அமைந்த பகுதியைக் குறிப்பிடும்பொழுது, கம்பர், "தென் தமிழ்நாட்டு அகல்பொதியில், திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேருவீரேல்" என்று தெளிவாகக் கூறுகின்றார்.

சங்கமிருந்து, புலவர்கள் தமிழ் ஆராய்ந்ததற்கு, இத் தகைய எண்ணற்ற இலக்கியச் சான்றுகளை, நாம் காணலாம்.

(iii) உரையாசிரியர்கள் கூற்று

உரை நூல்களில், முதன்மையான இறையனார் அகப் பொருள் உரை, சங்கம் இருந்த செய்தியை விரிவாக விளக்கி யதைக் கண்டோம்.

"முதல் ஊழி இறுதிக்கண், தென் மதுரை யகத்துத் தலைச்சங்கம்"—என்று வேனிற்காதை உரையிலும், "இரண் டாம் ஊழியதாகிய கபாடபுரத்தில் இடைச் சங்கம்—" என்றும், "கடைச்சங்கம் இரீஇய பாண்டியருள் கவியரங் கேறிய பாண்டியன் மதிவாணனார் நாடகத் தமிழ் நூல்"— எனவும், சிலப்பதிகார உரைப்பாயிரத்திலும், அடியார்க்கு நல்லார் தெளிவாகக் கூறுகின்றார்.

தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த பேராசிரியரும், 'மூன்றுவகைச் சங்கத்து நான்கு வருணத் தொடுபட்ட சான்றோரும் மூன்றுவகைச் சங்கத்தாரும்" என ஐயமற அறிவிக்கின்றார்.

"இந் நூல் செய்த காலத்தில், தலைச்சங்கத்தாரும் இடைச் சங்கத்தாரும் கட்டளையடி பயின்றுவரச் செய்யுள்

செய்தார் என்பது இச் சூத்திரங்களால் பெறுதும்; பின்பு கடைச் சங்கத்தாருக்கு அஃதரிதாகலிற் சீர்வகையடி பயிலச் செய்தார் என்றுணர்க"—எனவும் தொல்காப்பியம் செய்யுளியலுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் நவிலு கின்றார்.

மேற்கூறிய உரையாசிரியர்கள் கூற்றுகள் அனைத்தும், சங்கம் வைத்து மொழி வளர்த்த பெருமைக்கே சான்று பகருகின்றன எனலாம்.

(iv) செப்பேட்டு உண்மை

முன்னர்க் கண்ட சான்றுகள் மட்டுமல்லாமல், கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சின்னமனூர்ச் செப்பேடும்,

மகாபாரதம் தமிழ்ப் படுத்தும்
மதுராபுரிச் சங்கம் வைத்தும்

என ஆணித்தரமாக அறிவிக்கிறது.

ஆகையால், பண்டைக் காலத்திலிருந்து தமிழகத்தில், பரம்பரை பரம்பரையாகப் பயின்றுவரும் பழங்கதைகளும், பைந்தமிழ் இலக்கியச் சான்றுகளும், உரையாசிரியர் கூற்று களும், சின்னமனூர்ச்செப்பேடும், மதுரையில் சங்கம் இருந்த உண்மையை, உறுதிப்படுத்துவதைக் காணலாம்.

5. சங்க நூல்கள்

அகத்தியம்

முற்கூறிய முச்சங்கங்களுக்கும் பொதுவான இலக்கண நூலாகவும், தொல்காப்பியத்திற்கே மூல நூலாகவும் விளங் கிய பெருமையினையுடையது அகத்தியர் இயற்றிய அகத்திய நூல் என்பர். அது 12000 சூத்திரங்களால் ஆகிய விரிவான நூலென்றும், அதில், எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பனவியல், சோதிடம், கந்தருவம், கூத்து என்பனவும், பிறவும், இடம் பெற்று உள்ளன என்றும் தெரிகிறது. இந்நூல் இப்பொழுது

இல்லை. உரையாசிரியர்கள் ஆங்காங்கே கையாண்டுள்ள தாகக் கூறும் சிற்சில நூற்பாக்கள் மட்டுமே, நமக்குக் கிடைத்துள்ளன.

இவ்விலக்கண நூலின் ஆசிரியரான அகத்தியர் 'என்றுமுள தென் தமிழை, இயம்பி, இசை கொண்டவர். காலத்தையும் இடத்தையும் கடந்து விளங்குபவராவர். மக்கள் நிலையிலிருந்து கடவுள் நிலை வரையிலும், தமிழ்மக்களால் பெருமைப்படுத்தப்பட்டவராவர். இன்றைய ஆராய்ச்சியாளர்கள், "அகத்தியர் பலர்; பற்பல காலத்தில் பற்பல இடங்களில் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் சிலர் தமிழர், சிலர் ஆரியராவர்" என ஆராய்ந்து கூறுகின்றனர்.

அகத்தியரின் சீடர்கள் 'அதங்கோட்டாசான், துராலிங்கர், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரனார் கழாரம்பர், அவிநயர், காக்கைபாடினி, நத்தத்தனார், வாமனர், தொல்காப்பியர் என்ற பன்னிருவர் ஆவர்' எனவும், அவர்கள் இயற்றிய நூலே, பன்னிரு படலம் எனவும், புறப்பொருள் வெண்பா மாலை, பன்னிரு படலம் என்ற நூல்களின் பாயிரங்கள் கூறக் காண்கிறோம். இவை தொல்காப்பியரே தலைமாணுக்கராவர் எனச் சிறப்பித்துக் கூறுகின்றன.

தொல்காப்பியம்

நூலின் சிறப்பு

தொல்காப்பியனார் இயற்றிய தொன்மை மிக்க இலக்கண நூலே தொல்காப்பியம் ஆகும். தமிழ்மொழியின் தொன்மையையும், தமிழ் இலக்கியத்தின் பழமையையும் ஒருங்கே எடுத்துக்காட்டும் சான்றாகத் திகழ்வது இத தொல்காப்பியமே. "குறையிலா நிறைவு, அறிவு சால் செறிவு, நிரம்ப வளம் வரம்பு பிறழாமல், வரையறுத்த வடித்த முறை வனப்பு, மொழி வளர்ச்சிக்கென்றும் தளர்ச்சி தராத கட்டமைப்புகளால் ஒப்புயர்வற்ற சிறப்புவாய்ந்த இலக்கண நூல் தொல்காப்பியர் பெயரால் வழங்குகிறது. தமிழில் மட்டு

மன்று; உலகில் நிலவும் பல மொழிகளில் பாராட்டப்பெறும் எல்லா இலக்கணங்களிலும் இல்லாத இயல் வளமும், எழிலும், பயனும், பண்பும் வாய்ந்தது; வேறெந்த மொழி நூலுக்கும் இல்லாத பழைமையும், பெருமையும், அழகும் அருமையும் அமைந்தது'' என்று தொல்காப்பிய நூலின் சிறப்பைச் சோமசுந்தர பாரதியார் வியந்து வியந்து போற்றுகின்றார்.

நூலின் காலம்

எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பதுபோல, இந் நூல் தோன்றுவதற்கு முன்பே இலக்கியங்கள் பல இருந்திருத்தல் வேண்டும். அவை காலப்போக்கில் இறந்துபட்டிருக்கலாம். இத்தகைய நூல்களின் பெயர்களையும், பகுதிகளையும் பிற்கால உரையாசிரியர்கள் மேற்கோளாகக் குறிப்பிடுவது, மேற்கூறிய கருத்தையே, வலியுறுத்தும் சான்றாக உளது எனலாம். தொல்காப்பியர் தமக்குமுன் விளங்கிய ஆசிரியர்களின் நெறியையே தாம் எடுத்துரைப்பதாகக் கூறுகிறார். தொல்காப்பியர் தம் நூலில் ஏறத்தாழ 260 இடங்களில் தமக்கு முன்பு இருந்த அல்லது தம் காலத்தில் வாழ்ந்த இலக்கண ஆசிரியர்கள் பலரைப் பலவாறு குறிப்பிட்டுள்ளார். நூலின் இடையிடையே,

"என்ப—''என்மனார் புலவர்''—''மொழிப''—
''யாப்பென மொழிப யாப்பறி புலவர்''—
"தோலென மொழிப தொன்மொழிப் புலவர்''—

—என ஆங்காங்கு கூறிச் செல்வதாலும், 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலநெறி வழக்கம்' என்றும் தமக்கு முற்பட்ட இலக்கிய மரபைக்குறிப்பிடுவதாலும், அவருக்கு முன்பே பற்பல இலக்கண நூல்களும் இருந்திருக்க வேண்டுமெனத் துணிந்துரைக்க முடிகிறது.

கடைச்சங்க நூல்களுக்கெல்லாம் பிந்தியது தொல்காப்பியம் எனச் சிலர் கருதுகின்றனர். தொல்காப்பிய சூத்திரங்கள் கூறும் விதிக்கும், பெரும்பான்மை சங்க இலக்கிய வழக்கிற்கும், பெருத்த வேற்றுமையுள்ளது என்பதை நாம் மறத்தல்

கூடாது மொழிக்கு முதலில் 'ச'கரம் வருதல் கூடாது எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

(i) ஆனால் சங்க நூல்களில் 'சமழ்த்தல்' 'சவட்டு' 'சதுக்கம்' போன்ற 'ச'கரச் சொற்களும், 'சைவம்,' 'சௌரம்' போன்ற சைகார சௌகாரச் சொற்களும், மொழிக்கு முதலில் அமைந்திருக்கக் காணலாம். அது போன்றே, தொல்காப்பிய விதிக்கு முரணாக 'ஞமலி' 'ஞாவல்' 'ஞிமிறு' 'ஞேயம்' போன்ற சொற்களும் விலக்கப்பெற்ற ஞகர உயிர் மெய்களும், 'யவனர்' 'யூகம்' 'யூபம்' போன்ற சொற்களும் சங்கப் பாக்களில் பயிலக் காணலாம். 'சடை' 'சமம்' 'சகடம்' என்ற சொற்கள் புறநானூற்றிலும் பயின்றுவரக் காணலாம்.

(ii) தொல்காப்பியத்தில் கூறப்பட்டு, பிற்காலத்தில் வழக்கிழந்த சொற்களில் சில:—"அதோளி" "இதோளி" "உதோளி" "எதோளி" என்பனவாம்.

(iii) சங்க இலக்கியங்களில், முன்னிலை தன்மை இரண்டிலும், வியங்கோள் பயின்று வந்துள்ளது. "கள்" எனும் பன்மை விகுதி அஃறிணையில்தான் வரும் எனத் தொல்காப்பியர் கூறுகின்றார். ஆனால், சங்க நூல்களில், உயர்திணைப் பன்மையில் வழங்கி வந்துள்ளது. 'மார்' விகுதியும் மாறியுள்ளது.

(iv) அகத்துறைப் பாக்கள் எல்லாம் கலி, பரி பாட்டுக்களில் மட்டுமே வருதல் வேண்டுமெனத் தொல்காப்பியர் கூற, இதற்கு முற்றிலும் மாறாக, சங்கப்பாக்கள் அகவலிலும் வெண்பாக்களிலும் வந்துள்ளன; பரிபாடல்கள் காதலைக் குறிக்காமல், புறத்திணைப் பாக்களாக விளங்குகின்றன.

(v) தொல்காப்பியம் மரபியலில் வரும் சூத்திரங்கள் பலவும் பிறழ்ந்துள்ளன. எனவே, தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம், சங்க நூல்களுக்கெல்லாம் முந்திய இலக்கண நூல் என்பதே, முற்றிலும் பொருத்தமானதாகும்.

அகத்தியருடைய மாணவர் தொல்காப்பியர் என்று கூறுவதற்குப் போதிய ஆதாரம் எதுவும் இல்லை. அவ்வாறு அவர் மாணவராக அமைந்திருந்தால், தொல்காப்பியப் பாயிரம்

அவசியம் சுட்டியிருக்கும். எனவே, இக் கூற்றை நாம் நம்புவதற்கில்லை. மேலும் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்ற சொற்றொடர் தொல்காப்பியர் வடமொழிப் பயிற்சியுடையவர் என்பதை மட்டும் சுட்டுவதன்றி வேறன்று, எனக் கொள்வதே பொருத்தமாகும். ஓர் இலக்கண ஆசிரியரைச் சைவரென்றும் சமணரென்றும், வாதிடுவது அறிவிற்குப் பொருத்தமன்று.

நூல் அமைப்பு:

இந் நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனும் மூன்று பகுதிகளை உடையது. ஒவ்வோர் அதிகாரமும், ஒன்பது பிரிவுகளைக் கொண்டது. 1610 நூற்பாக்களையுடையது.

முதலில், பொதுவிதிகளைக் கூறிப் பின்னர்ச் சிறப்புவிதிகளை எடுத்துரைத்து, இறுதியில் விடுபட்ட இலக்கண இயல்களைப் புறனடை விதி என வகுத்துக் கூறுவது தொல்காப்பியரின் சிறப்பாகும்.

எழுத்ததிகாரம்

இப் பகுதி[1] ஒன்பது இயல்களைக் கொண்டது. முதன் முதலாக, இலக்கண நூலுக்குரிய எழுத்துக்களின் சிறப்புப் பெயர்களான, முதலெழுத்து, சார்பெழுத்து என்பதையும் முதல் எழுத்தின் வகைகளான உயிர் எழுத்து, மெய்யெழுத்து, சுட்டெழுத்து, வினாவெழுத்துக்களையும், சார்பெழுத்துக்களான, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்பவற்றின் இயல்பையும், அளவையும் எடுத்தோதுகின்றார். பின்னர் மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் வரும் எழுத்துகள் எவை எவை என்பதையும், அடுத்து, அவ் வெழுத்துக்களின் பிறப்பும் புணர்ப்பும் வரிசையும் வகுப்பும் ஆகிய பல இயல்புகளையும், விரித்துரைக்கின்றார்.

1. நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல்.

மிகப் பழங்காலத்திலேயே, மொழிக்கு உறுப்பாகும் ஒலியின் பிறப்பையும், இயல்பையும், திரிபுகளையும், தமிழறிஞர் நன்கு உணர்ந்து பாகுபாடு செய்திருந்தனர் என்பதையே எழுத்ததிகாரம் எடுத்துக்காட்டுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓர் இலக்கண நூல் என்றாலும், இன்றைய மொழி ஆராய்ச்சியாளர் உணர்ந்து போற்றவல்ல நுண்ணிய கருத்துகள் பல, இவ் வதிகாரத்திலே அமைந்துள்ளன.

சொல்லதிகாரம்

இப் பகுதியும்[1] ஒன்பது இயல்களைக் கொண்டது. திணை, பால், எண், இடம் எனும் வகைகளை விளக்கியும் பெயர்களை அவற்றின் வேற்றுமை வகையொடும், வினைகளைத் தெரிநிலை, ஏவல், வியங்கோள் வகையுடன் அவற்றின் முதல், ஈறு, இடைநிலை, சந்தி, சாரியை வேறுபாடுகளெனும் வகை ஆறொடும், பெயர் வினை இரண்டின் எச்சங்களோடும், இடை, உரி, இனவகை பயன் இவையெல்லாம் விளக்கியும், சொல்லின் இலக்கணம் அனைத்தையும் வகுத்துள்ளார். இயற்கை, திரிபு, திசை, வடசொற்கள் நான்கும் அவற்றின் பொருட்கிடை நான்கும், தொகை வகை ஆறும், எச்சம் பத்தும், சொற்களின் மரபும் ஆட்சியும் விளக்கித் தொகுத்துள்ளார்.

சொற்றொடர் அமைப்பையும் போக்கையும், சொற்களின் இயல்பையும், சொல்லிலும், சொற்பொருளிலும் நிகழும் திரிபுகளையும் உணர்த்தும் சிறப்பினையுடையது சொல்லதிகாரம். தொல்காப்பியம் கூறும் திணை விளக்கம் தத்துவப் பெருமை வாய்ந்ததாகும். தமிழில் வடசொல்லை ஏற்பதற்குரிய வரம்பு முறை கூறும் திறமும், புத்தம் புதிய சொற்களைத் தழுவும் இயல்பைக் குறிக்க, "கடிசொல் இல்லை காலத்துப் படினே" என ஆய்ந்து உரைக்கும் அழகும், தொல்காப்பியரின் நுண்ணறிவைப் புலப்படுத்துவதாகும்.

---

1. கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமைமயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல்.

பொருளதிகாரம்

இப் பகுதியும்[1] ஒன்பது இயல்களை உடையது. மக்கள் வாழ்க்கையைப் பொருள் என்பர். இஃது ஆணும் பெண்ணும் அகமொத்து வாழும் அகத்திணை எனவும், மக்கள் கூட்டுறவாக வாழும் புறத்திணை எனவும் இருவகைப்படும். களவு, கற்பு என்ற இருவகை ஒழுக்கமாகவும், கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்ற முப்பிரிவாகவும் அகத்திணை நிகழும். இதில் அன்பின் ஐந்திணையைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை ஒழுக்கங்களாகப் பாகுபடுத்துவர். இவை ஐவகை நிலத்தின் காரணமாகவும் பிறந்தன எனலாம் கூடல் பொருளைக் குறிஞ்சியும், இருத்தற் பொருளை முல்லையும், ஊடற் பொருளை மருதமும், இரங்கற் பொருளை நெய்தலும், பிரிதற்பொருளைப் பாலையும் குறிக்கும். நிலத்தையும் பொழுதையும் குறிக்கும் முதற் பொருளும் அவ்வந் நிலத்துச் செய்திகளைக் குறிக்கும் கருப்பொருளும், மேற்கூறிய ஐவகை ஒழுக்கங்களை உணர்த்தும் உரிப்பொருளும், அன்பின் ஐந்திணைகளில் அடங்கும். திருமணச்சடங்குகள் பிற்காலத்தில்தான் பெருவழக்காயின என்பதைப் 'பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்ற சூத்திரத்தால் அறியலாம். மணம் புரிந்த தலைவன் கல்வி, தூது, பொருள் போர் காரணமாகப் பிரிவதும் உண்டு.

போரறத்தை அடிப்படையாகக்கொண்ட புறப்பொருளை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழுவகைகளாக விளக்கியுள்ளார்.

ஒழுக்கத்திற்கு இயல்பான உள்ளத்து உணர்வு, உடலில் நிகழும் எட்டுவகைத் திறத்தையும்,

> "நகையே அழுகை இளிவரல் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகை"

---

1. அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல்.

என. எண்சுவைகளாக மெய்ப்பாட்டியலில் விளக்குகின்றார். ஆசிரியரின் மெய்ப்பாடுகளைப்பற்றிய ஆராய்ச்சி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. மக்களின் உள்ளத்துணர்ச்சிகளை ஆய்ந்து அவற்றின்படி மெய்யில் தோன்றும் வேறுபாடுகள் 'இவை' எனக் காட்டிய முதல்வர் தொல்காப்பியரே ஆவர்.

பொருளைப்பற்றிப் பேசும் செய்யுளை அணி, யாப்பு, வழக்கு வகை என வகுத்துரைத்துள்ளார் தொல்காப்பியர் உவமை அணி ஒன்றை மட்டுமே கூறுகின்றார். பிற்காலத்தோர் இதனையே பெருக்கி அணி இலக்கணம் என்ற தனி இலக்கணத்தை உருவாக்கிவிட்டனர். தொல்காப்பியர் நால் வகைப் பாக்களையும், பரிபாடல், மருட்பா போன்றவற்றையும் மட்டுமே கூறுகின்றார். பாவினங்களைக் கூறவில்லை. பிற்காலத்தில்தான் அவை எழுந்துள்ள பேச்சு வழக்கிலும் ஏட்டு வழக்கிலும், சொற்கள் பொருளுணர்த்தும் மரபுகளை, மரபியல் எடுத்துரைக்கின்றது. இந்நூலின் இறுதியில் வரும் பல சூத்திரங்கள் பிற்காலத்தில் எழுந்த இடைச்செருகலாகும் என இன்றைய ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்குச் சிறப்பாக இளம்பூரணர் என்பாரும், சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் என்பாரும். பொருளதிகாரத்திற்குப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோரும் நயம்பட உரை எழுதியுள்ளனர். இவர்கள் உரை இன்றேல் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இத் தொன்மையான தொல்காப்பிய நூலின் உட்கருத்தை உள்ளவாறு உணருவதென்பது இயலாத தொன்றாகும்.

பிறமொழிகளில், எழுத்திற்கும், சொல்லிற்கும் மட்டுமே இலக்கணம் அமைய, தமிழில் தொல்காப்பிய நூல், எழுத்தோடும் சொல்லோடும் நில்லாமல், இலக்கியத்தில் அமையும் பொருளுக்கும் ஏற்ற இலக்கண நூலாகவும் விளங்குவது. தமிழ்மொழிக்கு அமைந்த தனிப்பெரும் சிறப்பாகும்.

சங்க கால நூல்கள்

எட்டுத் தொகை

முன்னுரை

கடைச்சங்க காலத்தில் எழுந்த நூல்களைப் பண்டைய இலக்கிய அறிஞர்கள், பாட்டு, தொகை எனப் பாகுபாடு செய்துள்ளனர். அவை பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் ஆகும்.

கவிதை மலர்ந்த தொடக்க காலத்தில், கவிஞர்கள் சிறு சிறு பாக்களை முதலிலும், வரிகள் நீண்ட பாடல்களைப் பின்னருமாகப் பாடியிருப்பர். அவ்வாறு எழுந்த 2,426 தனிநிலைச் செய்யுட்களையும், பாட்டு, அளவு, பொருட்சிறப்புப்பற்றி 'எட்டுத்தொகை' என்று பெயரிட்டுள்ளனர். அத் தொகையில் திகழும் நூல்களின் எண்ணிக்கையைக் காண்போம்.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை.

எனப் பழைய வெண்பா ஒன்று, எட்டுத்தொகை நூல்கள் 'எவை எவை'யென நன்கு தொகுத்துக் கூறுகிறது. அடிவரையறைகளையும் பொருட்சிறப்பினையும், பாவகையினையும் கொண்டே, இந் நூல்களுக்கு இப் பெயரிட்டுள்ளனர்.

அகமும் புறமும்

இவற்றுள், ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை என்ற நூல்கள் அகப்பொருள் பற்றியன. புறநானூறும், பதிற்றுப்பத்தும் புறப்பொருள் பற்றியன. பரிபாடல் என்னும் நூல் அகம், புறம் என்ற இரண்டையும் இணைத்து இனிதெடுத்துரைப்பதாகும்.

பண்டைத் தமிழ்மக்கள் வாழ்க்கையை 'அகம்' என்றும் 'புறம்' என்றும் பாகுபாடு செய்துள்ளனர். "உள்ளமொத்த தலைவனும் தலைவியும், ஊழால் ஒன்றுகூடித் தாம் துய்த்த இன்பம் இத்தகையது" எனப் பிறருக்குப் புலப்படுத்த முடியாததாக விளங்குவது "அகம்" ஆகும். "இத்தகையது" என்று பிறருக்குப் புலப்படுத்தும் இயல்பு வாய்ந்த பிற உணர்ச்சிகளையும், ஒழுக்கங்களையும் கூறுவது, "புறம்" ஆகும்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றை அன்பின் ஐந்திணை என்றும், பொருந்தாக் காதலைப் பெருந்திணை என்றும், ஒருதலைக் காமத்தைக் கைக்கிளை என்றும் அக ஒழுக்கத்தை ஏழு திணைகளாகப் பகுப்பர்.

அவ்வாறே புற ஒழுக்கத்தையும், வெட்சி, வாகை, வஞ்சி, உழிஞை, தும்பை, காஞ்சி, பாடாண் என ஏழு திணைகளாக வகுப்பர்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களும், அகம் புறம் என்ற இவ்விரு பாகுபாட்டிலேயே அடங்கும். இன்பம் 'அகப்பொருளில்' அடங்கிவிட அறமும் பொருளும் வீடும் 'புறப்பொருளில்' ஒன்றிவிடக் காணலாம். எனவே, பண்டைத் தமிழ் அறிஞர்களும் வாழ்க்கையை இருகூருகப் பிரித்ததுபோலவே, இலக்கியங்களையும் 'அகம் புறம்' என்ற இருவகைகளாகப் பிரித்துவிட்டனர்.

அகப்பொருள் பற்றிய ஐந்து நூல்களும் சிதைவு ஒன்றுமில்லாமல், நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ளன. ஆனால், புறப்பொருள் பற்றிய நூல்களில் சில பாடல்கள் அழிந்தும், சில பகுதிகள் மட்டும் சிதைந்தும், பலவற்றில் பாடபேதங்கள் மிகுந்தும் காணப்படுகின்றன. காதல் பற்றிய கவிதைகளை அகப்பொருள் பற்றிய நூல்களில் நுகரலாம். போரைப் பற்றிய பாடல்களைப் புறப்பொருள் பற்றிய நூல்களில் காணலாம். எனவே, சங்கத் தமிழ்ப் புலவர்கள் காதல், வீரம் என்ற இரு பொருள்கள் பற்றிய பாடல்களையே மிகுதியாக இயற்றியுள்ளனர்.

எட்டுத்தொகைப் பாடல்களில், "பெருநிலவேந்தரின் பெருமிதமான போர்த்திறங்களையும், வெற்றிச் சிறப்பையும்

விரித்துக் கூறும் பாக்கள் பல; போரைத் தடுத்துப் புலவர் அறிவு புகட்டுவன சில; வரையாது வழங்கும் வள்ளன்மையை எடுத்துரைக்கும் செய்யுட்கள் பல; வறுமையின் கோரப் பிடிப்பை அச்சமுறச் சித்திரிக்கும் பாடல்கள் பல; மறக்குடி மகளிர் மாண்பைப் புலப்படுத்துவன சில; கடவுள் நன்னெறி காட்டுவன சில; ஐந்திணை அன்பொழுக்கங்களை இன்பம் ததும்ப, விளக்குவன பல. இப் பாடல்களின் இடையே புராணச் செய்திகளும் பிற வரலாற்றுக் குறிப்புகளும் தமிழ்நாட்டுத் தலைநகரங்களைப் பற்றிய பல செய்திகளும் இடம் பெற்றுள்ளன." இத் தொகை நூல்களில் அமைந்த பாக்களைப் பிற்காலத்தில்தான் தொகுத்துள்ளனர்.

இத் தொகையில் அமைந்த பாடல்களை "அகப்பொருள் நூல்" "புறப்பொருள் நூல்" "அகமும் புறமும் கலந்த நூல்" எனப் பாகுபாடு செய்து அவற்றில் அகப்பொருள் தழுவிய நூல்களில், குறைந்த அடிகளைக் கொண்ட பாக்களை முதலிலும், மிகுதியான அடிகளைக் கொண்ட பாக்களை இறுதியிலுமாகக் காண்போம்.

அகப்பொருள் பற்றிய நூல்கள்

1. ஐங்குறுநூறு

செய்திகள்

இந் நூல், மூன்றடி முதல் ஆறடிக்கு உட்பட்ட பாக்களை உடையது. மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை, பாலை என்னும் ஐந்து திணைகளைப்பற்றியும் முறையே, ஓரம் போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் ஆகியோரால் திணைக்கு நூறாகப் பாடப்பட்ட 500 பாட்டுக்களைக் கொண்ட நூலாகும்.

இந் நூலைத் தொகுத்தவர், புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் ஆவர். தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரவிரும்பொறை என்ற சேர மன்னனாவான்.

சிறப்புக்கள்

இந் நூலின் பாகுபாடு ஒருவகையில் சிறப்புடையதாகும். ஒவ்வொரு திணையையும், பத்து வகையாகப் பகுத்து, ஒவ்வொரு வகையிலும் பத்துப்பத்துப் பாக்கள் திகழுமாறு அமைத்துள்ளனர். ஒவ்வொரு பத்தும் தனித்தனியான கட்டுக்கோப்போடு காட்சியளிக்கிறது.

இது, பொருளமைப்பிஞலேயோ, அன்றி இதனுள் அமைந்த பத்துப் பாடல்களிலும் ஆட்சிபெறும் ஏதேனும் ஒரு சொல்லிஞலேயோ, பெயரிடப்பட்டுள்ளது. 'களவன் பத்து' 'மஞ்ஞைப் பத்து' 'தெய்யோப் பத்து' முதலியன சொல்லாட்சியிஞல் பெற்ற பெயர்களாகும். 'பருவம் கண்டு கிழத்தி உரைத்த பத்து' 'தோழி வற்புறுத்த பத்து' முதலியவை பொருளமைப்பால் பெற்ற பெயர்களாகும். 'வேட்கைப்பத்து' 'அன்ஞய்ப் பத்து' முதலியன சொல்லாட்சியும் பொருளமைதியும் பொருந்தியனவாகும்.

மருதத்திணையை முதற்கண் வைத்து உணர்த்தும் நூல் இஃது ஒன்றுதான். குறைந்த அடிகளில், முதல், கரு, உரி என்னும் அகப்பொருள் மூன்றினையும் குறையாது உரைக்கும் சிறப்பினை உடைய நூல் இஃது ஒன்றேயாகும். இந் நூலில் உள்ளுறைநயம் திறம்பட அமைந்துள்ளதுபோல, வேறு எந் நூலிலும் சிறப்புற அமையவில்லை.

ஓரிரு சான்றுகள் :

''அரும்புகள் நிறைந்து அழகாக விளங்கும் காஞ்சி மரக் கிளைகளில் தாவிப்பாய்ந்து விளையாடி, மீண்டும் தண்ணீரில் விழுகின்ற சிறு மீன்களை மிகுதியாகக்கொண்ட மருத நிலங்களுக்குத் தலைவனே!'' என்று பரத்தையை விடுத்து மீண்டும் வீடுதேடி வருகின்ற தலைவனை நோக்கித் தோழி கூறுகின்ருள்:

''நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன்''

என்று தலைவனை வருணிப்பதல்ல அவள் நோக்கம்; அவன் நெஞ்சில் படியவைக்கும் வண்ணம் ஓர் உட்கருத்தை, இப் பாவிலே பதிய வைப்பதுதான் அவள் எண்ணம்.

"பூ மணக்கும் கொம்புகளில், புலால் வீச்சம் அடிக்கும் மீன்கள் துள்ளித் துள்ளிப் பாய்வதுபோலக் காமப் பரத்தையர் கூட்டத்தில் திளைத்த தலைவன், கற்பு மணம் கமழும் தலைவியைத் தீண்ட வருகின்றானே!" என்ற ஓர் உள்ளுறையை, இலைமறை காயாக எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறே "பூந்த கரும்பில் காய்த்த நெல்லில் கழனியூரன்" என்ற வருணனையிலும், கண்ணுக்கு அழகாக, நாவிற்குச் சுவையாக விளங்கும் கரும்புபோலப் புலனுக்கு விருந்தாகப் பொழுதிற்குத் துணையாக மட்டுமே அமைவாள் பரத்தை; ஆனால், இல்வாழும் மனைவியோ, உண்ணும் உணவாக, உயிருக்குத் துணையாகப் பயன்படும் கழனி நெல்போல விளங்குவாள், பூப்பதோடு ஒழிவது கரும்பு; பூப்பதோடு நில்லாது கதிரும் காய்த்து வாழ்வுதரும் வளமுடையது நெல். அதுபோல நிகழ்கால நேயத்திற்கும் வருங்கால வாழ்விற்கும் மனைவியே ஏற்ற வாழ்க்கைத் துணையாவாள் என்ற ஒப்பற்ற கருத்தையும் உள்ளுறையாக உணர்த்துகின்றார்.

இந் நூலில் 'குரக்குப் பத்து' 'கேழற் பத்து' 'கிள்ளைப் பத்து' 'மயில் பத்து' எனப் பாக்களுக்குப் பெயர் வைத்து விலங்குகளையும், பறவைகளையும் கருப் பொருளாக அமைத்து, அகப்பொருள் கருத்துக்களை அழகாக எடுத்துரைப்பதைக் காணலாம். ஊர்வன, திரிவன, நிற்பன, ஆறு, மலை, ஆழி, பொய்கை போன்ற இயற்கைக் காட்சிகளைத் திட்ப நுட்பமாகச் சிற்சில சொற்களால் அழகுற வருணிப்பதில், இந்நூல் ஈடு இணையற்றது.

தாய்முகம் நோக்கியே ஆமைக்குட்டிகள் வளரும் என்ற உண்மையையும், முதலைகள் தம் குட்டிகளையே கொன்று தின்றுவிடும் என்ற கொடுமையையும் இந் நூலின் வாயிலாக அறியலாம்.

இந் நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது. இந்நூலில் வரும் சில நயங்களைக் காண்போம்.

வளர்த்த மகளைப் பிரிந்த துயரம் தாளாமல், ஒரு செவிலித் தாய் வருந்துகின்ற காட்சி மிக அழகாக வருணிக்கப்படு

கிறது; தன் மகள் கொஞ்சி விளையாடிய பாவை ஒன்றை எடுத்து, 'என் பாவை விளையாடும் பாவையன்றோ இது' என வருந்துகிறாள்; தன் மகள் வளர்த்த கிளியைக் கண்டு, 'இது என் பைங்கிளி ஏத்திய பைங்கிளியன்றோ' எனக் கலங்குகிறாள். பூவைப் புள்ளைக் கண்ட நிலையில், 'என் பூவைக்கு, நாவை அசைத்து இனிய சொல்லின்பம் அளிக்கும் பூவையன்றோ இது' எனவும் புலம்புகிறாள்; இவற்றைக் 'காண்டொறும், காண்டொறும் கலங்க நீங்கினளோ வென் பூங்கணோளே" என ஓலமிட்டு உரைக்கின்றாள்.

மற்றொரு காட்சி: திருமணமான தலைவி பிறந்தகத்திற்கு மீண்டும் வருகின்றாள். அத் தலைவியின் காதலின்ப வாழ்க்கையை அறிய ஆசையுற்ற தோழி, தலைவியைத் தழுவிக் கொண்டு, "ஆம், உன் தலைவர் நாட்டிலே, அருந்துவதற்கேற்ற நீர்கூட இல்லையாமே! அங்கு நீ எவ்வாறு வாழ்ந்தாய்?" எனக் கிண்டலாகக் கேட்கின்றாள்; "ஆம் நீ கூறியது உண்மை தான், மனிதர்கள் அருந்துவதற்கேற்பச் சரியான நீர்நிலைகூட அங்கு இல்லைதான். இருப்பவையும், இலையும் தழையும் விழுந்து அழுகி, மான் போன்ற காட்டுவிலங்குகள் குடிப்பதாலே கலங்கியும் கிடக்கின்றன; ஆனால், உண்மை என்னவென்றால், அருவருக்கத்தக்க அச் சிறு பள்ளத்து நீரும், நம் தோட்டத்தில் விளைந்த தேனுடன் கலந்த தீம்பாலினும் மிகமிக இனிமையாக இருக்கின்றது" என்று தலைவி உடனே பதிலிறுத்தாள். தலைவன்பால் அவள் கொண்டிருந்த அன்பு எத்தகைய உயர்ந்த அன்பு! நினைக்க நினைக்க நெஞ்சம் தெவிட்டாத அப் பாடல் இதுதான்:

> அன்னாய்! வாழிவேண் டன்னை! நம் படப்பை
> தேன்மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு
> உவலைக் கூவற் கீழ
> மானுண் டெஞ்சிய கலுழி நீரே! (ஐங். 203)

2. குறுந்தொகை

செய்திகள்

இந் நூல், நாலடி முதல் எட்டடி வரையுள்ள ஐந்திணை தழுவிய 400 பாக்களைக் கொண்டது. இவற்றை 205 புலவர்கள் பாடியுள்ளனர். இந் நூலைத் தொகுப்பித்தவன் பூரிக்கோ; தொகுத்தோன் உப்பூரி குடிகிழாராக இருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

சிறப்புக்கள்

உரையாசிரியர்களால் மிகுதியாக மேற்கோள் காட்டி எடுத்தாளப்பெற்ற சங்க நூல், இதுவேயாகும். காவியங்களிலும், வரலாறுகளிலும் இடம்பெற்ற பெருமை வாய்ந்த இறையனார், வெள்ளி வீதியார், ஆதிமந்தியார் போன்றோர் பாடிய பாடல்கள் இத் தொகை நூலில்தான் உள்ளன.

பொருளுக்கு ஏற்ற பொருத்தமான உவமைகளை இந் நூலில் எண்ணற்றுக் கையாண்டுள்ளனர். கட்டிய மனைவிக்கு அஞ்சிக் கைகட்டி வாழுகின்ற ஆடவனுக்கு, "கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை" என புலவர் ஒருவர் உவமை கூறுகிறார். பிற்காலத்தார், ஆசிரியர் பெயர் தெரியாத சில பாடல்களுக்கு இத்தகைய உவமைகளையே ஆசிரியர் பெயராக அமைத்துவிட்டனர். அணிலைப் பாடிய புலவரை "அணிலாடு முன்றிலார்" என்றும், காக்கையைச் சிறப்பித்துப்பாடிய புலவரைக் "காக்கை பாடினியார்" என்றும், குப்பைக் கோழிச் சண்டையை வருணித்துப் பாடிய புலவரைக், "குப்பைக் கோழியார்" எனவும் பெயரிட்டுள்ளனர். இப் பாட்டுக்களால் அப் புலவர்கள் பெற்ற சிறப்புப் பெயர்கள்தாம் மற்ற தொகை நூல்களிலும் வழங்குகின்றன. எனவே, தொகை நூல்களில் குறுந்தொகை தான் முதன்முதலில் தொகுக்கப்பட்ட நூலாக வேண்டும் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

பறவை, விலங்குகளின் வாழ்க்கையைப் (கருப்பொருளை) பின்னணியாக வைத்து ஆடவர் பெண்டிர் உள்ளத்தெழும் அக உணர்ச்சியை நயமுறச் சித்திரித்துக் காட்டுவதில் இந் நூலுக்கு இணை இதுவேதான். "ஆண் குரங்கு இறந்துபடக்

கைம்மை நோன்பு உய்க்க முடியாமல் மலையின் உச்சியில் ஏறி உயிர் துறக்கும் மந்தியின் அன்புடை நெஞ்சின் இயல்பைக் காட்டித் தலைவியின் நெஞ்சு, அதைவிட நெகிழ்வும் நேசமும் உடையது என்று தோழி சுட்டிக் காட்டும் பாடல் மிக அருமையானதாகும்.'' (குறுந். 69).

அன்பால் இணைந்த இரு நெஞ்சங்கள் இன்போடும் நிறைவோடும் நடத்தும் இல்லற வாழ்வின் இனிமையை எடுத்துக் காட்டும் பாடலை, இலக்கிய உள்ளம் படைத்த எவராலும் எளிதில் மறக்கமுடியாது. கட்டித்தயிரைத் தன் காந்தள் மெல்விரலால் பிசைகின்றாள்; அந் நேரத்தில், உடுத்திய ஆடை நழுவவே, தனது மற்றொரு கரத்தால் அதனை எடுத்து மீண்டும் அணிகின்றாள்; குவளை மலர் போன்ற தன் கண்களில் குய்ப்புகை கமழுமாறு அம் மோர்க்குழம்பைத் தாளிதம் செய்கின்றாள். ஏன் இவ்வளவு இன்னலுற்றுத் தலைவி சமைக்கின்றாள் தெரியுமா? அவள் உணவு பரிமாறும்பொழுது ஆர்வமாய் உண்ணும் கணவன் ''மிக இனிது'' ''மிக இனிது'' என்று அன்பு மலரக் கூறுவானும்; அவ் வின்பச் சொற்களைக் கேட்டு மகிழத்தான், ''இத்தகைய இன்னலுறுகின்றாள் தலைவி'' எனக் கவிஞன் கூறுகின்றான்.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
''இனிது'' எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே!

(குறுந். 167)

இவ்வாறு அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை அனுபவ மெருகோடு உரைக்கும் எண்ணற்ற பாக்கள் இந் நூலிலே உள்ளன.

சொல்லால் பெயர் பெற்ற சில புலவர்கள் :
'செம்புலப் பெயல் நீரார்' [40] 'நெடுவெண்ணிலவினார்' [47] 'விட்டகுதிரையார்' [74].

தலைவன்பால் தான் கொண்ட காதலைத் தலைவி, நிலத்தினும் பெரியதாக, வானினும் உயர்வாகக் கருதுகின்றாள். இருவர் நெஞ்சமும் அன்புப் பிணைப்பாலே, செம்புலப் பெயல் நீர்போல இரண்டறக் கலந்துவிடுகின்றன. பின்னர்த் தலைவன் 'இல்லோர் வாழ்க்கை, இரவினும் இழிந்தது; உள்ளது சிதைப் போரை, உளர்' என்று உரைக்கமாட்டார்கள் என எண்ணிப் பொருள் தேடச் செல்லுகின்றான்.

தலைவன் பிரிவு குறித்துத் தலைவி வருந்துகிறாள். அந் நிலையில், தலைவன் செலவைத் தடுத்து, தலைவியின் துயரைத் தணிவிக்கும் முறையில், "வீறுள்ள ஆடவர்க்கு வினைதான் உயிர்" என்று அவர் கூறினார்; உண்மை. ஆனால், 'மனையிலே வாழுகின்ற மகளிர்க்கு ஆடவர்தாம் உயிர் ஆவர் என்று நமக்கு உரைத்தவரும் அவர்தாமே; எனவே தோழி! நீ அழாதே! அவர் செல்லார்: தம் செலவை எப்படியும் தவிர்ப்பார்" என்று இருவர் உள்ளத்திற்கும் ஏற்ற முறையில், தோழி கூறுவதாக அமைந்த பாட்டு, தோழியின் நாவன்மைக்கு மட்டும் அன்று, பண்டைத்தமிழர் நாகரிகத்திற்கும் தக்க சான்றாகும்.

> வினையே! ஆடவர்க்கு உயிரே: வாணுதல்
> மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்: என
> நமக்குரைத் தோரும் தாமே
> அழாஅல் தோழி! அழுங்குவர் செலவே. (குறுந். 135)

இத்தகைய அன்போடு இல்வாழ்க்கையை முறைப்படி நடத்தினால், இதனினும் இனிய வாழ்வு வேறு உண்டோ?

> மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு
> மருவின் இனியவும் உளவோ? (குறுந். 322)

எனத் தலைவி வினவுகின்றாள்.

தலைவியின் உயர்ந்த அன்பைப்பற்றித் தோழி உரைக்கும்பொழுது, "தாய் அடிக்கும் தருணத்திலும் குழந்தை வாய்விட்டு 'அம்மா' என்று அலறுவதைப்போல, நீ இன்னல் விளைவிக்கும் வேளையிலும், நின் எல்லைக்கு உட்பட்டே விளங்குவாள்" (குறுந். 397) என்று உரைக்கின்றாள். எத்தகைய பேரன்பு!

3. நற்றிணை

செய்திகள்

இந் நூல், ஒன்பது அடிமுதல் பன்னிரண்டு அடிவரையி லுள்ள ஐந்திணை தழுவிய 400 பாடல்களைக் கொண்டது. இவற்றை 275 புலவர்கள் இயற்றியுள்ளனர். இந் நூலைத் தொகுப்பித்தவன், பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்னும் பாண்டிய அரசனாவான். தொகுத்தவர் யாவரென்று தெரியவில்லை.

இந் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வாழ்ந்த பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்கள் இந் நூலுக்கு உரையெழுதி யுள்ளார்கள்.

சிறப்புக்கள்

நற்றிணைப் பாடல்கள், பொருள் முடிபு காண்பதற்குக் கடினமான அகநானூற்றுப் பாடல்களைப் போன்று பெரியன வும் அல்ல; பொருள் ஆழங்காணாது அலையும்படியான குறுந் தொகைப் பாக்களைப் போன்று மிகச் சிறியனவும் அல்ல. இடை நிகரவான பாடல்களே, இந் நூலில் அமைந்துள்ளன.

குறுந்தொகைப் புலவர்களைப் போன்று சில நற்றிணைப் புலவர்களும் பாடல்களால் பெயர் பெற்றுள்ளனர். 'இளமைக் காலத்திலேயே இன்பத்தைத் துய்க்கவேண்டும் என உணர்ச்சி ஒருபக்கமும், பொருளைத் தேடினால்தான் இன்பத்தைப் பெற முடியும் என அறிவு மற்றொரு பக்கமுமாகத் தலைவனின் உள் ளத்தை வருத்துவது. 'தேய்ந்த புரியையுடைய பழங்கயிற்றின் இருபக்கங்களையும் வலிய இரு யானைகள் பற்றி இழுப்பது போலுள்ளது' என உவமிக்கப் பாடிய புலவரைத் 'தேய்புரிப் பழங்கயிற்றினார்' என அழைத்துள்ளனர். மானை, 'விழிக்கட் பேதை' யென்று வருணித்த புலவரை 'விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார்' என அழைக்க முற்பட்டுள்ளனர். அவ் வாறே 'தனி மகனார்' என்ற பெயரும் ஏற்பட்டுள்ளது.

காலால் பந்து விளையாடும் வழக்கத்தையும், காதலர் வரவைப் பல்லி கூறுவதாகக் கருதும் இயல்பையும் காண

லாம். காதலன் வரும்வரை காதலி சுவரிலே கோடிட்டு என்னும் பண்டைய வழக்கத்தையும் (நற் 324) அறியலாம். குருகு, கிளி, நாரை ஆகியவற்றைத் தூதுவிடும் பண்பையும் பிற்காலச் சிற்றிலக்கியங்களுக்கு வழிகாட்டியாக அமையும் மரபையும் இந் நூலிலே காணலாம்.

இந் நூல் காட்டும் சில நயங்களைக் காண்போம் :

உலகத்து உயிர்களையெல்லாம் உறவாகக் கொள்ளுகின்ற உயரிய அன்பைச் சித்திரிக்கும் (நற். 172) ஆம் பாடல் இலக்கியங் கற்றோரின் நெஞ்சைவிட்டு ஒருநாளும் நீங்காது. விளையாட்டுப் பருவத்தில் மணலில் மறந்துவிட்டுச் சென்ற புன்னைக்கொட்டையொன்று முளைவிட்டு நிற்க, அதைத் தன் குழந்தையைப் போலக் கருதி நாள்தோறும் பாலையும் நெய்யையும் ஊற்றி, அன்பாக வளர்த்து வருகின்றாள் ஒரு பெண். செடியும், மரமாகின்றது. அப் பெண்ணிற்குப் பின்னர்த் திருமணமும் நடந்து, பெண் குழந்தை ஒன்றும் பிறக்கின்றது. குழந்தையும் வளர்ந்து பருவமும் அடைந்து ஒரு காதலனையும் தனக்கு உரியவனாகப் பெறுகின்றாள். ஒருநாள் அக் காதலன் அப் புன்னைமரத்தடியில், தன் காதலிபால், காதல் குறிப்பு மலர நிற்கின்றான். ஆனால், அப் பெண்ணோ, நாணம் அடைந்து உடனே தூரச்சென்று விடுகிறாள். காரணம் வேறொன்றுமில்லை; தாய் அந்தக் குறும்புக்காரப் பெண்ணிற்கு அடிக்கடி சொல்லி இருக்கிறாளாம். "இப் புன்னை உன்னைவிடச் சிறந்தது. அதுதான் உன் தமக்கை" என்று. தமக்கை என்ற நினைவு வந்ததுமே, தலைவி நகையாட நாணுகின்றாள் எனக் கவிஞன் கூறுகின்றான். இயற்கை உலகத்தோடு எத்தகைய உறவுகொண்டு வாழ்ந்துள்ளான் பண்டைத் தமிழன்!

விளையா டாயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே. (நற். 172)

காளிதாசரின் சாகுந்தல நாடகத்தில் கண்ணுவ முனிவரைப் பிரிந்த சகுந்தலை செடிகளுக்கு நீருற்றி வளர்த்து அவற்றைத் தன்னுயிராகப் பாவித்து உறவு கொண்டாடுவதைப் பெரிதாகப் பாராட்டும் 'கெதே' என்ற ஜெர்மானியக் கவிஞர், பண்டைத் தமிழ்மக்களின் பேருள்ளத்தை அறிந்திருந்தால், உண்மையில் பெரும் வியப்புக்கொண்டிருப்பார் என்பதில் ஐயமில்லை.

செல்வம் என்றால் எது? என்பதற்கு நற். 210 ஆம் பாடல் விளக்கம் தருகிறது. பிறர் நம்மைப் பலபடப் புகழும் பாராட்டுரையோ, நாம் செலவு மேற்கொள்ளக் கொண்டிருக்கும் சிறப்புமிக்க செல்வ ஊர்திகளோ உண்மைச் செல்வங்கள் அல்ல; அஃது அவரவர் செய்த பழவினைப் பயனாகும்; செல்வம் என்பது தன்னைச் சேர்ந்தார் உள்ளத்தைச் சிறிதும் புண்படுத்தாத உயர்ந்த பண்புடைமையேயாகும் என்று பறைசாற்றுகிறது. உயிரன்பின் அடிப்படையிலே எழுந்த எத்தகைய உயர்ந்த கருத்து!

வள்ளுவருக்கு முன்னோடியாக ஒரு நற்றிணை ஆசிரியர், தமிழ்மக்களின் நாகரிகத்தைக் குறிக்கின்றார் :

> முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பினும்
> நஞ்சும் உண்பர் நனிநா கரிகர். (நற். 335)

அலவனுக்கும் துன்பம் தராமல், வலவன் தேரைச் செலுத்தும் நனி நாகரிகத்தையும் இந் நூலில் காணலாம்.

4. அகநானூறு

செய்திகள்

இந் நூல் 12 அடிக்கு மேற்பட்ட ஐந்திணை தழுவிய 400 செய்யுட்களை யுடையது. நீண்ட அடிகளைக் கொண்டமையின் இதனை 'நெடுந்தொகை' என்றும் அழைப்பர். அவற்றை 145 புலவர்கள் பாடியுள்ளனர். இந் நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மனார் ஆவர். தொகுப்பித்தோன், பாண்டியன் உக்கிரப்பெருவழுதி ஆவன்.

சிறப்புக்கள்

இந் நூலின் பாகுபாடு ஒரு தனிச் சிறப்புடையது. முதல் 120 பாக்களைச் செருக்குற்றுச் செம்மாந்து செல்லும் 'களிற்றி யானை நிரை' எனவும், 121-300 வரையுள்ள பாக்களை, மணி யும் பவளமும் கலந்தாற்போன்று காட்சிதரும் 'மணிமிடை பவளம்' எனவும், 301-400 முடிய அமைந்த பாக்களை, நன் முத்தின் ஒளிபோன்று பொருட் சிறப்புடைய 'நித்திலக் கோவை' எனவும் மூவகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். ஐந்திணைகளையும் எளிதாகக் கண்டுபிடிக்க ஒற்றை எண்ணால் முடியும் பாக்களைப் பாலைத்திணை எனவும், இரண்டு, எட்டு என்ற எண்களை இறுதியாகக் கொண்டவற்றைக் குறிஞ்சித் திணை எனவும் 'நான்கு' என்ற எண்ணோடு முடிவதை முல்லைத் திணை எனவும், 'ஆறு' என்ற எண்ணோடு முடிவதை மருதம் எனவும், பத்தோடு முடிவதை நெய்தல் திணை எனவும் செய் யுட்களைப் பாகுபாடு செய்துள்ளனர். இதில், மிகுதியான பாக்கள் பாலைத் திணையிலேயே அமைந்துள்ளன.

முன்னர்க் கண்ட நூல்களைப்போன்று, 'ஊட்டி யன்ன' (அகம்-388) என்ற சொற்றொடரை வழங்கிய புலவரை 'ஊட் டியார்' என்றும், பிரிவு நோயைச் சிறப்பித்துப் பாடிய புலவரை 'நோய்பாடியார்' (அகம் 67) என்றும் பெயரிட்டு அழைத்துள்ளனர்.

இந் நூலில், அகப்பொருளின் நயத்தை உணர்வதோடு பண்டைத் தமிழக வரலாற்றுச் செய்திகள் பலவற்றையும் அறியலாம். உறையூரைச் சேர்ந்த தித்தன், பரதவர்க்குத் தலைவனான மத்தி, இருபெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் வென்ற தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன், கரிகாற்பெருவளத்தான் போன்ற பெருநில வேந்தர்களையும், ஆட்டனத்தி, அஃதை, அன்னி மிஞிலி, ஆதன் எழினி, ஆய் எயினன், பாணன், எவ்வி, பழையன் முதலிய குறுநில மன்னர்களையும் பற்றிய எண்ணற்ற செய்திகளை இந் நூலில் காணலாம்.

மிளகு பெறுவதற்காகவே யவனர்கள் நம் நாட்டுடன் வணிகம் நடத்த வந்துள்ளனர் என்பதைக் கீழ்க்கண்ட அக நானூற்றுப் பாவால் அறியலாம்:

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"

பாரதிக்கு வழிகாட்டியாக ஓர் அகநானூற்றுப் பாடல் காதலின் இயல்பை வருணிப்பதைப் பாருங்கள்:

.............யாக்கைக்கு
உயிரியைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோமே. —அகம் 259

பண்டைத் தமிழ்மக்கள் திருமண விழாவை எவ்வாறு நடத்தினர் என்பதை அகம் 86, 136 ஆம் பாக்கள் கூறுகின்றன! முழவும் முரசும் முழங்கத் திருமணத்தின் முதல் நிகழ்ச்சியாக இறைச்சி கலந்த வெண்சோற்றை விருந்தாக வழங்குவர்; மணப்பந்தலின்கீழ் வெண்மணல் பரப்பி விளக்கேற்றுவர்; மணமகளை நீராட்ட முதுபெண்டிர்கள் நீர்க் குடங்களைக் கொணர்வார்கள்; மகப்பேறு பெற்ற வாழ்வரசியர் நால்வர், அதில் மலரும் நெல்லும் தூவி, மணமகளைக் "கற்பு நெறி வழுவாது கடமை ஆற்றிக் கணவன் விரும்பும் மனைக்கிழத்தி ஆகுக" என்று வாழ்த்தி மண நீராட்டுவர்; மண நீராடிய தலைவிக்குத் தமர் தூய ஆடைகளையும், அணிகளையும் அணிவிப்பர்; திங்கள் உரோகிணியைக் கூடிய நல்லோரையில் மணமனையை அலங்கரிப்பர்; பின்னர் இறை வழிபாடு நடத்துவர்: வாகையிலையோடு அறுகின் கிழங்கும் சேர்த்துக் கட்டப்பெற்ற வெண்ணூலைத் தலைவிக்குக் காப்பாகச் சூட்டுவர் என்று கூறப்பட்டுள்ளது. "இத் திருமணத்தில் தீ வளர்த்தல் இல்லை; மணமக்கள் தீவலம் வருதல் இல்லை; மணவிழாவிற்காகத் தட்சணை பெறப் புரோகிதர் புகுதல் இல்லை; இவை முற்றும் தமிழருக்கே உரிய திருமண முறையாகும்" எனத் திரு P. T. சீனிவாச ஐயங்கார் 'History of the Tamils' என்ற தம் ஆங்கில ஆராய்ச்சி நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

5. கலித்தொகை

செய்திகள்

மற்ற தொகை நூல்கள், அகவற் பாவால் இயன்ற பாட்டுக்களின் தொகுப்பாக விளங்க, கலித்தொகையோ ஓசை இனிமையையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்ற சிறப்பான அமைப்பையும் கொண்ட கலிப்பாக்களின் தொகுப்பாகத் திகழ்கிறது. இதில் அமைந்த பாலைக் கலியைப் பெருங்கடுங்கோவும், குறிஞ்சிக்கலியைக் கபிலர் பெருமானும், மருதக்கலியை மருதனிள நாகனாரும் முல்லைக் கலியைச் சோழன் நல்லுருத்திரனும், நெய்தற்கலியை நல்லந்துவனாருமாக மொத்தம் 149 பாடல்களை இயற்றியுள்ளனர். நச்சினார்க்கினியர் இந் நூல் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார்.

சிறப்புக்கள்

இதில் உள்ள ஒவ்வொரு பாட்டும் ஒரு சிறு நாடகமாகும்.

சேர, சோழ நாடுகளைப்பற்றிய குறிப்பே இல்லாமல் பாண்டிய வேந்தனைக் குறித்தும், கூடல் நகரம் வையையாறு முதலியவைபற்றியுமே இப் பாடல்களைப் பாடியிருத்தலால் இத் தொகைநூல் மதுரை நகரைச் சார்ந்தே எழுந்திருத்தல் வேண்டும் என அறிஞர்கள் எண்ணுகின்றனர். ஒத்த அன்பில்லாத மக்களின் உறவுபற்றிய கைக்கிளை பெருந்திணைப் பாக்களும், அடிமைகள், ஏவலாளர், முதியோரின் உறவு பற்றிய செய்திகளும், புராணக் கதைகளும், பிற்காலச் சொற்களும் மிகுதியாக வருவதால், இது காலத்தால் பிந்திய நூலாகும் எனக் கற்றோர் கருதுகின்றனர்.

அரக்கு மாளிகையில் தீயெழுந்த செய்தியையும், அதிலிருந்து ஐவரையும் வீமன் காத்தளித்த வீரத்தையும் (கலி. 25), துச்சாதனன் திரௌபதியின் கூந்தலைப் பிடித்து இழுத்ததையும், வீமன் துச்சாதனன் நெஞ்சத்தைப் பிளந்து வஞ்சினம் முடித்ததையும் (கலி. 101), துரியோதனன் தொடையை வீமன் முறித்ததையும் (கலி. 52) இத் தொகை நூல் விரித்துரைக்கக் காணலாம்.

பாலைக் கலி

பெரும்பாலும் தலைவன் பிரிவைத் தடுப்பதே முக்கிய கருத்தாகவும், தலைவன் வருகையை உணர்த்தித் தலைவியைத் தோழியர் மகிழ்விப்பதுமாக அமைவதே பாலைக் கலியாகும். பாலை நிலத்தில் கொடுமையாக விளங்கும் வெம்மையை வருணிக்கும் அழகைப் பாருங்கள் :

உண்ணீர் வறப்பப் புலர்வாடு நவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு.

அக் கடுமையான வழியிலும் ஒரு குளிர்மையான காட்சி:

இன்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை

என்கின்றார்.

கடன் வாங்கும்போது என்ன முகமலர்ச்சி; குழைவு; அதே கடனைத் திரும்பக் கொடுக்கும்போது என்ன முகக் கோணல்; சோர்வு—இன்று போலத்தான் அன்றும்; இத்தகைய இயல்பை,

உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கால் முகனும்வே றாநுதல்
பண்டுமிவ் வுலகத்து இயற்கை. (செய். 11)

எனக் கூறுகின்றார்.

குறிஞ்சிக் கலி

தலைவியைத் திருமணம் புரியுமாறு தலைவனை வற்புறுத்துவதே முக்கிய நோக்கமாகத் திகழ்வது குறிஞ்சிக் கலியாகும்.

'உண்ண நீர் ஊற்ற வந்த பெண்ணின் வளைக்கரத்தைக் காதலன் வலியப் பற்ற, காதலி, அறியாமல் கத்த, பெற்ற தாய் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிவந்து வினவ, 'உண்ணு நீர் விக்கினான்' என்று தலைவி திடீர் என ஒரு பொய்யைச் சொல்லத் தாயும் உடனே தவிதவித்து அவ் வாலிபனைத் தம் கைகளால் புறம் நீவ, அக் கள்வன் மகனோ, கடைக்

கண்ணால் கொல்வான்போலத் தலைவியை நோக்கி நகைக் கூட்டம் செய்தான்" (குறி. 15) என்றமைந்த பாட்டு, நகைச் சுவை மிகுந்த ஒரு சிறிய காதல் நாடகமாகும்.

முடமான முதிர்ந்த பார்ப்பானின் காதல்பற்றிய செய்தியும் (குறி. 29) நகைச்சுவை விளைவிப்பதாகும்.

தலைவன் பொய்யே கூறமாட்டான். அவனிடத்திலே பொய் தோன்றுவது சந்திரனிடத்திலே தீ தோன்றிய தன்மை யாகும் எனத் தலைவி கூறுகின்றாள். எத்தகைய உயர்ந்த பண்பு!

குன்றகல் நன்னுடன் வாய்மையில் பொய்தோன்றில்
திங்களில் தீதோன்றி யற்று.

மருதக்கலி

பரத்தை வயின் பிரிந்த தலைவன்பால் ஊடி நின்ற தலைவியின் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதையே கருத்தாகக்கொண்டது மருதக்கலியாகும். பரத்தையை யானையாகவும், குதிரையாகவும் பிறவாகவும் தலைவி பழித்துக்கூறும் பகுதிகள் நகைச்சுவை விளைவிப்பனவாகும். இத் திணையில் வரும் ஓர் அழகிய கருத்தமைந்த பாட்டு: "தலைவனுடைய ஊரில் நீர் முற்றுகை யின்றிப் போர் முற்றுகையில்லையாம்; செவிகளே வயலாகச் சான்றோர் சொற்களே நீராக, அவர்கள் நாவே ஏராக உழும் பெரும்பேறு பெற்றதாம் அவ்வூர்."

செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலன்நா உழவர்;
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர். (மரு. 4)

முல்லைக்கலி

ஏறு தழுவுதலைப்பற்றிச் சிறப்பாகக் கூறுவது முல்லைக் கலியாகும். இதில் கைக்கிளைப் பாக்கள் மிகுதியாக உள. இத் திணையில் வரும் ஒரு பகுதியைப் பாருங்கள்:

எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு

கவிழ்ந்தன மருப்புக்
கலங்கினர் பலர். (முல்லை. 103)

நெய்தற் கலி

பிரிவாற்றுமல் தலைவி மாலைப்பொழுதோடு புலத்தல் மடலேறுதல் முதலிய துறைகளைப்பற்றிக் கூறுவது நெய்தல் கலியாகும். இத் திணையில் அன்பு, பண்பு, அறிவு, செறிவு பற்றிய விளக்கம் தரும் பாடல் கருத்துப் பொதிந்ததாகும்.

ஆற்றுதல் என்பதுஒன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை;
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்;
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை;
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை;
முறையெனப் படுவது கண்ணேடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றுரைப் பொறுத்தல். (நெய்தல் 16)

புறப்பொருள்பற்றிய நூல்கள்

6. புறநானூறு

செய்திகள்

புறப்பொருள்பற்றிய 400 பாடல்களைக் கொண்ட நூலாகும். இதனைத் தொகுத்தாரும், தொகுப்பித்தாரும் யாரெனத் தெரியவில்லை. செல்லரித்துச் சிதைந்துவிட்டதால் இரண்டு பாடல்கள் இன்றும் கிடைக்கவில்லை. 44 பாடல்களில் பல வரிகள் உருத்தெரியாமலே ஒழிந்துவிட்டன; 4 அடி முதல் 40 அடி வரையிலும் இப் பாக்கள் செல்லுகின்றன. இவற்றை ஏறக்குறைய 160 புலவர்கள், பற்பல காலங்களில் பாடியுள்ளனர். 160 பாடல்களை இயற்றியவர் இன்னுர் எனத் தெரியவில்லை; கபிலர், பரணர் போன்றோர் இயற்பெயரோடு விளங்கினுலும், எஞ்சிய புலவர்கள், ஊரால்லும், உறுப்பாலும்,

தொழிலாலும், மரபாலும், தந்தை பெயர் அடுத்தும் பெயர் பெற்றுள்ளனர். அகப்பாடல்களைப்போல "இரும்பிடர்த்தலையார்" "தொடித்தலை விழுத்தண்டினார்" போன்றோர் தாம் பாடிய பாடல்களில் விளக்கும் சொல்தொடர்களால் அழைக்கப் பட்டுள்ளனர். புறநானூறு பாடிய புலவர் பெருமக்களில் பெரும்பாலோர் கடைச்சங்க காலத்தவராவர்; சிலர் கடைச்சங்க காலத்திற்கு முன்னரும், சிலர் நெடுநாளைக்குப் பின்னரும் வாழ்ந்தவராவர்.

சிறப்புக்கள்

வாழ்ந்து சிறந்த தமிழகத்தின் வரலாற்றை எடுத்துரைக் கும் பெருமையினையுடையது புறநானூறு. சங்க காலத் தமிழகத்து அரசியல் நிலை, சமுதாய நிலை, பழக்க வழக்கங்கள், நாகரிகம், கல்வி, பொருளாதாரம், கலை வளர்ச்சி முதலான வற்றை அறிவதற்குப் பெருந்துணை புரியும் நூல் புறநானூறே யாகும். மங்கையர் மங்கல அணி அணிதல், இறந்தவரைத் தாழியில் கவித்தல், நடுகல் நடுதல். நட்ட கல்லைச் சுற்றி மயிற்பீலி சூட்டி மதுத்துளி வார்த்தல், கணவனிறந்தபொழுது பெண்கள் அணிகளைக் களைதல், கைம்மை நோன்பு நோற்றல், ஊண் சுருக்குதல், உடன்கட்டை யேறுதல் போன்ற பழக்க வழக்கங்களையும், பத்து ஆடை வகைகளையும், இருபத்தெட்டு அணிவகைகளையும், முப்பது படைக்கல வகைகளையும், அறுபத் தேழு உணவு வகைகளையும் இந் நூல் எடுத்துக்காட்டுகின்றது.

பண்டைத் தமிழகத்தை ஆண்ட 15 பாண்டிய மன்னர் களையும், 18 சோழ வேந்தர்களையும், 18 சேர அரசர்களையும் சிறப்பித்துக் கூறுகிறது. இமயவரம்பன், சேரன் செங்குட்டு வன், பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் கரிகாலன் ஆகி யோர் பண்டு வாழ்ந்த பெருமைமிக்க பேரரசர்கள் ஆவர்; மேலும் பழனிமலையை ஆண்ட பேகன், பறம்பு மலையை ஆண்ட பாரி, குதிரைமலையை ஆண்ட அதியமான், கொல்லி மலையை ஆண்ட குமணன், பொதியமலையை ஆண்ட நள்ளி, கோடைமலையை ஆண்ட கடிய நெடுவேட்டுவன் போன்ற

குறுநில மன்னர்களின் வீரத்தையும், வெற்றிப் பெருமிதத்தையும் விளக்கிப் பேசுகிறது.

இப் புயமலி வேந்தர்கள் போராற்றிய போர்க்களங்களில் வெண்ணிப் பறந்தலை, வாகைப் பறந்தலை, கழுமலம், கானப் பேர், தகடூர், தலையாலங்கானம் என்பன குறிப்பிடத்தக்கன வாம். ஆவையும், ஆனியல் பார்ப்பன மாக்களையும், பெண்டிரையும், பிணியுடையோரையும் விலக்கிப் பண்டைய வேந்தர்கள் போர்புரிந்த அறப்போரின் சிறப்பைப் புறநானூறு போற்றியுரைக்கின்றது.

"கடலோட்டிய வேல் கெழு குட்டுவன்" என்று சேரனையும், "நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டியவன்" என்று சோழன் கரிகாலனையும், புறப்பாக்கள் புகழ்கின்றன. இக் கூற்றுக்கள் தம் அரசர்கள் ஆற்றிய கடற் போர்களையே வருணிக்கின்றன. அறநெறி தவறாத அவர்கள் ஆட்சித் திறத்தையும், சிறிதும் வழுவாத செங்கோல் சிறப்பையும், படை நலத்தையும், கொடை வனத்தையும், பாராட்டி யுரைக்கின்றது. பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன், ஆய், நள்ளி போன்ற கடையெழு வள்ளல்களின் கொடையுள்ளத்தையும், குமணன் போன்ற பிற்கால வேந்தர்களின் கொடை நலத்தையும் அமர ஓவியங்களாகத் தீட்டித் தருகிறது. நாட்டுக்காகவும் நாட்டை ஆளும் வேந்தனுக்காகவும், வீரர்கள் போர் புரிந்த பெருமிதத்தையும், பாணர், கூத்தர், பொருநர், விறலியர் முதலிய கலைஞர் பெருமக்களுக்கு நாடாண்ட மன்னர்கள் உணவூட்டி உபசரித்து ஆடை அணிகள் பலவும் நல்கிய அருள் திறத்தையும் நம் நினைவிற்குக் கொணர்கின்றது.

"நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று; மலர்தலை உலகிற்கு மன்னர்தான் உயிர்" என்று கற்றோரும் மற்றோரும் கருதினர். ஆட்சிசெலுத்திய அரசப் பெருமக்களும், குடிதழுவி வாழுவதையே குறிக்கோளாகக் கொண்டனர். தாய்ப் புலி தான் உயிரோடு வாழும்வரை தன் குட்டிகளைப் பிறர் கொண்டுபோக விடாது; அதுபோல அரசர்களும் தம் குடிமக்களைப் பிற வேந்தர்களுக்கு அடிமையாக வாழவிடார், எனப் புறம். 42 குறிக்கிறது. களிறு, கலிமா, காலாள், தேர்ப்படை

கொண்டு திகழ்வதுதான் மாண்புமிக்க அரசு என்றாலும், "மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" (புறம். 56) என மதுரை மருதனிள நாகனார் முழங்குகின்றார். ஆன்றோர்கள் கூறிய அறிவுரைகளையும் இடிப்புரைகளையும் மனம் கோணாமல் ஏற்று அரசாட்சி புரிந்தனர். முப்பெரும் வேந்தர்கள் மொழிந்த வஞ்சினங்கள் இவ் வுண்மையை நிலைநாட்டும் சான்றுகளாகும்.

கபிலரிடம் பாரி காட்டிய அன்பையும், பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும் கொண்ட பழகாக் கேண்மையையும் இந் நூலிலே கண்டு களிக்கலாம்.

பாரியை இழந்த நிலையில், கபிலர் கலங்கிப் பாடிய கவி நயமும், அதியமான் இறந்த நிலையில், ஔவையார் கையற்றுப் பாடிய அவல அழகும், ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்த நிலையில், "முல்லைப்பூவே! இனி நீ ஒல்லையூரில் பூக்கக்கடவையோ?" (புறம். 230) என்று நெஞ்சம் நெக்குருகிப் பாடும் நல்லாதனார் பாடலும், படிப்பவர் உள்ளத்தைப் பாதுகாக்க வல்லன.

வீரம் செறிந்த பாடல்களுக்கு இத் தொகை நூலில் குறைவே யில்லை; வீரப் பெண்மணிகள் பாடிய மூதின் முல்லைப் பாடல்கள் கோழையையும் குன்றென நிமிர்ந்து நிற்கச் செய்யும் இயல்பின. (வேறுபிற கருத்துக்களுக்குச் "சங்ககாலப் புலவர்கள்" என்ற தலைப்பையும் காண்க.)

நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் (புறம். 192)

பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே (புறம். 193)

இன்னாது அம்மஇவ் வுலகம்
இனிய காண்க அதன் இயல்புணர்ந் தோரே (புறம். 194)

நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்
வாழ்தல் வேண்டிப் பொய்கூறேன்; மெய்கூறுவல் (புறம். 131)

ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று,
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று; (புறம். 42)

என்பன போன்ற உயர்ந்த வாழ்வியல் உண்மைகளையும் இந் நூலிலே அறிந்து மகிழலாம்.

7. பதிற்றுப் பத்து

செய்திகள் :

சேர மன்னர் பதின்மர்மீது பத்துப் புலவர்கள் பத்துப் பத்துப் பாக்களாகப் பாடிய 100 பாடல்களின் தொகுப்பே பதிற்றுப்பத்து எனும் நூலாகும். இந் நூலின் முதற் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. இடை நின்ற எட்டுப் பத்துகளே இன்று நமக்குக் கிடைத்துள்ளன. இந் நூலுக்குப் பழைய உரை ஒன்றுள்ளது. இந் நூலில் காணப்படும் பதிகங்கள் பிற்காலத்து எழுந்தனவாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இதில் உள்ள பத்துப் பத்துகளும், முதற் பத்து, இரண்டாம் பத்து என்று எண்ணாலே பெயர் பெற்றுள் ளன. இதனைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பற்றி யாதொன் றும் புலப்படவில்லை.

சிறப்புக்கள்

சேர மன்னர்களின் சிறப்பைக் கூறும் பெருமை வாய்ந்தது இந் நூல்; ஒவ்வொரு பாட்டுக்கும் வண்ணமும், தூக்கும் குறிக்கப்பெற்றுள்ளமையால், இசையொடு பாடப்பெற்றது இந் நூல் எனப் புலனாகிறது.

ஆரியரை அடிபணியச் செய்து இமயத்தில் வில்பொறித்த ஏற்றம் பெற்றவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்; பூழி நாட்டு மன்னனைப் போரிலே வென்று புகழ்பெற்றவன், களங் காய்க்கண்ணி நார்முடிச் சேரல்; வடவரை வென்று வாகை சூடிப் பழையனைக் கொன்று பலம்பெருக்கிக் கடல் பிறக்கோட்டிய வலம் மிக்கவன், சேரன் செங்குட்டுவன்; அதியமானையும்

இருபெரு வேளிரையும் ஒருங்கே வென்ற பெருமைமிக்க பேரரசன், பெருஞ்சேரல் இரும்பொறை—என்பன போன்ற பல வெற்றிச் செய்திகளை இந் நூலின் வாயிலாக உணருகின்றோம்.

காக்கைபாடினியார் என்ற புலவருக்கு அணிகலனுக்காகத் *துலாம் பொன்னும், நூறாயிரம் பொற்காசும் சேரலாதன் பரிசாக அளித்தான் என ஆறாம் பத்தும், செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடி, நூறாயிரம் பொற் காசும் 'நன்று' எனும் குன்றேறி நின்று கண்ணில் கண்ட நாடனைத்தையும் பரிசாகப் பெற்றார் என ஏழாம் பத்தும், இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடி முப்பத்திராயிரம் பொற்காசும், அருங்கலன்கள் பன்னூறாயிரமும், ஊரும் மனைவளமும், ஏரும் பிறவும் பரிசில் பெற்றார் என ஒன்பதாம் பத்தும் உரைக்கின்றன. இவ்வாறே, பெருஞ்சேரல் இரும்பொறை என்ற வேந்தனும், அரிசில் கிழார் எனும் புலவரைப் பலபடச் சிறப்பித்துப் போற்றினான் என எட்டாம் பத்தும் எடுத்துரைக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு புலவருக்கும் மன்னர்கள் பற்பல பரிசில்களை நல்கியுள்ளனர்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் வள்ளன்மைப் பண்பை வருணிக்க முனைந்த நச்செள்ளையார், "இரவலர்கள் தாமாகவே தன்னை நாடி வராவிட்டாலும், அவர்களை இவனே தேடிச் சென்று, தேரிலே ஏற்றிவந்து வண்ணமுற வரிசை செய்வான்" என்கின்றார் (55).

புலவர் ஒருவர் மன்னனை வாழ்த்தியருளும்போது, "பலருக் கும் பகுத்தளிப்பதற்கே செல்வத்தைத் தொகுத்துவை; பிறர் நலத்தைப் பேணுவதற்காகவே வாழ்" என்கின்றார்.

"பகுத்தூண் தொகுத்த ஆண்மை
பிறர்க்கென வாழ்திநீ ஆகன்மாறே." (38)

வழக்கில் இல்லாத பல பழந்தமிழ்ச் சொற்களை, இந் நூலிலே காணலாம்; வரலாற்று ஆராய்ச்சிக்கு இந் நூல் பெரிதும் வழித்துணை புரிகின்றது.

* துலாம், என்பது ஏறத்தாழ 7 கி. கி. எடையுள்ளது.

அகமும் புறமும் கலந்த நூல்

1. பரிபாடல்

செய்திகள்

பரிபாட்டுக்களின் தொகுப்பாக விளங்கும் இந் நூலுக்குப் பரிபாடல் என்று பெயர். "பரிந்து செல்லும் ஓசையையுடைய பாக்களால் அமைந்த ஒருவகைச் செய்யுளே" பரிபாடலாகும். அஃதாவது, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பலவகை அடிகளுக்கும் பரிந்து இடம் கொடுக்கும் பாட்டு என்று பொருள்படும். உரையாசிரியரான பேராசிரியரும்[1] இக்கருத்தையே வலியுறுத்திக் கூறுகின்றார்.

இச் செய்யுள் வகை பெரும்பாலும், காமம் பற்றி வருவதால் இதனை இசைப்பாட்டு என்றும கூறுவர். ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும், இசை வகுத்தவர் இன்னாரென்று குறிக்கப்பட்டுள்ளது. பரிபாடலுக்குச் சிற்றெல்லை 25 அடிகளென்றும், பேரெல்லை 40 அடிகளென்றும் வரையறுத்துள்ளனர். 70 பரிபாடல் ஒரு தொகுப்பாக அமைவதே பரிபாடல் நூலாகும்.

ஆனால், நமக்குக் கிடைத்துள்ள பரிபாடல் நூலில், இன்று உள்ளவை 22 பாடல்களேயாகும். திருமால்மீது ஆறு பாக்களும், முருகன்மீது எட்டுப் பாக்களும், வையை ஆற்றின்மீது எட்டுப் பாக்களுமாகப் பாடப்பட்டுள்ளன.

திருமாலைப்பற்றிய பாடல்கள், அவரின் உருவ அழகையும், அவதாரச் செயல்களையும் விவரிக்கின்றன. திருமாலே

---

1. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கில் இன்பத்தையே பொருளாகக் கொண்டு, கடவுள் வாழ்த்து, மலைவிளையாட்டு, நீர்விளையாட்டு என்னும் பொருள்களைப்பற்றிக் கூறுவது பரிபாடல் என்கிறார் பேராசிரியர்.

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் என்றும், மும்மூர்த்திகளும் அவருள் அடக்கம் என்றும் உரைக்கின்றன; அவர் எங்கும் நிறைந்தவர்; எல்லாமுமாயிருப்பவர் எனவும் எடுத்தோது கின்றன.

முருகனைப்பற்றிய பாடல்கள் முருகன் பிறப்பையும், இந்திரன், சூரன் ஆகியோரை வென்ற பேராண்மையையும், வள்ளியம்மையை மணம்புரிந்த வரலாற்றையும் விளக்கியுரைக் கின்றன. செவ்வேளைச் சேவிக்கும் மைந்தர், மகளிர் இயல்பை இந் நூலிலே விரிவாகக் காணலாம்.

வையையாற்றை வருணிக்கும் பாக்களில், நுரையோடு கரைபுரண்டு வரும் வெள்ளப் பெருக்கையும், அவ் வெள்ளப் பெருக்கைக் கண்டு மகிழ ஆர்வத்துடிப்போடு வரும் மக்கள் கூட்டத்தையும் ஆடவரும் பெண்டிருமாக ஆற்றிலே நீராடும் ஆரவாரத்தையும், ஆரணங்குகள் காரணத்தோடு வம்பளக்கும் அழகையும் இந் நூலிலே வனப்புறப் படிக்கலாம்.

இப் பாடல்களை இயற்றிய புலவர் பெருமக்கள் பதின் மூவர் ஆவர். நாகனார், நல்லச்சுதனார் முதலிய பத்து ஆசிரியர்கள் இப் பாக்களுக்கு இசை வகுத்துள்ளனர். பரி மேலழகர், இப் பாடல்களின் பெருமை தோன்றச் சிறப்பாக உரையியற்றியுள்ளார்.

சிறப்புக்கள்

பரிபாடல்களின்மூலம் மதுரை வையையாறு, திருப் பரங்குன்றம், திருமாலிருஞ்சோலை ஆகியவற்றின் பண்டைக் கால நிலையையும், பெருமையையும் அக்கால மாந்தர்கள் ஆடை அணிகள், ஊண், உணவுமுறை, வணங்கிய கடவுளர்கள், வழிபாட்டு வகைகள், விழாக்கள் ஆகிய வாழ்க்கை முறைகளையும் இந் நூலிலே காணலாம். பலன் கருதிக் குணம் கருதிப் பரம் பொருள் ஒன்றையே கருதி, இறைவனை வழிபடும் மூவகை இயல்பினரையும் இந்நூல் எடுத்துக்காட்டுகிறது.

“நாம் கரு உறவேண்டும்; எம் கணவர் பொருள் பெற வேண்டும்; அன்றிக் களத்திலே, பெருவெற்றி காண

வேண்டும்'' என்ற கருத்தோடு வழிபடும் வனிதையர் பலன் கருதி இறைவனைப் பரவுவோர் ஆவர்.

''யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல; அன்பும், அருளும் அறனுமேயாகும்'' என்போர் குணம் கருதித் தொழுவோர் ஆவர். ''இறைவா! நின்னைத் தொழுவோம்; பலவாறு இறைஞ்சினோம்; பரவி வாழ்த்தினோம். முன்னும் முன்னும் யாம்செய் தவத்தால் இன்னும் இன்னும், என் காமம் இதுவே'' என்று உரைத்து உருகுவோர் கைம்மாறு கருதாமல், கடவுளை வணங்குவோர் ஆவர். தெய்வங்களைப்பற்றிப் பாடுவதும், இப் பாவகையின் இயல்பாதலால், இப் பாடலில் வரும் தெய்வ வணக்கத்தைப் பாருங்கள்:

தீயினுள் தெறல்நீ! பூவினுள் நாற்றம்நீ!
கல்லினுள் மணியும்நீ! சொல்லினுள் வாய்மைநீ!
அறத்தினுள் அன்புநீ! மறத்தினுள் மைந்துநீ!
வேதத்து மறைநீ! பூதத்து முதலும்நீ!
வெஞ்சுடர் ஒளியும்நீ! திங்களுள் அளியும்நீ
அனைத்தும்நீ! அனைத்தினும் பொருளும்நீ!
ஆதலின்
உறையும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமா ரனையை. —பரிபாடல். 3

ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்து உவக்கும் சேய்மாடக் கூடலிலும், செவ்வேள் பரங்குன்றத்திலும் வாழ்வோர்தாம் உண்மையாக வாழ்வோர் ஆவர்; மற்றையோர் துறக்க நாடு செல்லும் தூயோர் அல்லர் என இந் நூல் குறிக்கின்றது.

அகலிகை, ரதி மன்மதன் போன்றோரின் புராணக் கதைகளையும் பண்டு ஓவியங்களாக ஆலயங்களில் தீட்டியுள்ளனர் என்பதையும், பண்டைக்காலத்தில் ''நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் போன்ற சொற்கள் நூறு, ஆயிரம், பதினாயிரம், லட்சம், கோடி போன்ற எண்களைக் குறிக்கப் பயன்பட்டுள்ளன'' என்பதையும் இந் நூல் துணை கொண்டு அறிகின்றோம்.

2. பத்துப் பாட்டு

சங்கத் தொகைநூல்களுள் முதன்மையாக வைத்து எண்ணப்படும் சிறப்பு வாய்ந்தது 'பத்துப் பாட்டு' ஆகும். இஃது அகவற்பாக்களால் அமைந்த பத்துப் பாடல்களின் கோவையாகும்.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

என்ற பழம் செய்யுள், பத்துப்பாட்டு நூல்கள் இன்னின்னவை என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

பத்துப்பாட்டில், திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலை படுகடாம் அல்லது கூத்தர் ஆற்றுப்படை என்ற ஐந்து பாட்டுக்களும் 'ஆற்றுப்படை'[1] இனத்தைச் சேர்ந்தவை யாகும். பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய மூன்றும் அகப்பொருள் பற்றியவையாகும். நிலையா மையைக் கூறும் மதுரைக் காஞ்சியைப் புறப்பொருள் பற்றிய நூல் என்பர். நெடுநல்வாடை என்னும் நூல்[2] அகப்பொருட் செய்தி பொதிந்ததாயினும், பாண்டியனது அடையாளப்

---

1. பரிசில் பெற்ற பாணர் முதலியோர் தாம் பெற்ற பெரு வளத்தைத் தம் இனத்தைச்சார்ந்த இரவலர்க்கு அறிவுறுத்தித், தம்மைப் போல் பயன்பெறத் தாம் பரிசில் பெற்ற வள்ளல்பால் வழிப் படுத்துவதே ஆற்றுப்படையாகும். ஆறு - வழி; படை—படுத்தல்.

2. தலைவன் பெயரை அகப்பொருள் நூல்களில் சுட்டுதல் கூடாது; அவ்வாறு சுட்டினால், அது புறத்திணையைச் சார்ந்ததாகும் என்பது தொல்காப்பிய விதிஆகும்;

"மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்" [தொல். பொருள். 54]

பூணாகிய வேம்பைக் கூறினமையால், இதனைப் புறப்பொருள் பற்றிய நூல் என்றும் கூறுவர்.

பத்துப்பாட்டைப் பாடிய புலவர் எண்மராவர். பத்துப் பாட்டில் இரண்டு பாட்டை நக்கீரனர் என்ற புலவரும் வேறு இரண்டு பாட்டை உருத்திரங்கண்ணனர் என்ற புலவரும், பிற பாடல்களை ஒவ்வொரு புலவருமாகப் பாடியுள்ளனர். ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு தனி நூலாகும். உருவத்தால் சிறியது முல்லைப் பாட்டாகும். உருவத்தாற் பெரியது மதுரைக் காஞ்சியாகும். படிப்பவர் உள்ளத்தில் நிகழ்ச்சிகள் பதியும் வகையில் பாடல்கள் அனைத்தும் ஆசிரியப் பாவிலேயே அமைந்துள்ளன. நடை சற்றுக் கடினமானது. இருப்பினும், அதைக் காலத்தால் நேர்ந்த அமைப்பெனவே கொள்ளவேண்டும்.

உச்சிமேல் புலவர்கொள் நச்சினர்க்கினியர், இந் நூல் முழுமைக்கும் உரையெழுதியுள்ளார். இவருடைய உரை இல்லாவிட்டால், பாடல்களின் பொருளைத் தெளிவாக உணரமுடியாது. ஆனல், இவர் பாட்டுக்கு நேராகப் பொருள் கூறமாட்டார்; சொற்களை இடம்மாற்றி அமைப்பார்; பாட்டில் உள்ள சொல், அடிகளைக் கலைத்துத் தம் விருப்பப்படி சொற்றொடர்களையும், சொற்களையும் பொறுக்கிச் சேர்த்துப் பொருள் கூறுவார். நூலாசிரியரின் கருத்தைக் காட்டிலும், இன்னும் சிறந்த கருத்தைக் காட்டவேண்டும் என்பதே இவருடைய நோக்கம். எனினும், இவரது உரை மிகச் சிறந்த ஒன்ருகும். பண்டைய பழக்க வழக்கங்களை விளக்க உதவும் அறிவுத் திறவுகோலாகும். பட்டினப்பாலைக்கும், முல்லைப்பாட்டிற்கும் மறைமலையடிகள் மிகச் சிறந்த உரை எழுதியுள்ளார்.

பிற்கால இலக்கியங்களைப் போல், பத்துப்பாட்டில் இயற்கைக்கு மாருன கற்பனைகள் இல்லை; பொருளற்ற பொருந்தாத உவமைகள் இல்லை; நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தும், இயற்கைத் தோற்றத்தின் படப்பிடிப்புக்களாகவே காட்சியளிக்கின்றன. பத்துப்பாட்டு, கற்பனைக் கதை நிறைந்த

காவியமன்று; கண்ணுற் கண்ட காட்சித் தொகுதிகளை அப்படியே அழகாக எழுதித் தருகின்ற சொல் ஓவியமாகும்; அதனுல்தான் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை[1] அவர்கள்,

பத்துப்பாட் டாதி மனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே:

எனப் பத்துப்பாட்டின் கற்பனைச் சிறப்பைப் பாராட்டுகின்ருர். பத்துப்பாட்டு பண்டைக்காலத் தமிழர் வாழ்க்கையை எடுத்துக் காட்டும் காலக்கண்ணுடியாகக் காட்சியளிக்கின்றது. பத்துப் பாட்டில் இயற்கை மணம் கமழக் காணலாம்; அழகிய உவமை களைக் கண்டு இன்புறலாம்; தமிழ்நாட்டு மக்களின் பல்வேறு வகையான வாழ்க்கையையும், வேந்தர்களின் ஆட்சிமுறையையும் நாம் தெளிவாக அறியலாம்.

பத்துப்பாட்டில், முதலில், ஆற்றுப்படை இனத்தைச் சேர்ந்த ஐந்து நூல்களையும், அடுத்து, அகப்பொருள்பற்றிய மூன்று நூல்களையும், இறுதியில் புறப்பொருள் சார்ந்த இரு நூல்களையும் வரிசையாகக் காண்போம்.

---

1. The idylls are, as the name implies, richly wrought descriptive poems in the most finished style. They are charming portraits of nature in some of her pleasant and striking moods, and for soberness of thought and accuracy of representation they will bear comparison with anything in the whole realm of literature.

The Ten Tamil Idylls
—Prof. P. Sundaram Pillai.

ஆற்றுப்படை நூல்கள்

1. திருமுருகாற்றுப்படை[1]

செய்திகள்

இந் நூலைப் 'புலவராற்றுப்படை' எனவும், 'முருகு' எனவும் வழங்குவர். ஆசிரியப்பாவால் அமைந்த 317 அடிகளால் ஆனது. தம்மைப் புடைத்து உண்ண அடைத்து வைத்த பூதத்தினின்று தம்மைக் காக்கும்பொருட்டு முருகக்கடவுளை நினைந்து, நக்கீரர் அப் பாடலைப் பாடியதாகவும், பின்னர், முருகன் திருவருளால் விடுபட்டனர் என்றும், இந் நூல் எழுந்த காரணத்தைக் கதையாகக் கூறுவர். வீடு பெற்றான் ஒருவன் வீடுபெற விழைந்த இரவலன் ஒருவனை முருகன்பால் ஆற்றுப்படுத்துவதாக இந் நூல் அமைந்துள்ளது.

முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல், பழமுதிர்சோலை (அழகர்மலை) ஆகிய ஆறுபடை வீடுகளைப் பாராட்டும் ஆறு பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

முதற் பகுதியில் முருகக்கடவுளின் திருவுருவச் சிறப்பும், அவர் அணியும் மாலை விசேடங்களும், சூரர மகளிர் செயல்களும், முருகக்கடவுள் சூரனைச் சங்காரம் செய்த சிறப்பும், மதுரையின் பெருமையும் திருப்பரங்குன்றத்தின் இயற்கை வளமும் கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியில், முருகவேள் எழுந்தருளிய யானையின் இயல்பும், அவருடைய ஆறு திருமுகங்களின் செயல்களும், அவற்றிற்கு ஏற்பப் பன்னிரண்டு திருக்கரங்கள் ஆற்று

---

1. "முருகாற்றுப்படை" என்ற தொடருக்கு, முருகனிடம் ஆற்றுப்படுத்தல் என்னும் பொருள்; ஆற்றுப்படை என்ற இலக்கணத்திற்கே மாறானதாகும். எனவே, "அன்பர்களிடம் அன்பைப் பெற முருகனே ஆற்றுப்படுத்தல்" என்பதே பொருத்தமானதாகும் என டாக்டர் துரையரங்கசாமி யவர்கள் கூறுகிறார்கள்.

வனவும் திருச்சீரலைவாயில் அவர் எழுந்தருளியுள்ள தோற்றமும் சொல்லப்பட்டுள்ளன.

மூன்றும் பகுதியில், முருகனை வழிபடும் முனிவர்கள் ஒழுக்கமும், வணங்க வரும் தையலர் வனப்பும் வருணிக்கப் பட்டுள்ளன. அம் முனிவர்களை அறிமுகப்படுத்தும்பொழுது "செற்றம் நீங்கிய சிந்தையும், கற்றோர் அறியாப் பேரறிவும், கற்றோர்க்கு வரம்பான தலைமையும், காமமும் கடுஞ்சினமும் கடிந்த தூய்மையும், துன்பம் அற்ற பெருவாழ்வும் உடைய வர்கள்" என்று இந் நூல் உணர்த்துகிறது.

நான்காம் பகுதியில், அந்தணர் இயல்பும், அவர்கள் முருகனை வழிபடும் முறைமையும் விவரிக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் பகுதியில், குன்றக்குரவையின் நிகழ்ச்சியும், இறைவனைப் பணிந்து வணங்க வரும் பாடுமகளிர், ஆடுமகளிர் பண்புகளும், அவர்களுடைய ஆடை, அணி, செய்கை முதலிய சிறப்புகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

ஆறும் பகுதியில் முருகன் எழுந்தருளியுள்ள இடங்களையும், ஆற்றுப்படுத்தும் முறையையும், முருகன்பால் அருள்பெறும் வழியையும், அவன் அருள் புரியும் வகையையும், பழமுதிர் சோலையி லுள்ள அருவியின் சிறப்பையும் நக்கீரர் எடுத்துமொழிந்துள்ளார்.

நூலின் இறுதியில், "ஓங்கி உயர்ந்த மலையுச்சியிலிருந்து ஓர் அருவி, பொன்னையும், கனியையும், தேனையும் புரட்டியடித்துக் கொண்டு மிக வேகமாக வருகிறது; ஆனால், அவற்றை அள்ளிப் பருக நெஞ்சம் இல்லாமல், விலங்குகள் எல்லாம் அஞ்சி ஓடு கின்றன" என்கின்றார். "ஆண்டவன் அருளோ பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது; ஆனால், விலங்கு இதயம் பெற்ற மனித இனமோ, அதைத் துய்க்காமல் அஞ்சி விலகுகிறதே" என்ற உட்கருத்து இக் குறிப்பிலே தொனிக்கக் காணலாம்.

சிறப்புக்கள்

இந்நூலின் சிறப்பறிந்து இதனைச் சைவ நூலாகிய பதினோராந் திருமுறையில் சேர்த்துள்ளனர். அருணகிரியாரும்

சிவப்பிரகாசரும், அந்தககக்கவி வீரராகவ முதலியாரும் இந் நூலின் பக்திச் சுவையைப் பாராட்டிப் போற்றுகின்றனர். சங்க காலத்தில், தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வந்த தெய்வங்கள் 'இவை' 'இவை' என்பதை அறிய இந்நூல் பேருதவி புரிகிறது. தெய்வங்களைப்பற்றிய வரலாறுகளையும் இந் நூல் நமக்கு நன்கு அறிவிக்கிறது. தமிழர்கள் தெய்வங்களுக்குப் பலியிட்டு வணங்கியுள்ளனர்; திருவிழாக்கள் எடுத்துள்ளனர்! உருவ வணக்கமும் அருவ வணக்கமும் நாட்டிலே நடைபெற்றுள்ளன. இந் நூல் பக்திச் சுவை மிகுந்த காவியமும், இயற்கை எழில் நிறைந்த இன்ப ஓவியமுமாகும்; பழந்தமிழர் நாகரிகத்தின் ஒரு பகுதியை அறிய உதவுகின்ற வரலாற்றுக் காப்பியமுமாகும். முருகன்பால் பற்றுடையவர்கள் இந்நூலைப் பாராயணம்செய்து பரவசமடைவர்.

2. பொருநர் ஆற்றுப்படை

செய்திகள்

இந் நூல் 248 வரிகளை உடையது. பரிசில் பெறக் கருதிய ஒரு பொருநனைப் பரிசில் பெற்ற ஒரு பொருநன்[1] கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்துவதாக முடத்தாமக் கண்ணியார் என்னும் பெண்பாற் புலவர் பாடியுள்ளார்.

விழாக்காலங்களில், இசைநயம் காட்டிச் செல்லும் பொருநன் இயல்பு, பாலையாழின் அமைப்பு, பாடினியின் தலைமுதல் கால்வரை (கேசாதிபாத) வருணனை, கரிகால் பெருவளத்தானின் கைவண்ணம், உணவூட்டி உபசரிக்கும் உள்ளப்பாங்கு, பரிசிலனும் தன் தேவைக்கு ஏற்ப முகந்துகொண்டு செல்லும் சிறப்பு, தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்திய கரிகாலனின் வெண்ணிப் போர் வெற்றி, பொற்றாமரையைப் பொருநனும், பொன்னரி மாலைகளை விறலியர்களும் பரிசாகப் பெறும் பான்மை; சோழ

---

1. புகழ்ந்து பாடுவோரைப் பொருநர் என்பர்; அத்தகைய பொருநர், ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் என மூவகைப்படுவர். இங்கே பொருநர் என்பது போர்க்களம் பாடுவோரைக் குறிப்பதாகும்.

வள நாட்டின் வளமும், வனப்பும்; காவிரியாற்றின் வெள்ளப் பெருக்கும் அழகாக இந் நூலிலே விவரிக்கப் பெற்றுள்ளன.

சிறப்புக்கள்

இந் நூல் சோழன் பெருவளத்தானின் கொடைத் தன்மையையும், வீரச் சிறப்பையும், "வெண்ணி" என்னும் போர்க்களத்தில் சேர மன்னனை வென்ற செய்தியையும், அரசியல் மேன்மையையும் பரக்கப் பேசுகிறது. சோழநாட்டு மக்கள் இயற்றிவந்த தொழில் பெருக்கத்தையும், கலைவளத்தையும், காவிரிச் செழிப்பையும் இயற்கைச் செல்வங்களையும் எடுத்து இயம்புகிறது. யாழின் பெருமையையும், அதில் பிறக்கும் இசையின் உயர்வையும் இந் நூல் பெரிதாகக் கூறுவதிலிருந்து, அக் கால இசைக்கருவி இசைக்கலைகளின் ஏற்றம் நமக்கு நன்கு புலப்படுகிறது. நூல்நெசவுபற்றிக் கூறும் இவ்வாசிரியர், பாம்பின் தோல்போல் வழவழப்பும் பளபளப்பும் அமைந்த மெல்லிய துணிகளை ஆக்கும் கைத்திறம் வாய்ந்தவர்கள் இந் நாட்டு நெசவாளர்கள் என்கிறார். "அரவுரி யன்ன அறுவை" எனக் குறிப்பிடுகிறார்; கொட்டைக் கரைப் பட்டாடை தமிழ்நாட்டு நெய்தற்கலை கொடுத்த பரிசெனத் தெரிகிறது. உண்பதற்கு முன் காக்கைக்குச் சோறிடும் இன்றைய வழக்கத்தின் தொடக்கத்தை இந் நூலிலே நம் காணலாம்.

3. சிறுபாணாற்றுப்படை

செய்திகள்:

இந் நூல் 269 அடிகளை உடையது; பரிசில் பெற நிற்கும் பாணன் ஒருவனைப் பரிசில் பெற்ற ஒரு பாணன்[1] ஓய்மா நாட்டு நல்லியக்கோடன்பால் ஆற்றுப்படுத்துவதாக இடைக்கழி நாட்டைச் சேர்ந்த நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ளார்.

---

1. பண்பாடுவோர் பாணராவர், இவர்—இசைப்பாணர், யாழ்ப்பாணர், பிச்சை ஏற்றுப் பிழைக்கும் மண்டைப்பாணர் எனப் பாணர் மூவகைப்படுவர். சிறிய யாழை வாசிப்போரைச் சிறு பாணரென்றும் பெரிய யாழை வாசிப்போரைப் பெரும்பாணரென்றும் பாகுபாடு செய்வர்.

சிறிய யாழைக்கொண்ட பாணனை ஆற்றுப்படுத்தியமையால் இந் நூலைச் ‘‘சிறுபாணாற்றுப்படை’’ என வழங்கியுள்ளனர். மேலும் இந் நூல் குறைந்த அடிகளைக் கொண்டமையாலும் இவ்வாறு அழைத்திருக்கலாம்.

வேனில் நின்ற நெடுவழியில் செல்லும் விறலியின் உறுப்புகளுக்கு ஏற்ற உவமைகளால் அமைந்த அங்க அவயவ வருணனை; கழுநீர் மலர்களை மேய்ந்த எருமை, மிளகுக் கொடி படர்ந்த பலாமரத்தின் நிழலிலே காட்டுமல்லிகைப் படுக்கையில் துயில் கொள்ளும் வளம் வாய்ந்த வஞ்சிமாநகரின் சிறப்பு; சிறுவர்களின் அழுகையை நிறுத்தச் சிப்பிகளிலே முத்தடக்கிக் கிலுகிலியாட்டும் மந்திகளைக்கொண்ட உமணர்கள் வரிசையாகச் செல்லும் கொற்கையின் வனப்பு ; தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபினை உடைய மதுரையின் மாண்பு; ஓவியத்தைப் போன்ற நீர்த்துறையில், செந்தாமரை மலரின் செம்பொன் பீடத்தில் காமரு தும்பி, துணையைத் தழுவிக் கொண்டு காமரம் செப்பும் உறையூரின் செழிப்பு; மயிலுக்குப் போர்வை அளித்த பெருங்கல்நாடன் பேகன்; முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்த பறம்பில் கோமான் பாரி, ஓரி, காரி, ஆய், அதியமான், நள்ளி ஆகிய கடையெழு வள்ளல்களின் கொடைவளம் ஆகியனவும், நெய்தல், முல்லை, மருதநில இயல்புகளும், யாழ் வருணனையும், பாணரின் ஏழ்மை நிலையும், நல்லியக்கோடனின் தோளாண்மையும், பாணனை ஆதரித்து அடிசிலும் பரிசிலும் அளிக்கும் அருமையும் இந் நூலில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

சிறப்புக்கள்

கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த ஏழு வள்ளல்களும். இறந்துபட்டபின்னர்தான், இந் நூல் எழுந்திருத்தல் வேண்டும். விறலியின் அழகை வருணிக்க ஆசிரியர் கையாளும் சங்கிலிக் கோவை போன்ற உவமைகள் படிக்க இன்பம் பயப்பன வாகும். மேகம் போன்ற கூந்தல்; கூந்தல் போன்ற தோகை யினை உடைய மயிலினது சாயல்; ஓடிச் சாய்ந்த நாயின் சிவந்த நாக்குப் போன்ற அடி; அடி தொடர்ந்து நிலம்

தோயும் யானைத் துதிக்கை; துதிக்கை போன்ற தொடை; தொடை போன்ற வாழை; வாழைப்பூப் போன்ற பின்னி முடித்த கொண்டை என்று ஆசிரியர் உவமைகளை அடுக்கிக் கொண்டே போகிறார்.

பாணனின் வறுமைநிலையை ஆசிரியர் வருணிக்கும் திறமை தனித்தன்மையதாம். முதலில் மனிதர் அணுகாத காரணத்தால் நாய் அடுப்பங்கரையில் குடியிருந்து குட்டிபோடுகிறது. மனிதனுக்கே உண்ண வழியில்லை என்றால் நாய் என்னசெய்யும்? காது சாய்ந்து கண் திறக்காத குட்டிகள், தாய் நாயின் முலையைக் கவருகின்றன; ஆனால், தாய் நாயோ, பால்சுரந்து பல நாளானதால் வலி பொறுக்காமல், சேய் நாய்களைச் சினந்து குரைக்கிறது. வீட்டுச் சுவரும் கூரையும் விவரிக்க முடியாத நிலை!...அத்தகைய நலிந்த கொடிய நிலையிலும், நலியாத நாகரிக அழகை ஆசிரியர் நயம்படக் கூறுகின்றார். உணவாக்க ஒரு பொருளும் இல்லாததால், கொல்லையிலே பயிரான வேளைக்கீரையைக் கிள்ளியெடுத்து, உப்பின்றி வேகவைத்து, அறியாதவர்கள் அதைப் பார்த்தால் பரிகசிப்பார்களே என்று நாணி, வாயிற் கதவைத் தாழிட்டு, உள்ளே நிறைந்த சுற்றத்துடன் உட்கார்ந்து உண்டனர் என்று உரைப்பது, நினைத்து நெஞ்சம் நெகிழ்வதற்கு உரியதாய் உளது.

4. பெரும்பாணாற்றுப்படை

செய்திகள் :

இந் நூல் 500 அடிகளை உடையது. பரிசில் பெற்ற பாணன் ஒருவன், வறுமையால் வாடிய மற்றொரு பாணனைத் தொண்டைமான் இளந்திரையன்பால் ஆற்றுப்படுத்துவதாகக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் இயற்றியுள்ளார். இப் பாட்டைப் "பாணாறு" எனவும் வழங்குவர்.

பாணனது யாழின் இயல்பு; வருத்தும் வறுமை நிலை; இளந்திரையன் செங்கோற் சிறப்பு; உப்புவாணிகர் செலவு; எயிற்றியர் குடிசை; புல்லரிசி எடுத்து விருந்தோம்பும் பண்பு; கானவர் வேட்டை; யானை தாக்கினாலும் பாம்பே மேற்சென்று

லும், இடியே விழுந்தாலும், கருவுற்ற நிலையிலும் கலங்காத வீரக்குடி மகளின் மாண்பு; இடையர் குடியிருப்பின் தோற்றம்; ஆயர் மகள் ஆற்றும் பணி; உழவர் குடியிருப்பின் அமைப்பு; அவர்தம் தொழில்; வலைஞர் குடியிருப்பு; அவர்தம் செய்கை; அந்தணர் இல்லங்களின் நலம்; பட்டினத்தின் சிறப்பு; கலங்கரை விளக்கத்தின் மாண்பு; திருவெஃகாவில் திருமால் பள்ளி கொள்ளும் அழகு; காஞ்சி நகரின் சிறப்பு ஆகியவற்றை அந் நூலிலே காணலாம். மேலும், அதை ஆளும் இளந்திரையனின் வீரமும், நெஞ்ச ஈரமும், அவன்பாற் சென்ற பாணர் பொற்றாமரை பெறும் பொற்பும், விறலியர் பொன்மாலை பெறும் வனப்பும், அவன் பரிசிலரைப் பாராட்டி ஓம்பும் பண்பும், வனத்தில் வாழும் விலங்குகள் தவத்தைச் செய்யும் முனிவர்களுக்கு ஏவல் புரியும் இனிமையும் இந் நூலில் அழகாக வருணிக்கப்பட்டுள்ளன.

சிறப்புக்கள்

ஐந்திணைகளைப்பற்றி வருணனைகளும், அந் நிலங்களில் வாழும் பலவகை இனத்தினரும் பரிசிலரை வரவேற்று விருந்தோம்பும் பண்பும் இந்நூலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

மேட்டுநிலத்தில் விளைந்த நெல்லின் சோற்றை உடும்புக் கறியோடு பாலைநிலத்திலும், பொங்கிய அவரைவிதைப் பருப்போடு, வரகரிசிச் சோற்றை முல்லைநிலத்திலும், வெள்ளைச் சோற்றோடு கோழியூனை மருதநிலத்திலும், இறைச்சியோடு கள்ளை நெய்தல்நிலத்திலும், உணவாகப் பெறலாம் என்று கூறுகின்றார்; அந்தணர் இல்லத்தில் இராசாளி அன்னத்தோடு, மாதுளங்காய்ப் பொரியலையும், மாங்காய் ஊறுகாயினையும் விருந்தாகப் படைப்பர் என்றார்.

இளந்திரையன் விருந்தோம்பும் திறத்தைப் பாருங்கள். பரிசிலரின் பாசி போன்ற ஆடை நீக்கி, 'ஆவி அன்ன அவிர் நூற்கலிங்கத்தை' அணியத் தந்து, வல்லவர் சமைத்த நல்ல உணவை, மீன்பூத்தன்ன வான்கலத்தில் பரப்பி,

> **மகமுறை மகமுறை நோக்கி, முகன் அமர்ந்து**
> **ஆனு விருப்பில் தான்நின்று ஊட்டி**

பொன்னும் பொருளும் பரிசாகக் கொடுத்து, புரவி பூட்டிய தேரும் நல்கி, 'அன்றே விடுக்கும் அவன் பரிசில்' என்கின்றார்.

'கடலில் திரியும் கலங்களைக் கரைந்து அழைக்கும் விளக்கந்தான் கலங்கரை விளக்கம்' என்கின்றார்.

இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும். (349—350)

ஆசிரியரின் சொல்லாட்சித் திறத்திற்குச் சில சான்றுகள்.

பலாப் பழத்தைச் "சிறு சுளை பெரும் பழம்" என்றும், முயலை, நெடுஞ்செவிக் குறுமுயல்" என்றும், இலை அடர்ந்து நிழல் படரும் பொழிலை, "வெயில் நுழைபு அறியாக் குயில் நுழை பொதும்பர்" என்றும் புகலுகின்றார்.

மகளிர் பந்தாடுதல், கழங்காடுதல் முதலிய வழக்கங்களையும், பொன்னைக் கல்லில் உரைத்து மாற்றுப் பார்த்தல், நெல்லரிசியால் மயக்கக் குடிநீர் செய்தல், சுங்கவரி வழங்குதல் ஆகிய சிறப்பினையும் இந் நூலில் காணலாம். தமிழர் நாகரிகத்தையும், பலவகை வாழ்க்கையையும் உள்ளபடி உணர்த்துவது பெரும்பாணாற்றுப் படையெனலாம்.

5. மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)

செய்திகள்

இந் நூல் 583 அடிகளை உடையது. கூத்தரை ஆற்றுப்படுத்துவதால், இதனைக் கூத்தராற்றுப்படை எனவும் கூறுவர். மலையாக யானையை உருவகித்த ஆசிரியர், அதன் மதநீர் ஓசையைக் கடாம் என்று சிறப்பித்ததனால், இந் நூல் மலைபடுகடாம் எனப் பெயர் பெற்றது. பரிசில் பெற்ற கூத்தன் ஒருவன், வழியிலே வாடிநின்ற மற்றொரு கூத்தனை, நன்னன் என்னும் மன்னன்பால் செல்லுமாறு ஆற்றுப்படுத்துவதாக இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் இயற்றியுள்ளார்.

பலவகை இசைக் கருவிகளின் பெயர்கள்; யாழின் இயல்பு, மலைச்சாரல் வளம் முதலியனவும், குன்றில் வாழும் குறவர்

களும், காடு காக்கும் வேடர்களும்; வருவோரை வரவேற்று விருந்தூட்டி உபசரிக்கும் பண்பும், நன்னனது ஊரின் பெருமையும்; அவனது காட்சியைக் கருதி நிற்பார் கொண்டுவந்த காணிக்கைப் பொருள்களும்; பன்றிப்பொறிகள், பாம்புகள், வீசும் கவண் கற்கள், ஓடும் காட்டாறுகள் ஆகிய இவற்ருல் இடையே ஏற்படும் இடையூறுகளும், அந் நேரத்தில் குறவர்கள் ஆற்றும் உதவிகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. துள்ளித் திரியும் மான்கள்; ஆடிக்களிக்கும் மயில்கள், பாயும் புலிகள்; முட்டும் கடாக்கள்; கூச்சலிடும் குரங்குக் கூட்டங்கள்; கை கோத்துப் போராடும் யானைக் கன்றுகள்; வழி மறித்துக் கிடக்கும் பாம்புகள் ஆகிய விலங்குகளின் வீறுமிக்க தோற்றத்தையும், அரும்பும் மொட்டுகள்; ஆடிவரும் அருவிகள்; மணக்கும் பூக்கள்; இசைக்கும் வண்டுகள்; முதிர்ந்த கனிகள்; சிதறும் தேன்துளிகள்—ஆகியவற்றின் இயற்கை இன்ப எழிலையும், இந் நூலில் வரிக்கு வரி காணலாம்.

மேலும் மலையிலே எழும் பலவகை ஒலிகளையும், நன்னன் ஊரையடையும் வழியையும், தன்பால் வந்தோரை ஆதரித்துப் பரிசில் அளிக்கும் முறையையும் விளக்கமாகக் காணலாம.

சிறப்புக்கள்

வானர மகளிர் அருவியில் நீராட, அதனுல் இயம்போல் எழுந்த இன்னிசை, குறவர்கள் புரியும் பூசல், முள்ளம்பன்றி தாக்க வீழ்ந்த கானவர் அழுகை, கொடிச்சியர் பாடல், வேங்கை மலரைப் புலியென மங்கையர் ஆரவாரிக்கும் ஏமப் பூசல், குறவர்கள் அயரும் குரவை, குறும்பு எறிந்த கானவர் உவகை போன்ற இருபது வகை மலை ஓசைகளை இவ்வாசிரியர் எடுத்துக் கூறுகின்ருர். இவ் வோசைகள் மலைகளின் இயற்கை வளத்தையும் அங்கு வாழும் மக்களின் செயல்களையும் தெளிவாக விளக்குவனவாகும். மலையின் இயல்பை இந் நூல் கூறுவது போல, வேறு எந்த நூலும் கூறவில்லை எனலாம்.

குறமகளிர் தம் கணவர் புண்ணுற்படும் வருத்தத்தைப் பாட்டுப்பாடித் தணிப்பதையும், பிரிந்து செல்லும் வழிகளில் நமது சாரணர்களைப் போன்று (Scouts) வழிக்கு அடையாள

மாகப் புல்லே முடிந்துவைக்கும் பழக்கத்தையும் இந் நூலில் காணலாம். கூத்தருக்குத் தக்கபடி ஆசிரியர், அவர்கள் மத்தளத்தைப்போலப் பலாப்பழங்களும், அடிக்கும் சிறுபறையைப் போல ஆந்தைகளின் ஓசையும் அமைந்துள்ளன—எனக் கூறும் உவமைகள், சிறந்த நாடக நயம் பொருந்தியனவாக விளங்கக் காணலாம்.

அகப்பொருள் நூல்கள்

1. குறிஞ்சிப் பாட்டு

செய்திகள்

இந் நூல் 261 அடிகளால் ஆகியது. தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலிபால் கூறித் திருமணத்திற்கு உடனே ஏற்பாடு செய்யும் முறையில், தோழி கூறுவதாகக் கபிலர் இப்பாட்டைப் பாடியுள்ளார். கரந்து வாழ்க்கை நடத்தும் காதலரின் களவொழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறுவது குறிஞ்சித் திணையாகும். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிப்பதற்காகக் கபிலர் பெருமான் இந் நூலை இயற்றினுர் என்பர்.

மணப் பருவமடைந்த குறிஞ்சி நிலமகள் ஒருத்தி, நாளுக்கு நாள் நலிவடைந்து வருகின்ருள். இதைக் கண்ணுற்றுக் கவன்ற செவிலித்தாயை நோக்கித் தோழி கூறுகின்ருள்: "அன்னையே! நீயோ, தலைவியின் நோய்க்குக் காரணம் காண இயலாது கவல்கின்ருய். தலைவியோ! தன் உள்ளத் துயரை உரைக்க இயலாது வாடுகின்ருள். நானும் உண்மையைச் சொல்ல உள்ளம் நடுங்குகின்றேன். இருப்பினும் கூறுவேன் கேள்; நாங்கள் தினைப்புனத்தே காவல் காத்துக்கொண்டிருந்த ஒருநாள், உச்சிப்பொழுதில், நல்ல மழை பொழிந்து பெருகிய அருவி நீரில் ஆடினேம், பாடினேம்; மலர் பறித்துச் சூடி மா நிழலில் அமர்ந்து விளையாடினேம். அப்பொழுது வில்லுங் கணையும் தாங்கிய கட்டிளங்காளை ஒருவனுடன் வந்த வேட்டை நாய்களைக் கண்டு, நாங்கள் அஞ்சி அவ்விடத்தை விட்டு அகன்று நடந்தோம். உடனே அவன், இனிய சொற்களால் எங்களை

மேற் செல்லவிடாது தடுத்து, எங்கள் கூந்தலைப் புகழத் தொடங்கினன். 'இவ்விடத்தில் நான் ஒன்றை விடுத்துவிட்டேன், அதை நீங்கள் கண்டீர்களா ?' என்று வினவினன். நாங்கள் ஒன்றும் தெரியாது விழித்தோம்; 'தெரியாது விடுத்ததைத் தேடித்தர இயலாதாயினும் என்னுடன் ஒரு சொல்லாவது, உரையாடக் கூடாதா ?' என்று வேண்டி நின்றான். அவ்வமயம் வேடுவர்களால் விரட்டப்பட்ட வேழம் ஒன்று எங்களை நோக்கி விரைந்து வரவே நாங்கள் அச்சத்தால் பதறி, நாணத்தையும் மறத்து நடுநடுங்கி, அந்த நம்பியருகே நெருங்கி நின்றோம். அருள்கனிந்த அவ்விளைஞன் அந்த யானையின் மேல் அம்பெய்ய அது வலியிழந்து, வந்த வழியைத் தேடியபடி ஓடிப்போய்விட்டது. பின்னர் நடுக்கத்தோடு நின்ற தலைவியின் அழகைப் பாராட்டி, 'உன்னை என் இல்லக்கிழத்தியாக ஏற்றுக்கொள்வேன்,' என்று மலையுறை தெய்வத்தின் முன்பு உறுதிமொழி கூறினன்; அருவிநீரை அள்ளி அருந்தி ஆணையிட்டான். இதற்குள் மாலைக்காலம் வரவே எங்களுக்குத் துணையாக வந்து, எங்களை ஊர்ப்புறம் சேர்த்துவிட்டு மறைந்துவிட்டான்; தலைவியின் தழுவுதலைப் பெற முடியாவிட்டாலும் நாள் தவறாமல் நள்ளிரவிலுங்கூட வந்து செல்கின்றான்; அவன் நற்குடியிலே பிறந்தவன், நல்லொழுக்க மிக்கவன்; இவ்வாறு அவன் இராப்போதிலே, இன்னல் மிக்க காட்டையும் ஆற்றையும் கடந்து வருதல் நன்றன்று என்று தலைவி ஏங்குகின்றாள்— இதுதான் அவள் கொண்டிருக்கும் நோய்'' என்று தோழி செவிலித் தாயிடம் நாகரிகமாகக் கூறுகின்றாள்.

சிறப்புக்கள்

இப் பாட்டிலே காணப்படும் நிகழ்ச்சி இதுதான். ஆனல் இந் நிகழ்ச்சியில் அமைந்த கருத்தைக் கற்போர் உள்ளம் கவருமாறு, சிறந்த சிறுகதைச் சித்திரமாக அமைத்துவிடுகிறார் இந் நூலாசிரியர். இயற்கைப் பொருள்களையும், இயற்கை நிகழ்ச்சிகளையும் படம்போல எழுதிக் காட்டுவதில் இவ் வாசிரியர் மிக வல்லவர். நம் மனத்தைக் கவரும் முறையில், இந் நூலிலே வரும் மாலைக் கால வருணனையைப் பாருங்கள் :

மாலையிலே கதிரவன் விழும் நேரத்தில், மரத்தடிகளில் மானினங்கள் கூடி அசையிடுகின்றன; கன்றுகளை நினைத்துக் கனைத்துக்கொண்டே ஆவினங்கள், தொழுக்களுக்குச் செல்கின்றன; பனைமரத்தடியில் தங்கிய அன்றில் பறவைகள், தம் துணைகளைக் கூவி அழைக்கின்றன; மாணிக்க மணியை உமிழ்ந்து பாம்புகள் இரைதேடச் செல்கின்றன. ஆயர்கள் குழல் ஊத, அல்லியரும்புகள் கட்டவிழ்கின்றன; அந்திக்காலக் கடமைகளைச் செய்ய அந்தணர்கள் விரைகின்றனர்; காட்டிலே வாழும் கானவர்கள் பரண்களில் ஏறித் தீப்பந்தங்களைக் கொளுத்துகின்றனர்—இவ்வாறு ஆசிரியர் மாலைக்கால நிகழ்ச்சிகளைச் சிறப்புற வருணித்துக்கொண்டே செல்லுகின்றார்.

தலைவனது மலைவளம் கூறும் பகுதியை (215-230) உள்ளுறையுவமப் பொருளாக விளக்குவது மிக அழகாக வுள்ளது. மணியாலும், பொன்னாலும், முத்தாலும் ஆகிய அணிகலன்கள் குறைபட்டால் விரைவிலே நிறைசெய்து விடலாம். ஆனால், மக்கட்பண்பு சிதைவுற்றால், அதற்கு வேறு மாற்றமே இல்லையென்று கூறுகின்றார் (13—18).

காந்தள் பூ முதல் எருக்குவரையிலுள்ள தொண்ணூற்றிரென்பது மலர்களை இவ்வாசிரியர் இந் நூலிலே குறிக்கின்றார். குறிஞ்சிநில ஒழுக்கத்தை அழகுற அமைத்துக் காட்டுவதிலே இந் நூலுக்கு இணை இதுவேதான்.

2. முல்லைப்பாட்டு

செய்திகள்

இந்நூலை "முல்லை" எனவும் வழங்குவர். பத்துப்பாட்டிலேயே மிகவும் சிறியது; 103 அடிகளை உடையது. பிரிந்த தலைவன் வரும் வரையில், தலைவி ஆற்றியிருக்கும் முல்லைசான்ற கற்பினைக் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இப் பாட்டில் பெருமுதுபெண்டிர் விரிச்சி பார்க்கும் வழக்கம்; பாசறையமைப்பு; பாசறையிலுள்ள பள்ளியறை

அமைப்பு; பாகர்கள் யானையைப் பழக்கும் முறை; வீர மங்கையர், நாழிகைக்கணக்கர், மெய்காப்பாளர் போன்றோர் ஆற்றும் தொழில்; புண்பட்டு நின்ற போர் வீரனை நினைந்து அரசன் வருந்தும் அன்புத்திறம்; தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆருத் துயர்; கார்காலப் பொழுதில் காட்டுவழியில் தோன்றும் காட்சி— ஆகியவை சிறப்பாக வருணிக்கப்பட்டுள்ளன.

சிறப்புக்கள் :

மணலிடத்தே காயாஞ்செடி மைபோல மலர, கொன்றை மலர்கள் பொன்போலப் பூக்க, வெண்காந்தள் மொட்டுகள் உள்ளங்கை போல விரிய, இதழ் நிறைந்த தோன்றிப்பூ குருதிபோல அலர, மரங்கள் அடர்ந்த அக் கான் வழியிலே கலைமானும் பெண்மானும் கலந்து விளையாட, கார்காலம் தோன்றிற்று என்கிறார் (93—101) இது கற்போர் உள்ளத்தைக் கவரும் வருணனையாகும்.

கார்கால வரவையும், காதல் தலைவன் வருகையையும் இப் பாட்டு ஒருங்கே புலப்படுத்தி முடிவது மிக அழகாக உள்ளது. "துயர் நிறைந்த தலைவியின் செவியிலே ஓர் ஒலி விழுகின்றது. ஊதுகொம்பும், சங்கும் கலந்து ஒலிக்கும் ஒலி; விரைந்து ஓடிவரும் தேரின் ஒலி; எல்லாம் சேர்ந்து தலைவன் மீண்டும் வரும் வருகையின் ஒலி. இந்த ஒலியே துயர் உற்ற தலைவியின் செவியில் விழுகின்றது." பாட்டும் இதோடு முடிகின்றது. இவ்வளவு நுட்பமாக அமைந்த முல்லைத்திணைப் பாட்டு அகநானூறு முதலியவற்றிலும் இல்லை எனலாம்.

பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்கும் பழக்கத்தையும், நெல்லையும் மலரையும் கோயிலுக்குக் கொண்டு செல்லும் வழக்கத்தையும் ஆசிரியர் இந் நூலிலே குறிப்பிடுகிறார்.

அக் காலத்தில் அரசர்கள் தம் பள்ளியறைக்கு மிலேச்சரையும் ஊமையரையும் காவலாக வைத்தனர்; மகளிரும் வாள் பிடித்துப் போருடை தரித்துப் போர்க்களம் சென்றுள்ளனர்; யானைகளை வடசொல்லால் பழக்கினர்; நேரத்தைக்

கணக்கிட நாழிகை வட்டிலைக் கையாண்டனர்—என்பன போன்ற பல செய்திகளை நாம் முல்லைப் பாட்டினின்றும் அறிகிறோம். தவத்திரு மறைமலையடிகளார் அவர்கள் முல்லைப் பாட்டிற்குச் சிறந்த உரையொன்று இயற்றியிருக்கிறார்கள்.

3. பட்டினப்பாலை

செய்திகள்

இந் நூல் 301 அடிகளால் ஆகியது. பாலைத்திணையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் வளத்தையும் ஒருங்கே கூறுவதால், இந் நூல் இப் பெயர் பெற்றது. சோழன் கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடும் முறையில், கடியலூர் உருத்திரங் கண்ணனார் எனும் புலவர் இந் நூலை இயற்றியுள்ளார்.

புனல் பரந்து பொன் கொழிக்கும் காவிரியாற்றின் பொய்யா மரபையும், கரை மருங்கில் அமைந்திருக்கும் கழனிகளின் நந்தா வளத்தையும், செழும்பாக்கத்து மக்களின் வாழ்க்கைநலத்தையும், அட்டிற்சாலைகள், அறச் சாலைகளின் இயல்பையும், உழைத்து உண்டாடும் பரதவர்களின் களியாட்டக் காட்சிகளையும், சுங்கத் தொழிலாளர்கள் ஆற்றும் தொண்டையும், துறைமுகத்தில் குவிந்து கிடக்கும் பன்னாட்டு வளத்தையும், காவிரிப்பூம்பட்டினத்து ஆவணத்தின் செழிப்பையும், ஆங்காங்குக் காட்சி அளிக்கும் பற்பல வகைக் கொடிகளையும், அந் நகரில் வாழும் அந்தணர், வணிகர், வேளாளர் முதலியோர் பண்பையும், தொழிலையும், பின்னர்க் கரிகாலன் இளமையில் சிறையிலிருந்த செய்தியையும், சிறைநின்று நீங்கி அரசுரிமை அடைந்த ஆண்மையையும், பகைவர் நாடுகளைப் பாழ்படுத்திய கொடுமையையும், ஒளியரை ஒடுக்கியும், அருவாளரை அடக்கியும், வடவர் வாடவும், குடவர் கூம்பவும், பொதுவர் பொன்றவும் இருங்கோவேள் மருங்குசாயவும் வென்ற கரிகாலன் வெற்றித் திறத்தையும், உறையூரை நிலையாக்கி விரிவாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கிய செய்திகளையும் ஆசிரியர் கற்பனை நயத்தோடும், வருணனைத் திறத்தோடும் அழகாகச் சித்திரித்துள்ளார்.

சிறப்புக்கள்

இப் பாடலை ஓதக் கேட்ட மன்னன், உள்ளத்தில் இன்பமும் மகிழ்வும் எய்தி, புலவரின் வறுமை தீரப் பதினறு நூருயிரம் பொன்னைப் பரிசளித்ததாகக் கலிங்கத்துப்பரணி ஆசிரியர் குறிக்கின்ருர். வசையில்லாத புகழ் வாய்ந்த வயங்கு வெண் மீன், திசை திரிந்து தெற்கே சென்ருல், நாட்டிற்குத் தீமை என்று கூறுவது அவருடைய வானநூ லறிவிற்கு ஏற்ற சான்ரும். நீரின் வழியாகப் புரவியும், நிலத்தின் வழியாக மிளகு மூட்டையும், வடமலையிலிருந்து ஆரமும் அகிலும் தென்கடலினின்று முத்தும், குணகடலிலிருந்து பவளமும், ஈழத்திலிருந்து உணவும், காழகத்திலிருந்து (Burma) விலை பொருள்களும் காவிரிப்பூம்பட்டினத்திற்கு வருகின்றன, என்பதும்—கரிகால்வளவனின் வெற்றியைக் கூறுங்கால் அவன் யார் யாரை வென்ருன் என விளக்கமாக உரைப்பதும் ஆசிரியருடைய வரலாற்று அறிவைப் பறைசாற்றுகின்றன எனலாம்.

செழும்பாக்கத்தின் சிறப்பையும், பரதவர் வாழ்வையும், ஆவண வீதிகளையும், வணிகர், உழவர் வாழ்க்கையையும் விவரித்துக் கூறுவது, ஆசிரியருடைய வருணனைத் திறத்திற்குத் தக்க சான்ருகும்.

ஆசிரியரின் கற்பனை நயமோ, கற்போருக்குப் பெருங் களிப்பூட்டுவதாகும். காயும் நெல்லைக் கவரவரும் கோழிகளைப் பெண்கள் தம் காதிலே அணிந்திருந்த பொற் குழைகளால் விரட்டச், சிதறுண்டு கிடக்கும் அப் பொன்னணிகள், சிறுவர்கள் ஓட்டிச் செல்லும் தேரை மேற்செல்லவிடாமல் தடுக்கின்றன; இவ்வாறு, விலக்க விலகும் பகையல்லது, வேறு உள்ளத்தைக் கலக்கக் கலங்கும் பகையில்லை என்று கூறுவது நயமாக வுள்ளது. அந் நகரில் சோறுவடித்த கஞ்சி ஆறு போலச் செல்ல, அதையுண்ட ஏறுகள் தினவெடுத்து ஒன்ருேடொன்று பொருத, அவ்விடம் உடனே சேருக, அச் சேற்றில் தேர்கள் ஒன்றன்பின் ஒன்ருகத் தொடர்ந்து செல்லத் துகளும் தூசியுமாக எழுந்து வெண் கோயிலை மாசூட்டுகிறது என்கின்ருர்—என்னே! மின் வெட்டுக் கற்பனை!! திருமாவளவனின் ஆற்

றலைக் கூறுங்கால், அவன் படையெடுப்பதற்கு முன், பகை நாடுகள் இருந்த அழகையும், அவன் பாழ்படுத்திய பின் காட்சி யளித்த அவல நிலையையும் ஒப்பிட்டு வேறுபடுத்திக் காட்டுவது, ஆசிரியருடைய கற்பனைத் திறத்திற்கு ஒப்பற்ற சான்ருகும்.

இந் நூலில் வரும் சில சொற்ருெடர்கள் கொள்ளை இன்பம் பயக்கும் குலவு இனிமை கொண்டவையாகும்.

மோட்டெருமை மூழுக்குழவி
கூட்டுநிழல் துயில்வதியும் (14—15)

பட்டுநீக்கித் துகில் உடுத்தும்
மட்டுநீக்கி மதுமகிழ்ந்தும் (107—108)

குழலகவ யாழ் முரல
முழவதிர முரசியம்ப (156—157)

காடு கொன்று நாடு ஆக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி (283—284)

மலை அகழ்க்குவனே! கடல்தூர்க்குவனே!
வான் விழ்க்குவனே! வளிமாற்றுவனே! (271—272)

புறப்பொருள் நூல்கள்

1. நெடுநல் வாடை

செய்திகள் :

இந் நூல் 188 அடிகளையுடையது, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் அரசமாதேவியின் துயரம் நீங்குமாறு, "பகைவரை வென்று, வேந்தன் விரைவில் வருவானுக" எனச் சிலதியர் சிலர், கொற்றவையைப் பரவிப் பாடுவதாக, நக்கீரர் இப் பாடலை இயற்றியுள்ளார்.

கூதிர் காலத்தில், மக்களும் மாக்களும் குளிரால் வருந்தும் நிலை; தலைவி வாழும் அரண்மனையின் அமைப்பு; அதன் வாயில் முதலியவற்றின் அழகு; தலைவி துயில் கொள்ளும்

கட்டிலின் கைத்தொழில் வனப்பு; அதில் இட்டுள்ள பாயலின் சிறப்பு; தலைவி அரசன் பிரிவால் வருந்தும் நிலையை அவளது பண்டை நிலையோடு ஒப்பிட்டு வேறுபடுத்தியுரைக்கும் அழகு, அவனது ஆருத் துயர் தீரச் செவிலியரும், மகளிரும் ஆற்றும் செயல்கள் ; போர்க்களத்தில் புண்பட்ட வீரர்பால் அன்பு பூண்டு, யாமம் என்றும் மழை என்றும் கருதாமல், அகமலர்ந்து இன்சொல் கூறி அவர்களை ஆற்றுவிக்கும் அரசனின் அருட் பண்பும்—இந் நூலிலே அழகாக விவரிக்கப்பட்டுள்ளன.

சிறப்புக்கள் :

நூலறி புலவர் நுட்பமாகக் கட்டிய அரண்மனையில் வாழும் அரசிக்குப் பிரிவுத் துயரால் வாடைக் காற்று நெடியதாகவும், பாசறையில் போர் மேற்கொண்ட வேந்தனுக்கு வெற்றிபெற வாடைக்காற்று நல்லதாகவும் அமைந்ததால், இந் நூலுக்கு அழகாக "நெடுநல் வாடை" என்று பெயரிட்டுள்ளார். இத் தலைப்பே கலையழகு மிக்கதாகும்.

இந் நூலில் வரும் கூதிர் காலவருணனை (45-70) இலக்கிய நயமும் ஓவிய அழகும் வாய்ந்ததாகும். குவலய மெல்லாம் குளிரும்படி பருவகாலத்தில் மழை பொழிந்தது - பாய்ந் தோடும் அம் மழை வெள்ளத்தை வெறுத்த இடையர், தாம் மேய்த்த ஆடுகளையும் மாடுகளையும் மேட்டு நிலத்திலே மேய விடுகின்றனர் ; குளிர் தாங்காமல் பலருங்கூடி நெருப்பு மூட்டி, அழலிலே கையைக் காட்டித் தம் கன்னங்களில் வைக்கின் றனர். அவர் பற்களோ, பறைகொட்டுகின்றன. விலங்குகள் மேய்தல் தொழிலை மறந்தன ; குளிர் பொருமல் குரங்குகள் கூம்பின ; வாடை மிகுதியால் பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன; பசுக்கள் நடுநடுங்கித் தம் கன்றுகளை அணுகவிடாமல் காலால் உதைத்தன. கொக்குகளும், நாரைகளும் வெளி வந்த கயல்மீன்களைக் கொத்தித் தின்றன ; நெல் கதிர்கள் வளைந்தன ; காய்கள் முற்றின ; மிலேச்சர்கள் அஞ்சாது தெருக்களில் இங்குமங்கும் அலைந்தனர். விச்சிப்பூ, அலர்ந்த நிலையில்தான் அந்திப்பொழுது வந்ததைப் பெண்கள் அறிகின்றனர். தகழியில் நெய் தோய்ந்த திரியைக்

கொளுத்தி விளக்கேற்றி, நெல்லையும் மலரையும் தூவி இல்லுறை தெய்வத்தை வணங்குகின்றனர். பொழுது தெரியாமல் புறாக்கள் இரைதேட மறந்தன; மகளிர் கூந்தலில் சில மலரே சூடினர்; அகிற்புகை யூட்டினர்; விசிறிகளை உறையிலிட்டனர். அவை சிலந்திநூல் சூழ்ந்து விளங்கின; கதவுகளும், சாளரங்களும் அடைபட்டுக் கிடந்தன; குளிரால் குலைந்த யாழின் நரம்புகளைத் தம் மார்பிலே தடவிச் சூடேற்றிப் பெண்கள் இசை பாடுகின்றனர்—என்கிறார். இயற்கை எழிலைக் கவின்படச் சித்திரிப்பதில் நக்கீரர் எவ்வளவு கைதேர்ந்தவர் என்பதற்கு இப் பகுதி ஒன்றே தக்க சான்றாகும்.

போர்க்களத்தில் அமர்ந்திருக்கும் மன்னன், மழை பொழியும் இரவு நேரத்தில், கண் துயிலாது புண்பட்ட வீரர்களைக் கண்டு, அகமலர்ந்து ஆறுதல் கூறுவது அரசனின் எளிமையையும் அருள் உள்ளத்தையும் காட்டுவதாகும்.

பூ மலர்ந்து பொழுதறியும் வழக்கத்தையும், மாலைக் காலத்தை மகளிர் கொண்டாடும் முறையையும் இந் நூலில் காணலாம். இந் நூலிலே அமைந்த இலக்கிய நயத்தையும், அழகையும் காணும்போது பத்துப்பாட்டிலேயே சிறந்த ஒரு முத்துப் பாட்டென இந் "நெடுநல்வாடை" நூலைக் கூறலாம்.

---

1. Such is the outline of Nakkirar's Nadunalvadai; and I would request the reader to study in the original, and then to say whether the author does not deserve to be placed among the very best of the Poets of any country. The extreme simplicity of the central conception, the natural case with which it is developed, the pleasing but in every way true and accurate portaits of nature amid which it is set, and the taste and tact with which every line is made to subserve the one single artistic effect that the whole Place is intended to produce, are simply admirable.

—Prof. P. Sundaram Pillai, M. A.,

2. மதுரைக் காஞ்சி

செய்திகள் :

எல்லாப் பாட்டுகளையும்விட இதுவே பெரியது, 782 அடிகளை உடையது. மதுரையை ஆண்ட மன்னனுக்கு உலக இன்பம், பொருட்செல்வம், இளமை, யாக்கை, எல்லாம் நிலையில்லாதவை என்னும் காஞ்சித்திணையை விரித்துக் கூறுவது, மதுரைக் காஞ்சியாகும். இந் நூலாசிரியர் பாண்டிய மன்னனால் பெரிதும் பாராட்டப்பட்ட மாங்குடி மருதனார் என்ற புலவர் ஆவர். பாண்டியன் நெடுஞ்செழியன், தமிழ்நாடு முழுமையும் தனித்து ஆண்டவன்; போர் செய்வதையே பொழுதுபோக்காகக் கொண்டவன்; உலக இன்பத்திலேயே தன்னை மறந்தவன்; உலக நிலையாமையை அவனுக்கு உணர்த்த எண்ணி மாங்குடி மருதனார், அவன் முன்னோர்களின் அரசியல் நேர்மையையும், அவர்களது ஆட்சிச் சிறப்பையும், அவன் சிந்தை மகிழ எடுத்துக் கூறி அவனும் மற்ற முடிமன்னர்களைப் போல் முடிவிலே மாநிலத்தை விட்டு மறையவேண்டியவன்தான் என்று இறுதியில் அறிவுரை புகட்டுகின்றார்.

அறநெறி பிறழாமல் அரசோச்சும் வேந்தர்கள் நாட்டில் கோள்கள் பிறழாமல் வளங்கொழிக்கும் திறம்; பகைவர்மேல் படையெடுத்து அவர்களின் அரண்களையும், காவல்மரங்களையும் அடியோடு அழித்து, பணிந்தோரைப் பாதுகாத்து, சினந்தோரைச் சிதைத்து அவர்கள் நாடுகளைப் பாழாக்கிய முறைகள்; தலையாலங்கானத்தில் இருபெரு வேந்தரையும், ஐம்பெரு வேளிரையும் நொடிப்பொழுதில் வென்ற நெடுஞ்செழியனின் ஆண்மை; பரதவரைப் பாழ்படுத்திப் பகைப்புலத்துக் கொணர்ந்த பொருளைப் பாடுவோர்க்கும் ஆடுவோர்க்கும் பரிசில்களாக வாரிவாரி வழங்கிய கைவண்மை—ஆகியவற்றை எடுத்துக்கூறி அவன் முன்னோர்களின் நல்லியல்புகளையும் ஒருவாறு விளக்கி, இறுதியில் குறிப்பாகத் தம் காஞ்சிக் கருத்தைத் திறம்படச் சில அடிகளில் புலப்படுத்துவது, ஆசிரியரின் பேரறிவிற்குத் தக்க சான்றாகும்.

களிறு மாய்க்கும் கதிர்வளமுடைய பாண்டிய நாட்டின் நிலவளத்தைப் புகழும்பொழுது ஒவ்வொரு நிலத்திலும் நிகழும் நிகழ்ச்சிகளையும், காணும் காட்சிகளையும், பற்பல ஓசை வகைகளையும், சிறப்பாகக் கூறுகிறார். மதுரை நகரின் பெருமையையும், வையையாறு, மதில், அகழி முதலியவற்றின் திறத்தையும், அந் நகரின் நாளங்காடி, அல்லங்காடி இவற்றின் விவரங்களையும், தெளிவாக 354 அடிகளில் விவரிக்கின்றார்.

சிறப்புக்கள்

மதுரையிலுள்ளார், மாலை முதல் மறுநாள் காலைவரையில் பொழுதுபோக்கும் முறை இந் நூலிலே விரிவாக வருணிக்கப்பட்டுள்ளது. 'மாலைக்காலத்தில், கோயில்களில் இசை முழக்கம் கேட்கும்; பௌத்தப் பள்ளிகளில் அருந்தவர் இறைஞ்சுவர்; மாலை வரவறிந்து மக்கள் விளக்கேற்றி வழிபடுவர்; பால் நிலவு ஒளிபரப்பி நகரைக் குளிர்விக்கும்; பாவையர் தம்மை எழிற்படுத்தி அலங்கரிப்பர்; பரத்தையர் காமக்களியாட்டில் மதிமயங்கித் திளைப்பர்; கற்புடைய நங்கையரோ, இல்லறக் கடமைகளில் ஈடுபடுவர்; மதுரை நகர மாந்தர் அனைவரும் கதவடைத்து நள்ளிரவில் களிதுயில் கொள்வர்; அப்ப வணிகர் போன்றோர் தாம் விற்கக் கொண்டுவந்த பண்டங்களைத் தம் எதிரே வைத்துக்கொண்டே தூங்கிய வண்ணம் தோற்றம் அளிப்பர்; களவுநூலை ஐயமறக் கற்ற கள்வர்கள் தம் திறம் தெரியத் திருடச் செல்வார்கள்; உளி, கயிற்று ஏணியுடன் புறப்படுவர்; துஞ்சாக் கண்ணரும் அஞ்சாக் கொள்கையருமாகிய ஒற்றறி காவலர்கள், வயக்களிறு பார்க்கும் வயப்புலிபோலக் கள்வரைப் பின்தொடர்ந்து பிடிப்பர்' என்று கூறுகின்றார்.

யாமப்பொழுது இவ்வாறு கழியும்; மலர்கள் மது ஏந்த, மறையோர் மறை ஓத, வண்டுகள் இசை பாட, யாழோர் மருதப்பண் இசைக்க, வைகறை தவழ்ந்து வரும்; பள்ளி யெழுச்சி எழும்; முரசங்கள் முழங்கும்; சேவல் கூவும்; அன்னம் கரையும்; மயில் அகவும்; மகளிரும் மாந்தரும் எழுந்து, நகரை

அழகுபடுத்த முனைவர் என்று முந்நூற்றுக்கு மேற்பட்ட அடிகளில், காலை தொடங்கி மறுநாள் விடியும் வரை, மதுரை நகரில் நிகழும் நிகழ்ச்சிகளை உள்ளவாறு வருணித்துக் கொண்டே செல்கின்றார்.

இந் நூலில் ஆசிரியர், திருப்பரங்குன்றம் விழா, மதுரைக் கோயில்களில் நடைபெறும் விழாக்கள், அந்தி விழா, ஏழுநாள் நடைபெறும் விழா, திருவோண நாள்விழா. நன்னன் பிறந்த நாள் விழா ஆகிய பல விழாக்களையும் குறிப்பிடுகின்றார்.

மதுரை நகரின் மாண்பையும், இவ்வுலக வாழ்வின் நிலையாமையையும் சித்திரிக்கும் அம் மதுரைக் காஞ்சி இறுதியில் உமர்கயாம் தத்துவத்தோடு முடிவடைவது வியப்பாக உள்ளது. "அரசனே! நீ அளவோடு பெற்றிருக்கும் வாழ்நாளை வீண் நாளாக்காதே; நகைகளை அணிந்த நல்லார் தம் கரத்தில் ஏந்திய பொன் கலத்தில், மணம்வீசும் புத்தம் புது மதுவை ஊற்ற, அதனை அருந்தி அகமகிழ்ந்து, அவர்களுடன் எந் நாளும் இனிது வாழ்வாயாக" என்கிறார்.

૯. சங்ககாலம் ஒரு பொற்காலம்

முன்னுரை

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே 'கல்வியிற் சிறந்த காலமாகத் திகழ்ந்தது சங்ககாலமே' என்று ஆணித்தரமாகக் கூறலாம். ஏனென்றால், இக்காலத்தில்தான், அரசாளும் மன்னனும், அவன் அடியில் வாழும் மக்களும், ஆடவரும் பெண்டிரும், அந்தணரும் வேளாளரும், வணிகரும் சோதிடரும் இன்னும் பற்பல தொழில்களில் துறைபோய மக்களும், வெவ்வேறு குலத்தினரும், வேறு வேறு மதத்தினரும் வேறுபாடின்றிக் கல்வியும் கற்றனர்; நற்றமிழ்க் கவிதைகளும் இயற்றினர்.

பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்த அப் புலவர்கள் பாடிய பாக்கள் எல்லாம், உயர்ந்த இலக்கியப் போக்கிற்கு ஒப்ப மனித வாழ்வை விளக்குவதோடு, அதைப் புனிதப்படுத்தும் பொற்பினையும் பெற்றுத் திகழ்கின்றன.

எட்டுத் தொகை

பொருள்	பாட்டு	பாக்கள்	ஆசிரியர்கள்	அடி அளவு
அகம்	1. ஐங்குறு நூறு	500	5	3—6
	2. குறுந்தொகை	400	205	4—8
	3. நற்றிணை	400	175	9—12
	4. அகநானூறு	400	145	14—31
	5. கலித்தொகை	149	5	
புறம்	1. புறநானூறு	400	100	4—40
	2. பதிற்றுப்பத்து	80	10	

பத்துப் பாட்டு

பொருள்	பாட்டு	பாடிய புலவர்	பாட்டுடைத் தலைவன்	அடி அளவு
ஆற்றுப் படை	1. திருமுருகாற்றுப் படை	நக்கீரர்	முருகக் கடவுள்	317
	2. பொருநராற்றுப் படை	முடத்தாமக் கண்ணியார்	கரிகாலன்	248
	3. சிறுபாணாற்றுப் படை	நத்தத்தனார்	நல்லியக் கோடன்	269
	4. பெரும்பாணாற் றுப்படை	உருத்திரங் கண்ணனார்	இளந்திரையன்	500
	5. மலைபடுகடாம் (கூத்தராற்றுப் படை)	பெருங் கௌசிகனார்	நன்னன்சேய் நன்னன்	583
அகம்	1. குறிஞ்சிப்பாட்டு	கபிலர்	ஆரிய அரசன் பிரகத்தன்	261
	2. முல்லைப்பாட்டு	நப்பூதனார்	நெடுஞ்செழியன்	103
	3. பட்டினப்பாலை	உருத்திரங் கண்ணனார்	கரிகாலன்	301
புறம்	1. நெடுநல்வாடை	நக்கீரர்	பாண்டியன்	188
	2. மதுரைக் காஞ்சி	மாங்குடி மருதனார்	நெடுஞ்செழியன்	782

இத்தகைய புலவர்களின் உயர்ந்த உள்ளப்பாங்கும் அவர்கள் இயற்றிய இலக்கியங்களின் எழிலும் ஏற்றமுந்தான் தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலத்தை ஒரு பொற்காலம் எனத் துணிந்து கூறத் துணை புரிகின்றன.

சங்க காலப் புலவர்கள் 'யார் யார்' என்பதையும், அவர்களின் பல திறப்பட்ட பண்புகள் 'என்னென்ன' என்பதையும், கவியரசர்களை எவ்வாறு புவியரசர்கள் போற்றியுள்ளனர் என்பதையும் முதலில் காண்போம்; அத்தகைய புலவர்கள் புனைந்து தந்த சங்க இலக்கியங்களுக்குப் பொதுவாக அமைந்த சிறப்பியல்புகளை அடுத்துக் காண்போம்.

7. சங்கப் புலவர்கள் மாண்பு

பற்பல குலத்தினர்

சங்க காலத்தில் வாழ்ந்த உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், கடியலூர் உருத்திரங் கண்ணனார், கபிலர் போன்றோர் அந்தணர்களில் சிலராவர். மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் போன்றோர் வணிகப் பெருமக்களாவர். அரிசில்கிழார், ஆலூர் கிழார் போன்றோர் வேளாளர் இனத்தைச் சார்ந்தவராவர். குறவர், பாணர் குலத்தைச் சார்ந்தவர்களும் சங்க காலத்தில் செய்யுள் இயற்றியுள்ளனர். இச் சங்கப் பாடல்களை இயற்றிய பாவலர்கள் ஒரு காலத்தவருமல்லர்; ஓரிடத்தாருமல்லர். கவி பாடிய காவலர் சிலரைக் காண்போம்.

கவி பாடிய காவலர்கள்

பரிபாடலில் அமைந்த பதினைந்து பாடல்களை, இளம் பெருவழுதி என்ற பாண்டியமன்னன் இயற்றியுள்ளான். "கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி"யோ உலகம் உள்ளளவும் அழியாத உயர்ந்த கருத்துக்களைக்கொண்ட "உண்டாலம்ம இவ் வுலகம்" என்னும் புறப்பாட்டு ஒன்றைச் சிறப்பாகப் பாடியுள்ளான். பாலையொழுக்கத்தைக் கவிதை நயத்

தோடு முப்பத்தைந்து கலிப்பாடல்களில் 'பாலை பாடிய பெருங் கடுங்கோ' சித்திரித்துள்ளான். கலித்தொகையில் முல்லைக்கலி யின் இயல்பைப் பதினேழு பாடல்களில் சோழன் நல்லுருத்திரன் நயமாகத் தீட்டியுள்ளான். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியா ளனை' பண்ணனை,

யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய!

எனத் தன் வாழ்நாளையும் சேர்த்து வாழச்சொன்ன வள்ளல் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனுவான். குழந்தைச் செல்வத்தால் அடையும் கொள்ளை இன்பத்தைப்பற்றி அழகு கவிதை (புறம் 188) புனைந்தவன் பாண்டியன் அறிவுடைநம்பி. கல்வியறிவு உடைய ஒருவனையே தாயும் குலமும், அரசும், நாடும் பாராட்டும். ஆகையால்,

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே.

எனக் கல்வியின் சிறப்பைக் கவியாகத் தந்துள்ளான் பாண் டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். காலந் தாழ்த்திக் கொடுத்த நீரை மானங் காரணமாக உண்ணாது உயிர் நீத்த சேரமான் கணைக்காலிரும்பொறை பாடிய புறப்பாட்டு (74) அக்கால வேந்தர்களின் வீரத்தைத் தெளிவாகப் புலப் படுத்துகிறது. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் நலங்கிள்ளி ஆகிய இம் மூன்று வயவேந்தர்களும் மொழிந்த வஞ்சின மொழிகள், அக்கால மன்னர்களின் பண்பட்ட உள்ளத்தையும், பாநலத்தையும் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன.

பெண்பாற் புலவர்கள்

வேறு எந்த நாட்டு இலக்கிய வரலாற்றிலும், ஒரே காலத் தில், ஒருசேரக் காண முடியாதபடி ஐம்பதுக்கு மேற்பட்ட பெண் பாற் புலவர்கள் சங்க காலத்தில் கவி பாடியுள்ளனர்; இவர் களும் வேறு வேறு இடத்தைச் சேர்ந்தவர்கள்; வெவ்வேறு குலத்தைச் சார்ந்தவர்களாவர். அவர்களில் ஒரு சிலரைக் காண்போம்:

காவிரிப் புனல் விழாவில் தம் கணவனை ஆட்டனத்தியை இழந்து, ஆற்ருெணுத் துயர் உற்ற ஆதிமந்தியார், அரச குடியில் பிறந்த 'அஞ்சி அத்தை மகள் நாகையார்' ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் உள்ளங் கவர்ந்த 'பெருங்கோப் பெண்டு' பரந்தோங்கு சிறப்பின் 'பாரிமகளிர்' ஆகியோர் அரச குலத்தைச் சேர்ந்த சில கவியரசிகள் ஆவர்.

ஏனைய குலத்தில் பிறந்த பெண்களும் இலக்கிய நயம் மிக்க பல பாக்களைச் சங்க காலத்தில் இயற்றியுள்ளனர். 'வெள்ளி வீதியார்' 'வெறிபாடிய காமக் கண்ணியார்' 'பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்' 'காக்கைபாடினியார்' 'நச்செள்ளையார்' போன்ருேர் அத்தகைய புலவர் பெருமக்களில் ஒரு சிலராவர். மறக்குடி மகளிரின் அஞ்சாமையையும், ஆண்மையையும் அழகாகப் பாடிய வீரப் பெண்டிர்கள் 'காவற் பெண்டும்' 'ஒக்கூர் மாசாத்தியா'ரும் ஆவர்.

''பெற்ற மகனைப் பேணி வளர்த்தல், தாயின் கடன்; அறிவூட்டி அவனைச் சான்ருேனுக்குதல், தந்தையின் கடன்; வேண்டிய படைக்கலங்களை வடித்துக் கொடுத்தல் கொல்லர் கடன்; அவ் விடலைக்குப் போர்ப் பயிற்சியளித்தல் வேந்தர் கடன்; வளர்ந்து காளையான அவ் வாண்மகனுக்கோ, கரத்தில் வாளேந்தி, களத்தில் சுழற்றி, பகை வேந்தரின் களிறுகளை அழித்து வெற்றியோடு பெயர்தல், கடனுகும்'' என அக் காலச் சமுதாயத்தின் பற்பலவகையான கடமைகளை அழகுற வகுத்துப் பாடி, அழியாப் புகழ் பெற்ருர் 'பொன் முடியார்' எனும் பெண்பாற் புலவர்.

தமிழினம் ஈன்றெடுத்த நல்லிசைப் புலமை மெல்லியலாருள், தலைமணியாய் விளங்கும் பேறுபெற்றவர் 'ஔவையார்'; அதியமானுடைய அரசவைப் புலவராக இருந்து எண்ணற்ற சுவைமிக்க அகத்துறை, புறத்துறைப் பாடல்களை இயற்றியிருக்கிருர். அதியமான், அவன் மகன் பொகுட்டெழினி, நாஞ்சிற் பொருநன், முடியுடை மூவேந்தர்கள் ஆகியோரைப் பாடிச் சிறப்பித்திருக்கிருர். அதியமானின் ஆற்றலையும், படையையும் ஔவையார் வருணித்த முறைக்கு, இலக்கிய உலகிலே ஈடு

இல்லை எனலாம். அதியமான் இறந்த நிலையில், அவர் உள்ளம் உருகிப் பாடிய இரங்கற் பாட்டுகள், என்றும் நிலவும் அமர இலக்கியங்களாகும். அதியமான் தூதாகத் தொண்டைமானிடம் சென்று, ஔவையார் கூறிய சொற்கள் அவருடைய கவிதை உள்ளத்தையும், கற்பனைத் திறத்தையும், நுண்ணிய அறிவையும் ஆழ்ந்த நகைச் சுவையையும் புலப்படுத்துவனவாகும்.

பல்வேறு துறையினர்

இசையில் வல்ல பித்தாமத்தர், கண்ணகனார் போன்றோரும், கணிதத்தில் வல்ல கணியன் பூங்குன்றனார், கணி மேதாவியார் போன்றோரும், மருத்துவத்தில் வல்ல தாமோதரனார், நல்லச்சுதனார் போன்றோரும், சோதிடத்தில் வல்ல பக்குடுக்கை நன்கணியார் போன்ற பெருமக்களும், சங்க காலத்தில் இலக்கியங்கள் படைத்துள்ளனர்.

பலவகை மதத்தினர்

சைவ சமயத்தைச் சார்ந்த நக்கீரர் போன்ற புலவர்கள், புத்த மதத்தைச் சார்ந்த இளம்போதியார், சைன மதத்தைச் சார்ந்த உலோச்சனார் ஆகியோர் இலக்கிய நயம் மிக்க பாக்களை இயற்றிய காலம் சங்க காலமேயாகும்.

பாராட்டும் பண்பினர்

சங்க காலப் புலவர்கள், ஒருவர்மேல் ஒருவர் அன்பு கொண்டு விளங்கினர். பொறாமையில்லாத புலவர்களாகத் திகழ்ந்தனர். 'மோசி பாடிய ஆய்' என மோசியைப் பெருஞ்சித்திரனார் பாராட்ட, "நல்லிசைக் கபிலன்" எனப் பெருங்குன்றூர் கிழாரும், "வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்" "புலனழுக்கற்ற அந்தணாளன்" எனக் கபிலரை மாறோக்கத்து நப்பசலையாரும் காழ்ப்பு இன்றிச் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

அமைதி விழையும் இதயம்

அதியமானின் தூதாகத் தொண்டைமானிடம் சென்றார் ஔவையார் எனும் பெண்பாற் புலவர். சோழன் நலங்கிள்

வீக்கும், நெடுங்கிள்ளிக்கும் இடையே பகையேற்பட "ஒரு குலத்தைச் சார்ந்த இருவரும், ஒருவரோடொருவர் போரிடுதல் குடிப்பெருமைக்கு ஒவ்வாது" என இடித்துரைத்து இருவரையும் ஒன்றுபடச் செய்தார் கோவூர்கிழார் எனும் பெரும் புலவர். இவ்வாறு சங்க காலத்தில் புலவர்கள், சமர் செய்த அரசர்களுக்கிடையே சமாதானம் செய்வித்தனர்.

அஞ்சா நெஞ்சம்

அறநெறி பிறழாத உள்ளமும், அஞ்சாத நெஞ்சுரமும் கொண்டவர்கள் சங்க காலப் புலவர்கள்.

முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே (புறம். 205)

என்று கூறும் இதயத் திண்மை மிக்கவர்கள் சங்ககாலப் புலவர்கள். பரிசில் அளிக்கக் காலந்தாழ்த்திய அதியமானை நோக்கி, "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என அஞ்சாது பாடினார் ஔவையார். "இரவலர்க்கு உதவும் புரவலன் நீ ஒருவன் மட்டும் அல்லன்; உலகில் என்றும் இரவலரும் உள்ளனர்; புரவலரும் உள்ளனர்; இதோ, இக் காவல் மரத்தில் கட்டியிருக்கும் யானை, உனக்கு நான் உவந்து ஈயும் பரிசிலாகும்; இதைப் பெற்றுக்கொள்" எனப் பரிசில் கொடுக்க மறுத்த இளவெளிமானை நோக்கிப் பெருமிதமாகக் கூறினர், பெருஞ்சித்திரனார் எனும் சங்ககாலப் புலவர். மழைத் துளியினும் பலவாகத் தேர்களைப் பரிசிலர்க்கு வழங்கி வந்த மலையமான் திருமுடிக்காரியை நோக்கி, "வழங்குதல் எளிது; ஆனால், பரிசிலரின் வரிசையறிந்து ஈதலோ அரிது; ஆகையால் பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே" எனச் செருக்கோடு மொழிந்தார் கவியரசர் கபிலர். நெறிமுறை பிறழ்ந்து வரி கொள்ள முற்பட்ட பாண்டியன் அறிவுடை நம்பிக்கு, கவளம் கவளமாக உண்டு களிக்கும் களிற்றை உவமையாகக் கூறி நெறிப்படுத்தினர் பிசிராந்தையார் எனும் பெரும் புலவர். இத்தகைய நெஞ்சுரம் மிக்க புலவர்கள் தமிழகத்தில் வாழ்ந்து, அரசர்களுக்கு அறிவுரை கூறி அறத்தை நிலைநாட்டிய காலம் சங்க காலமேயாகும்.

அருள் உள்ளம்

மதிற் கதவுகளை அடைத்துக்கொண்டு, உள்ளே ஒளிந்திருந்த சோழன் நெடுங்கிள்ளியை இடித்துரைத்து மக்களின் துயர்துடைத்தார், அருள் உள்ளம் வாய்ந்த கோவூர்கிழார். இளந்தத்தன் என்ற புலவரை ஒற்று என ஐயுற்று, நெடுங்கிள்ளி ஒறுக்க முயன்ற நிலையிலும் விரைந்து சென்று, வள்ளலை நாடி, வடியா நாவால் வல்லாங்குப் பாடி வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கையின் இயல்பைக் கூறி, அப் புலவரின் உயிர் காத்தார் கோவூர்கிழார்; சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்பான், மலையமான் மக்களைக் கொல்ல முயன்ற போதும், இப் புலவரே சென்று மன்னனைத் தடுத்து, அச் சிறுர்களைக் காப்பாற்றினர். இத்தகைய அருள் உள்ளம் மிக்க எண்ணற்ற புலவர்கள் வாழ்ந்து மறைந்த காலம் சங்க காலமேயாகும்.

வற்றாத வள்ளன்மை

குமண வள்ளலைப் பாடிப் பரிசில் பெற்ற புலவர் தம் மனைவியை நோக்கி, "இப் பரிசிலைக் கொண்டு, நாம் பன்னுள் வாழ்வோம் என எண்ணுது, வேண்டாதவர் என யாரையும் வெறுக்காது, என்னையும் வினவாது, இப் பெருஞ் செல்வத்தை எல்லோருக்கும் வழங்குவாயாக" எனக் கூறுகிறுர்.

> இன்னோர்க்கு என்னாது: என்னொடும் சூழாது
> வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
> எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே (புறம். 163)

என வறுமைப்பட்ட கொடிய நிலையிலும், வள்ளன்மைப் பண்பு திகழுமாறு வாழ்ந்து சிறந்தனர் நம் பண்டைத் தமிழ்ப் புலவர்கள்,

அழியாத நட்பு

கனிந்த நெஞ்சங்கொண்ட இக் கவிஞர்கள், நாடாளும் மன்னர்களோடு, திண்ணிய நட்புக்கொண்டு திகழ்ந்தனர்.

கோப்பெருஞ் சோழனைக் காணுமலே, நட்புக் கொண்டு, உறையூர் சேர்ந்து உயிர் துறந்தார், பிசிராந்தையார் எனும் பாண்டிய நாட்டுப் பாவலர். வள்ளல் பாரியின் உயிர் தேடுவார்போல் வடக்கிருந்து உயிர் நீத்தார் அவர் அருமை நண்பர் கபிலர். அதியமான் இறந்த காலத்து, நெஞ்சு நெக்குருகி ஔவையார் பாடிய சோகப் பாக்களெல்லாம், அதியமான்பால் அவர் கொண்டிருந்த நட்பின் ஆழத்தையே பறை சாற்றுவனவாம்.

அரசர்கள் பாராட்டு

இன்னோரன்ன சிறந்த பல பண்புகளைப் பெற்ற புலவர் பெருமக்களின் பாராட்டைப் பெறுதலே பெருஞ்சிறப்பு எனப் பண்டைய மன்னர்கள் எண்ணித் தம்மை வந்தடைந்த வறுமையுற்ற புலவர்களை ஆதரித்து உணவளித்து, உடுக்க உடை கொடுத்துப் பன்னாளுக்குப் போதிய பரிசில் பொருள்களையும் வழங்கி, வழியனுப்புவார். பட்டினப்பாலை என்னும் நூலியற்றிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவருக்குக் கரிகால் வளவன், பதினாறு இலட்சம் பொன் பரிசளித்துள்ளான். வஞ்சினம் கூறும் பண்டைய வேந்தர்களும், புலவர்கள் தம்மைப் போற்றாது ஒழிவதே பேரிழிவு எனக் குறித்துள்ளனர். முரசு கட்டிலில் அயர்ந்து உறங்கிய மோசிகீரனார் என்னும் புலவர் மேல் சினவாது அவருக்குச் சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலாதன் விசிறிகொண்டு வீசியமையும், பண்டைக் காலத்தில் மன்னர்கள் புலவர்களுக்கு எத்தகைய சிறப்புச் செய்துள்ளனர் என்பதையே நன்கு எடுத்துக்காட்டுவதாகும்.

இத்தகைய பண்புமிக்க அரசர்கள் அரவணைப்பில், பல்வேறு திறப்பட்ட புலவர் பெருமக்கள் இயற்றியருளிய சங்க இலக்கியங்கள், இயற்கை எழில் மிக்க இன்பக் கருவூலங்களாக விளங்குகின்றன. இவ் இலக்கியங்களுக்கென்று சிறப்பாக அமைந்த சில பண்புகளும், இவ் வளமார்ந்த நூல்கள் தோன்றி மலர்வதற்கேற்ற நலமான சூழ்நிலையுந்தான், சங்க காலத்தைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே தலைசிறந்த "பொற்காலம்" என அறிஞர்கள் போற்றிப் புகழுமாறு ஆக்கியுள்ளன எனலாம்.

8 சங்க இலக்கியப் பண்பு

முன்னுரை

சங்க காலத்தில் எழுந்த இலக்கிய நூல்களைப் பாட்டு, தொகை எனப் பகுத்துள்ளனர். அவற்றுள், பத்துப் பாட்டு 8552 வரிகளையும், எட்டுத்தொகை 2426 தனிநிலைச் செய்யுள் களையும் தன்னகத்தே கொண்டு திகழுகின்றன. இவற்றை ஏறத்தாழ 401 புலவர்கள் இயற்றியுள்ளனர். இவர்களில், கபிலர், பரணர், ஒளவையார், நக்கீரர் போன்றோர் குறிப்பிடத் தக்க புலவர் பெருமக்கள் ஆவர்; பெரும்பான்மையான பாக்களை அவர்களே படைத்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட நூல்களின் தனிப்பட்ட சிறப்பை முன்னர், தனித்தனியாகக் கண்டோம். அவற்றை மீண்டும் நினைவில் கொண்டு, அவற்றுக்கொன்று பொதுவாக அமைந்த சில இயல்புகளை, இனி விரிவாகக் காண்போம்:

பொருட்சிறப்பு

பண்டைக் காலத்தில் வாழ்ந்த உலகமக்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கை இலட்சியங்களாகக் காதலையும், போரையும் கருதினர். பழம் பெருமை பெற்ற கிரேக்க இலத்தீன் இலக் கியங்கள்* போற்றியுரைப்பதுபோல, சங்கக் கவிஞர்களும், இவ் விரு கருத்துக்களையே தங்கள் கவிதைகளில் சிறப்பாகப் பாடி யுள்ளனர். காதல் உணர்ச்சியைப் பத்துப்பாட்டில் வரும் மூன்று நெடும் பாட்டுக்களும், எட்டுத்தொகையில் ஐந்து தொகை நூல் களும், பரிபாடலில் பெரும்பாலான பாக்களும் சித்திரிக்கும் புறப்பொருளான போர்நிகழ்ச்சியைப் புறநானூறும், பதிற்றுப் பத்தும் வருணிக்கின்றன. சங்கப் புலவர்கள் காதலை 'அகம்' என்றும், வீரத்தைப் 'புறம்' என்றும் பகுத்து, இலக்கியங்களை இயற்றி உள்ளனர்.

---

* Two things greater than all things are
One is Love and the other is War—Homer.

திணைப் பிரிவு

"மக்களுடைய பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலியன அவர்கள் வாழுகின்ற நில அமைப்பைப் பொறுத்துள்ளன" என்ற அரிய உண்மையை வரலாற்று அறிவுக் கெட்டாத காலந் தொட்டே பண்டைத் தமிழ்மக்கள் உணர்ந்து, தமிழ்நாட்டு நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைகளாகப் பகுத்து, அந்தந்த நிலச்சூழ்நிலைக்கு ஏற்ப, மனித உள்ளத்தெழும் உணர்ச்சிப் பெருக்குகளை ஐவகை ஒழுக்கங்களாகவும் வகுத்துக் கவிதை புனைந்துள்ளனர். இத்தகைய சிறந்த இலக்கியப் பாகுபாட்டைச் சங்க இலக்கியங்களில் தான், கண்டு களிக்கமுடியும். குறிஞ்சிநில வொழுக்கத்தைக் கபிலரும், முல்லையை நல்லுருத்திரனும், பாலையைச் சேரன் கடுங்கோவும், மருதத்தை மருதனிள நாகனும், நெய்தலை அம்மூவனும், நல்லந்துவனும் அழகாக வருணிப்பதில் ஈடு இணையற்ற புலவர்களாவர்.

சமத்துவப் பண்பு

தமிழ்நாட்டின் பிற இலக்கிய காலங்களிலும், மற்ற உலக இலக்கியங்களிலும், கம்பன், காளிதாசன், வர்ஜில், ஹோமர் போன்ற பெருங் கவிஞர்கள், முதன்மை பெற்றுத் திகழ்வர். ஆனால், சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தத்தமக்கென்று உரிய தனி உருவத்தோடு விளங்காது, "சங்கக் கவிஞர்கள்" என்ற ஓர் உருவமாகவே திகழுகின்றனர். தமிழ்நாட்டில் சங்ககாலத்தில்தான் உலக வரலாற்றிலே காணமுடியாதபடி புலவர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி, அரசனுக்கும் ஆண்டிக்கும் பொதுவாக விளங்கும் இலக்கிய விதி வகுத்துக் கூட்டு முயற்சியாகக் கவிதை புனைந்துள்ளனர். கவிஞர்கள் இயற்றும் காவியங்கள், அவர்களின் உருவத்தைத் தனித்தன்மைபட எடுத்துக் காட்டுவனவாகும். இத்தகைய காவியங்கள் சங்க காலத்தில் இல்லாமை, சங்கப் புலவர்களிடையே நிலவிய அறிவியல் சமத்துவத்தையே காட்டுகிறது. கணக்கற்ற அலைகள் கூடிக் கடலாகக் காட்சியளிப்பது போல, சங்கக் கவிஞர்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டு தத்தமக்கு உரிய தனி இயல்பை இழந்து, "சங்க இலக்கியம்" என்ற ஒரு பேருருவமாகவே காட்சியளிக்

கின்றனர். இத்தகைய புதுமை இயல்பை நாம் சங்க காலத்தில் தான் காணமுடியும்.

வருணனை இயல்பு

இயற்கை யன்னை ஈன்ற அருந்தவப் புதல்வர்கள் சங்க காலப் புலவர்கள். அவ்வன்னையின் அரவணைப்பிலே வாழ்ந்து சிறந்த அப் பெருமக்கள் தாங்கள் இயற்றிய நூல்களில், இயற்கைக் காட்சிகளின் எழிலை உவமைகளாக, உருவகங்களாக, வனப்புமிக்க வருணனைகளாக வடித்துத் தந்துள்ளனர். இயற்கை வருணனையில்லாத பாக்களைச் சங்க இலக்கியங்களில் பார்ப்பது அரிது. இயற்கையை வருணிக்கும் திறத்தில் சங்கக் கவிஞர்கள் அகப்பொருள் இலக்கியங்களுக்கே உரிய, உவமத்தையும் (உள்ளுறை யுவமம்), அவ் வுவமைக்கு அப்பாலும் ஓர் அரிய உட்கருத்தை உணர்த்தும் 'இறைச்சி' என்ற இருவகைப் பொருள்களையும், உள்ளடக்கி உரைப்பர். இத்தகைய இயற்கைச் சிறப்பை நாம் சங்க காலத்தில் மட்டுமே காணலாம். எக் கருத்தையும் நேருக்கு நேராகக் கூறி, கேட்போர் நெஞ்சத்தைப் புண்படுத்தாது, பண்பட்ட முறையில் நயமாகக் கூறுவதே, சங்க கால நாகரிகமாகும். அகப்பொருள் பாக்களில் வரும் தோழியின் கூற்றுக்கள் அனைத்தும் இந் நயமான போக்கில் திகழ்தலைக் காணலாம்.

புலனுக்கு எட்டாத மயக்கப் பொருள்களிலே மனத்தைச் செலுத்திச் சங்கப் புலவர்கள் குருட்டாட்டம் ஆடுவதில்லை. நம்பத்தகாத செய்திகளை நவில்வதில்லை; மிகைபடக் கூறுதலையும் மேற்கொள்வதில்லை. உலக இயற்கையையும், மக்கள் வாழ்க்கையையும் ஒட்டியே இலக்கியங்களை இயற்றியுள்ளனர்.

சங்கக் கவிஞர், தாங்கள் கண்ணால் கண்ட போர்களையும் ஊர்களையுமே உவமையாகக் கூறும் இயல்பினர். 'வஞ்சிமா நகர் போன்ற அழகிய தலைவி'' "வெண்ணிப்போர் ஆரவாரத்தை ஒத்த அலர்'' என உவமை கூறுவது சங்கப் புலவர்கள் மரபாகும். சங்க இலக்கியங்களில் அணிகளுக்கெல்லாம் தாயான உவமையணி தவிரப் பிற அணிகள் பெரும்பாலும் வருவதில்லை.

உரிப்பொருள் உயர்வு

நிலத்தையும், அந்நிலத்தில் காணும் பற்பல வகைக் காட்சிகளையும் (முதல், கருப்பொருள்கள்) வருணிக்கும் சங்கக் கவிஞர்கள் அந் நிலத்தில் வாழும் மக்களின் உள்ளத்தில் அலைமோதும் உணர்ச்சிகளுக்கு (உரிப்பொருள்) கலைமெருகு கூட்டுவதிலேயே கருத்தாக இருப்பர். ஆங்கில நாடக மேதையான ஷேக்ஸ்பியர் போன்று மனித உணர்ச்சியின் ஆழ அகலத்தைத் தெளிவாகப் புலப்படுத்தும் பின்னணியான இயற்கையைக் கையாண்டுள்ளனர். சங்கக் கவிஞர்களுக்கு இயற்கையல்ல, மனித உள்ளந்தான் மிக முக்கியம். நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு போன்ற நெடும் பாட்டுக்களும், கபிலர் கவிதைகளும் இவ் வுண்மையைத் தெளிவுபடுத்தும் சான்றுகளாகும். சங்கப் புலவர்கள் ஆழமாகவும், நுட்பமாகவும் அழகுற வருணித்த அகத்துறை இலக்கியங்கள், உலகிலேயே ஒப்பற்றன என உலக மக்களுக்கு உணர்த்துகிறார், பன்மொழி அறிஞர் தனிநாயகம் அடிகள்.

காலக் கண்ணாடி

சங்க கால மக்கள் வாழ்ந்து வந்த வாழ்வைத் தெளிவாகப் புலப்படுத்தும் காலக் கண்ணாடிகள் சங்க இலக்கியங்களாகும். உள்ளதை உள்ளவாறே உரைத்தல் சங்க இலக்கியங்களின் தலையாய சிறப்பு என அறிஞர்கள் பாராட்டி மொழிகின்றனர். இனம், குலம் என வேற்றுமை இல்லாமல், கவிதைத் தெய்வத்தின் முன்னர் சங்கக் கவிஞர்கள் யாவரும், சமமாக விளங்கித் தங்கள் தங்கள் இதயங்களையே, காணிக்கைப் பொருளாக அளித்துள்ளனர். புறநானூறு இதற்குத் தக்க சான்றாகும்.

நாடகப் போக்கு

சங்க இலக்கியங்களில் வரும் அகப்பொருள் பாக்கள் எல்லாம் தலைவனும், தலைவியும் தோழியுமாகப் பேசுகின்ற நாடகப் போக்கிலேயே அமைந்துள்ளன. அவற்றை நாடகத் தனிநிலைச் செய்யுட்கள் (Dramatic Monologues) என வழங்குவர். இச் செய்யுட்களின் உயிர்நாடியாக விளங்கும்

தோழியின் கூரிய அறிவும் சீரிய பண்பும் செறிந்த குணச் சித்திரத்தை இலக்கியங் கற்ற எவராலும் மறக்கமுடியாது.

இயற்கை ஓசை

சங்கப் பாக்கள் இயல்பான பேச்சிலுள்ள இயற்கை ஓசையோடு (Speech Rhytm) இழைந்து செல்லும் இயல்பின; தமிழுக்கு இயல்பாக அமைந்த நேரிய பெருமித நடையோடு செல்ல வல்லன. ஔவையார், கபிலர் பாடிய பாக்கள் இவ்வுண்மைக் கேற்ற சிறந்த சான்றுகளாகும்.

மொழித்தூய்மை

சங்கப் பாடல்களில் வரும் சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்கள். வடமொழிச் சொற்கள் அருகி வழங்குகின்றன. சொல்லும், பொருளும் ஒன்றையொன்று தழுவிச் சென்று பொருள் முடியும் இடத்தோடு சொல்லும் முடிவது சங்க இலக்கியங்களின் தலையாய சிறப்பியல்பாகும்.

இடம், காலத்தை வென்றவை

"யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்னும் உலகப் பொதுமையையும், "உலகம் ஒன்று; அதில் வாழும் மக்கள் அனைவரும் உறவினர்" என்ற பேருண்மையையும் உணர்த்தும் பெருமை வாய்ந்தது சங்க இலக்கியம். காலம், நாடு போன்றவற்றைக் கடந்து, இலக்கிய இன்பம் அளிக்கும் ஆற்றல் பெற்றவை சங்க இலக்கியங்கள். தற்காலத் தன்மை (Modernity) என்ற சிறப்பியல்பைப் பெற்று, பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய்ப் பொலிவும், புத்தம் புதுக்கருத்தும் தாங்கி, என்றும் சீரிளமைத் திறத்தோடு விளங்குவன சங்க இலக்கியங்களேயாகும்.

சங்க இலக்கியங்களின் இத்தகைய பல்வேறு சிறப்பியல்புகளும், சங்கப் புலவர்களின் சீரிய பண்புகளுந்தாம் சங்க காலத்தைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே ஒரு பொற்காலமாக உயர்த்திவிடுதலைக் காணலாம்.

(பாடப்பகுதிகளில் வரும் சங்க நூல்களின் கருத்துக்களையும் இக் கட்டுரைக்குப் பயன்படுத்திக்கொள்க.)

குறிப்புக்கள்

1. சங்கம் இருந்ததற்கான சான்றுகள்

(i) முச்சங்கம் பற்றிய மூவகைக் கருத்துக்கள்

1. முச்சங்கம் முழுப்பெயர்.
2. ஒரு சங்கம் உண்மை.
3. தொன்று தொட்டு மூன்றே.

(ii) சான்றுகள்

1. பரம்பரைக் கதைகள்
2. இலக்கியச் சான்றுகள்
3. உரையாசிரியர்கள் கூற்று
4. செப்பேட்டு உண்மை.

2. சங்க நூல்கள்

(i) எட்டுத்தொகை :
அகப்பொருள் நூல்கள் —5.
புறப்பொருள் நூல்கள்—2.
அகமும் புறமும் கலந்த நூல்—1.

(ii) பத்துப்பாட்டு ;
ஆற்றுப்படை நூல்கள்—5.
அகப்பொருள் நூல்கள் - 3.
புறப்பொருள் நூல்கள்—2.

3. சங்க காலம் பொற்காலம்

(i) சங்கப் புலவர்கள் மாண்பு

பற்பல குலத்தினர்	பலவகை மதத்தினர்	அருள் உள்ளம்
கவிபாடிய காவலர்கள்	பாராட்டும் பண்பினர்	வற்றாத வள்ளன்மை
பெண்பாற் புலவர்கள்	அமைதி விழையும் இதயம்	அழியாத நட்பு
பல்வேறு துறையினர்	அஞ்சா நெஞ்சம்	அரசர்கள் பாராட்டு

(ii) சங்க இலக்கியப் பண்பு

பொருட்சிறப்பு.	வருணனை இயல்பு	நாடகப் போக்கு
திணைப் பிரிவு.	உரிப் பொருள் உயர்வு	இயற்கை ஓசை
சமத்துவப் பண்பு	காலக் கண்ணாடி	மொழித் தூய்மை
		இடம் காலத்தை வென்றவை

3. சங்கம் மருவிய காலம்

(கி. பி. 100—600)

முன்னுரை

கி. பி. மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில், பிற மொழியாளரான களப்பிரர் என்பார், பாண்டிநாட்டின்மேல் படையெடுத்து வந்து, தமிழ்வேந்தர்களான பாண்டியரை வென்று அவர்கள் நாட்டைக் கைப்பற்றி, அரசாள முற்பட்டனர். அந்நியர் ஆட்சி நாட்டிலே புரட்சியை உண்டு பண்ணித் தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழர்நாகரிகம் ஆகியவற்றை வீழ்ச்சியுறச் செய்துவிட்டது. இத்தகைய களப்பிரர் படையெடுப்பால், பாண்டியர் தலைநகரில் நிலவிய கடைச் சங்கம் அழிவுற்றது. கி. பி. 470ஆம் ஆண்டில், வச்சிரநந்தி என்ற சமணமுனிவர், திராவிடச் சங்கம் ஒன்றை நிறுவியுள்ளார். இச் சங்கத்தார் இருண்டகாலத் தமிழ்மக்கள் தம் பண்டை அறவொழுக்கங்களைப் போற்றி அவற்றின் வழியே நல்வாழ்க்கை நடத்தச் சிறுசிறு நீதி நூல்களை, எளிய வெண்பாக்களில் எழுதி வெளியிடலாயினர். அவ்வாறு தோன்றிய நீதிநூல்களே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும்.

மேலும் இக்காலத்தில்தான் 'சிலப்பதிகாரம்' மணிமேகலை' என்ற இரட்டைக் காப்பியங்கள் தோன்றியுள்ளன. அவற்றை அடுத்துப் பார்ப்பேம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

சங்கப் பாக்களில், ஊன் உண்பதும், மது அருந்துவதும், பரத்தையரோடு இன்புற்று இருப்பதும் மிக இயல்பாக உள்ளன. திருக்குறள் போன்ற கீழ்க்கணக்கு நூல்களோ, அவ் வழக்கை மிக வன்மையாகக் கண்டிக்கின்றன. இது பழக்க வழக்கங்கள் மாறுபட்ட சூழ்நிலையில், இந் நூல்கள் தோன்றியுள்ளன என்ற உண்மையைத்தான் எடுத்துக் காட்டுகிறது. சங்கநூல் கருத்துக்களைக் கீழ்க்கணக்கு ஆசிரியர்கள், மிகுதியாகத் தம் நூல்களில் கையாண்டுள்ளனர். சிறப்பாக, இத் தொகுதியில் விளங்கும் ஐந்திணை நூல்கள் எல்லாம், "சங்கச் சான்றோரின் அகப்பாடல்களில் தோய்ந்த அனுபவ முதிர்ச்சியினால்" எழுந்தனவேயாகும். பழமொழி நூல், பாரி, பேகன் போன்ற வள்ளல்களின் வரலாற்றைப் பண்டு நிகழ்ந்தனவாகக் கூறுகின்றது. மேலும், சங்க காலத்தில் வழக்கில் வராத வெண்பா யாப்பு பிற்காலத்தில்தான் பெரு வழக்காகியுள்ளது: எனவே, கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் வெண்பா யாப்பிலேயே அமைந்துள்ளன. அன்றியும் சொல்லாட்சி, வடசொல் கலப்பு, இலக்கண மரபுகள் முதலியவற்றில், சங்க காலத்தினும் வளர்ச்சி பெற்ற போக்கைத்தான் இந் நூல்களில் காண்கிறோம்.

மேலும் கடைச்சங்க நூல்களைப்பற்றிக் கூறும் களவியல் உரைகாரர், 'கீழ்க்கணக்கு" நூல்களைப்பற்றிக் குறிப்பிடாததாலும், பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்றோர், இக் கீழ்க்கணக்கு நூலாசிரியர்களைப் "பிற்காலச் சான்றோர்கள்" என அழைப்பதாலும், இந் நூல்கள் சங்க காலத்திற்கு மிக மிகப் பிற்பட்ட காலத்தில் தோன்றினவென்பது தெளிவாகின்றது. "பதினெண் கீழ்க்கணக்கு" என்னும் வழக்கை 13. 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மயிலைநாதரும், பேராசிரியருமே முதன்முதலாகத் தம் நூலுரைகளில் கூறியுள்ளனர். இந் நூல்களைத் தொகுத்தவர் பெயரும், காலமும் புலப்படவில்லை.

அறம், பொருள் இன்பம் என்னும் முப்பொருளையும் கொண்டு, ஐந்து அல்லது அதனினும் குறைந்த அடிகளால், வெண்பாவால் இயன்ற நூல்களைக் கீழ்க்கணக்கு[1] என்று 'பன்னிருபாட்டியல்' எனும் இலக்கண நூல் விளக்கம் தருகிறது. வேறு பிறநூல்களும் இத் தொகுதியில் உள. அந் நூல்களாவன:

நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பதூஉம்
கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு.

இத் தொகுப்பில், ஏறத்தாழ 3,250 செய்யுட்கள் அடங்கியுள்ளன. அத் தொகுப்பில் அமைந்த நூல்களின் பெயரைக் குறித்து 1885 ஆம் ஆண்டு தொடங்கி சி. வை. தாமோதரம் பிள்ளை போன்றவர்களால் நிகழ்ந்த ஆராய்ச்சியின் விளைவாக, இப்பொழுது 'முப்பால்' என்ற சொல் திருக்குறளைக் குறிக்கும் என்பதும், 'இன்னிலை' என்ற பெயரில் வெளிவந்துள்ள நூல் கீழ்க்கணக்கைச் சார்ந்தது அன்று என்பதும், 'கைந்நிலை' என்ற நூல்தான் உண்மையாக உள்ளது என்பதும், தெளிவாகப் புலப்பட்டுள்ளன.

நூல்பாகுபாடு

இவற்றுள், நாலடி, நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஏலாதி, முதுமொழிக் காஞ்சி, முப்பால், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம் ஆகிய 11 நூல்கள் அறவொழுக்கம்பற்றிய நீதி நூல்களாகும். ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை,

---

1. அடிநிமிர் பில்லாச் செய்யுள் தொகுதி
'அறம்பொரு ளின்பம் அடுக்கி யவ்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்.'
—'கணக்கு' என்ற சொல்லுக்கு 'நூல்' என்பது பொருளாகும். எனவே கற்றுக்கொடுக்கும் ஆசிரியரைக் 'கணக்காயர்' என அழைத்துள்ளனர்.

கார் நாற்பது ஆகிய 6 நூல்கள் அகம் பற்றியனவாகும். களவழி நாற்பது எனும் நூல் புறம் பற்றிய நூலாகும். இம் மூவகை நூல்களையும் வரிசையாகக் காண்போம்.

அறவொழுக்கம் பற்றிய நூல்கள்

1. திருக்குறள்

நீதிநூல்களிலெல்லாம் உலகப்புகழ் வாய்ந்த ஒப்பற்ற நூலாகத் திகழ்வது திருக்குறளேயாகும். தமிழகத்தில் இந் நூலைப் போற்ருத புலவரும் இல்லை; இந் நூற்கருத்துக்களைக் கையாளாத நூலும் இல்லை; அவ்வாறே திருக்குறளைப் புகழாத மேனுட்டு அறிஞரும் இல்லை; மொழி பெயர்க்காத உயர்ந்த மொழியும் இல்லை.

இத்தகைய புகழ்வாய்ந்த நூலை இயற்றிய புலவரே திருவள்ளுவராவர். இவருக்கு ஒன்பது பெயர்களையும் இவர் இயற்றிய திருக்குறளுக்கு ஒன்பது பெயர்களையும் இட்டு வழங்குகின்றனர். பதினெண் கீழ்க்கணக்கில் காணப்படும் 'முப்பால்' என்னும் நூல் வேறு; திருக்குறள் வேறு எனக் கூறுவர் சிலர். ஆனல் திருவள்ளுவமாலையில் 15 பாட்டுக்கள் திருக்குறள் நூலை 'முப்பால்' என்றே அழைப்பதாலும் 'முப்பால்' என்று வேருெரு நூல் வழங்காததாலும் திருக்குறளையே 'முப்பால்' எனல் பொருத்தமுடையதாகும்.

வள்ளுவர் வாழ்க்கை

வள்ளுவருடைய பிறப்பு வளர்ப்புப்பற்றிப் பல கதைகள் கூறுவர்; அறிவுடையோர் அவற்றுள் ஒன்றையும் உண்மையெனக் கொள்ளார்; எனினும், வள்ளுவர்,

> **தமிழன் திருக்குலத்தில் தமிழ்த்தாய் திருவயிற்றில்**
> **தமிழ்த் திருவள்ளுவனுர்—கிளியே!**
> **தமிழாய்ப் பிறந்தாரடி—** என உரைப்பது

மட்டும் மிகப் பொருத்தம் எனலாம். வள்ளுவர் அரசனுக்கு அணுக்கச் செயலாளராக இருந்து அரசனேடு ஒப்

மதிக்கும் சிறப்புப் பெற்றிருந்தார் எனவும் கூற இடமுண்டு' இதனைக் கீழ்க்கண்ட பெருங்கதைப் பகுதி எடுத்துரைக்கிறது :

திருநாள் படைநாள் கடிநாள் அன்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன் என்பதாம்.

திருக்குறள் அமைப்பு

திருக்குறள், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்னும் முப்பெரும் பிரிவுகளையும், 133 அதிகாரங் களையும், அதிகாரத்திற்குப் பத்துப் பத்துப் பாக்களாக மொத்தம் 1330 குறட்பாக்களையும் கொண்டது.

இந் நூல் முழுமைக்கும், கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என்ற நான்கு அதிகாரங்கள் பாயிரமாக விளங்குகின்றன. 38 அதிகாரங்களில் முதலில் அமைந்த அறத்துப்பாலை, இல்லறவிய லென்றும், துறவறவியலென்றும், ஊழியலென்றும் பாகுபாடு செய்துள்ளார். அன்பே பண்பாகவும், அறமே பயனாகவும் திகழ்வது இல்லறமென்றும், அதில் அன்புடைமையின் சிறப்பை நேர்முகமாகவும், எதிர்முகமாகவும் கூறி, விருந் தோம்பல், ஒப்புரவறிதல், ஈகை போன்ற அறங்களையும், எடுத்துரைக்கின்றார். அருளே பண்பாகவும், வீடுபேறே பயனாகவும் விளங்குவது துறவறமென்றும், அதில் அருளுடை மையின் சிறப்பை நேர்முகமாகவும், எதிர்முகமாகவும் விளக்கி, அருளுடைமை, மெய்யுணர்வு, அவாவின்மை, தவம், துறவு போன்ற பண்புகளை விரித்துரைக்கின்றார்; இறுதியில் ஊழின் இயல்பை வற்புறுத்துகிறார். இப்பாலில் வள்ளுவரின் உயர்ந்த துறவுள்ளத்தையும் அன்புள்ளத்தையும் காணலாம்.

அடுத்தமைந்த பொருட்பாலை, அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல், என ஏழு பகுதிகளாகக் கொண்டு, 70 அதிகாரங்களில்

தம் கருத்துக்களைக் கூறுகின்றார். அரசனுக்கு அமைய வேண்டிய பண்புகளையும், அவன் ஆற்ற வேண்டிய கடமைகளையும் இறைமாட்சி என்ற அதிகாரத்தில் அழகாகக் கூறுகின்றார். அடுத்து, அரசனுக்கு அமைய வேண்டிய இயல்புகளின் சிறப்பைத் தமக்கே உரிய முறையில், வகுத்தும் தொகுத்தும் வலியுறுத்திச் செல்லுகின்றார். தற்காலக் கருத்துக்களையும் கொண்டு திகழும் "கல்வி" என்ற அதிகாரம், வள்ளுவரின் நுண்ணிய அறிவிற்கேற்ற சான்றாகும். குடிமை தொடங்கி, கயமை ஈறாக உள்ள 13 அதிகாரங்களில் வள்ளுவர் கூறும் கருத்துக்கள் மக்களாட்சி நடத்தும் தற்கால மக்களுக்கு மிக இன்றியமையாதனவாகும். இப் பாலில், வள்ளுவரின் அரசியல், பொருளாதாரம்பற்றிய ஆழ்ந்த நுண்ணறிவைக் காணலாம்.

மூன்றாவதாக விளங்கும் காமத்துப்பாலைக் களவியல் கற்பியல் என இரு பிரிவுகளாக அமைத்து, பண்டைத் தமிழர் காதல் வாழ்வைக் கைவிடாமல், கற்பனைச் சிறப்போடும் கலைநுட்பத்தோடும் 25 அதிகாரங்களில் விளக்கியுள்ளார். காமத்துப்பாலில், அமைந்த பாடல்கள் அனைத்தும் நாடக நயம் வாய்ந்தவையாகும். இப் பாடல்களில் வள்ளுவரின் கற்பனை யுள்ளத்தையும், வருணனைத் திறத்தையும், நாடகப் போக்கையும் காணலாம்.

திருக்குறள் சிறப்பு

இம் முப்பாலை மூன்று வழிகளிலே நாம் கற்று மகிழலாம்.

(i) அற இலக்கியம் (Ethical Work)]

அறம் போதிக்கும் நூல்களிலெல்லாம், திறம் மிக்க நூல் திருக்குறளேயாகும். வள்ளுவர் அறத்தைத்தான் உயிருக்கு ஆக்கந் தருவதாகக் கண்டார்; அதுவே சிறப்பையும், செல்வத்தையும் ஒருங்கே ஈன வல்லது என்பதை யுணர்ந்தார்; எனவே, மாசில்லாத மனமுடைமையே அறம் என விளக்கி, அவ்வறத்தை அன்றறிவாம் என்னாது ஒல்லும் வகையெல்லாம் ஓவாது செய்ய வேண்டும் என வற்

புறுத்துகிறர். அறனறிந்து பொருள் ஈட்டி அறவழியிலேயே இன்பங் காணவேண்டும். ஏனென்ருல், அறத்தால் வருவதே இன்பம் என்று ஆணித்தரமாக அறைகின்ருர்.

ஈன்ருள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை— என்றும்

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை— என்றும்

அறத்தின் இன்றியமையாமையை வற்புறுத்திக் கூறுகின்ருர். மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாத அறத்தை வலியுறுத்தும் சிறப்புப்பற்றித் திருக்குறளைத் 'தமிழ் மறை' எனக் கொண்டாடுவர்.

(ii) அறிவு இலக்கியம் (Literature of Knowledge)

திருக்குறள் அறநூல் மட்டுமன்று; வாழ்க்கைக்கு நல்ல விளக்கம் தரும் சிறந்த இலக்கிய நூலும் ஆகும். மனிதன் தன்னேடும், தன் மக்களோடும், பெற்ருேரோடும், சுற்றத்தாரோடும், அண்டை அயலாரோடும், ஆளும் அரசனேடும், அருள் புரியும் இறைவனேடும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை விரிவாக விளக்கி யுரைக்கும் சிறந்த வாழ்க்கை வழிகாட்டி நூலாகும். திருவள்ளுவர் மனித வாழ்க்கையை நன்கு நுணுகிநோக்கி ஆராயும் ஆற்றல் பெற்றவராவர். அதனுல்தான்,

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீரே பிற— என்று அறத்தின் இயல்பையும்,

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு— என, தவத்தின்

இயல்பையும் 'இத்தகையதுதான்' என்று வரையறுத்துக் கூற முடிகிறது.

சிலவேளைகளில், இலட்சிய உலகிலிருந்தே வள்ளுவர் சில அறங்களைப் போதிப்பதும் உண்டு. உதாரணமாக,

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு— என்கிறார்.

ஆனால், அதே வள்ளுவர் நாம் வாழும் இவ் வுலகின் இயற்கையையும், மனித இயல்பையும் அறியாதவரல்லர்; ஆங்காங்குத் தம் உலகியலறிவையும் உணர்த்திச் செல்லுகின்றார்.

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.

இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்.

தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

வாழ்க்கையை நன்கு ஊடுருவி ஆராய்ந்த காரணத்தால், வாழ்க்கையின் அடித்தளத்தில் இயங்கும் இருவேறு முரண்பட்ட சக்திகளையும் அழகாக அளவறிந்து, தம் குறட்பாக்களில் காணுகின்றார். "ஊழிற் பெருவலி யாவுள ?" என்று ஒரு குறட்பாவில் கேட்பார். "ஊழையும் உப்பக்கங் காண்பர், உலைவின்றித் தாழாது உஞற்று பவர்" என்று மற்றொரு குறட்பாவிலே மறுத்துக் கூறுவார் "இரக்க, இரத்தக்கார்க் காணின்" என்று ஒரு பாவில் உரைப்பார். அதையடுத்தே "கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும் இரவாதே" என்று கூறுவார்; பார்வைக்கு முரண்போலத் தோன்றும் இக் கருத்துக்கள் வள்ளுவருடைய உரம் வாய்ந்த உள்ளத்தையும், பரந்துபட்ட அனுபவத்தையுந்தாம் எடுத்துக்காட்டுகின்றன. எனவே, திருக்குறள் தலைசிறந்த ஒரு கலைக்களஞ்சியமாகத் திகழ்வதைக் காணலாம். இவ் வியல்பைக் கருதித் தான், மதுரைத் தமிழ் நாகனார் எனும் புலவரும்,

எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

என்று கூற முற்பட்டார்.

ஆகையால் இத்தகைய இயல்பு வாய்ந்த திருக்குறளைச் சிறந்த அறிவிலக்கியம் எனவும் பாராட்டி மகிழலாம்.

(iii) உணர்ச்சி இலக்கியம் (Literature of power)

திருக்குறள் அறநூல் மட்டுமன்று; கற்பனையாற்றல் படைத்த சிறந்த உணர்ச்சி இலக்கியமாகும். இயற்கையை நன்கு நோக்கிப் பல அழகிய உவமைகளைக் கூறி, நம் உள்ளத்தில் உணர்ச்சி வெள்ளத்தை அலைமோத வைக்கிறார். இவர் இயற்றியுள்ள காமத்துப்பால் பகுதி தூய காதல் உணர்ச்சி வாய்ந்த சிறந்த கற்பனை இலக்கியமாகும்.

காதலன் நேசமாக நோக்குங்கால், அவனை நேராக நோக்காமல், குனிந்து நிலம் நோக்கிக் கண் இடுக்கிப் பார்க்கும் காதலியின் கள்ளப் பார்வையோ, காதலனுக்குத் தாங்காத கடும் நோயைத் தருகின்றது. ஆனால், மெல்லச் சிரிக்கும் அவள் வெல்லப் பார்வையோ, அந் நோய் நீக்கும் அருமருந்தாக அமைகின்றது. உலகிலோ, நோய் ஒன்றாக இருக்கும். அதை நீக்கும் மருந்தோ, பிறிதொன்றாக இருக்கும். ஆனால், காதலர்கள் வட்டத்திலோ, நோய் தரும் மங்கையே, நோய் நீக்கும் மருந்தாக அமைகின்றாள்; "தன் நோய்க்குத் தானே மருந்தாகத்" திகழ்கின்றாள். (குறள்; 1091, 1102). வள்ளுவரின் சிந்தனைத் திறம்மிக்க இச் சீரிய கற்பனை ஜெர்மானியப் பேரறிஞர் டாக்டர் கிரால் என்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. உண்மைக் கல்வி கற்ற அப் பெருந்தகை, தாம் இன்புறுவது தம் தாயகம் இன்புற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் திருக்குறள் முழுவதையும் தம் தாய்மொழியில் மொழிபெயர்த்து விட்டார்.

எனவே, வள்ளுவர் ஓர் அறவோர் மட்டும் அல்லர்; அறிஞர் மட்டும் அல்லர்; கற்பனைத் திறமும், உணர்ச்சி வளமும் மிக்க ஓர் ஒப்பற்ற கவிஞரும் ஆவார்.

கண்ணுக்குப் புலப்படாதவற்றையும், நேருக்கு நேராகக் காண்பதுபோலக் கற்பித்துக்கொண்டு அவற்றோடு ஊடிக்கூடி

உரையாடும் வள்ளுவரின் வளமான கற்பனை எண்ணி எண்ணி நெஞ்சம் இன்புறுதற்குரியது.

காதற் பணியிலே கண்கொள்ளும் பாகம் அளவிடற்கரியது; கண்ணை வைத்துக் கவிஞர் வள்ளுவர் கற்பனை செய்யும் அற்புதத் திறம் கற்போர் நெஞ்சை எளிதிலே கவரவல்லது.

காதல் கொண்டபின் காதலர் பிரிவால், கலங்கித் தவிக்கும் காதலி, காதல் நோய் தந்த கண்ணையே நோக்கிக் கேட்கிருள் : "கண் காட்டவந்த நோய்தானே இக் காம நோய்! இப்பொழுது நோயையும் தந்த பின்னர், நொந்து அழுவதிலே பயன் என்ன? அன்று நம் காதலரை விரைந்து நோக்கியதும் இக் கண்களே! இன்று கலங்கியழுவதும் இக் கண்களே! ஆராய்ந்து உணராமல் காதல் கொள்வானேன்? பின்னர் அன்பை உணராமல் அழுது தொலைப்பானேன்? காம நோயைத் தந்த கண்களுக்குக் கலங்கி அழும் அவல நிலையும் ஒரு தக்க தண்டனை தான். "என்ன இந்தப் பேதைக் கண்கள்! காதலர் வராதிருந்தாலும் தூங்குவதில்லை; வந்தாலும் தூங்குவதில்லையே! அனைத்தையும் இக் கண் பறையைப்போல அறிவித்து விடுகின்றதே; இது காக்கக் கூடிய மறை எதுவும் இல்லையோ?" என மனம் குமுறுகின்ருள். (கண் விதுப்பழிதல்)

அதுபோல, பிரிவாலே வாடும் பேதைக் காதலி, தனக்கு இன்னத துயரைத் தரும் இரவுப்பொழுதை நோக்கிப், "பிரிந்த காதலர்தாம் கொடியவர் என்ருல், இரவுப்பொழுதோ அவரை விடக் கொடிதாக அல்லவா உள்ளது? எல்லோரும் கண் உறங்க இந்த இரவுப்பொழுது மட்டும் ஏன் விழித்திருக்கின்றது? பாவம் இந்த இரவுப்பொழுதும் தன் துணையை இழந்து மெத்த வருந்துகின்றதோ? (படர் மெலிந்திரங்கல்). எத்தகைய மென்மையான-ஆனல்-மிக மேன்மையான காந்தக் கற்பனை!

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பத்தையும் தன் காதலிபால் ஆரத்துய்த்த காதலன் அன்னுண்ட மயக்கத்திலே கற்பனை செய்கின்ருன்.

"ஏ! நிலவே! நீயும் என் காதலிபோல் ஒளிவீச முடியு மென்றால், நீடூழி காலம் நீயும் வாழ்வாயாக! நிலவே! நீ செருக்கி உலவுவதில் எத்தகைய சிறப்பும் இல்லையே! ஏனென்றால், என் காதலி முகத்திலே உன்னைப்போல் எத்தகைய களங்கமும் இல்லையே! எனவே, என் காதலி முகத்தை நான் கண்ட பின்னரும் நீ பலரும் காணும்படியாக உலவி வருவது கேவலமே; நாம் சுற்றிச் சூழ்ந்து நிற்க வேண்டிய நிலவு இதுவோ அன்றி நிலத்தில் உலவும் என் காதலி முகமோ என்று பிரித்து அறிய முடியாமல்தான் விசும்பிலுள்ள அப் பேதை விண்மீன் கூட்டங்கள் இப்படி இரவிலே கலங்கிக் கலங்கிக் கண் சிமிட்டுகின்றனவோ?" "குவளை மலரே! நிலத்தை நோக்கி நீ ஏன் குனிந்துவிட்டாய்? என் காதலியின் கண்களுக்கு நம்மால் ஒப்பாக முடியவில்லையே என்ற கழிவிரக்கம் காரணமாகத்தானே? அனிச்சமே! இந்நாள் வரை உன்னை நான் மிக மென்மையான பொருள் என்று என் இதயத்தில் எண்ணியிருந்தது உண்மைதான். ஆனால், என் காதலி உன்னைவிட மிக மிக மென்மையாக அல்லவா உள்ளாள்? அனிச்சமே! ஏ! அன்னத்தூவியே! இனி நீவிர் என் காதலியின் பிஞ்சுப் பாதத்தையும் பிளந்து எறிந்துவிடும் கொடும் நெருஞ்சிப் பழம் அல்லவா ஆவீர்" என்கிறான்

எத்தகைய கனிவான கற்பனை! காதலன் கூறுகின்றான்: "கண்ணில் உள்ள கருமணியே! என் காதலி இருப்பதற்கு என் உடலிலே வேறு இடம் இல்லை. இனி, நீ வேறு எங்காவது சென்றுவிட வேண்டியதுதான்!" என்று. காதலி கூறுகின்றாள்: "என் கண்ணிலே காதலர் கலந்துவிட்டார்; இனி நான் கண்ணையே ஒரு நாளும் இமைக்கமாட்டேன். இமைத்துவிட்டால் அவர் மறைந்துவிடுவாரே! கண்ணை நான் இமைக்கும்பொழுது, அவர் எப்படி வருந்தாமல் இருக்க முடியும்? அவர் என் கண்ணில்தானே என்றும் உள்ளார்? கண்ணை ஒருபொழுது, நான் இமைப்பதும், அவருக்குப் பெரிய புன்கண்ணை இழைப்பதுபோல்தானே! எனவே, இனி நான் கண்ணிலேகூட ஒருநாளும் மைதீட்டமாட்டேன்;

நான் மைதீட்டினால், அவருக்கு ஏதேனும் இன்னல் நிகழ்ந்து விடும்; அவர் என்றும் என் நெஞ்சிலேயே உள்ளார்; அதனால் சூடான ஒரு பொருளையும் நான் இனி உண்ணமாட்டேன்; சூடான அப் பொருள் அவ்வரைச் சுட்டுவிடும் அல்லவா?" என்கின்றான்.

எத்தகைய குழைவுக் கற்பனை! கொள்ளைக் கற்பனை!!

காம உணர்வு தரும் அனுபவத்தை வள்ளுவர் எவ்வளவு அழகாக வகுத்து உணர்த்துகின்றார்! "அரிய நூலைக் கற்கக் கற்க அறியாமையே மிஞ்சும்; இந்த அரிவையோடு சேர்ந்து களிக்கக் களிக்கக் காம உணர்வே மிகும். உண்டால்தானே கள் மயக்கத்தைத் தரும்? ஆனால், காமமோ கண்டாலே மயக்கத்தைத் தருகின்றதே! நெருங்கித் தொட்டால்தான் நெருப்புச் சுடும்; ஆனால், காமமோ, விலகிவிட்டாலே சுட்டு விடுகின்றதே! கூடிக் களிக்கும் காம இன்பமோ, கடலைப் போன்றது. ஆனால், காதலரைப் பிரிந்து தவிக்கும் காமத் துன்பமோ கடலைவிடப் பெரிதாக உள்ளதே!" என்கிறார்.

களிப்பினைத் தந்த காதலர் பிரிவுத் தவிப்பினைத் தந்த பொழுது, பேதைக் காதலி வெதும்புகின்றாள்; வெகுளு கின்றாள்; காதலைத் தனக்குத் தந்த தன் நெஞ்சோடு ஊடிப் புலக்கின்றாள்; உரையாடிப் புலம்புகின்றாள்; காதலரோ பிரிந்துவிட்டார்; அவர் நெஞ்சமும் நம்மை நினைக்காமல், அவருக்குத் துணையாக அவரோடு சென்றுவிட்டது: அவ்வா றிருக்க ஏ! நெஞ்சமே! நீ மட்டும் ஏன் எனக்குத் துணை யாகாமல், இருக்க மறுக்கின்றாய்? நம்முடைய நெஞ்சமே நமக்குத் துணையாகாவிட்டால் நமக்கு வேறு யார்தாம் இவ் வுலகிலே துணையாவார்? காதலனை நினைத்து நெஞ்சம் கலங்குகின்ற காதலி வேதனையோடு வினவுகின்றாள்:

"துன்பத்தால் அழிபவர்க்குத் துணை ஏதும் இல்லை, என்ற காரணத்தால்தானோ நெஞ்சமே! நீயும் அவர் பின்னே செல் கின்றாயோ? ஏ! நெஞ்சமே! உன்னோடு வாழ்வது பெரும்பாடாக இருக்கின்றதே! காதலரைப் பெற்றாலும் நீ கலங்குகின்றாய், பெறவில்லையென்றாலும் கலங்குகின்றாய்! பெறாவிட்டாலோ, பெறுமைக்காகக் கலங்குகின்றாய்! பெற்றுவிட்டாலோ, எங்கே

அவரைப் பிரிந்துவிடுவோமோ? என்று கலங்குகின்றாய்! உன்னோடு என்றும் தீராத துயராக உள்ளதே!'' என்று இதய நாதத்தில் எழும் பேதத்தை வள்ளுவர் எவ்வாறு மிக மென்மை யாக மீட்டுகின்றார்!

காதலி காதலனோடு ஊடும் பகுதியோ கற்பனைச் சிறப்பின் சிகரம் ஆகும்.

இவ்வாறு வள்ளுவர் காமத்துப் பாலில் காட்டும் கற்பனைத் திறத்தாலும், அறத்துப்பால், பொருட்பால், பகுதிகளிலே அறிவுறுத்தும் உவமை, உருவகம் சொல்லோவியம் ஆகிய வற்றின் நயத்தாலும் தாம் ஓர் ஒப்பற்ற கவிஞரும் ஆவார் என்பதை நன்கு நிலைநாட்டுகின்றார்.

திருக்குறள் உரைகள்

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளைக் கற்றுமகிழ்ந்த பாவாணர்கள் "திருவள்ளுவ மாலை" எனும் தொகுப்பில் திருக் குறளைப் பாராட்டிப் பல பாடல்களைப் புனைந்துள்ளனர். திருக் குறளின் சிறப்பையறிந்த தருமர், மணக்குடவர், தாமத்தர், பரிதி, பரிமேலழகர் போன்ற பதின்மர் உரை எழுதியுள்ளனர். இவற்றுள் பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய நால்வர் உரைகளே இன்று கிடைத்துள்ளன. அந் நான்கனுள்ளும் பரிமேலழகர் உரையே பொதுவாகச் சிறந்த தெனக் கற்றோரும் மற்றோரும், ஒருங்கே போற்றுகின்றனர். டாக்டர் மு. வ. அவர்கள் திருக்குறளுக்கு எழுதிய இனிய தெளிவுரை இதுவரை ஒன்பது நூறாயிரம் படிகள் விற்பனையாகி யுள்ளன என்பதனை அறியும்பொழுது மக்களைக் கவர்ந்த உரை இதைத் தவிர வேறொன்றுமில்லை என்று உணரலாம். திருக் குறளின் உயர்வை நன்கு உணர்ந்த பிறநாட்டு அறிஞர்கள், ஏறக்குறைய 33 மொழிகளில் மொழிபெயர்த்துள்ளனர். [1]டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர் வள்ளுவரை வானளாவப் புகழ் கிறார். இதனால்தான் பாரதியும்,

---

1. There hardly exists in the literature of the world a Collection of maxims which we find so much lofty wisdom.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

எனப் பாராட்டிப் பாடுகிருர்.

2. நாலடி.

திருக்குறளுக்கு அடுத்த பெருமை வாய்ந்த நீதிநூல் 'நாலடியார்' ஆகும். இந் நூல் சமணமுனிவர்களால் பாடப் பட்டது. நானூறு வெண்பாக்களை யுடையது. "பாண்டிய மன்னன் ஆணையால் எண்ணாயிரம் சமண முனிவர்களால் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தும் வையையாற்றில் இடப் பட்டன. அவற்றில் 400 பாடல்களே நீரை எதிர்த்துக் கரை ஏறின" என்பர். இவ் வெண்பாக்களை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனப் பாகுபடுத்தி 40 அதிகாரங் களாக வகுத்து, அதற்கு முதன்முதல் உரையெழுதியவர் பதுமனாராவர். இந் நூலில் திருக்குறட் கருத்துக்களும், சொற்களும், மிகுதியாகப் பயின்றுவரக் காணலாம். பலர் பாடிய காரணத்தால், ஒருமுறை கூறிய கருத்தையே, மறு முறையும், இடையிடையே கூறியிருக்கக் காணலாம். எனினும் இந் நூல் கூறும் கருத்துக்கள் பொருட்செறிவுடையனவாகும்; அறிவிற்கு இன்பம் பயப்பனவுமாகும்.

மேன்மக்கள் இயல்புபற்றியும், கல்விச் சிறப்புப்பற்றியும் இந் நூல் அழகாக எடுத்துரைக்கிறது. 'கல்வியழகே அழகு' என்கிருர். 'கல்வி கரையில கற்பவர் நாள்சில, மெல்ல நினைத்தால் வாழ்க்கையில் பிணிபல ஆதலால், ஆராய்ந்து அமைவுடையன வற்றையே அன்னம்போல் கற்க வேண்டும்' என்கிருர். 'நீர் நுழைய முடியாத இடத்திலே நெய் நுழையும்; நெய் நுழைய முடியாத இடத்திலே புகை நுழையும்; அதுவும் நுழைய முடியாத இடத்திலே நுழைபவன்தான் இரவலன்' எனக் கூறுவது நகைச்சுவை பயப்பதாயுளது.

பிறைபோல வளர்வது பெரியோர் நட்பு; தேய்பிறை போலத் தேய்வது சிறியோர் நட்பு; நாய் நெஞ்சம் படைத்தோரின் நட்பே சிறந்தது; யானைப்புத்தி உடையோரின்

நட்பை நீக்குவதே நல்லது; விளக்கொளியும் வேசையர் நட்பும் ஒன்றேயாகும்; நெய்யற்றபொழுது விளக்கொளி குறையும்; கையில் பொருளற்றபொழுது வேசையர் உறவும் குன்றும்—என நட்பின் பலவகைகளை, இந் நூலில் நவிலுகின்றனர்.

செத்தாரைச் சாவார் சுமக்கும் இவ் வுலகில் நிலையாத இன்பத்தை நிலையாகக் கருதி மக்கள் மதி மயங்குவதைக் கண்டு, ஆசிரியர் உளம் கலங்கி உரைக்கின்ருர். உயிரை விடுவதோ உறுதி! ஆனல், அதைச் சிறிதும் உணராமல் களி மயக்கில் இம் மக்கள் கட்டுண்டு கிடப்பது, பலிபீடத்திற்கு அழைத்துச் செல்லப்படும் ஆடு தன் உயிரைப் பறிகொடுப்பதற்கு முன்னர், தன்னைக் கொல்லவிருக்கும் பூசாரியின் கரத்தில் உள்ள தளிரை, உணவென்று மயங்கி உட்கொண்டு மகிழ்வது போலுள்ளது என்கிருர்.

வெறி அயர் வெங்களத்து வேல்மகன் பாணி
முறிஆர் நறுங்கண்ணி முன்னர் தயங்க
மறிகுளகு உண்டன்ன மன்னு மகிழ்ச்சி
அறிவுடை யாளர்கண் இல்.

எட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த பெருமுத்தரையரை இரு பாக்கள் குறிப்பதால், இந் நூல் ஏறத்தாழ கி. பி. எட்டாம் நூற்ருண்டில் எழுந்திருக்கலாம் என்று அறிஞர் பலர் கருதுகின்றனர்.

3. நான்மணிக் கடிகை

விளம்பி என்னும் ஊரில் பிறந்த நாகனர் என்னும் வைணவர் இந் நூலின் ஆசிரியராவர். இந் நூல் 101 வெண்பாக்களை யுடையது. மணி போன்ற உறுதிப்பொருள்கள் நான்கினை ஒவ்வொரு பாவிலும் கொண்டு திகழுகிறது.

தாழ்வாக நாம் எள்ளி நகையாடும் கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; மான் வயிற்றில் ஒள்ளரிதாரம் பிறக்கும்; பெருங்கடலுள் விலைமதிப்பில்லாத முத்து பிறக்கும். அது போன்று எக் குடியிலும் நன்மக்கள் பிறப்பார்கள் என்று ஆசிரியர் இறுதியில் அறுவுறுத்துகின்ருர். மூங்கிலில் பிறக்கும்

நெருப்பு மூங்கிலையே எரிப்பதுபோல, நம் உள்ளத்தில் தோன்றும் சினமும் நம்மையே அழித்துவிடும் என்கிறார்.

"சாணையிலிட்டால்தான் மணிகளின் ஒளியைக் காணலாம்; சேணத்தில் அமர்ந்து செலுத்தினால்தான் குதிரையின் திறத்தை அறியலாம்; புடமிட்ட நிலையில்தான் பொன்னின் ஒளி புலப்படும்; அதுபோல, நம் செல்வம் குறைந்த பொழுதுதான், சுற்றத்தாரின் உண்மைப் பண்பையும் உணரலாம்'' என்கின்றார்.

இந் நூலாசிரியர் கூறும் கருத்துமிக்க பாடல் ஒன்று:

மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்
தனக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கு
ஓதின் புகழ்சால் உணர்வு.

இவ்வாசிரியர் எடுத்தோதும் பல உண்மைகளும், அறிவுரைகளும் இவருடைய புலமைத் திறத்தையும், பரந்த உலகியலறிவையும் நன்கு புலப்படுத்துகின்றன.

4. இன்னா நாற்பது

இந் நூலாசிரியர் கபிலர் என்னும் பெயரினர். இவர் சங்ககாலக் கபிலரினும் வேறுபட்டவர். 'இன்பம் பயவாது துன்பம் பயக்கும் பொருள்கள் இன்னின்ன' எனக் கூறும் நாற்பது வெண்பாக்களை யுடையது இந் நூல். இந் நூலில் 164 இன்னாத பொருள்களை எடுத்துரைக்கின்றார்.

இவ் வாசிரியர், இவ்வுலக வாழ்வில் கண்ட இன்னாத பொருள்களில் சில:

பந்தம் இல்லாத மனைவியின் வனப்பு இன்னா;
தந்தை இல்லாத புதல்வன் அழகு இன்னா;
அறிவு அறியா மக்கள் பெறல் இன்னா;
தன்னைத்தான் போற்றா தொழுகுதல் இன்னா;
ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் இன்னா;
கொடுக்கும் பொருள் இல்லான் வள்ளன்மை இன்னா;

5. இனியவை நாற்பது

மதுரைத் தமிழாசிரியர் மகனூர் பூதஞ்சேந்தனர் இந் நூலாசிரியராவர். ஒவ்வொரு வெண்பாவிலும், நான்கு அல்லது மூன்று இனிய பொருள்களாக நாற்பது வெண்பாக்களில் கூறுகிருர்.

இந் நூல், பொருளமைப்பில் திரிகடுகத்தையும் நூலமைப்பில் இன்னு நாற்பதையும் ஒத்துள்ளது. இன்னு நாற்பதின் மறு பதிப்பே இந் நூலாகும் என அறிஞர்கள் எண்ணுகின்றனர். இவ் வாசிரியரும் திருக்குறளைத் தெளிவாகக் கற்று, குறட் கருத்துக்களையும் வரிகளையும் ஆங்காங்குக் கையாளுகின்ருர்.

அவர் கண்ட சில உண்மைகள்:

குழவி தளர்நடை காண்டல் இனிதே;
அவர்மழலை கேட்டல் அமிழ்தினும் இனிதே;
குழவி பிணிஇன்றி வாழ்தல் இனிதே;
மனமாண்பு இலாதவரை அகறல் இனிதே;
கடன்கொண்டும் செய்வன செய்தல் இனிதே;
வருவாய் அறிந்து வழங்கல் இனிதே;
பிச்சைபுக்கு ஆயினும் கற்றல் மிகஇனிதே;
பிச்சைபுக்கு உண்பான் பிளிறாமை முன் இனிதே;

6. திரிகடுகம்

இந் நூலை இயற்றியவர் நல்லாதனர். சுக்கு, மிளகு, திப்பிலியாகிய திரிகடுகம் என்னும் மருந்து, மாந்தர் உடல் நோயை நீக்கி, உறுநலம் பயப்பது போல, மக்களின் மன இருளைப் போக்கி, இம்மை மறுமை இன்ப நலன்களை அளிக்க வல்ல முப்பெரும் உறுதிப்பொருள்களை ஒவ்வொரு வெண்பாவிலும் உரைப்பது 'திரிகடுகம்' ஆகும். இது 100 வெண்பாக்களை உடையது.

இவ் வுலகில் மழை பெய்யாமல் போவதற்குக் காரணமே குடிகளைக் கொடுமைப்படுத்திப் பொருள் கவரும் மன்னனும், உள்ளதைக் கூருமல் பொய்யே பேசும் மக்களும், வாழ்க்கைப்

பட்ட பின்னர், கணவனுடைய சொல்லை மீறி வீட்டைவிட்டு விரும்பிய இடம் செல்லும் பெண்ணும் இவ்வுலகில் இருப்பதால் தான், என்கிறார்.

7. ஆசாரக்கோவை

இந் நூலாசிரியர் பெருவாயின் முள்ளியார். இவர் வடமொழிப் பயிற்சி நிறைந்த தமிழ்ப் புலவராவர். வடமொழியில் இருடிகள் கூறியுள்ள ஆசாரங்களைத் தொகுத்து இந் நூலைத் தமிழில் இயற்றியதாக இந் நூலிலுள்ள சிறப்புப் பாயிரச் செய்யுளொன்று அறிவிக்கிறது. இந் நூல், இக்கால மக்கள் முழுவதும் ஏற்க விரும்பாவிடினும் ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கமுறைகளையும், கைவிடவேண்டிய செயல்களையும் நூறு வெண்பாக்களிலே கூறுகிறது.

இந் நூல் கூறும் கருத்துப் பொதிந்த பாடல் ஒன்று:

நன்றி அறிதல்; பொறையுடைமை; இன்சொல்லோடு;
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை; கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல்; அறிவுடைமை;
நல்இனத்தாரோடு நட்டல்—இவைஎட்டும்
சொல்லிய ஆசார வித்து.

8. பழமொழி

ஒவ்வொரு பாவின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழியை உரைப்பதால் இந் நூலைப் 'பழமொழி' என்றனர். இவ்வாறு அமைந்த நானூறு வெண்பாக்களைக் கொண்டது இந் நூல். பண்டைக்காலத்தில் நம் தமிழகத்தில் வழங்கிய இலக்கிய நாடோடிப் பழமொழிகளையும், சங்ககால இரவலர் புரலவர் வரலாறுகளையும், சேர சோழ பாண்டிய மன்னர்களைப் பற்றிய செய்திகளையும் இந் நூல் கூறுவதால் பண்டைத் தமிழ்நாட்டு வரலாற்றுச் செய்திகளை அறிய ஓரளவு வரலாற்று ஆராய்ச்சியாளருக்குப் பயன்படுகின்ற நூலாகும். பழமொழிகளையே நூல் முழுவதும் அமைத்து எழுதப்பட்ட நூல்களுள், மிக்க தொன்மை வாய்ந்தது இந் நூலேயாகும்.

முன்றுறை என்னும் ஊரில் வாழ்ந்த, குறுநல மன்னரான முன்றுறையரையர் என்பவர், இந் நூலின் ஆசிரியராவர். இவர் சமணராவர். இந் நூலைப் பல பாகுபாடுகள் செய்து, காலஞ் சென்ற செல்வக் கேசவராய முதலியார் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

மணலில் மறைந்து வாழும் தவளை தன் வாயாலே கெடுவது போல, பேதை தன் வாய்ச்சொல்லாலே, தனக்குத் தானே தீங்கை வரவழைத்துக் கொள்வானும்.

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயால் கெடும். என்கின்றார்.

வைத்திழக்கும் வன்கண்ணரிடம் இருக்கும் செல்வத்தை, "நாய் பெற்ற தெங்கம் பழம்" என்கின்றார்.

இந் நூலில் காணும் பழமொழிகளில் சில:—

'திங்களை நாய் குரைத்தற்று,' 'பாம்பறியும் பாம்பின கால்' 'யானையால் யானையாத் தற்று,' 'ஆயிரம் காக்கைக்கு ஓர் கல்,' 'முள்ளினால் முள்களையும் ஆறு.'

9. சிறுபஞ்சமூலம்

காரியாசான் இந் நூலாசிரியராவர். இவர் சைனர். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தன் வேர்கள், மக்கள் உடல்நோயைப் போக்கி, நலம்புரியும் சிறந்த மருந்துகளாம். அவை போல, மக்கள் உள்ளப் பிணியைப் போக்கி, உலகவாழ்க்கைக்குப் பயன்படும் ஐந்தைந்து உறுதிப் பொருள்களைக் கூறுவது 'சிறுபஞ்சமூலம்' ஆகும்.

கண்ணிற்கும், காலிற்கும், எண்ணிற்கும் எது அழகு என உரைக்கும் பாடல் சிந்தனைச் செறிவுடையதாகும்.

கண்வனப்புக் கண்ணோட்டம்; கால்வனப்புச் செல்லாமை;
எண்வனப்பு "இத்துணை ஆம்" என்று உரைத்தல்—பண்வனப்புக்

கேட்டார் நன்று என்றல்; வேந்நன் தன் நாடு
வாட்டான், நன்று என்றல் வனப்பு.

தோற் கன்றைக் காட்டிப் பசுக்களைக் கறக்கும் கொடிய பழக்கத்தை இவ்வாசிரியர் கடிவதிலிருந்து இப் பழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது என்பது புலனுகின்றது.

10. ஏலாதி

இந் நூற்பெயரும் திரிகடுகம் போன்று மருத்துவப் பெயரே. மருத்துவ அளவில் கலந்து செய்யப்பட்ட ஆறு வகை மருந்துகளை ஏலாதி யென்பர். இந் நூலில் ஒவ்வொரு வெண்பாவிலும், ஆசிரியர் அவ்வாறு உறுதிப் பொருள்களை உரைத்துள்ளார். இந் நூல் 80 வெண்பாக்களை யுடையது. இந் நூலாசிரியர் கணிமேதாவியார். சமணசமயத்தினர்; வடமொழிப் பயிற்சி வாய்ந்தவர்.

"காலன் கடுநெஞ்சினன், ஆகையால், வீட்டு நெறியையே விரைந்து தேடுக," என்று பாட்டுதோறும் பாரித்துரைக்கின்ருர். இவ்வுலகில் எது எளிது; எது அரிது என இவ் ஏலாதி நூல் உரைக்கும் திறம் தனிச் சிறப்புடையதாகும்.

சாவது எளிது; அரிது சான்ருண்மை; நல்லது
மேவல் எளிது; அரிது மெய்போற்றல்; ஆவதன்கரை
சேறல் எளிது; நிலை அரிது; தென்னியர் ஆய்
வேறல் எளிது; அரிது சொல்.

11. முதுமொழிக் காஞ்சி

மதுரைக் கூடலூர் கிழார் இந் நூலாசிரியராவர். இது சிறு அடிகளையுடைய நூலாகும். சிறந்த பத்து, அறிவுப் பத்து, பழியாப்பத்து, செவ்வாப்பத்து, அல்லபத்து, இல்லைப் பத்து, பொய்ப்பத்து, எளிய பத்து, நல்கூர்ந்த பத்து, தண்டாப்பத்து எனப் பத்து அதிகாரங்கள் இந் நூலிலே உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திலும், பத்துப் பத்துப் பாக்கள் அமைந்துள்ளன.

இந் நூலில் காணும் சில நயங்கள் :

“இளமைப் பருவத்தில் கல்லாமை குற்றம்; வளம் இல்லாத பொழுது வள்ளன்மை செய்வது குற்றம், சுற்றத்தார் இல்லையென்றால் சினம் கொள்வது குற்றம்'' என்கிறார்.

ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை;
மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை;
தேராமல் கற்றது கல்வி அன்று;
வாழாமல் வருந்தியது வருத்தம் அன்று;
நசையின் பெரியது நல்குரவு இல்லை;
இசையின் பெரியது ஓர் எச்சம் இல்லை;
துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது;
இன்பம் வெய்யோர்க்குத் துன்பம் எளிது;
சார்பு இல்லோர்க்கு உறுகொலை எளிது.

அகப்பொருள் நூல்கள்

1. ஐந்திணை ஐம்பது

இந்நூல் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற அகப்பொருளுக்குரிய ஐந்திணைகளுக்கும், திணைக்குப் பத்துப் பத்துப் பாக்களாக 60 பாக்களைக் கொண்டதாகும். சிறந்த செய்யுள் நடையையும், செறிந்த பொருள் வளத்தையும் கொண்டதாகும். மாறன் பொறையனுர் என்பவர் இந் நூலாசிரியராவர்.

அழகிய பாடல்கள் பல இந் நூலிலே உள்ளன. ''சுனையில் ஊறும் சிறிதளவேயுள்ள நீரைப் பிணைமான் உண்ண இசையாது என்றெண்ணிக் கலைமான், பிணைமானை உண்ணவைக்க, நீர் உறிஞ்சுவதுபோலப் பொய்யாகத் தான் உண்ணும் பாலைவழி'' என்று ஆசிரியர் ஓரிடத்தில் சுவைபடக் கூறியுள்ளார். 'கொல்லர் தெருவில் ஊசி விற்றல்' என்னும் பழமொழி இந் நூலிலே காணப்படுகிறது. இந் நூல் அகப்பொருளுக்கு உரிய ஓர் அரிய இலக்கியமாகும்.

2. திணைமொழி ஐம்பது

திணையொன்றிற்குப் பத்துப் பாக்களாக. அகத்திணை ஐந்துக்கும், ஐம்பது பாக்களைக் கொண்டது. ஐந்திணை ஐம்பதைப்போல், இதுவும் சொல், பொருள் நயங்கள் நிறைந்த ஒரு சிறந்த நூலாகும். இந் நூலின் ஆசிரியர் கண்ணஞ் சேந்தனுர் ஆவர்.

3. ஐந்திணை எழுபது

மூவாதியார் இந் நூலாசிரியராவர். ஒவ்வொரு திணைக்கும் எழுபது பாக்களைக்கொண்ட நூலாகும். இஃது அகப்பொருள் துறைகளை விளக்க எழுந்த சிறந்த நூலாகும்.

4. திணைமாலை நூற்றைம்பது

ஐந்திணைகளை விளக்கும் 153 வெண்பாக்களையுடைய நூலாகும்; கணிமேதாவியார் இந் நூலாசிரியராவர். பலவகை நிலங்களின் இயற்கை அழகுகளை இந் நூலாசிரியர் இனிதாக வருணித்துள்ளார்.

5. கைந்நிலை

இந் நூலாசிரியர் புல்லங்காடனுர் ஆவர். இஃது அன்பின் ஐந்திணையை விரித்துக்கூறும் அக இலக்கியமாகும்; திணைக்குப் பன்னிரண்டு பாடல்களாக 60 வெண்பாக்களையுடைய நூலாகும். வெண்பாக்களில் பல சிதைந்தழிந்து போயுள்ளன.

6. கார் நாற்பது

இதன் ஆசிரியர், கண்ணன் கூத்தனுர் ஆவார். இந் நூல் தலைவனைப் பிரிந்த தலைவி கார்காலம் வந்ததும், தலைவன் வரவை எதிர்பார்த்திருத்தலைக் கூறுகிறது. கார்காலத்தைப் பற்றிய புனைந்துரை, ஒவ்வொரு பாடலிலும் வருவதால் இந் நூல் காலத்தால் இப் பெயர் பெறலாயிற்று. கார்காலம் முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுதாகும். முல்லைத் திணைக்குரிய அகவொழுக்கத்தையே இந் நூல் விரித்துக் கூறுகிறது. கார்காலச் சிறப்பைத் தனியாகக் கூருது முல்லைத்திணைக்

குரிய நிகழ்ச்சி ஒன்றில் இயைத்து, இந் நூலை ஆசிரியர் இயற்றியிருப்பது பாராட்டற்குரியது. கார்கால வருணனைப் பகுதிகள் மிகவும் போற்றத்தக்கவையாகும்.

புறப்பொருள் நூல்

களவழி நாற்பது

இதன் ஆசிரியர் **பொய்கையாரவார்**. ஆனால், இவர் சங்க காலப் பொய்கையார் அல்லர். கழுமலம் என்னுமிடத்தில், சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானுடன் போரிட்டுத் தோல்வியுற, சோழன் சேரனைக் குடவாயிற் கோட்டத்திலே சிறை வைத்துவிட்டான். இதைக் கண்ணுற்ற சேரமானின் உயிர் நண்பராகிய பொய்கையார் சோழனின் வெற்றியைப் புகழும் முகமாக இந்நூலைப் பாடித் தம் நண்பரைச் சிறைமீட்டார்; இந் நூலின் ஆசிரியர், படிப்பவர் துணுக்குறும் படி நால்வகைப் படைகளின் போர்த் திறத்தையும், போர்க் கொடுமையையும் திறம்பட வருணிக்கிறார். கார்த்திகை விழாவை இவ்வாசிரியர் சிறப்பித்துப் பாடுகிறார்.

இரட்டைக் காப்பியங்கள்

முன்னுரை

தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த குடிமக்களின் வரலாற்றைக் காப்பியமாகக் கூறும் பெருமையினை உடையவை 'சிலப்பதிகாரம்,' 'மணிமேகலை' ஆகிய இரு நூல்களே ஆகும். கோவலன் கண்ணகியின் அவல வாழ்க்கையைச் சித்திரிப்பது சிலப்பதிகாரம் என்றால் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவது 'மணிமேகலை' ஆகும்.

சங்ககால இலக்கியங்கள் அமைப்பில் தனித்தனிப் பாடல்களாகவே விளங்குகின்றன. சிலம்பு நூலில் வரும் முப்பது காதைகளும் கண்ணகி கோவலன் கதையைச் சித்திரித்தாலும், அமைப்பில் தனித்தனிப் பாடல்களாகவே திகழ்கின்றன. அக் காதைகளுக்கு இளங்கோவடிகள் சூட்டிய பெயர்களே, அவ் வுண்மையை அறிவுறுத்தும் சான்றுகளாகும். சங்க நூல்களின் இயல்பான ஓர் இலக்கிய வளர்ச்சியே சிலப்பதிகாரக் காப்பியத்தின் மலர்ச்சி என்பது தெற்றெனப் புலப்படும்.

இலக்கிய மரபிலே மட்டும் அன்று, பற்பல சமய வகைகள், சமுதாய அமைப்பு முறைகள், அரசியல் சூழ்நிலைகள் ஆகிய வற்றின் மாறுபட்ட வளர்ச்சியையும் சிலம்புக் காப்பியத்தில் மிகச் சிறப்பாகக் காணலாம். காரணம் சங்ககாலச் சூழல் வேறு; சிலம்பு எழுந்த கால கட்டமும் வேறு.

தமிழ்மக்கள் தங்கள் சமுதாயத்தை வருணாசிரம தருமத்தின் அடிப்படையில் அமைத்து வாழ்ந்தபொழுதுதான் சிலம்பு நூல் எழுந்திருத்தல் வேண்டும். ''பால் வேறு தெரிந்த நால்வேறு தெரு'' ''நால்வகை வருணத்து அடங்காக் கம்பலை'' என்று இளங்கோவடிகள் பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு வருணத்தாரும் தனித் தனியாக நான்கு தெருக்களிலே நிலையாகத் தங்கி வாழ முற்பட்டதைத்தான் கூறுகின்றார். இவர் சுட்டிக் காட்டும் ''வருணம்'' என்ற சொல்வழக்கு சங்ககாலத்தைச் சார்ந்த தன்று.

சிலம்பு எழுந்த காலத்தில், பார்ப்பன குலத்தினர் சமுதாயத்தின் மேல்மட்டத்தில் அமர்ந்து மிக மேன்மையாக வாழ்ந்துள்ளனர். அதனால்தான், வார்த்திகன் என்னும் பார்ப்பனன் காலில், பாண்டிய மன்னன் வீழ்ந்து வணங்கு கின்றான்.

இமயமலையில் வாழும் இமயத்தாபதரை (அந்தணரை) ஆதரிக்க வேண்டுவது அரசன் கடன் என்று மாடல

மறையோன் சேரன் செங்குட்டுவனுக்கு ஆணையிடுகின்றான்; அம் மறையோன் அறிவித்த வண்ணமே, சேரச் செம்மலும் வேள்விச் சாந்தியொடு விழாவும் புரிகின்றான். வார்த்திகன் பாண்டியனிடம் பிரமதேயம் பெறுகின்றான்; மாடலன் சேரனிடம் தன் எடைக்கு எடை துலாபாரம் அடைகின்றான். மதுரைமா நகரம் மறை நா ஓசையல்லாது, மணி நா ஓசை 'அறியாதென இளங்கோவடிகள் இயம்புகின்றார். மாமுது பார்ப்பான் மறை வழிகாட்டத்தான், கண்ணகி கோவலன் திருமணம் நிகழ்கின்றது; கோவலனைப் பிரிந்த நிலையிலும் 'அந்தணரை ஓம்ப முடியவில்லையே' என்றுதான் கண்ணகியும் மனம் புண்படுகின்றாள்; மதுரையை எரிக்கும் நிலையிலும், "பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்" பால் சார்தல் வேண்டாமெனத்தான் அக்கினிக் கடவுளை நோக்கிக் கண்ணகி ஆணையிடுகின்றாள். சங்க இலக்கியங்களிலே பாடும் பாவலர்க்கு அமைந்த சிறப்பு, சிலப்பதிகாரத்திலே, பார்ப்பன குலத்தாருக்கு அமைந்துவிட்டதைத்தான், இச் சான்றுகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. கோவலன் அன்னையும், கண்ணகி தாயும் அரட்டன் செட்டிக்கு இரட்டைப் பெண்களாகப் பிறந்தனர் என்று குறிக்கின்றார் இளங்கோவடிகள். "எட்டி," "செட்டி" என்று வணிகர் குலத்திற்கமைந்த வருணப் பெயர்களைத் தமிழில் முதல்முதலாகச் சுட்டிக் காட்டுவதும் சிலம்பு நூலேயாகும். ஒவ்வொரு வருணத்தாருக்கும் ஒவ்வொரு நிறத்தில் ஒரு பூதம் உளதென உரைக்கும் வருண தருமச் சிந்தனை மிகமிகப் பிற்காலத்ததேயாகும். வேளாளரை நான்காம் வருணத்தார் என்று நவிலாமல், ஆடல் பாடல் கலைகளில் வல்லவர்களைத்தான் நான்காம் வருணத்தினர் என வருணிக்கின்றார்.

கலை வல்லாரின் ஆதிக்கம் சமுதாயத்தில் உச்சநிலையில் ஓங்கியிருந்த காலத்தில்தான் இளங்கோவடிகள் தம் சிலம்புக் காப்பியத்தை இயற்றியிருக்கவேண்டும்.

சங்க காலத்தில் கலைத்திறம் மிக்க பாணரும், கூத்தரும், பொருநரும், விறலியரும் நாடெங்கணும் அலைந்து திரிந்தனர்.

வறுமைமிக்க வாழ்க்கை நடத்தினர். ஆனால், சிலம்பு சித்திரிக்கும் கலைஞர்கள் கூட்டமோ வளமான வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். நகரில் இவர்களுக்குத் தனித்தனி வீதிகள் உள்ளன; அவ் வீதிகளிலே இவர்களுக்கென்று நெடுநிலை மாடங்கள், படையமை சேக்கைப் பள்ளிகள் அமைந்துள்ளன. இவர்கள் பயன்படுத்தும் மனங்கவர் மணப் பொருள்களோ, அணியும் அணிகலன்களோ கணக்கற்றன. இவர்கள் அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவர்கள்.

அரசச் சுற்றமே சூழ்ந்திருந்து மாதவியின் நடன அரங்கேற்றத்தைச் சிறப்பித்துள்ளது; கணிகையொருத்தியின் ஆடலும் பாடலும் பாண்டிய மன்னனின் மனத்தைத் திரிக்க அதன் விளைவாகவே கோவலன் கொலையுண்ணப் பெற்றான். வடநாடு சென்று வாகைசூடிய சேரன் செங்குட்டுவன் தன் வெற்றியின் முடிவில் சாக்கையர்களின் கொட்டிச் சேதத்தைக் கண்டுகளிக்கின்றான்; வடநாட்டரசன் ஒருவன்பால் பல நாட்டிய மங்கையர்களைத் திறைப்பொருளாகப் பெறுகின்றான். இவ்வாறு காப்பியக் கவிஞர் இளங்கோவடிகள் சித்திரிக்கும் சிலம்பின் காலச் சூழ்நிலை கணிகையர்களுக்கிருந்த சிறப்பையும் செல்வாக்கையுமே நன்கு சுட்டிக் காட்டுகிறது. மணிமேகலையின் பிறந்தநாள் விழாவிற்கு ஆயிரம் கணிகையர் வருகை தந்து வாழ்த்துரைக்கின்றனர்.

இவர்கள் ஆடுகின்ற கூத்துக்கள் அனைத்தும் சமயத் தொடர்பு உடையனவாகவே யுள்ளன. கடலாடு காதையில் வரும் கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், பேடி, துடி போன்றவை பலவும் புராணத் தொடர்பு உடையவையே. பல்வேறு கடவுளர்களும் கலந்து ஆடியவையேயாகும். மாதவி நங்கையும் கடவுளர் ஆடுகின்ற கூத்துக்களையே பெரும்பாலும் ஆடியுள்ளாள். இந்திர விழாவில் ஆடப்பெற்ற கூத்துக்கள் பலவும் புராண இதிகாச நிகழ்ச்சிகளாகவே உள்ளன. இந்திர விழா தமிழ் மக்களுக்கு உரிய ஒன்றன்று. அவ் விழாவின் தோற்றத்திற்கான காரணமே புராண மயமாகவே உள்ளது. மாபாரதம் போற்றும் முசுகுந்த மன்னனையே சோழநாட்டில் நிகழும் இந்திர விழா

விற்குக் காரணமாகச் சிலம்பும் மணிமேகலையும் செப்புகின்றன. இதிகாசக் கதைகள் தமிழகத்தில் ஏற்றம்பெற்ற நிலையில்தான் இவ் விழா கால் கொண்டிருக்கவேண்டும். இந்திர விழா நடைபெறும் காலமே, நடன அரங்கேற்றத்திற்கு ஏற்ற காலமென பரதமுனிவர் தம் நாட்டிய சாத்திரத்தில் கூறுகின்ருர். ஊர்வசியின் குடியில் தோன்றியவளே மாதவி என இளங்கோவடிகள் கூறுகின்ருர்.

கூத்துத்துறை நன்கு வளர்ந்து செழித்த காலத்தில்தான், சங்ககாலப் பாடினி, விறலியரைப்போல் அல்லாமல் கணிகையர்கள் காவலர்களையும் வணிகப் பெருமக்களையும் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் பெற்றிருந்த காலகட்டத்தில்தான் இளங்கோ தம் நூலை இயற்றியிருத்தல் வேண்டும்.

இந்திய நாட்டில் தோன்றி வளர்ந்த அனைத்துச் சமயங்களையும் இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் சித்திரிக்கின்ருர். பௌத்தமும் சமணமும் பாரத நாட்டில் பழையன என்ருலும், தமிழகத்தில் சிவநெறியும், திருமால்நெறியும் தனித்தனி சமய அமைப்புக்களோடும், தெய்வத் திருக்கோலங்களோடும் வழிபாட்டு முறைகளோடும் வளர்ந்து தழைத்தது நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஆங்காங்குத் தோன்றி, பக்தி உணர்ச்சியைப் பரப்பிய காலத்திலேயாகும்.

சிவபெருமானைச் சிலம்புநூல் ஆடல் வல்லானைக் கூத்தப் பெருமானுக அறிவிக்கின்றது; செங்குட்டுவனுக்குத் தோற்ருேடிய பலரைச் "சடையினர், உடையினர், சாம்பல் பூச்சினர்'' எனப் பக்தி இலக்கிய காலத்திற்குரிய திருநீற்று வழக்கத்தினையும் சுட்டிக் காட்டுகிறது. "அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும்'' என்று சைவர்க்குரிய ஐந்தெழுத்து மந்திரத்தையும் வைணவர்க்குரிய எட்டெழுத்து மந்திரத்தையும் தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்கிறது. இளங்கோவடிகள் முருகப் பெருமானை, ஆறுமுகம் கொண்ட கடவுளாகக் காணுகின்ருர். மயில்மீது வள்ளி நாச்சியாரோடு முருகன்

அமர்ந்திருக்கும் காட்சியை "நீலப் பறவைமேல் நேரிழை தன்னோடும் ஆலமர் செல்வன் புதல்வன்" எனக் குறிக்கின்றார். செந்தில், வெண்குன்று, ஏரகம் என்ற மூன்றனை முருகனின் படைவீடுகளாக மொழிகின்றார். சிலம்பு காட்டும் முருகன் சங்ககாலத்திய முருகனின் சிறப்பான வளர்ச்சியினையே பெற்றவனாவான்.

திருமாலுக்குரிய திருத்தலங்களாகத் திருவேங்கடம், திருவரங்கம், திருமால்குன்றம் என மூன்றனைக் கூறுகின்றார். திருவரங்கம் திருமால் வழிபாட்டுத் தலமாகத் திகழ முற்பட்டது வைணவ வழிபாட்டு முறை தமிழகத்தில் பத்திமார்க்கமாக நன்கு பரவிய காலத்தில்தான். இராமனைத் திருமாலின் அவதாரமாகத் தீட்டும் முதல் தமிழ்க் காப்பியம், சிலப்பதிகாரமே! பாகவதத்தில் வரும் கண்ணனையும் பாரதத்தில் வரும் கண்ணனையும் இளங்கோவடிகள் ஆய்ச்சியர் குரவையில் போற்றிப் புகழுகின்றார். திருமால் வழிபாடு சிலப்பதிகார நூலிலே மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பக்தி உணர்வு தமிழகத்தில் ஓர் இயக்கமாகப் பரவிய கால கட்டத்தில்தான் இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் இவற்றைப் புனைந்து போற்றியிருக்கவேண்டும்.

மேலும், பராசக்தி தேவியின் பல்வேறு வடிவங்களான மகிஷாசுரமர்த்தனி, அறுவர்க்கிளைய நங்கையான பிடாரி, இறைவனை ஆடல்கண்டருளிய அணங்கான பத்திரகாளி, கானகம் உகந்த காளி, தாருகன் பேருரம் கிழித்த துர்க்கை ஆகியோரையும் இளங்கோவடிகள் அறிவிக்கின்றார். சங்க காலக் கொற்றவை பலரும் பரவும் பராசக்தி தேவியாகத் தமிழகத்தில் நன்கு பரவியநிலையில்தான் இளங்கோ தம் நூலை இயற்றியிருக்க வேண்டும். தம் தலையினையே தேவிக்குப் பலியாகக் கொடுக்கும் காட்சியினை இளங்கோ தம் காப்பியத்தில் கூறுகின்றார். இக் காட்சியும், கானத்து எருமைக் கருந்தலைமேல் நிற்கும் சிலம்பு சித்திரிக்கும் மகிஷாசுரமர்த்தினிக் காட்சியும் பல்லவர்காலச் சிற்பங்களிலே பரவலாகச் செதுக்கப் பட்டுள்ளன.

இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் திறல் மிக்க புகார் நகரப் புரவலனாகத் திருமாவளவனையும் மதுரை நகர மன்னனாக மறமைந்து மிக்க பாண்டியன் நெடுஞ்செழியனையும், வஞ்சி நகர வயவேந்தனாகச் சேரன் செங்குட்டுவனையும் ஒன்றாக இணைத்துப் பாடியுள்ளமை ஓர் இலட்சிய சிந்தனையேயன்றி வரலாற்று நிகழ்ச்சியன்று. மாதவியின் அரங்கேற்றம் எந்தப் புகார்ச்சோழன் முன்னிலையில் நிகழ்ந்ததென்பதற்கு எத்தகைய விளக்கமும் இல்லை. சிலம்பு நூலில் சோழமன்னர்களின் பழம் பெருமையாகப் பௌராணிகச் சிறப்புக்களையும், புராணச் செய்திகளையுமே விவரிக்கின்றார். சங்ககாலப் புகார்நகருக்கும் இளங்கோ வருணிக்கும் புகார்நகருக்கும் மிக்க வேற்றுமையுள்ளது.

சிலம்பு சிறப்பிக்கும் மதுரை சங்ககால மதுரையினும் பெரு வளர்ச்சி பெற்ற நகரமேயாகும். பாண்டியன் நெடுஞ்செழிய னுக்குப்பின் அரசு கட்டில் ஏறியவன் கொற்கையிலிருந்த வெற்றி வேற் செழியன் என்கிறார் இளங்கோவடிகள். பாண்டிய மன்னர்கள் மதுரையில் மட்டுமல்லாமல் கொற்கையிலும் "கொற்கைக் கொங்கண்ண"ராக வீற்றிருந்தமை பிற்கால நிகழ்ச்சியேயாகும். நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிந்தது என்கிறார் இளங்கோவடிகள். நரபலி கொடுப்பது சங்ககாலச் சிந்தனையன்று; சாந்தி என்ற சொல்லும் சங்க காலத்தைச் சார்ந்ததன்று. நாணயத்தைக் குறிக்கும் கழஞ்சு என்ற சொல்லும் பல்லவர் சோழர் காலத்தைச் சார்ந்ததே.

சோழ பாண்டியர்களினும் சேரன் செங்குட்டுவனின் வீரத்தையே இளங்கோ சிறப்பித்துப் போற்றுகின்றார். ஐந்தாம் பதிற்றுப் பத்திற்கு அமைந்த பதிகத்தில் வரும் செங்குட்டுவனின் போர்ச் செயல்களையே இளங்கோ வஞ்சிக் காண்டத்தில் வருணிக் கின்றார். பதிகங்கள் பிற்காலத்தில் எழுந்தன என்பது வரலாற்று உண்மையாகும். சேரன் செங்குட்டுவனின் கனகவிசயர் போரை, தேவாசுரப் போரோடும், இராமாயணம் மாபாரதப் போரோடும் இளங்கோ இணைத்துக் கூறுகிறார். இஃது ஓர் இதிகாசக் கற்பனையே.

இத்தகைய புராணச் சிந்தனைகள் பக்திமார்க்கம் தமிழகத்தில் தலைதூக்கிய காலத்தில்தான், பாவலர் உள்ளத்திலும் படிந்திருக்க வேண்டும்.

மேலும் கொங்கணர், கலிங்கர், கொடுங்கருநாடர், பங்களர், கங்கர், பல்வேல் கட்டியர் என்ற அரச குடியினர்கள் சங்ககாலத் திற்கு மிக மிகப் பிற்பட்டவர்களே யாவர்.

சேரன் செங்குட்டுவனின் தந்தையாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு உற்ற தோழனாய்க் கோவலன் என்பான் ஒருவன் இருந்தனன் என்றும், அவன் மரபில் ஒன்பது தலை முறைக்குப் பிற்பட்டுத் தோன்றிய வேறொரு கோவலனே சிலப் பதிகாரக் கதாநாயகன் என்றும் மணிமேகலை இருபத்தெட்டாம் காதை கூறுவதையும் நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

எனவே, சிலப்பதிகாரம், சங்க காலத்தினும் மிகமிக மாறு பட்ட சமய சமூக அரசியல் சூழ்நிலைகள் தோன்றிய காலகட்டத் தில்தான் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெற்றெனப் புலப்படுகின்றது.

மதுரையை வருணிக்குங்கால், சங்கத்தைப்பற்றிக் குறிப்பிடாததாலும், இறந்த பெண்ணிற்கு நடுகல்நட்டு வணங்கும் புதிய பத்தினி வழிபாட்டையும் சமணம், பௌத்தம் முதலிய மதங்களை மட்டுமல்லாமல், ஆரிய மால் வழி பாட்டையும் பல ஆரியப் பழக்க வழக்கங்களையும் வடமொழிப் புராணக் கதைகளையும், சங்ககால நடையினும் மிக எளிய இனிய நடையிலே கூறுவதாலும், சிலப்பதிகாரம் சங்ககாலத் திற்குப் பின்னர்த் தோன்றிய நூல் என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

கதை ஒற்றுமை கருதியும், "மணிமேகலையோடு உரைப் பொருள் முற்றிய சிலப்பதிகாரம்" என்ற சிலம்பின் உரை பெறு கட்டுரையில் வரும் தொடரை முன்னிட்டும், இருநூல்களையும் இரட்டைக் காப்பியங்கள் என்று வாதாடுவார்கள்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

அற நூல்கள்

நூல்கள்	பாக்கள்	ஆசிரியர்கள்
1. நாலடி	400	சைன முனிவர்கள்
2. நான்மணிக்கடிகை	101	நாகனார்
3. இன்னா நாற்பது	40	கபிலர்
4. இனியவை நாற்பது	40	மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேத்தனார்
5. திரிகடுகம்	100	நல்லாதனார்
6. ஆசாரக் கோவை	100	பெருவாயின் முள்ளியார்
7. பழமொழி	400	முன்றுறையரையர்
8. சிறுபஞ்சமூலம்	100	காரியாசான்
9. ஏலாதி	80	கணிமேதாவியார்
10. முதுமொழிக் காஞ்சி	100	மதுரைக்கூடலூர் கிழார்
11. முப்பால்	1330	திருவள்ளுவர்

அக நூல்கள்

1. ஐந்திணை ஐம்பது	50	மாறன் பொறையனார்
2. திணைமொழி ஐம்பது	50	கண்ணன் சேந்தனார்
3. ஐந்திணை எழுபது	70	மூவாதியார்
4. திணைமாலை நூற்றைம்பது	153	கணிமேதாவியார்
5. கைந்நிலை	60	புல்லங்காடனார்
6. கார்நாற்பது	40	கண்ணன் கூத்தனார்

புற நூல்

1. களவழி நாற்பது	40	பொய்கையார்

இதற்குச் சான்ருகச் "சிலம்பு நூலைச் சாத்தனுர் அருகமர்ந்து கேட்டார். அவ்வண்ணமே மணிமேகலை நூலையும் இளங்கோ வடிகள் அருகிருந்து கேட்டார்" என்று அந் நூற்பதிகங்களை எடுத்துக் காட்டுவர்.

"சமண மதத்தை இழிவாகப் பழித்துரைக்கும் சீத்தலைச் சாத்தனுர் சமண மதத்தைப் போற்றியுரைக்கும் இளங்கோ வடிகள் அருகிருந்து தம் நூலை அரங்கேற்றியிருப்பாரா? அல்லது இளங்கோவடிகள் தாம் அந் நூலைச் செவி மடுத்திருப்பாரா? இதை நாம் சிறிது எண்ணிப் பார்த்தல் வேண்டும். மேலும், தமிழ்நாட்டில் பதிகங்கள் எழுந்த காலம் இராசராச சோழன் காலமாகும் என்ற வரலாற்று உண்மையையும் நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும்"

"இரு நூல்களையும் ஆராய்ந்து பார்த்தால், நூலில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்களைப் பொறுத்தவரைதான் ஒற்றுமை நிலவக் காணலாம். கதை நிகழ்ச்சிகளைக் கூறுவதில் இரு காப்பியங்களுக்கும் முன்னுக்குப்பின் முரண் இருப்பதை அறியலாம். காவிரிப்பூம்பட்டினம் சிறப்பாக விளங்கிய நிலையில் இளங்கோவடிகள் அந் நகரைத் தம் நூலில் அழகாகச் சித்திரித் துள்ளார். சீத்தலைச் சாத்தனுரோ, கடல் கொண்டதாகவே கூறிவிடுகின்ருர். எனவே காலத்தாலும், இரு நூல்களுக்கும் தொடர்பிருந்திருக்கும் என எண்ணுவதற்கில்லை; மேலும், சிலப்பதிகாரத்தில் வரும் தண்டமிழ் ஆசான் சாத்தனுரும், மணிமேகலை புனைந்த சீத்தலைச் சாத்தனுரும், வெவ்வேறு புலவர்கள் ஆவர். எனவே, இரு நூல்களையும் இரட்டைக் காப்பியங்கள் எனக் கூறுவது தவறு" என்று சோமசுந்தர பாரதியார் போன்ற அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர்.

சிலப்பதிகாரம்

இந் நூல் எழுந்த வரலாறு

காதற் கணவனுன கோவலனேடு கண்ணகி விண்ணகம் சென்ற காட்சியைக் கண்ட குன்றக் குறவர்கள், மலைவளம் காணவந்த சேரன் செங்குட்டுவனிடம் கூற, அம் மன்னன் அருகிருந்த தண்டமிழ் ஆசான் சாத்தனுர், கண்ணகிக்கும் கோவலனுக்கும் பாண்டிய மன்னனுக்கும் மனைவிக்கும் சிலம்பு காரணமாக நிகழ்ந்த துயரச் செய்திகளையெல்லாம் 'யாம் அறிவோம்' என்று தொடர்ந்துரைக்க, இதைச் செவி மடுத்த இளங்கோவடிகள் ''மனித வாழ்க்கையை இயக்கும் முப்பெரும் உண்மைகளைக் கொண்ட ஒப்பற்ற கவிதை'' என்று உளம் மகிழ்ந்து, சாத்தனுர் இட்ட வேண்டுகோளின்படி இந் நூலை இயற்றியதாகச் 'சிலப்பதிகாரப் பதிகம்' கூறுகிறது. அம் முப் பெரும் உண்மைகளாவன :

அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டு மென்பதூஉம்—ஆம்.

இந் நூல் அமைப்பு

சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று காண்டங்களைக் கொண்டது. மங்கல வாழ்த்துப்பாடல் தொடங்கி நாடுகாண் காதை முடிய 10 காதை களைப் புகார்க்காண்டமும், காடுகாண் காதை தொடங்கிக்கட்டுரை காதை முடிய 13 காதைகளை மதுரைக் காண்டமும், குன்றக் குரவை தொடங்கி வரம்தரு காதை முடிய 7 காதைகளை வஞ்சிக் காண்டமும் ஆக மொத்தம் 30 [1] காதைகளைக் கொண்டு இந் நூல் திகழ்கிறது.

---

1. கதை தழுவிய செய்யுட் பகுதியைக் காதை என்பர்.

சிலப்புக் காதை

கோவலன், கண்ணகியை மாநகரே வாழ்த்த மணம் புரிந்த பின்னர், மாமலர் நெடுங்கண் மாதவிமேல் மைய லுற்றுக் கண்ணகியைத் துறந்து வாழ்கின்ருன். ஆனுல், யாழின் மேலே ஊழ்வந்து உருத்த மாதவியை வெறுத்துத் தன் மனையகம் அடைந்து, பொழுது புலரும் முன்னே, கண்ணகியோடு புகார் நகரைவிட்டு வெளியேறுகின்ருன். இது புகார்க் காண்டமாகும்.

மதுரையை அடைந்து மாதரி மனையிலே தங்கிச் சிலம்பு விற்கச் சென்ற நேரத்தில், பொற்கொல்லனுல் கள்வன் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கோவலன் கொலை செய்யப்படுகிருன். அடங்காச் சீற்றங்கொண்ட கண்ணகி அரசவையில் தோன்றி உண்மையை நிலைநாட்டி, மதுரையை எரித்து வஞ்சிமா நகர் நோக்கி, வறிதே செல்கிருள். இது மதுரைக் காண்ட மாகும்.

குறவர்கள் மொழிந்த செய்தியையறிந்த சேரன் செங் குட்டுவன், அரசியின் விருப்பத்தை ஏற்று, வடநாடு சென்று காவா நாவின் கனகவிசயர்மேல் கல்லை ஏற்றிக் கங்கையில் நீராட்டித் தென்னகம் திரும்பி வஞ்சிமா நகரில் கண்ணகிக்குக் கோயில் எழுப்புகிருன். இப் பெருவிழாவைச் சிறப்பிக்கத் தமிழக வேந்தர்களும், கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் வருகின்றனர். கண்ணகியும் தெய்வ வடிவில் தோன்றி, மன்னர் களுக்குப் பிழையா வரந்தந்து வாழ்த்தி மறைகின்ருள். இதுவே வஞ்சிக் காண்டமாகும்.

சிலப்பதிகாரச் சிறப்பு

முதல் காவியம்

தமிழ்மொழியில் முதன்முதலாகத் தோன்றிய காவியம் சிலப்பதிகாரமாகும்.

பெயர்ச் சிறப்பு

கதையில் வரும் திருப்ப நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிலம்பே காரணமாதலின். இக் காவியத்திற்கு இளங்கோ 'சிலப்பதிகாரம்' எனப் பெயர் சூட்டியது புரட்சிகரமாயுள்ளது. கதைக் கருவால் பெயர்பெற்று விளங்கும் பெருமை சிலப்பதிகாரத்தையே சாரும்.

இயல் தமிழ்க் காப்பியம்

காவியத்தின் தொடக்கமே கவர்ச்சி மிகுந்து விளங்குகிறது. "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என்று ஆரம்பமாகும் அரச வாழ்த்து ஒரே சமயத்தில் இறை வாழ்த்தாகவும் இயற்கை வாழ்த்தாகவும் திகழ்வது இளங்கோவின் கற்பனைத் திறத்தையே புலப்படுத்துவதாகும். மணவறையில் "காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுக" எனத் தோழியர் வாழ்த்துவது ஆசிரியரின் ஒப்பற்ற நாடக நயத்திற்கு ஓர் உயரிய சான்றாகும். மனையறம் படுத்த காதையில் கண்ணகியின் அந்த அழகை, "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!" என்று கோவலன் பலபடப் பாராட்டுவதையும் கேட்கின்றோம்; பின்னர் அடைக்கலக் காதையில் "பொன்னே கொடியே! புனைபூங் கோதாய்!" எனக் கோவலன் அக அழகைப் பாராட்டுவதையும் கேட்கின்றோம். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில்தான் இளங்கோவின் குணசித்திரத் திறமையைக் கண்டு வியக்கின்றோம். அரங்கேற்று காதையில் ஆடலாசிரியன், இசையாசிரியன் நன்னூற் புலவன் போன்றோரின் இலக்கணத்தையும் ஆடும் அரங்கத்தின் இயல்பையும், விளக்கிச் செல்லும் இளங்கோவின் கலையறிவைக் கண்டு பெருவியப்பில் மூழ்குகிறோம். மாதவியின் ஆடல் பாடல் திறத்தை எத்தகைய அழகு நயத்தோடு கூறுகிறார் பாருங்கள் :

குழலொழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே; தண்ணுமைப்

பின்வழி நின்றது முழவே; முழவொடு
கூடிநின்று இசைத்தது ஆமந் திரிகை....

என்று அடுக்கிக்கொண்டே போய்,

பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்

"காட்டினள்" என முடித்துக் காட்டுவது, உச்ச நிலை யாகும்.

"அந்திமாலைச் சிறப்புச்செய் காதை" காவிய உலகம் கண்டிராத ஒரு கற்பனைப் படைப்பாகும். அக் காதையின் தொடக்கமும் முடிவும் கலைமெருகு ஏறிய காப்பியப் பகுதி யாகும். மாதவியும் கோவலனும் போட்டியிட்டுப் பாடும் கானல் வரிப் பாக்கள், இசை இனிமை இழைந்து செல்லும் இன்பத் தேக்கங்களாகும்.

கயல்எழுதி வில்எழுதிக் கார்எழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகம் திங்களோ! காணீர்!
திங்களோ காணீர்! திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே.

* * *

கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் நீயும்
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக் கிடுகும் இடைபிழவல் கண்டாய்!

இவை கோவலன் பாடிய சில பாக்கள் ஆகும்.

பூவார் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி! காவேரி!
காமர் மாலை அருகசைய நடந்தவெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே அறிந்தேன் வாழி! காவேரி

* * *

தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ! விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்!
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்.

இவை மாதவி மனம்விட்டுப் பாடிய சில பாக்களாகும்.

மதுரைமா நகரத்தில், கை சிவக்க, கண் சிவக்கக் கறி சமைத்து உணவாக்கிக் கண்ணகி உடல் வியர்க்கக் கோவலனுக்கு உணவுபரிமாறி ஒன்றாக உரையாடும் கலையழகு வாய்ந்த கொலைக் களக் காதை, படிப்போரின் ஊனையும் நெஞ்சத்தையும் உருக்கி விடும். கோவலன் கொலையுண்ட நிலையில் ஒருத்தி வந்து சொல்லாடாமல் நிற்பதைப் பார்த்துச்சோர்வுற்ற கண்ணகி,

"காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சன்றே;
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ?

தஞ்சமோ தோழீ! தலைவன் வரக் காணேன்
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சன்றே;
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சாயின்
எஞ்சலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ?

என்று துடிதுடித்துக் கேட்கின்றாள்; கள்வனென்று கணவனைக் கொன்றனர் என்னும் செய்தியைக் கேட்டதும் பொங்கி யெழுந்தாள்; விழுந்தாள்; செங்கண் சிவப்ப அழுதாள்.

"பட்டேன் படாத துயரம் படுகாலை
உற்றேன் உறாதது உறுவனே ஈதொன்று
கள்வனோ அல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே ஈதொன்று"

எனப் பலவாறு அரற்றிக்கொண்டு ஊர்மக்களை நோக்கிக் கேட்கிறாள்:

பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?

* * *

சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?

* * *

தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?

எனச் சீறி நின்றாள்; நினைந்தாள்; நெடுங்கயற்கண் நீர் துடையாச் சென்றாள் அரசன் செழுங்கோயில் வாயில் முன்" என்று சோகச் சுவையும், வீரச் சுவையும், போட்டி போட, இளங்கோ கதையை நடத்திக்கொண்டே செல்கின்றார். பின்னர் அரசவைக்குச் சென்று கண்ணகி வழக்காடி வெற்றிபெறுகின்றாள். இவ் வழக்குரை காதை இளங்கோவின் சொல்திறத்திற்கும் நாடக நயத்திற்கும் இணையற்ற சான்றாகும். இத்தகைய எண்ணற்ற கனிவு மிக்க இயல்தமிழ்ப்பாக்களை இந் நூலில் உளம் மகிழ நுகரலாம்.

இசைத் தமிழ்க் காப்பியம்

சிலப்பதிகாரம், கானல்வரி, ஆற்றுவரி, அம்மானைவரி, கந்துகவரி, குரவைப்பாட்டு, வள்ளைப்பாட்டு முதலான இசைப் பாட்டுக்களையும் கொண்டு திகழும் இசைத்தமிழ்க் காப்பியமாகும். பற்பல வகைப் பண்களையும், இசைக் கருவிகளையும் அறிந்து கொள்ளத் துணைபுரியும் இசைத் தமிழ்க் களஞ்சியமுமாகும்.

நாடகக் காப்பியம்

சிலம்பு, இயல்தமிழ்க் காப்பியம் மட்டுமன்று; இசைத் தமிழ்க் காப்பியம் மட்டுமன்று; தமிழில் தோன்றிய முதல் நாடகக் காப்பியமும் ஆகும். வழக்குரை காதையில் ஆசிரியர் கையாளுவது போன்ற உரையாடல்களும், கோவலன்

மாதவி, கண்ணகி முதலியோர் வாழ்க்கையில் ஏற்பட்ட கதை நிகழ்ச்சிகளை வரலாற்று ஆசிரியன் போன்று வரிசையாகச் சொல்லாமல், இடத்திற்கும், பாத்திரத்திற்கும் ஏற்றாற்போல் ஆங்காங்கு ஆசிரியர் மாற்றியமைத்துச் செல்லுவதே இந் நூலைச் சிறந்த நாடக நூலாக ஆக்கிவிட்டது; இந் நூலை ஒரு நாடக இலக்கியம் என்று முற்றிலும் கூற முடியவில்லை யென்றாலும், 'சிறந்த நாடகக் காப்பியம்' என அழைக்கலாம். இவ்வாறு இயல், இசை, நாடகம் என்ற மூவகைத் தமிழும் கலந்து விளங்கும் சிலப்பதிகாரத்தை, 'முத்தமிழ்க் காப்பியம்' எனவும் வழங்கலாம்.

தேசியக் காப்பியம்

சோழநாட்டுச் சிறப்பைப் புகார்க் காண்டத்திலும், பாண்டிய நாட்டுப் பெருமையை மதுரைக் காண்டத்திலும், சேரநாட்டுச் செம்மையை வஞ்சிக் காண்டத்திலுமாக இளங்கோ பாடியுள்ளார். சோழநாட்டு மண்ணில் பிறந்த கண்ணகி, பாண்டிய நாட்டு மதுரைக்கு வந்து, கணவனைப் பறிகொடுத்துச் சேரநாடு சென்று, வானவர் தொழுதேத்தும் பத்தினித் தெய்வமாக மாறுகிறாள். தமிழகத்து முப்பெரும் நாட்டையும் பின்னிப் படரும் சிலம்புக் கதையை, இளங்கோ தம் இணையிலாக் கவிதைத் திறத்தால், இறவாத காவியமாக இயற்றிவிட்டார். இத்தகைய சிலம்புக் காவியத்தைச் செந்தமிழ் நாட்டுத் தேசியக் காப்பியம் (National Epic) எனவும் நாம் சிறப்பித்துக் கூறலாம்.

மூவேந்தர் காப்பியம்

சேரநாட்டைச் சேர்ந்த செம்மல் செங்குட்டுவனையும், அறந்தவறிய பாண்டிய நாட்டரசனையும், காவிரி நாட்டுக் காவலரையும் ஒன்றாக இணைத்துப் பாராட்டிய சிலப்பதிகாரக் காவியத்தைத் தமிழ்நாட்டு மூவேந்தர் காப்பியம் எனவும் பாராட்டி மகிழலாம்.

குடிமக்கள் காப்பியம்

ஆனால், மூவேந்தர் புகழ் பாடும் சிலப்பதிகாரம், ஒரு முடிமன்னர் காப்பியமன்று; குடிமக்களுள் குறிப்பிடத் தக்கவர்களாக விளங்கிய கோவலன் கண்ணகியையே கதைத் தலைவர்களாகக்கொண்ட குடிமக்கள் காப்பியமாகும். தமிழ் மொழியில் முதன்முதலில் தோன்றிய சிலப்புக் காவியம, குடிமக்கள் காப்பியமாகவும் விளங்குவது தமிழ்மொழிக்கமைந்த பெரும் பேறேயாகும்.

பெண் பெருமை பேசும் நூல்

மண்ணக மகளிருள் ஒருத்தியாகப் புகார்க் காண்டத்திலே விளங்கி, மனித நிலையைக் கடந்தவளாக மதுரைக் காண்டத்திலே தோற்றந் தந்து, வானவர் தொழுதேத்தும் பத்தினித் தெய்வமாக வஞ்சிக் காண்டத்தில் காட்சி தரும் கதைத் தலைவியாகிய கண்ணகியின் படிப்படியான பத்தினித் தெய்வ வளர்ச்சியைப் பாராட்டி உரைப்பதே இச் செந்தமிழ்க் காவியத்தின் சீரிய குறிக்கோளாகும். இவ்வாறு பெண்ணின் பெருமையை முதன் முதலாகக் காவிய வடிவில் உலகிற்கு உணர்த்திய பெருமையும் இக் காப்பியத்தையே சாரும்.

வரலாற்றுக் காப்பியம்

கானல் வரி, கடலாடு காதையில், மருத நில மக்கள் வாழ்வையும், குன்றக் குரவையில், குறிஞ்சி நில மக்கள் வாழ்வையும், ஆய்ச்சியர் குரவையில், முல்லை நிலமாந்தர் வாழ்வையும், வேட்டுவ வரியில், பாலை நில மக்கள் வாழ்வையும், புகார், மதுரை நகர வருணனைகளால், நகர மாந்தர்களின் நாகரிக வாழ்வையும் வளமுறச் சித்திரித்துக் காட்டும் இச் சிலப்பதிகாரக் காவியத்தை ஒரு சிறந்த வரலாற்றுக் காவியம் எனவும் வழங்கலாம்.

எல்லாவற்றிலும் மேலாக, சிலப்பதிகாரம் இலக்கியச்சுவை மிக்க ஒரு செந்தமிழ்க் காப்பியமாகும் என்னும் பெருமையே தலையாய சிறப்பாகும்.

மணிமேகலை

மணிமேகலை அமைப்பு

காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரனுக்கு விழாத் தொடங்கிய விழாவறை காதை முதல், 'பவத்திறம் அறுக' என மணிமேகலை நோற்றது முடிய அமைந்த முப்பது காதைகளைக் கொண்டு திகழ்வது மணிமேகலை நூலாகும் 'கூலவாணிகன் சாத்தனுர் இந்நூலை இயற்றினுர், இளங்கோ வேந்தன் அவர் அருகிருந்து கேட்டார்' என இந் நூற் பதிகம் கூறுகின்றது.

இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமே கலைதுறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்.

(பதிகம் 95 - 98)

பெயர்ச்சிறப்பு

மணிமேகலை என்னும் இலக்கியத் தலைவியின் பெயராலேயே இந் நூலுக்குப் பெயர் அமைந்துள்ளது. இதற்கு "மணிமேகலை துறவு" என்னும் பெயரும் உண்டென்று மேலே கண்டோம். ஈண்டு இலக்கியத் தலைவிக்கு அப் பெயர் எவ்வாறு அமைந்தது என்பது அறியற்பாலது.

கோவலனுடைய முன்னேன் ஒருவன் அயல்நாட்டு வணிகத்தின் பொருட்டுக் கடலிற் கலஞ்செலுத்திச் சென்ற வணிகர் கூட்டத்துள் ஒருவனுய்ச் சென்றனன். அப்போது பெருஞ் சூறைக்காற்று வீசவே, கப்பல் கவிழ்ந்துவிட்டது. மேற்கூறிய வணிகன் உயிருக்குத் தத்தளித்துக்கொண்டிருந்தான். அப்போது மணிபல்லவத் தீவில் வாழும் மணிமேகலா தெய்வம் ஆங்கு வந்து அவனைக் காப்பாற்றி வானவழியே காவிரிப் பூம்பட்டினத்தில் கொண்டுவந்து விட்டுச் சென்றது. அதுமுதல் கோவலனுடைய முன்னேரெல்லாம் மணிமேகலா தெய்வத்தைத் தம் குலதெய்வமாகக்கொண்டு வழிபட்டு வருவாராயினர். கோவலன் மாதவியின்பால் தனக்குப் பிறந்த

பெண் மகவுக்குத் தன் குலதெய்வத்தின் நினைவாகவே மணிமேகலை என்று பெயர் சூட்டி மகிழ்ந்தான். அதுவே இவ்விலக்கியத்திற்கும் பெயராயிற்று.

மணிமேகலை கதை

கோவலன் கொலையுண்டான் என்ற கொடுஞ் செய்தி கேட்டுப் பொருத மாதவி, தன் குலத்தொழிலைத் துறந்து தன் அருமை மகளாகிய மணிமேகலையுடன், புத்தமதத்திலே சேர்ந்துவிடுகிருள். புத்த பகவானை வழிபடப் புதுமலர் பறிக்க, மணிமேகலை தன் தோழி சுதமதியுடன் உவவனம் செல்கிருள். இதை அறிந்த மன்னன் மகன் உதயகுமரன், உவவனத்திற்குத் தேரேறி வர, தேரொலி கேட்ட மணிமேகலை நடுக்குற்றுப் பளிக்கறை மண்டபம் புகுந்து தாழிட்டுக் கொள்கிருள். பேரழகி மணிமேகலையைக் கண்ணுற்ற உதயகுமரன் தன் உள்ளத்தை இழக்கிருன் மணிமேகலையும் தன் மனத்தைச் சற்றுப் பறிகொடுக்கிருள். ஆனல், அதற்குள் இந்திர விழாக் காணப் புகார்நகர் வந்த மணிமேகலா தெய்வம், மணிமேகலையை மணிபல்லவத் தீவிற்குத் தூக்கிச் சென்று இவ் வுதயகுமரனே கடந்த பிறப்பில் மணிமேகலையின் காதலனுவான் எனப் பழம்பிறப்பு உணர்த்துகிறது. மாதவி, மணிமேகலை, சுதமதி ஆகிய மூவரும் சென்ற பிறப்பில் தாரை, வீரை, இலக்குமி என்னும் உடன்பிறந்தாராய் இருந்தனர் என்பதும், அங்க நாட்டுச் சச்சய நகரத்து அரசனுன துச்சயன் என்பவனுக்கு வாழ்க்கைப்பட்ட தாரையும் வீரையுமே இப்போது மணிமேகலையின் தாயும் தோழியுமான மாதவியும், சுதமதியுமாகப் பிறந்துள்ளனர் என்பதும், அசோதர நகரத்து இளவரசனுன இராகுலனை மணந்திருந்த இலக்குமியே இப்போது மணிமேகலையாகவும் இராகுலனே உதயகுமரனுகவும் பிறந்துள்ளனர் என்பதும், பிறவும் அறியப் படுகின்றன.

மணிபல்லவத் தீவில் வாழ்ந்த தீவதிலகை என்பவளால், மணிமேகலை அன்னம் வழங்கும் அமுத சுரபிப் பாத்திரத்தைப் பெற்று அத் தீவினின்றும் புறப்பட்டுக்

காவிரிப்பூம்பட்டினம் அடைந்து மாதவி, சுதமதி என்னும் இருவரையும் அறவண அடிகள்பால் அழைத்துச் செல்கிருன். அறவண அடிகள் அம் மூவருக்கும் ஆபுத்திரன் வரலாற்றை எடுத்துரைக்கிருர். பசிப்பிணி தீர்க்கத் துணிந்த மணிமேகலை பத்தினிப் பெண் ஆகிய ஆதிரையிடம் சென்று, அட்சய பாத்திரத்தில் பிச்சை ஏற்றுச் சோர்ந்த உயிர்களுக்கெல்லாம் சோறு வழங்குகிருள்.

பின்னர், உலகவறவிக்குச் சென்று உணவு கொடுக்கிருள் இதைச் செவியுற்ற உதயகுமரன் தேரேறி உலக வறவிக்கு வருகிருன். உதயகுமரனைக் கண்ட மணிமேகலை தன் மந்திர வலிமையால், காயசண்டிகை என்னும் வித்தியாதரப் பெண்ணின் வடிவெய்துகிருள். இவ் வடிவுடன் குற்றவாளி களுக்கு உணவூட்டச் சிறைச்சாலைக்குச் செல்கிருள். சிறைக் காவலர் மணிமேகலையைச் சிறைப்படுத்தி, மன்னன் முன் னிலையில் நிறுத்துகிருர்கள். அரசனே, மணிமேகலை சொல் கேட்டுச் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றுகிருன். காயசண்டிகை வடிவில் இருப்பவள் மணிமேகலைதான் என்பதை உணர்ந்த உதயகுமரன் அவளைக் கைப்பற்றும் கருத்தோடு உலகவறவிக்குச் செல்கிருன். அவன் வருகையை அறிந்த மணிமேகலை அவனுக்கு அறிவுரை கூற முற்படுகிருள்.

இத் நிலையில் அங்கு வந்த காயசண்டிகையின் கணவன் மணிமேகலையைத் தன் மனைவி யெனவும், உதயகுமரனை அவள் கள்ளக் காதலன் எனவும் பிறழ உணர்ந்துவிடுகிருன். அன்று இரவு காமவேட்கை கொண்டவனுன உதயகுமரன், மணிமேகலையைக் காண அங்கு வந்தபோது ஒளிந்திருந்த காய சண்டிகையின் கணவன், உதயகுமரனை வாளால் வெட்டி வீழ்த்திவிடுகிருன். இந்நிலையில் நல்வினையாகக் கந்திற்பாவை தோன்றி உண்மையை உரைத்து, மணிமேகலையைக் காப்பாற்று கிறது. மகன் இறந்த செய்தியைக் கேட்ட மன்னன் மணிமேகலையைச் சிறைசெய்கிருன்.

மகன் கொலை கேட்ட அரசமாதேவி உளம் மறுகி, மணி மேகலையைப் பலவாறு துன்புறுத்துகிருள். கடுகளவும் துன்பம்

மணிமேகலையைத் தொடராதது கண்டு அஞ்சிய தேவியார் தம் குற்றம் பொறுக்குமாறு, மணிமேகலையைத் தொழுது வேண்ட, மணிமேகலை, அவ்வரசியாருக்குப் பற்பல அறிவுரைகளைக் கூறுகிருள். பின்னர், அறவண அடிகளின் ஆணைக் கேற்ப மணிமேகலை, அவ்விடத்தினின்று நீங்கி, வான் வழியே ஆபுத்திரன் அரசனாகப் பிறந்து ஆட்சி செய்யும் நாட்டை அடைந்து அவனது பழம் பிறப்பை அவனுக்கு விளங்க உரைக்கிருள். பின்னர் வான்வழியாக வஞ்சிமா நகருக்குச் சென்று அறவண அடிகள்பால் அமர்ந்து, அவர் காட்டிய ஞான விளக்கின் துணைவழி நின்று தவத்திறம் பூண்டு, தருமம் கேட்டு இப் பவத்திறம் அற அந் நகரிலே தவம் செய்து வாழ்கிருள் என உரைப்பதே மணிமேகலை கதையாகும்.

மணிமேகலை மாண்பு

உரையாசிரியராகிய பேராசிரியரும், சிவப்பிரகாசரும் ஒருங்கே பாராட்டிப் போற்றும் சிறப்பினையுடையது மணிமேகலை.

தமிழ்மொழியில் முதன்முதலாகத் தோன்றிய சமயக் காப்பியம் என்னும் சிறப்பும், புத்தமதச் சார்புடைய முழு முதல் பேரிலக்கியம் என்னும் பெருமையும் மணிமேகலைக் காவியத்தையே சாரும்.

இந் நூலில், இளமை, இன்பம், யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையையும், களவு, கொலை, கள், காமம் முதலியவற்றால் வரும் துயர நிலைகளையும், கூறிப் புத்தசமயக் கொள்கைகளைப் போதிக்கின்ருர். புத்தமதத்திற்கே யுரிய புத்தம், தன்மம், சங்கம் என்னும் திரிபிடகத்தையும், பள்ளி, வேதி, சீலம் ஆகியவற்றையும் ஆங்காங்குக் கூறிச் செல்கின்ருர்.

புத்தமதக் கருத்தைப் பரப்பும் ஒரே வேட்கையோடு, சாத்தனர் மணிமேகலைக் காப்பியத்தை இயற்றவில்லை; புரட்சிகரமாக விளங்கிய புத்தமதத்தை ஒரு கருவியாகக்

கையாண்டு மக்கள் சமுதாயத்தை மாற்றியமைக்கும் சீர் திருத்த நோக்கோடுதான் இம் மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியுள்ளார். பரத்தை யொழிப்பு, மதுவொழிப்பு, பசி யொழிப்பு, சிறையொழிப்பு, சாதியொழிப்பு என்ற சீர்திருத்தக் கருத்துக்களின் 'செல்வக் களஞ்சிய'மாகவே இச் செந்தமிழ்க் காப்பியம் காட்சியளிக்கிறதெனலாம்.

பண்டைத் தமிழகத்தின் வளத்தையும், நாகரிகத்தையும் திறம்பட எடுத்துரைக்கும் மாண்பினையும் உடையது மணி மேகலையாகும்.

மணிபல்லவம், இரத்தினதீவம், சாவகம், காஞ்சிநகர், வஞ்சிநகர், காவிரிப்பூம்பட்டினம் ஆகியவை பற்றிய செய்தி களையும் அந் நகர்களின் தொழில்வளம், நாகரிகச் சிறப்புக்கள் பற்றியும் இந் நூலிலே காணலாம். நகர்களில் அமைந்த மனைகள் தோறும், கண்கவர் ஓவியங்களையும் சிலைகளையும் காணலாம் எனக் கூறுகின்றார். சமயக் கணக்கர் தம்திறம் கேட்ட காதையில் அக்காலத்து நிலவிய பல்வகைச் சமயக் கொள்கைகளையும் எடுத்துரைக்கின்றார். இக் காப்பியத்தில் கிளைக்கதைகளாக ஆதிரை, மருதி, விசாகை முதலிய பத்தினிப் பெண்களின் வரலாற்று உண்மைகளைப் பங்கு கொள்ளும் பாத்திரங்களே, பேசுமாறு அமைத்துவிடுகிறார். இடையிடையே பல இதிகாசக் கதைகளையும், புராணக் கதைகளையும் திறம்படக் கூறிவிடுகிறார்.

எல்லாத் தமிழ்க் காப்பியங்களிலும், மிக எளிய நடையிலே இயன்றுள்ளது மணிமேகலை. சொற்கள் கலகலப்பாக ஒன்றோ டொன்று மோதிப் புரளாமல் எளிய இனிய யாப்பு வடிவிலே செல்லுகின்றன.

"புத்த மதத் தொடர்பான சில சொற்களையும் தொடர் களையும் இடத்திற்கேற்பச் சாத்தனார் தம் நூலில் மொழி பெயர்த்து அமைத்துள்ளது பாராட்டுக்குரியதாகும்" எனச் சிறப்பித்து மொழிகிறார், தமிழ்ப்பெரியார், டாக்டர் உ. வே. சா.

கற்றோர் இதயத்தைக் கவரும் இலக்கியச் சுவை போகப் போக, நூலிலே குறைவு என்றாலும் கூட, காதலுக்கும்

டமைக்கும் இடையே போராடும் மணிமேகலை குணச் சித்திரத்தை நாம் எளிதில் மறக்க முடியாது. குரவம், மரவம், குருந்து, கொன்றை போன்ற பல்வகை மரங்களைக் கூறி, அம் மரங்களில் மலர்ந்த பூக்களால் அவ் உவவனம் நிறைந்து வித்தகரியற்றிய கைவினைச் சித்திரச் செய்கைப் படாம் போர்த்தது ஒப்பத்தோன்றியது என்று வருணிப்பதும், "புனையா ஓவியம் புறம்போந்தன்ன" அணிகலன் அணியா மணிமேகலை சென்றாள் என உவமிப்பதும் மணிமேகலா தெய்வம் வந்து தோன்றும் காதையில் அந்திப் பொழுதை ஒரு பெண்ணுக் உருவகம் செய்யும் விந்தையும் (119-141) படிப்போர்க்கு இன்பம் பயப்பனவாகும்.

பசியின் கொடுமைகளை விவரித்து,

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்... 25 (227 - 29)

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே 11 (65 - 66)

என்று அறிவுரைகள் கூறுவதும்,

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா;
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா;
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது; 22 (135 - 38)

எவ்வுயிர்க் காயினும் இரங்குதல் வேண்டும் 23 (73 - 79)

என இராசமாதேவிக்கு மணிமேகலை அறிவுரை கூறுவதும், இலக்கியம் கற்போர் நெஞ்சில் என்றும் நிற்பனவாகும்.

4. பல்லவர் காலம்

(கி. பி. 600—900)

முன்னுரை

கடுங்கோன் என்ற பாண்டிய மன்னனின் தாக்குதலாலும், பல்லவர்களின் படையெடுப்பாலும், தமிழகத்தில் களப்பிரர்கள் ஆட்சி அடிச்சுவடு தெரியாது மறைந்தது. அவர்கள் ஆட்சிக் காலத்தில் நாடு முழுவதிலும் பரவிவந்த சைன புத்த மதங்களின்மேல் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. அதனால் அவ்விரு மதங்களுக்கும் எதிர்ப்பாகத் தமிழ்நாட்டில் தலை தூக்கிய சைவ வைணவ மதங்கள் மிகுந்த செல்வாக்குற்றன. இம் மதங்களின் எழுச்சியால் நாடு முழுவதும் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தோடிற்று பாமர மக்களிடையே பரவிவந்த பக்தி இயக்கம், பாராண்ட மன்னர்களையும் பற்றியது. மக்கள் கூட்டத்தோடு, மன்னர்களும் மதம் மாறினர். பக்தி வெள்ளத்தில் அழுந்திய மக்கள் பரவசமுற்று ஆலயம் ஆலயமாகச் சென்று இறைவனை இசைபாடித் தொழுதனர்.

இப் பக்தி இயக்கத்தால், தமிழ்மொழி புதுப்பொலிவுற்றது. இயல்தமிழ்ப் பாக்கள், பண்ணொடு இயைந்து எங்கும் இசை மணம் பரப்பின. இசை இனிமை எல்லோர் இதயத்தையும் ஈர்த்தது. கற்றோர் நாவில் மட்டும் வாழ்ந்து வந்த தமிழ், கல்லார் நெஞ்சிலும் இடம்பெறத் தொடங்கிற்று; தமிழ்மொழி மக்கள்மொழியாக மாறியது. உணர்ச்சி வெள்ளமாகக் கவிதைகள் உள்ள ஊற்றினின்றும் பெருக்கெடுத்தன. வட மொழிச் சொற்கள் நிறையப் புகுந்ததன் விளைவாகத் தமிழ் மொழி நெகிழ்வுற்றது; சொல்வளம் செறிவடைந்தது. எளிமையும் நளினமும் தமிழை இனிமையாக்கின. ஆன்ம நேய ஒருமை நம் தமிழ்மொழியை ஓர் உயர்ந்த பக்திமார்க்க மொழியாக மாற்றியது. சொல் வளத்தால், உணர்ச்சிப் பெருக்கால், கருத்துக் குவியலால், இசை வெள்ளத்தால்,

எளிமை நளினத்தால் தமிழ்மொழி புது மெருகுற்றது; தமிழ் இலக்கியம் செழுமையாகக் கொழுந்தோடித் தழைத்தது; இப் பக்தி இயக்கத்தின் பயனாகத் தோன்றிய இலக்கியவகைகளை இனிக் காண்போம்.

சைவ இலக்கியங்கள்

சமணமும் பௌத்தமும் சரிந்து, சைவ சமயம் தழைத்து வளருவதற்குத் தொண்டுபுரிந்த தூயவர்கள், அறுபத்துமூன்று நாயன்மார்கள் ஆவர்.

அறுபத்து மூவரில் வேதியரிருந்தனர்; வேளாளரிருந் தனர்; சாலியர் இருந்தனர்; சான்றோர் இருந்தனர்; பஞ்சமர் இருந்தனர்; பரதவர் இருந்தனர்; வண்ணார் இருந்தனர்; வேடர் இருந்தனர்; வேறு பல சாதியாரு மிருந்தனர்.

இப் பெரியார்களுள் மூவர் இயற்றிய தேவாரங்கள் அனைத்தையும் கி. பி. 10 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சோழப் பேரரசன் இராசராசனின் வேண்டு கோளுக்கிணங்க நம்பியாண்டார் நம்பி என்னும் சைவப் பெரியார் ஏழு திருமுறைகளாகவும் மேலும் சில நூல்களை நான்கு திருமுறைகளாகவும் வகுத்துப் பதினொரு திரு முறைகளை வெளியிட்டார். பின்னர், சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தைச் சேர்த்துப் பன்னிரு திருமுறை என வழங்கலாயினர்.

பன்னிரு திருமுறைகள்

சம்பந்தர் பாடல்களை 1, 2, 3 திருமுறைகளாகவும், அப்பர் பாடல்களை 4, 5, 6 திருமுறைகளாகவும், சுந்தரர் பாடல்களை 7 ஆம் திருமுறையாகவும் மாணிக்க வாசகர் பாடிய திருவாச கத்தையும் திருக்கோவையாரையும் 8 ஆம் திருமுறையாகவும்,

திருமாளிகைத் தேவர், சேந்தனார் முதலியோர்களின் பதிகங்களை 9 ஆம் திருமுறையாகவும், திருமூலர் நூலை 10 ஆம் திருமுறையாகவும், காரைக்காலம்மையார், நம்பியாண்டார் நம்பி முதலானோர் பாக்களை 11 ஆம் திருமுறையாகவும், சேக்கிழார் நூலை 12 ஆம் திருமுறையாகவும் வகுத்துள்ளனர்.

சம்பந்தர் தேவாரம்
(1, 2, 3 திருமுறைகள்)

இவர் சீர்காழிப் பதியில் சிவபாத இருதயருக்கும் பகவதியம்மையாருக்கும் மகவாய்த் தோன்றி மூன்று வயதிலேயே இறைஞானம் எய்தி, ''தோடுடைய செவியன்'' என்ற பாடலைப் பாடினார்; பாண்டிய மன்னன் மனைவி மங்கையர்க்கரசியாரின் வேண்டுதலால் மதுரை மாநகர் சென்று அனல் புனல் வாதங்களில் சமணரை வென்று, அந்தக் கூன் பாண்டியனைச் சைவனாக்கினார். பதினாறு வயதிலேயே பரகதி எய்தினார். அப்பரும் இவரும் ஒரு காலத்தவராவர்.

இவர் 16,000 பதிகங்கள் பாடியதாக நம்பியாண்டார் நம்பி கூறுகிறார். ஆனால், நமக்கு 3,840 பாடல்களே கிடைத்துள்ளன; 'சிற்றம்பலத்தில் உள்ள செல்வனின் கழல் ஏத்தும் செல்வமே, உண்மைச் செல்வம்' என்கிறார். பக்தி மலர் கொண்டு, அத்தன் பாதத்தில் தூவினால் முக்தி எளிதாகும் என அறிவுறுத்துகின்றார். இவர் பாடிய பாக்களில் மட்டும் 23 பண்கள் பயின்று வருவதால் ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' எனச் சுந்தரரால் போற்றப் பெறுகின்றார். இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் பாவித்து உள்ளம் உருக்கும் வகையில் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார்.

இவர்தம் பக்திப் பாடல்களில் இளமை மெருகையும், இசை இனிமையையும், இயற்கை இன்ப எழிலையும் வளமாக நுகரலாம்.

திருவையாற்றின் நீர்வளத்தைப்பற்றிப் பாடும்பொழுது மான் பாய்வதால் மந்தி பாய்கின்றது; மந்தி பாய்வதால் மரங்களினின்றும் தேன் பாய்கின்றது; தேன் பாய்வதால் மீன் பாயத் தாமரை மொட்டு அழகாக மலர்கின்றது என்கிறார். என்ன அழகான கற்பனை!

மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலரும் திருவையாறே!

அப்பர் தேவாரம்
(4, 5, 6 திருமுறைகள்)

இப் பெரியார் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனார் என்பாருக்கும் மாதினியார் என்பாருக்கும் புதல்வராய்த் தோன்றினார். இளமையில் சமண சமயத்தைச் சார்ந்து பின்னர், தம் தமக்கையாரின் அருள் திறத்தால், மீண்டும் சைவரானார். பற்பல இன்னல்களுக்கு ஈடு கொடுத்துச் சமணனாயிருந்த மகேந்திரவர்ம பல்லவனைச் சைவனாக்கிய பெருமை இப் பெரியாருக்கே உண்டு. எண்பத்தோர் ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து இறைபணி புரிந்த பெருந்தகையாவார். 'அப்பர்' என்று சம்பந்தரால் அழைக்கப்பெற்றார். அவரை வாகீசர் என்றும் நாவுக்கரசர் என்றும் அழைப்பர். தாண்டகம் பாடுவதில் வல்லவராகையால், 'தாண்டக வேந்தர்' என்றும் சிறப்பித்துக் கூறுவர்.

49,000 பாடல்களை அப்பர் பாடியதாகச் சுந்தரர் சொல்கிறார். ஆனால் 3,110 பாடல்களே இன்று நமக்குக் கிடைத்துள்ளன. இவர் பாடல்கள், பண்சுமந்த பாடல்கள்; அனுபவ முதிர்ச்சி மிகுந்த பாடல்களுமாகும்.

சமண முனிவர்கள் தூண்டுதலினால் மகேந்திரவர்மன், மதம் மாறிய திருநாவுக்கரசரைத் தண்டிப்பதற்காக மந்திரி

பிரதானிகளை அனுப்பி அவரைச் சிறைபிடிக்குமாறு கட்டளையிட்டான். அந் நிலையில் திருநாவுக்கரசர்,

நாமார்க்கும் குடி அல்லோம்; நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்!
ஏமாப்போம்; பிணி அறியோம் பணிவோம் அல்லோம்;
இன்பமே எந்நாளும், துன்பமில்லை

என்று வீரமுழக்கம் செய்யத் தொடங்கினார்.

பின்னர் அப்பரைச் சுண்ணும்பு உள்ள அறையில் அரசன் இட்டபோது, அந்தக் காளவாய்க் கொடுமையிலும், இறைவனின் இனிமையைக் காண்கின்றார் நாவுக்கரசர்:

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

என, மனம் மகிழ்ந்து பாடுகின்றார்.

இச் சைவ சமய ஆசிரியர் மிக முற்போக்கு உடையவர். மனித குலமே ஒன்று என்று கருதும் மாண்பு படைத்தவர்.

சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டுஎன் செய்வீர்?

எனச் சாதித் திமிரையும், கல்விச் செருக்கையும் ஒருங்கே கண்டிக்கிறார். நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுக்குள்ளே இறைவன் புக்கு நிற்பான் எனப் புகலுகின்றார். அவரிடத்தில் அமைந்த பரந்த ஆன்மீக நோக்கத்தைப் பாருங்கள்:

அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே.

சுந்தரர் தேவாரம்
(7 ஆம் திருமுறை)

இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் சடையனுருக்கும் இசை ஞானியாருக்கும் அழகு மகவாக அவதரித்தார். இவர் அழகில் மயங்கிய நரசிம்மவர்மன் என்ற அரசன் இவரைச் செல்வமாக வளர்த்து வந்தான். இளமையில் மணம் புரிந்த காலத்து, இறைவனால் தடுத்து ஆட்கொள்ளப்பெற்றார். அந் நிலையில் 'பித்தா பிறைசூடி' என்ற பதிகத்தைப் பாடியருளினார். பின்னர், சேரமான் பெருமாளோடு கயிலை சென்று முத்தி பெற்றார். 'பொன்னார் மேனியனே!' என்பது இவர் பாடிய புகழ்மிக்க பாடலாகும். பெரிய புராணத்திற்கு முதல் நூலாக அறுபத்துமூவர் வரலாற்றைத் 'திருத்தொண்டத் தொகை' எனும் பதிகத்தில் சுருக்கி யுரைத்துள்ளார். பதினெட்டு ஆண்டுகளே இவ்வடியார் உலகில் வாழ்ந்துள்ளார். இவருடைய பாடல்களில் பயின்றுவரும் அழகான இயற்கை வருணனைகள் படித்து மகிழ்வதற்குரியன. அவர் பாடிய சந்த நயமிக்க பாடலிலே ஒன்று—

அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் வயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே.

மாணிக்கவாசகர் நூல்கள்
(8 ஆம் திருமுறை)

தேன் ஊறும் வாசகங்கள் அறுநூறும், திருக்கோவை நானூறும் அமுதூற மொழிந்தருளிய இந் நாயகன், திருவாதவூரில் பிறந்து கல்வி கேள்விகளில் சிறந்து அரிமர்த்தன பாண்டியனால் அமைச்சராக்கப்பட்டார். அரசனிட்ட ஆணையின்படி குதிரை வாங்கச் சென்றவர் திருப்பெருந்துறையில் அருபரத்தொருவனின் திருவருள் பெற்று, தாம் கொண்டு வந்த செல்வத்தையெல்லாம், ஆலயப் பணிக்கும் அடியார்களுக்குமே செலவிட்டுவிட்டார்; சிறையில் அடைபட்டுப்

பற்பல சித்திரவதைக்கெல்லாம் ஆளாகி, இறுதியில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றார். இவ் வுலகில் இவ்வடியார் 32 ஆண்டுகளே வாழ்ந்துள்ளார். அழுதழுது ஆண்டவன் அருள்பெற்ற இத் திருத்தொண்டர், தாம் அனுபவித்து உணர்ந்த சிவநேசச் செல்வத்தைத் திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு பத்தி இலக்கியங்களாக வெளியிட்டுள்ளார். இவ்விரு நூல்களையும் எட்டாம் திருமுறை என்று இயம்புவர். இவர்தம் பாடல்களில் பயின்றுவரும் சொற்கள் பழுதற்ற மாணிக்கம் போன்று விளங்குவதால், நூற்சிறப்புக் காரணமாக இவரை மாணிக்கவாசகர் என்று அழைத்திருக்கலாம். 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி இவரைப்பற்றிக் கூறுவதால், அவருக்கு முன்னரும், தம் நூலில் 'பொன்னம்பலம்' என்று உரைப்பதால், சிதம்பரத்தில் 10 ஆம் நூற்றாண்டில், பொன்தகடு வேய்ந்த பராந்தகசோழனுக்குப் பின்னரும்தான், மாணிக்கவாசகர் வாழ்ந்திருக்க முடியும்* என்று சிலர் கூறுவர்.

இவர் இயற்றிய திருவாசகம், திருப்பெருந்துறையில் அருளிய சிவபுராணம் முதலாகத் தில்லையில் அருளிய அச்சோப் பதிகம் ஈறாக 51 பகுதிகளையும், 656 செய்யுட்களையும் கொண்டு விளங்குகிறது.

யானே பொய் என் நெஞ்சும் பொய் என்று தம்மைத் தாமே அறிந்தார்; வான் ஆகி, மண் ஆகி, வளி ஆகி, ஒளி ஆகி, பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து, ஆனந்தமாய தேனினைச் சொரிபவன் இறைவன் என்பதை உணர்ந்தார்; மெய் அரும்பி விதிர் விதிர்த்துக் கழலிலே தலைவைத்துக் கண்ணீர் ததும்பி, உள்ளம் வெதும்ப, அழுதும் தொழுதும் கல்போலும் நெஞ்சம் கசிந்துருகக் கோருகின்றார்.

உற்றாரை யான் வேண்டேன்;
ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்;
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்

---

* மாணிக்கவாசகர் காலம். கி. பி. மூன்றாம் நூற்றாண்டு என்பர் மறைமலையடிகள்.

சூற்றுளைத்து அமர்ந்துறையும்
கூத்தா! உன் குரைகழற்கே
கற்றுவின் மனம்போலக்
கசிந்துஉருக வேண்டுவனே!

தெய்வமணம் கமழும் திருவாசகப் பாடல்களில் உள்ளம் தோய்ந்து ஈடுபட்ட இராமலிங்க அடிகள்,

வான்கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாறதினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

எனப் பாராட்டுகிறார். இதயத்தைக் கனிவிக்கும் இத் தீந்தமிழ்ப் பாடல்களை டாக்டர் ஜி. யூ. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்பது பழமொழியாகும்,

மார்கழித் திங்களில் நீராடச் செல்லும் கன்னிப்பெண்களின் கூற்றாக, இந்நூலில், 'திருவெம்பாவை' எனும் பாடற்பகுதி ஒன்று வருகிறது. அதில் கவிச்சுவையும் செவிச்சுவையும் மிக்க பாடலிலே ஒன்று:

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்!

பாவை பாடிய வாயால், ஒரு கோவையையும் பாடியுள்ளார். கோவை நூல்களில் முதன்முதலாகத் தோன்றிய நூல், இவர் இயற்றிய 'திருக்கோவையாரே' யாகும். களவு கற்பு என்ற இருபெரும் பகுதிகளோடு 400 அகப்பொருள் துறைகள் விரவிவரக் காதலன் காதலி பாவத்தில் பாடி

யுள்ளார். இந்நூல் சிறந்த சொல்லமைப்புக்கள் உடையது; நயமான நடை வாய்ந்தது. படிப்போரைப் பிணிக்கும் ஆன்ம அனுபவங்கள் நிறைந்ததாகும். பார்வைக்குச் சிற்றின்ப நூலாகத் தோன்றினும், உண்மையில் உயர்ந்த பேரின்ப நூலாக விளங்குகிறது.

ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பா

(9ஆம் திருமுறை)

திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேதிராயர், கண்ட ராதித்தர், பூந்துருத்தி நம்பி காடநம்பி, திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, கருவூர்த்தேவர், வேணாட்டடிகள் ஆகிய ஒன்பது பேர் பாடிய பக்திப் பாடல்களைத் 'திருவிசைப்பா' 'திருப்பல்லாண்டு' என வழங்குவர்; இவையே ஒன்பதாம் திரு முறையாகத் திகழ்கின்றன.

திருமாளிகைத்தேவர், இறைவனைக் கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியாகக் கரையிலாக் கருணைமா கடலாக, மற்றவர் அறியா மாணிக்க மலையாக மனமணி விளக்காகக் காண்கிறார்.

திருமூலர் திருமந்திரம்

(10 ஆம் திருமுறை)

கூடுவிட்டுக் கூடுபாயும் திறத்தினர் என இவருடைய ஆன்மீக ஆற்றலைக் கதையாகக் கூறுவர். இவர் எழுதிய நூல் 'திருமந்திரம்' ஆகும். இது காலத்தால் முந்திய நூலாகும்.

3,000 செய்யுட்களை யுடையது. செய்யுட்களின் கருத்துச் செறிவைக் கண்ட மக்கள், இத்தகைய சிந்தனையாளர் ஏறக்குறைய 3,000 ஆண்டுகளாவது வாழ்ந்திருப்பர் என்று கூறுவர்.

சைவசமயக் கருத்துக்களை, முதன்முதலாக விளக்க எழுந்த முழு முதல் நூல் திருமந்திரம் ஆகும். பாக்கள் பெரும்பாலும் உருவகங்களாகவே அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, மனிதன் தன் இச்சையாகத் திரியும் ஐம்புலன்களையும் அடக்கினால் அவன் எத்தகைய ஆற்றலையும் அடைய முடியும் என்பதை, உருவகத்தால் கூறுவதைப் பாருங்கள்:

பார்ப்பா னகத்திலே பாற்பசு ஐந்துண்டு;
மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன;
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே.

நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் ஈசன் இயல்பைத் திருமூலர் விளக்கும் எளிய முறையைப் பாருங்கள்:

தேனுக்குள் இன்பம் சிவப்போ? கறுப்போ?
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்!
தேனுக்குள் இன்பம் செறிந்திருந் தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந் தானே.

எளிய சொற்கள்! அரிய பொருள். இந்நூலைப் பற்றிய ஆராய்ச்சி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நடந்து முடிந்துள்ளது.

பன்னிருவர் பாடிய பதினோராந் திருமுறை

திருவாலவாயுடையாரின் திருமுகப் பாசுரம், புழுவாகப் பிறக்கினும் புண்ணியா! நின்னடிவழுவா திருக்கவேண்டும் என வரம் வேண்டிய காரைக்காலம்மையாரின் திருப்பதிகங்கள், திருவந்தாதி, ஐயடிகள் காடவர் கோனின் க்ஷேத்திரத் திருவெண்பா, சுந்தரரின் நண்பரான சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய பொன்வண்ணத்தந்தாதி, திருக்கயிலாய ஞானஉலா—முதலிய நூல்கள் சங்கப் பாமுறையைப் பின்பற்றிக் கருத்துக்களை அகப்பொருள் நயம்பட எடுத்துரைப்பனவாகும். உலா நூல்களில் சிறந்தது சேரமான் எழுதிய 'ஞானஉலா' வாகும். மேலும்,

இதுவே தமிழில் எழுந்த முதல் உலா நூலாகும். சங்கப் புலவர்களின் பெயரை மேற்கொண்டு நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர் ஆகியோர் பலர் பக்தி இலக்கியங்களைப் பாடியுள்ளனர். இளம் பெருமானடிகள், அதிரா அடிகள் ஆகியோர் ஆக்கியுள்ள மும் மணிக்கோவை நூல்களும் இத் திருமுறையில் அடங்கியுள்ளன. பட்டினத்துப் பிள்ளையார் நூல்களும், திருமுறை வகுத்தருளிய நம்பியாண்டார் நம்பி நூல்களும் இப் பதினோராம் திருமுறையில் அமைந்துள்ளன.

சேக்கிழார் அருளிய பெரிய புராணம்

(12ஆம் திருமுறை)

சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையென வழங்குவர்; இந் நூலைச் சோழர் காலம் என்ற பகுதியில் காண்க.

வைணவ இலக்கியங்கள்

கி. பி. 700 தொடங்கி ஏறக்குறைய 900 வரை சைவ சமய எழுச்சிக்கு இணையாகத் தமிழ்நாட்டில் வைணவ பக்தி மார்க்கமும் வளரத் தொடங்கியது. இப் பக்தி இயக்கத்தை மக்களிடையே நடத்திக் காட்டிய பெருமை பன்னிரு ஆழ்வார்களைச் சாரும். ஒரு சில ஆழ்வார்கள் சைவ சமய ஆசாரியர்களுக்கு முன்னரே தம் மதத்தைப் பரப்ப முனைந்துள்ளனர். திருமால் வழிபாடு, தொல்காப்பியம், கலித்தொகை, பரிபாடல் போன்ற சங்க நூல்களில் பாராட்டப்பட்டுள்ளதை நாம் காணலாம். எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் திருமாலைத் தலைமையாகக் கொண்ட வைணவ வழிபாடு, பன்னிரு ஆழ்வார்களின் பக்திப் பாடல்களால் மறுமலர்ச்சி பெற்றது; இவ்வாழ்வார்கள் 108 வைணவத் தலங்களைப் பாடியுள்ளனர். கோயில்கள் தோறும் சென்று இறைவனை இசைபாடித் தொழுதுள்ளனர்.

இவர்களுடைய அருட்பாக்களைத் தொகுத்து "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" எனப் பெயரிட்டுள்ளனர். திவ்வியப்பிரபந்தத்தையும் அதன் சிறப்புப் பொருளையும் தமிழ் உலகிற்குத் தந்துதவிய பெருந்தகையார் நாதமுனிகள் ஆவர். மடல், மாலை, அந்தாதி போன்ற பிரபந்த வகைகளும், பிற்காலப் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களும் இப் பாடல்களில் பயின்றுவரக் காணலாம். இந் நூலில் உள்ள பாக்கள், தேவாரப் பாடல்களைப் போன்று கனிந்த மொழியையும் எளிய நடையையும் கொண்டு விளங்குவனவாகும். ஆழ்வார்கள் அனைவரையும், அவர்கள் வாழ்ந்து மறைந்த கால வரிசைப்படி காண்போம்.

பன்னிரு ஆழ்வார்கள்

1. பொய்கையாழ்வார்

இவர் காஞ்சிபுரத்தினர். ஆங்கமைந்த பொய்கை ஒன்றில் தாமரை மலரில் இவ் வாழ்வார் தோன்றியமையால், இவ் ஆழ்வாரைப் பொய்கையாழ்வார் என அழைப்பர்.

இவர் பாடிய பக்திப்பாடலின் பெயர், முதல் திருவந்தாதியாகும். அப்பாடல்களுள் ஒன்று காண்க:

வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று.

2. பூதத்தாழ்வார்

மாமல்லபுரம் என்னும் திருக்கடல் மல்லையூரினர். "பூதம்" என்ற சொல் பாடல்களில் வருமாறு பாடிய காரணத்தால் இவருக்கு இப் பெயர் வந்ததென்பர்.

இவர் பாடிய பக்திப் பாடலின் பெயர், இரண்டாம் திருவந்தாதியாகும். அப் பக்திப்பாடல்களுள் ஒன்று:

அன்பே தகளியா யார்வமே நெய்யாக
இன்புருகுஞ் சிந்தை யிடுதிரியாய்—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

3. பேயாழ்வார்

மயிலாப்பூரைச் சேர்ந்தவர்; பக்திப் பரவசத்தால் நெஞ்சம் சோர்ந்து கண் சுழன்று, அழுது சிரித்து ஆடிப்பாடிப் பேய் பிடித்தாற்போல் இறைவனைத் தொழுது மகிழ்ந்ததாலே இவர் இப் பெயர் பெற்றார்.

இவர் பாடிய பக்திப் பாசுரம், மூன்றாந் திருவந்தாதியாகும். இவர் பாடிய பாடல்களிலே ஒன்று:

பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர்வேண்டா—விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்மலர்தூய்க் கைதொழுதால்
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து.

இவர் மூவரும் ஒரு காலத்தினர். இதனால், இம் மூவரையும் "முதல் மூன்று ஆழ்வார்கள்' என அழைப்பர்.

4. திருப்பாணாழ்வார்

உறையூரினர். இழிகுலத்தில் பிறந்த இவர், இசைபாடுவதிலே வல்லவர். ஆலயத்திற்குள் செல்ல உள்ளம் இன்றிக் காவிரியாற்றின் கரையிலே நின்று திருவரங்கநாதனை நோக்கித் தேனொழுகப் பாடினார். இவரைப் பக்தர் என்று பாராமல் இழிகுலத்தினர் என்று இவர்மேல் கற்களை எறிந்தனர். பண்பாடும் பக்தன் புண்படுவதைக் கண்ட திருவரங்கநாதன் தன் நெற்றியிலிருந்து குருதிகொட்டச் செய்தான். தூயவர் ஒருவர் கனவிலே தோன்றி, அத் தொண்டரை ஆலயத்திற்குத் தோளில் சுமந்துவரப் பணித்தான். திருவரங்கநாதனின் அழகுருவைக் கண்ட திருப்பாணாழ்வார் மையல் கொண்டவராய் உள்ளத்தைப் பறிகொடுத்து 'அமலனாதிபிரான்' என்ற

பதிகம் ஒன்றைப் பாடினார். இஃது உள்ளத்தைக் கவரும் திருவரங்க நாதரின்மேல், மங்கை ஒருத்தி காதல் கொண்டதாகப் பாடப்பட்ட பக்திச் சுவை நூலாகும். எளிமையான வெளிப்பாட்டையும், ஆழமான உணர்ச்சிப் பெருக்கையும் உடைய நூலாகும்.

அவர் மாலின்மேல் கொண்டிருக்கும் மையலைப் பாருங்கள் !

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன்என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணவே.

5. திருமழிசை ஆழ்வார்

தொண்டை நாட்டிலுள்ள திருமழிசை என்னும் ஊரினர். சைவத்திறகுத் திருமூலர் போன்று வைணவத்திற்குத் திருமழிசை ஆழ்வாராவார். திருச்சந்த விருத்தமும், நான்முகன் திருவந்தாதியும் இவர் இயற்றிய நூல்களாகும்.

"உன்னையன்றி நானில்லை; என்னையறின்றி நீ இல்லை" என நாரணனை எண்ணி "என் தொழிலெல்லாம் உன்னைத்தொழுவது; பொழுதெல்லாம் உன்னைப் புகழ்வதே" எனக் கூறுகின்றார். "வாழ்த்துக வாய்; காண்க கண்; கேட்க செவி; தாழ்த்துக தலை" என இறைஞ்சுகின்றார். திருமாலைக் காணவல்லார் யார்? என்பதற்குத் திருமழிசை ஆழ்வார் கூறும் விடையைப் பாருங்கள் :

ஒன்றி நின்று நல்தவம்செய்து
ஊழி ஊழி தோறெலாம்
நின்று நின்று அவன்குணங்கள்
உள்ளி உள்ளம் தூயராய்
சென்று சென்று தேவ தேவர்
உம்பர் உம்பர் உம்பராய்
அன்றி எங்கள் செங்கண் மாலை
யாவர் காண வல்லரே.

6. நம்மாழ்வார்

இவரைச் 'சடகோபர்' என்றும் கூறுவர். பாண்டியநாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்தவர். ஆழ்வார்களுள் தலைசிறந்தவராவர். திரு ஆசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்ற நான்கு நூல்களை இயற்றியுள்ளார். இந் நான்கு நூல்களையும் வைணவர்கள் தங்கள் மதத்திற்குரிய சதுர் வேதங்களெனப் போற்றிப் பேணுவர். இவற்றுள் திருவாய்மொழி மிகச் சிறந்த நூலாகும்.

சைவத்திற்கு மாணிக்கவாசகர் போன்று வைணவத்திற்கு நம்மாழ்வார் ஆவார். "நம்மாழ்வார் ஒரு நாட்டிற்கோ ஒரு சமயத்திற்கோ, ஓர் இனத்திற்கோ, மட்டும் உரியவர் அல்லர். அவர் எல்லா நாட்டிற்கும், எல்லாச் சமயத்தார்க்கும் எல்லா இனத்தார்க்கும் உரியவர். எல்லோரும் 'நம் ஆழ்வார்' என்று போற்றும் ஒரு பெரியாரை அளித்த தமிழ் நாட்டை மனத்தால் நினைக்கிறேன்; வாயால் வழுத்துகிறேன்; கையால் தொழுகிறேன்," என்கிருர் திரு. வி. க. நம்மாழ்வார், தம்மையும் பிறவற்றையும் இறை இயல்பாகக் காணும் மனப்பாங்கினர்.

> பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
> காவிமல ரென்றும் காண்டோறும்—பாவியேன்
> மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
> எல்லாம் பிரான்உரு வே.

என்று நம்மாழ்வார் உளங்கசிந்து உரைக்கிருர். ஒன்றிய திங்களைப் பார்த்து, "ஒளி மணிவண்ணனே" என்றும், நின்ற குன்றத்தினை, "நெடுமால்" என்றும், நன்று பெய் மழையை "நாரணன் வருகை" என்றும், பக்தி மையல் கொண்டு பாடும் இயல்பினர். இவ்வாறு இவர் இயற்கையைப் பார்த்து, இறைவனை நினைந்து, தம் உளங்கசிந்து வழுத்தும் திருவாக்குகள், படிப்பவர் உள்ளத்தைக் குழையச் செய்வனவாகும். இவருடைய பாடல்களின் சிறப்பைக் கண்ணுற்ற பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மொழிக்குச் சிறந்த உரையொன்று எழுதியுள்ளார்.

7. மதுரகவியாழ்வார்

இவர் நம்மாழ்வாரின் சீடராவர். நம்மாழ்வாரைப்பற்றிக் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' எனப் பாடிப் பெயர் பெற்றவர்.

திருமாலைக்கூடப் பாடாது, நம்மாழ்வாரையே தாம் கண்ட கடவுளாகப் பாடுகின்றார். அன்னையாக, அத்தனாகத் தம்மை ஆளும் தன்மையாகத் தம் ஆசிரியரைக் காணுகின்றார்.

> தேவுமற்று அறியேன்; குருகூர்நம்பி
> பாவின் இன்னிசை பாடித் திரிவனே.

எனப் பரவுகின்றார்.

8. பெரியாழ்வார்

இவரை 'விஷ்ணுசித்தன்' என்றும், 'பட்டர்பிரான்' என்றும் அழைப்பர். பாண்டி நாட்டினர்; ஸ்ரீ வில்லிபுத்தூர் என்னும் ஊரினர். பூமாலையோடு, இறைவனுக்குப் பாமாலை கட்டுவதிலும் பெரு விருப்புக் கொண்டவர். பெரியாழ்வார் 'திருமொழி' 'திருப்பல்லாண்டு' என்ற இரு நூல்களை இயற்றியுள்ளார்.

கண்ணனுடைய குழந்தைப் பருவத்தைப் பிள்ளைத் தமிழ் நூலாகப் பாடியுள்ளார். பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு இவருடைய நூல் முதல் தொடக்கமாகும். குழந்தை உணர்ச்சியைச் சித்திரிப்பதில் பெரியாழ்வார் ஒரு கைதேர்ந்த கவிஞர். குழந்தையைத் தொட்டிலில் இடுகிறார்கள். தொட்டிலோ, துணித் தொட்டில்! குழந்தையும் தூங்கவில்லை. குழந்தையையே கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள் யசோதரை, இடுப்பில் வைத்து அணைத்து, "என்னடா கண்ணா என்னை இந்தப் பாடு படுத்துகிறாய்?" என முணுமுணுக்கிறாள். "தொட்டிலில் கிடக்க விட்டாலோ, தொட்டிலைக் காலால் உதைத்துக் கிழித்துவிடுகிறான். மெத்தென்றிருக்கும் இந்தச் சின்னஞ் சிறிய கால் வலிக்குமே என்று ஒக்கலில் வைத்துக்கொண்டால், அங்கிருந்து நழுவி

இடுப்பை முறித்துவிடுகின்றான்; ஐயோ! நமக்கே இப்படி வலிக்கிறதென்றால், குழந்தைக்கு எப்படி வலிக்குமோ, என்று வலிய ஆசை தீர அணைத்துத் தழுவிக்கொண்டாலோ, வயிற்றிலே பாய்ந்து உதைக்கின்றான். இவ்வாறு குழந்தைக்கு ஈடு கொடுக்கும் சக்தி இல்லாமையால் நான் எவ்வாறு மெலிந்து போனேன் பாரடி'' என்று தோழியைப் பார்த்துக் கூறுவதுபோல் பெரியாழ்வார் பாடும் பாட்டு, அவருடைய கற்பனைத் திறத்தையும் கவிதையுள்ளத்தையும் நன்கு எடுத்துக்காட்டுவதாகும்.

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்;
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்;
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்;
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன்நங்காய்!

9. ஆண்டாள்

பெரியாழ்வார் வளர்த்த பெண்பிள்ளை என்பர். இவர் அணிந்த மலர்மாலையை இறைவன் மனமுவந்து ஏற்றதால், இவரைச் ''சூடிக்கொடுத்த நாச்சியார்'' என்ற சிறப்புப் பெயராலும் அழைப்பர்.

இறைவனைக் காதலனாகவும், தம்மை அவர் காதலியாகவும் பாவித்து, 'நாச்சியார் திருமொழி, திருப்பாவை' என்று இருநூல்களைக் காதற்சுவை ததும்ப நெஞ்சு நெக்குருகிப் பாடியுள்ளார். இவருடைய பக்திப் பரவசம் பாக்களிலே உணர்ச்சிப் பெருக்கெடுத்து ஓடுதலைக் காண்கிறோம். பன்னிரு ஆழ்வார்களுள் சிறப்புடைய ஒருவராக, இவர் பெரிதும் பாராட்டப்படுகிறார்.

இக் கோதை நாச்சியார் 'பெரியாழ்வார் கவிதை உள்ளத்தின் படைப்பே' என்று, ஆண்டாள் கவிதையைச் சிலர் சித்தாந்த உட்பொருளாக விளக்குவர். ஆனால், ஆண்டாளுடைய நடையில், இளமை மணம் வீசுகிறது; காதலின் புதுமை பொலிகின்றது. பள்ளமடையில் பாயும் வெள்ளம் போல் உணர்ச்சிப் பெருக்கு பொங்கி நுரைத்து விழுகின்றது; பெரியாழ்வாரின் வாக்கிலோ, முதிர்ந்த அனுபவமும், அபூர்வ

எளிமையும், சோகம் கலந்த அன்பு முதிர்ச்சியும் வெளியாகின்றன. ஆண்டாளின் பக்திக் காதலோ, கரை புரண்டோடும் காதல் வெள்ளமாகும்; பெரியாழ்வாரின் பாடல்கள் தூய அமைதி வாய்ந்த அன்புக் கடலில் விளைந்த பக்தி அனுபவக் கொத்துக்களாகும்; ஆனால், ஆண்டாளின் பாடல்களோ அலைபட்ட காதல் பெருங்கடலின் அலைகள்! சுழிகள்! நீரோட்டங்களாகும். எனவே, ஆண்டாள் பெரியாழ்வாரின் கற்பனைப் படைப்பல்லர்; உயிரோடு வாழ்ந்து மறைந்த ஓர் ஆழ்வார் மங்கையே ஆவர்.

இவர் பாடிய "திருப்பாவை" நூலில், மார்கழித்திங்கள் மதி நிறைந்த நல்நாளில் நேரிழையாரையெல்லாம் நீராட அழைக்கின்றார்.

புழைக்கடைத் தோட்டத்து வாவியுள், கழுநீர் மலர்ந்து விட்டது; வியாழமும் உறங்கிவிட்டது; எல்லே! இளம்கிளியே இன்னும் உறங்குதியோ? என்று, மணிபதித்த மாடத்தில் தூபம் கமழ் துயில் அணைமேல், கண் வளரும் மாமன் மகளை மணிக்கதவம் திறக்க அழைக்கின்றாள்.

அந் நாளில், ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி நீர் ஆடினால், நாடெல்லாம் தீங்கின்றித் திங்கள் மும்மாரி பெய்யும்; செந்நெல் வயல் ஊடே, கயல் உகளும்; நீலோற்பல மலரிலே வண்டுகள் தேனருந்தித் திளைக்கும்; வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பசுக்களையுடைய நீங்காத செல்வத்தைப் பெறலாம் என்று கன்றை நினைத்துக் கனைக்கக் கண்பார்க்கும் நிலமெல்லாம் பால் சுரந்து நனைக்கும் வளமார்ந்த பசுக்களையுடைய ஆயர்குல மகளைக் குள்ளக் குளிர, குடைந்து நீர் ஆட அழைக்கின்றாள்.

இவ்வாறு இறைவன் பேர்பாடி நீர் ஆடினால் பெறும் பரிசிலையும் கூறுகின்றார்:

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உந்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே, தோள்வளையே; தோடே, செவிப்பூவே,

பாடகமே, என்று அனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம்; அதன் பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவார
கூடி இருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்!

''மானிடவர்க்கு என்று பேச்சுப் படில் வாழகில்லேன்'' என்ற மனவுறுதியோடு வாழ்ந்த ஆண்டாள், மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத, முத்துடைத் தாமநிரை தாழ்ந்த பந்தற்கீழ், கண்ணனே வந்து தம் கைத்தலம் பற்றக் கனவு கண்டதாகக் கூறும் பாடல்கள் அவருடைய ஆழ்ந்த அன்பு வெள்ளத்தைக் காட்டுவனவாகும்.

குழல் அழகர், வாய் அழகர், கண் அழகர், கொப்பூழில் எழுகமலப் பூ அழகராகிய அரங்கநாதர், கழல்வளையைக் கழன்று விழும் வளையாக்கிவிட்டாரே என வருந்தி வார்த்தை யாடுவது, அவருடைய மையல் உள்ளத்தைப் பறையறிவிப்ப தாகும்.

10. திருமங்கையாழ்வார்

கொள்ளையடித்து வாழ்ந்துவந்த கள்ளர் குலத்தைச் சார்ந்தவர். நாகப்பட்டினத்திலுள்ள பொன்னாலாகிய புத்த விக்கிரகத்தை உடைத்து ஸ்ரீரங்கம் கோவில் மூன்றும் சுற்று மதிலைக் கட்டியதாகக் கதை கூறுவர். பெரிய திருமடல், திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, பெரிய திருமொழி, சிறிய திருமடல் என்ற ஆறு பக்திப் பாடல்களை இயற்றியுள்ளார்.

காவியை வென்ற கண்ணாரிடமே, என் ஆவியை இழந்த பாவியாய் இருந்தேன்; ஆனால், குலம் தரும், நலம் தரும், நல்ல சொல்லை, இப்போது நான் கண்டுகொண்டேன்! பெற்ற மக்கள் பெண்டிரைப் பிரிந்தேன்; ''இவர் பின் உதவாது'' என்பதை அறிந்தேன்; அருள் என்னும் வாளால் ஐம்புலன்களையும் எறிந்து, செறிந்தேன் நின் அடிக்கே! என்று சேவிக்கின்றார்.

"காயோடு நீடு, கனியுண்டு வீசு, கடுங்கால் நுகர்ந்து, நெடுங்காலம் ஐந்து, தீயோடு நின்று, தவம் செய்யவேண்டாம்" என்று கூறுகின்றவர், இறைவனை எய்தும் வழியையும்,

> பொய்வண்ணம் மனத்து அகற்றிப்
> புலன் ஐந்தும் செலவைத்து
> மெய்வண்ணம் நினைந்தவர்க்கு
> மெய்ந்நின்ற வித்தகன்

தோன்றுவான் எனக் காட்டுகின்றார்.

11. தொண்டரடிப்பொடி யாழ்வார்

விப்ர நாராயணர் என்ற மற்றொரு பெயரும் இவருக்குண்டு. திருவரங்கநாதனுக்குத் தினந்தோறும் மாலை சாத்த, ஆலயத்தில் தோட்டம் அமைத்து, மலர்ச் செடிகளை வளர்த்து வந்தார். அங்கு 'தேவதேவி' என்ற விலைமாதின் வயப்பட்டுத் தம் வாழ்நாளைக் கழித்தார். பின்னர் அக் கள்ளம் கரைய உள்ளம் உருகிப் பாடிய பாக்கள்தாம் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி நூல்களாகும். இவர் இயற்றிய திருப்பள்ளியெழுச்சி, மாணிக்க வாசகரின் திருப்பள்ளியெழுச்சி நூல் போன்று கவிதை நயமும் இயற்கை எழிலும் நிறைந்ததாகும்.

"பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய் கமலச்செங்கண்" என்ற புகழ்மிக்க பக்திப் பாடலைப் பாடிய ஆழ்வார், 'மெய் எல்லாம் போகவிட்டு விரிகுழலாரில் பட்டு, பொய் எல்லாம் பொதிந்து கொண்ட பொய்யனேன்; பொய்யனேனே; என் மனத்தில் ஓர் தூய்மை இல்லை; வாயில் ஓர் இன்சொல் இல்லை; பொழுதெல்லாம் போதுகொண்டு, உன் பொன் அடி புனைய மாட்டேன்; தீதிலா மொழிகள் கொண்டு, உன் திருக்குணம் செப்பமாட்டேன்; காதலால் நெஞ்சம் அன்பு கலந்திலேன்; ஆகையால், ஏதுமற்றேன் என்பதோடு,

> ஊரிலேன் காணியில்லை, உறவுமற் றொருவர் இல்லை;
> பாரில்நின் பாத மூலம் பற்றிலேன்; பரம மூர்த்தி

கார்ஒளி வண்ண னேஎன் கண்ணனே கதறு கின்றேன்
ஆர்உளர்? களைகண் அம்மா! அரங்கமா நகரு ளானே!"

என்று, இறைவனை நோக்கி அலறுகின்றார்.

12. குலசேகராழ்வார்

இவர் சேர நாட்டினர். சிம்மாசனத்தைத் துறந்து வைணவத் தொண்டர் கோலத்தை மேற்கொண்ட பெரியார். தமிழும் வட மொழிப் புலமையும் வாய்ந்த கவிஞர் ஆவார்.

தமிழில் பெருமாள் திருமொழி என்ற நூலையும் வடமொழியில் முகுந்தமாலை என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

இவர் பாடிய அருட்பாடலிலே ஒன்று :

தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே;
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன் றிருந்தேனே!

மேற்கூறிய மூவரும் ஒரு காலத்தினர்.

மேற்கூறிய பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல்களைத் திரட்டி 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' என்ற பெயரால் வழங்கியுள்ளனர். இப் பாடல்களுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றை "உரையாசிரியர்கள் தொண்டு' என்ற தலைப்பிலே காண்க.

5. சோழர் காலம்

(கி. பி. 800—1200)

முன்னுரை

கி. பி. 9 ஆம் நூற்றாண்டு முதல், கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரை, ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் சோழர்கள் தமிழகத்தில் அரசாண்டனர். தமிழ்மக்களின் அரசியல் வாழ்வு தழைத்தது. சமுதாயப் பொருளாதார நிலை உயர்ந்தது. எனவே, கலை வாழ்வில் கருத்தூன்றி மிகப் பெரிய கோயில்கள் பலவற்றைப் பெரும் பொருட் செலவில் கட்டினர். இலக்கியத் துறையிலும் பல கலைக்கோயில்கள் எழுந்தன. பௌத்தர்களும் சமணர்களும் பல காவியங்களைப் படைத்தனர். கம்பர் போன்ற பெருங் கவிஞர்கள், வடமொழிக் காப்பியங்களைத் தம் இயல்பு குன்றாமல் தமிழ்ப்படுத்தினர். பலர், புராணங்களை அப்படியே மொழி பெயர்த்தனர். சிலர், புராணங்களிலமைந்த கிளைக்கதைகளை நூல்களாக்கினர்; சிற்றிலக்கியங்கள் பலவும் இக்காலத்தில் எழுந்தன; இலக்கண நூலாசிரியர்கள் பலர் தோன்றிப், பற்பல வகை இலக்கண நூல்களை இயற்றினர்.

1. ஐம்பெருங் காப்பியங்கள்

காப்பியத்தின் இலக்கணம்

பொருளால் தொடர்ந்து வரும் செய்யுள் இலக்கியத்தைப் பெருங்காப்பியம் எனவும், சிறுகாப்பியம் எனவும் இருவகையாகப் பிரிப்பர். வாழ்த்து, வணக்கம், வருபொருள் என்ற மூன்று மங்கல வகைகளில் ஒன்றைக்கொண்டு அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குவகை உறுதிப்பொருள்

சைவ இலக்கியம்

ஆசிரியர்கள்	நூல்கள்		
1. சம்பந்தர்	—'திருக்கடைக் காப்பு'	—1, 2, 3	திருமுறை
2. அப்பர்	—'தேவாரம்'	—4, 5, 6	,,
3. சுந்தரர்	—'திருப்பாட்டு'	—7 ஆம்	,,
4. மாணிக்கவாசகர்	—'திருவாசகம்'	—8 ஆம்	,,
5. திருமாளிகைத் தேவர் போன்றோர்......	—'திருவிசைப்பா'	—9 ஆம்	,,
6. திருமூலர்	—'திருமந்திரம்'	—10 ஆம்	,,
7. காரைக்காலம்மையார் போன்றோர்......	—'பக்திப் பாடல்கள்'	— 11 ஆம்	,,
8. சேக்கிழார்	—'பெரிய புராணம்'	—12 ஆம்	,,

வைணவ இலக்கியம்

ஆசிரியர்கள்	நூல்கள்
1. பொய்கையாழ்வார்	—முதல் திருவந்தாதி
2. பூதத்தாழ்வார்	—இரண்டாம் ,,
3. பேயாழ்வார்	—மூன்றும் ,,
4. திருப்பாணாழ்வார்	—'அமலனாதிபிரான்' பதிகம்
5. திருமழிசை ஆழ்வார்	—'திருச்சந்த விருத்தம்', 'நான்முகன் திருவந்தாதி'
6. நம்மாழ்வார்	—'திருஆரியம்' திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி
7. மதுரகவியாழ்வார்	—'கண்ணிநுண் சிறுத்தாம்பு' பாடல்
8. பெரியாழ்வார்	—'பெரியாழ்வார் திருமொழி'
9. ஆண்டாள்	—'நாச்சியார் திருமொழி' 'திருப்பாவை'
10. திருமங்கையாழ்வார்	—'பெரிய திருமடல்'......போன்ற ஆறு நூல்கள்
11. தொண்டரடிப்பொடி ஆழ்வார்	—திருமாலை, திருப்பள்ளியெழுச்சி
12. குலசேகர ஆழ்வார்	—பெருமாள் திருமொழி

களை உணர்த்தும் இயல்பினையுடையது, பெருங்காப்பியம்: இதன்கண், மலை, கடல், நாடு, நகர வருணனைகள் நன்கு அமைதல்வேண்டும். தன்னோடு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவனைக்கொண்டு, அவன் மணம் முடித்து, முடிசூடிப் பொழில் நுகர்ந்து புனல் விளையாடிப் புதல்வனைப் பெற்ற சிறப்புகளையும், கொண்ட போர்க்கள வெற்றிகளையும் எண் வகைச் சுவையும், பாவமும் விளங்க இலம்பகம், சருக்கங்களில் எடுத்து மொழியும் இயல்பினையுடையது பெருங்காப்பியம் அல்லது பேரிலக்கியமாகும்.

காப்பியங்கள் ஒரு மொழியின் வளப்பத்தைப் புலப் படுத்தும் இயல்பு வாய்ந்தவையாகும். தொல்காப்பியத்திற்கு முன்னர்த் தமிழில் பல காப்பியங்கள் எழுந்திருக்கவேண்டும். கடைச்சங்க காலத்து விளங்கிய இராமாயணம், பாரதம், தகடூர் யாத்திரை போன்ற காப்பியங்கள் இன்று நமக்குக் கிடைத்தில. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் இலக்கிய வரிசைபோல, பிற்காலத்தில், ஐம்பெருங் காப்பியங்கள் என்னும் வரிசையும் வழங்கிவரத் தொடங்கிற்று. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பவையே, அந்த ஐம்பெருங் காப்பியங்களாகும். ஐம்பெரும் காப்பியங்கள் என்ற வழக்கு மிகப் பிற்காலத்தது; வடமொழி மரபைப் பின்பற்றி எழுந்த தாகும். அதனால்தான், காப்பியத் தகுதி இல்லாத நூல் களையும் காப்பியம் எனக் கூற முற்பட்டனர். அக் காப்பியங் களைக் காணபோம்.

1. சிலப்பதிகாரம் 2. மணிமேகலை

இவை காலத்தால் முந்தியவை; அகவற்பாவால் இயன்ற காப்பியங்களாகும். (சங்கம் மருவிய காலம் என்ற பகுதியிற் காணலாம்.)

3. சிந்தாமணி

சிந்தாமணி என்ற நூலைச் சீவகசிந்தாமணி என்றும் வழங்குவர். 'அறம், பொருள், இன்பம், வீடு,' என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் இந்நூல் கூறுவதால், 'முடிப்

பொருள் தொடர்நிலைச் செய்யுள்' என்பார், அடியார்க்கு நல்லார். இந்நூலின் காப்பியத் தலைவனான சீவகன், காந்தருவ தத்தை போன்ற எண்மரையும் மணப்பதோடு, கல்வியால், நாமகளையும், வீட்டுப்பேற்றால் முக்திமகளையும், மணம் புரிவதாகக் குறிப்பதனால், இதனை மணநூல் என்ற பெயராலும் வழங்குவர். இக் காப்பியத்தை இயற்றியவர் திருத்தக்க தேவர் என்ற சைனத் துறவியாவார்; இந் நூல் நாமகள் இலம்பகம் முதல், முத்தியிலம்பகம் முடிய அமைந்த பதின்மூன்று இலம்பகங்களையும் 3145 செய்யுட்களையும் கொண்டதாகும். இந்நூல் முழுமைக்கும் நச்சினார்க்கினியர் இலக்கிய நயம் வாய்ந்த உரையொன்று எழுதியுள்ளார்.

இந்நூல் கூறும் கதை

"ஏமாங்கத நாட்டு மன்னனான சச்சந்தன் என்பான், விசயை என்ற பெண்ணரசியின் எழிலிலே ஈடுபட்டு, அரசை விடுத்து, அந்தப்புரத்திலே காலத்தைப் போக்கினான். கெடுமதி படைத்த அமைச்சனான கட்டியங்காரன், சூழ்ச்சி செய்து மன்னனை முறியடிக்கிறான். கருவுற்ற விசயை மயிற் பொறி ஏறி ஒரு சுடுகாட்டை எய்தி, ஆங்கே சீவகனைப் பெற்றெடுக்கின்றாள்.

"ஆங்கு, தெய்வச்செயலாக வந்த கந்துக்கடன் என்ற செட்டி, கைக்குழந்தையான சீவகனை எடுத்து வளர்த்து வருகின்றான். காளைப்பருவம் அடைந்த சீவகன் தன் வீரச் செயலாலும், இசைத் திறமையாலும், அறிவு நுட்பத்தாலும் குணமாலை, சுரமஞ்சரி, பதுமை, கேமசரி போன்ற எண்மரை மணம் புரிகிறான். பின்னர், ஏமாங்கத நாட்டின்மேல் படையெடுத்துக் கட்டியங்காரனைப் போரில் வென்று, தந்தை நாட்டைக் கைப்பற்றி, அரசாட்சி செய்து வருகிறான். இவ்வுலக இன்பத்தை எல்லாம் வளமாரத் துய்த்த பின்னர் இறுதியாகத் துறவு மேற்கொள்கின்றான்."

காதலைப்பற்றி எழுதவேண்டும் என்ற கருத்தோடு எழுந்திருந்தாலும், இந்நூல் அறத்தைத்தான் முடிவாக வற்புறுத்துகின்றது. சக்ர சூளாமணி, சத்திய சிந்தாமணி

ஆகிய வடமொழி நூல்களைத் தழுவி எழுந்த இந்நூல் அக்காலப் பழக்க வழக்கங்களை, நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

இதுவே விருத்தப்பாவில் எழுந்த முதல் காப்பியமாகும். கம்பர் போன்ற புலவர்கள் ஊன்றிப் படித்த ஓருயர்ந்த இலக்கியமுமாகும். தமிழ்நாட்டில் இக் காப்பியம் நன்கு பயிலப் பட்டிருக்க வேண்டும். இலக்கியம் என்ற முறையில் பல குறைகள் இருந்தாலும், இந்நூல் பிற்காலத்தவருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்கிய உயர்ந்த நூலாகும். ஆசிரியருடைய கற்பனைத்திறனும், வருணனைத் திறனும் சிறப்பு மிக்கனவாகும்,

இடத்திற்கேற்ப, கதாபாத்திரத்தின் இயல்பிற்கேற்பத் திறம்பட வருணிப்பதில், திருத்தக்கதேவர் கைதேர்ந்தவர். எடுத்துக்காட்டாக, சிந்தாமணியிலே விசயை சுடுகாட்டில் சூரியனைப் போன்ற ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். அவன் வேறு யாருமில்லை; மன்னர்மகன் சீவகன்தான். ஆனால், அவன் பிறந்திருக்கும் இடமோ சுடுகாடு! அந்த அவலச் சூழ்நிலைக்கேற்ப ஓசை நயத்துடன் கவிஞர் இலக்கியச் சுவையோடு வருணிக்கின்றார்:

வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்டு உயர்அரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கின் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வாறாகிப் பிறப்பதோ? இதுவோ மன்னர்க்கு இயல்வேந்தே?

இன்பச் சுவையைக் கனிந்துரைப்பதில், சிறந்தது சிந்தாமணி. சீவகன் அழகில் ஈடுபட்ட கேமசரி, சீவகனைக் கண்ணால் நோக்குகின்றாள். அந் நோக்கிற்கு ஈடாகப் பாற்கடலில் தோன்றிய அமிர்தத்தையும், பரந்த பெரிய உலகத்தையுமே பரிமாறவேண்டும் என்கின்றான் சீவகன். அப்படிச் சீவகன் மட்டும் மகிழத்தக்க எதைத்தான் அக் கண் சாதித்ததோ? அதைச் சீவகனே கூறுகின்றான் கேளுங்கள்!

காதன்மை கண்ணிலே அடக்கிக் கண்ணெனும்
தூதினால் துணிபொருள் உணர்த்தித் தான்தமர்க்கு
ஏதின்மை படக்கரந் திட்டவாள் கண்நோக்கு
ஓதநீர் அமுதமும் உலகும் விற்குமே.

காந்தர்வதத்தையார் இலம்பகத்தில் அநங்கமாலை என்னும் நாடகப் பரத்தை, சீவகன்மேல் காதல்கொண்டவளாய் நடனமாடும் நிலையைக் கவிஞர்,

ஆடவர் மனங்கள் என்னும் அரங்கின்மேல் அநங்க மாலை
ஆடினாள்; முறுவல் என்னும் தோழியை ஐயன் காண
ஓடரி நெடுங்கண் என்னும் ஓலையை எழுதி விட்டாள்
வாடிய வாறும் நோயும் உரைத்துவார் கொடிய னாளே.

என்று (சிந். 688) இலக்கியச் சுவைபடக் கூறுகிறார்.

இந் நூலாசிரியர், தம் சமயக் கருத்துக்களை, ஆங்காங்குக் கூறிச் செல்கின்றார். வழிப்போக்கனுக்குச் சீவகன் கூறும் அறிவுரையில் அவற்றைச் சிறப்பாகக் கூறுகின்றார். அதில் ஒரு பாடல்:

மெய்வகை தெரிதல் ஞானம்; விளங்கிய பொருள்கள் தம்மைப்
பொய்வகை யின்றித் தேறல் காட்சி; ஐம்பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயா தொழுகுத லொழுக்கம்; மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்றான்.

4. வளையாபதி

"பிறகுலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை, நவகோடி நாராயணனென்னும் வைசியன் மணந்தான் என்பதற்காக அக் குலத்தைச் சார்ந்தோர் அவனை வெறுக்க, அவனும் அயல்நாடு சென்றுவிடுகிறான். அப் பெண்ணிற்குப் பிறந்த பையன் பல்லாண்டுகட்குப் பின்னர், புகார் நகரம் புகுந்து தன் தந்தையை அறிந்து, அவரைத் தன் தாய்பால் சேர்ப்பிக்கிறான்" என வளையாபதி நூற்கதையை வைசிய புராணம் 35ஆம் சருக்கம் கூறுகிறது. ஆனால், வளையாபதி காப்பியம் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. அதன் ஆசிரியர், காலம் முதலியவற்றையும் அறிவதற்கில்லை.

இந்நூலின் பாடல்களாகப் புறத்திரட்டிலும், யாப்பருங்கல விருத்தியிலும், சிலம்பு, தொல்காப்பிய நூல்களின் உரைகளிலுமாக மொத்தம் 72 செய்யுட்கள் கிடைத்துள்ளன. இதனைச் சைனமதச் சார்புடைய காப்பியம் எனச் சிலர் கூறுகின்றனர்; சிலர் அன்று என மறுக்கின்றனர்.

நாட்டைப்பற்றி வருணிக்கும்பொழுது, நெற்பயிர் கரும்பு போல் வளர்கிறது; இதைக்கண்ட கரும்பு பாக்குப் போல் வளர முயல்கிறது. கரும்பு தன்னோடு போட்டி போடுவதைக் கண்ட பாக்குமரம், நாணம் அடைந்து, மேகத்தால் தன் முகத்தை மறைத்துக் கொள்கின்றதாம்.

செந்நெல்அங் கரும்பினோடு இகலும் தீஞ்சுவைக்
கன்னல்அங் கரும்புதன் கழைக்கு காய்ந்து எழும்
இன்னவை காண்கிலன் என்று பூகமும்
முன்னிய முகில்களால் முகம்பு தைக்குமே.

அஃதாவது, மேகத்தை மறைக்கும்படி பாக்குமரம் வளர்ந்தது என்கின்றார். அழகான கற்பனை!

5. குண்டலகேசி

மறைந்துபோன காப்பியங்களுள் இதுவும் ஒன்று. 'சுருண்ட கூந்தல்' காரணமாகப் பெயர்பெற்ற குண்டலகேசியின் வரலாற்றை நீலகேசி நூலின் உரை கூறுகின்றது. "வணிக மரபில் தோன்றிய குண்டலகேசி, காளன் என்னும் கள்வனைக் கண்டு காமுற்று, அவனையே மணக்கின்றாள். ஒருநாள் ஊடல் காரணமாக அவனைக் கள்வன் என்று கூறிவிடச் சினங் கொண்ட அவன், வஞ்சகமாக அவளை மலையுச்சிக்கு அழைத்துச் சென்று, அவளைக் கொல்ல முற்படுகின்றான். அதையறிந்த குண்டலகேசி அவனை மும்முறை வலம் வருவதுபோல வந்து, இறுதியில் கொன்றுவிடுகின்றாள். பின்னர், உளம் வருந்தித் துறவுபூண்டு, பிற சமயங்களை வென்று பௌத்த தரிசனம் கொண்டு முக்தி பெறுகிறாள்" என்பது இந் நூற் கதையாகும். இந் நூலை இயற்றியவர் நாதகுத்தனார் ஆவர்.

இது விருத்த யாப்பால் அமைந்த பௌத்த காப்பியமாகும். இந் நூலுக்கு மறுப்பாகவே, நீலகேசி எழுந்ததென்று புலப்படுகின்றது. குண்டலகேசிச் செய்யுட்கள் பல புறத்திரட்டில் காணப்படுகின்றன. காலத்தின் கோலத்தைக் காட்டும் பாடலொன்றைப் பாருங்கள் :

பாளையாம் தன்மை செத்தும், பாலனும் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும், காமுறும் இளமை செத்தும்
மீளும்இவ் வியல்பு மின்னே மேல்வரும் மூப்பும் ஆகி
நாளும்நாள் சாகின் றாமால்; நமக்குநாம் அழாததென்னே?

2. ஐஞ்சிறு காப்பியங்கள்

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குவகை உறுதிப்பொருள்களும் ஒன்றோ, பலவோ குறைந்துவரின் அதனைச் சிறு காப்பியம் என்பர்.

ஐம்பெருங் காப்பியங்கள் என்ற வழக்காற்றைப் பின்பற்றி, ஐஞ்சிறு காப்பியங்கள் என்ற வழக்கும் பிற்காலத்தில் ஏற்பட்டது. அக் காப்பியங்களாவன :

1. சூளாமணி

இது விருத்த யாப்பில் அமைந்த சைனச் காப்பியமாகும். இதனை இயற்றியவர், தோலாமொழித் தேவர். இந் நூல் பன்னிரண்டு காண்டங்களையும், 2,131 விருத்தப்பாக்களையுமுடையது. இந் நூல் மண்ணுலக வீரனான திவிட்டன், விண்ணுலக மாமன்னவன் சுயம்பிரபையை மணஞ் செய்த வரலாற்றை எடுத்துரைக்கின்றது. இக்கதையைக் கூறும்பொழுது இடையிடையே சமண மதக் கருத்துக்களை வலியுறுத்திச் செல்லுகின்றார். கவிதை நயத்தில் சிந்தாமணி போன்ற ஒரு சிறந்த நூலாகும்; பெருங் காப்பியத்திற்குரிய இலக்கணங்கள் பெரும்பான்மை அமையப்பெற்ற ஒருயர்ந்த இலக்

கியமுமாகும்: இந் நூலில் வரும் சந்தநயம்மிக்க ஒரு பாடலைப் பாருங்கள் :

வளர்கொடியன மணம் விரிவன மல்லிகையொடு மௌவல்
நளிர்கொடியன நறுவிரையன நறுமலரன நறவம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கொகுடி
ஒளிர்கொடியன உயர்திரளினொ டொழுகினரன ஒலை.

2. நீலகேசி

இதனை "நீலகேசித் தெருட்டு" என்றும் கூறுவர். இதனை இயற்றியவர் யாரென்று தெரியவில்லை. பத்துச் சருக்கங்களையும் 895 பாக்களையுமுடைய ஒரு சைன மத நூலாகும். சமணமே தலைசிறந்த சமயமென நிலைநாட்ட, குண்டலகேசிக்கு எதிராக எழுந்த ஒரு வாத நூல் என்பர். வாமன முனிவர் என்பவர், இந் நூலுக்கு உரையொன்று எழுதியுள்ளார்.

3. உதயண குமார காவியம்

உதயணன் வரலாற்றை, 367 செய்யுட்களில் விருத்தப் பாவால் கூறும் ஒரு காவியமாகும். இந் நூலின் நடை சிறப்பாக அமையவில்லை.

4. யசோதர காவியம்

உயிர்க்கொலை தீது என்ற நீதியைப் புகட்டி எழுந்த சைன நூலாகும்; எளிய நடை வாய்ந்த 320 செய்யுட்களையுடைய காவியமாகும். சிற்றுன்பத்தின் இழிவையும், தவ ஒழுக்கத்தின் உயர்வையும் இந் நூல் சிறப்பித்துக் கூறுகிறது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

5. நாககுமார காவியம்

இந் நூல்பற்றிய விவரம் ஒன்றும் தெரியவில்லை.

பிற காப்பியங்கள்

விம்பசார கதை

இது ஒரு பௌத்த காப்பியம். புத்தருடைய உபதேசம் பெற்றுப் பௌத்தனான விம்பசாரன் என்ற மகத மன்னனுடைய வரலாற்றைக் கூறும் காப்பியமாகும்.

மேருமந்திர புராணம்

'மேரு' 'மந்திர' என்ற இரு உடன்பிறந்தாரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் சமணகாப்பியம் ஆகும். இந் நூலை இயற்றியவர், வாமனாசாரியார் ஆவார்.

கம்பராமாயணம்

சோழர் காலத்தில் அநேகமாக கி. பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் கற்றோர் நெஞ்சங் களிக்க இராமாவதாரமென்னும் பெயருடைய இராமாயணத்தைப் பாடியுள்ளார்.

தமிழ் இலக்கியத்தில் தொடங்கிய காப்பிய வளர்ச்சி கம்பன் படைப்பில் உச்சநிலையடைவதை நாம் காணலாம். வால்மீகியின் கதையைத் தமிழ்நாட்டுப் பண்பாட்டிற்கேற்ப மாற்றியும் புதுக்கியும் அமைத்துள்ளார். நாடகச்சுவை ததும்பக் காவியத்தை உருவாக்கியுள்ளார். "கம்பராமாயணத்தில், தமிழ்க் கவிதா மண்டலத்தின் மிக உன்னத உச்சியும், கற்பனை உலகத்தின் விரிவும் பொலிவும், தமிழகக் கலைவாழ்வின் வளமும் சுவையும், தமிழ்ச் சொற்களின் ஆற்றலும் தமிழ்நடையின் பெருமிதமும் விளங்குகின்றன. கம்பர் ஈடும் எடுப்பும் இல்லாத கவி" என்கின்றார் ஒரு தமிழ் இலக்கியத் திறனாய்வாளர். "கம்பனது பெருங்காப்பியம், நமது பாரத நாட்டுக் கவித்துவக் கொள்கைக்கும், காவியக் கொள்கைகளுக்கும் முற்றும் பொருந்தி அவற்றிலும் சிறிது மேம்பட்டு விளங்குகின்றது. அது மட்டுமின்றி, எல்லாக் காலத்திற்கும் எல்லா இனத்திற்கும் ஏற்றதாக விளங்கும் கவித்துவக் கொள்கைகளுக்கும், காவியக் கொள்கை

களுக்கும் முற்றும் பொருந்தி, அவற்றிலும் சிறிது மேம்பட்டு விளங்குகின்றது; அதுமட்டுமின்றி, எல்லாக் காலத்துக்கும் எல்லா இடத்திற்கும் ஏற்றதாக விளங்கும் கவித்துவக் கொள்கைகளைக் கொண்டு நோக்கினும் அவற்றையும் விஞ்சிய வண்ணமாய்த் தலை சிறந்து விளங்குகின்றது எனலாம்,'' இதனுல் இப் பெருங் கவிஞனை உலக மகாகவிகளுள் ஒருவனெனப் பலரும் போற்றுவர். கற்றோரால் 'கவிச்சக்கரவர்த்தி' எனப் பாராட்டப் படுபவன் கம்பனுவான்.

வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாக வைத்து எழுந்ததால் இக் காப்பியத்தை வழிமுறைக் காப்பியம் என்பர். கதையை ஆங்காங்கு மாற்றி, கற்பனையைக் கலந்து, தன் கவிதை வெள்ளத்தால், கம்பன் இக் கதையைப் பேரழகு படுத்தியுள்ளதால், இக் காப்பியத்தை முதற் காவியம் எனவும் பாராட்டுவர். கம்பரையும் வால்மீகியையும் ஒருங்கே கற்ற கால்டுவெல் என்னும் பேரறிஞர், "ஹோமருடைய இலியட் (Iliad) நூலுக்கும் போப்பினுடைய இலியட் நூலுக்கும் உள்ள வேற்றுமையே, வால்மீகி இராமாயணத்துக்கும் கம்பராமாயணத்துக்கும் உள்ள வேற்றுமையாகும்'' என்கின்றார். திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் எடை போடுவதுபோல, "கம்பராமாயணக் காவியம் தமிழரது கவித்துவத்தின் பேரெல்லை'' யாகும் என்றார்.

கவிச் சக்கரவர்த்தியெனக் கம்பனை அழைப்பதற்குக் காரணங்கள் பலவாகும்.

நாடக நயம்

பாத்திரங்களுக்கும், சந்தர்ப்பங்களுக்கும் தக்கவாறு எழும் இயற்கைப் பேச்சின் இயற்கை ஓசையைக், கம்பன் அழகுறக் கையாளக் காணலாம். இராவணன் தன் அமைச்சர் முதலானவர்களோடு ஆலோசனை செய்கையில், கும்பகர்ணன் இராவணனை நோக்கி, "பேசுவது மானம்; இடை பேணுவது காமம்; கூறுவது மானிடரை; நன்று! நம் கொற்றம்!'' என்று மிக இயற்கையாக இடித்துரைப்பதும்; "சீதையை விட்டுவிடு'

என்று இந்திரசித்து சொல்லத் துணிந்த நேரத்தில் 'என்னையே நோக்கி யான் இந் நெடும் பகை கொண்டதென்று' இராவணன் ஆணவமாகக் கூறுவதாக அமைந்த உரையாடல்கள், கம்பன் காப்பியத்தைச் சிறந்த நாடகமாக்கக் காணலாம்.

பண்ணின் ஓவியம்

கம்பராமாயணத்தைக் "கம்ப நாடன்" என்றும் வழங்குவர். கம்பரின் அயோத்தியா காண்டம், தமிழில் உள்ள தலைசிறந்த அவலச்சுவை நாடகமாகும். கம்பர் ஒவ்வொரு பாத்திரத்தின் இயல்பையும், முற்றும் உணர்ந்து, அதன் மயமாக ஒன்றித்து நின்று, மொழி செயல் முதலியவற்றால் வெளிப்படுத்துகின்றார்.

சூர்ப்பணகை இராவணன் மனநிலையைப் படிப்படியாக மாற்றுவதாகக் காட்டும் கம்பரது கவித்திறம், சிறந்த நாடகத் தன்மை பொருந்தியதாகும். இராமன், இராவணன், இந்திர சித்து, சீதை, குகன் ஆகியோர், நாம் மறக்க முடியாத கம்பரது முதல்தரமான கவித்துவப் படைப்புகள். இறுதிவரை யாதொரு சொல்லும் செயலுமற்று மௌன பாத்திரமாக இருந்த சத்துருக்கனனை, இரண்டே செய்யுட்களால் சாகாத சித்திர மாக்கிவிடும் கம்பன் திறத்தை எவ்வளவு போற்றினாலும் தகும்.

செய்யுள் வளம்

"வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற் றாறே" எனக் கணக்கிட்டுக் கூறுதல் எளிதன்று. யாப்புத் திறனைக் காட்டுவதற்காக மட்டுமன்று, கருத்து நயத்திற்காகவும், யாப்பு அமைப்பை மாற்றிச் செல்கிறான் கம்பன்.

கட்டங்களுக்குத் தக்கபடியும், கூற வேண்டிய கருத்துக்கு இயைந்தபடியும் கம்பன் செய்யுள் வகைகளை மாற்றி அமைக்கிறான்.

இராமனைக் கவர்வதற்கு வரும் சூர்ப்பணகையின் அழகு கொஞ்சும் நளின நடைக்கு ஏற்பக் கவிதையின் சந்தத்தை

அமைக்கும் கம்பன் திறத்தை அடியிற்காணும் செய்யுளைப் படிக்கும் பொழுது நாம் நன்ருகப் புரிந்துகொள்ளலாம்.

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள். (சூர்ப்பணகை. 31)

தாடகை, கோபக்கனலோடு இராமனை எதிர்க்கும் நிலையில், எழும் கவிதைச் சந்தத்தைப் படியுங்கள் :

இறைக்கடை துடித்தபுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடை பிறங்கிட மடித்தபில வாயள்
மறக்கடை யரக்கிவட வைக்கன லிரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென நெருப்பெழ விழித்தாள்.

(தாடகைவதை, 49)

வருணனை

இராமன்பால் சென்று கற்பின் செல்வியாகிய சீதை இலங்கையில் இருக்கின்ருள் என்று, அநுமான் கூறும் பேச்சு நம்மை உயிர் தவிர்க்கச் செய்து கூத்தாட்டுவிக்கின்றது.

விற்பெருந் தடந்தோள் வீர
வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டே னல்லேன்;
இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன். (திருவடி—தொழு, 62)

உலாவியற் படலம், பூக்கொய் படலம், நீர்விளையாட்டுப் படலம், யுத்த காண்டத்தில் களியாட்டுப் படலம் அனைத்தும், கம்பன் வருணனைத் திறத்திற்குத் தக்க எடுத்துக் காட்டு

களாகும். இவ் வருணனைகள் யாவும் கடைந்தெடுத்த அரிய சொல்லோவியங்களாகும்.

இரண்டு பாத்திரங்கள் சந்திக்குமிடத்து, நிகழும் நிகழ்ச்சியைப்பற்றிய வருணனைகளிலும், கம்பன் கற்பனைத் திறத்தைக் காணலாம்.

"உணர்ச்சிகளைச் சித்திரிக்கும் பாகங்களிலும் கம்பரின் நடைமிகவும் எளியது, தெளிவானது, அழகுடையது; அரிய ஆற்றலுடையது; மக்கள் பேசும் மொழியிலேயே அமைந்துள்ளது; காவியத்திற்கேற்ற வருணனைகளிலும், கவிக் கூற்றுகளிலும், கதையை நடத்திக்கொண்டு போகும் வேகத்திலும், கம்பரின் கவித்துவநடை, விரிந்த கற்பனையில் அமைக்கப்பட்டுப் பெருமிதத்தோடு உயர்ந்த, வியப்பிக்குரிய வெற்றியை அடைந்திருக்கிறது."

"கம்பராமாயணமானது, ஹோமர் எழுதிய இலியட்டையும், வெர்ஜில் எழுதிய ஈனியட்டையும், மில்டனுடைய சுவர்க்க நீக்கமென்னும் காவியத்தையும், வியாச பாரதத்தையும், தனக்கே முதல் நூலாக இருந்த வால்மீகி இராமாயணத்தையும்கூடப் பெருங்காப்பிய இலட்சணத்தின் அம்சங்களுள் அநேகமாய் எல்லாவற்றையும் வென்றுவிட்டது" என்கின்றார், வ. வே. சு.ஐயர்.

புராணங்கள் (மாக்கதைகள்)

தேவர்கள், முனிவர்களைப்பற்றிய பழைமையான செய்திகளைக் கூறும் புராண நூல்களில் பெருங்காப்பியச் சிறப்போடு திகழ்பவை கந்தபுராணம், பெரியபுராணம் என்ற இரு நூல்களாகும். பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராண நூலும், சொல் நயமும், பொருள் நயமும் வாய்ந்ததாகும்.

1. கந்தபுராணம்

இந்நூல், சிவசங்கர சங்கிதை என்னும் வடநூலைத்தழுவி ஆறுமுகக் கடவுளின் பிறப்பு, வள்ளி திருமணம், சூரன் சங்காரம் முதலிய முருகனின் செயல்களை விரித்து 10,346 செய்யுட்களில் ஆறு காண்டங்களாகக் கூறுகிறது.

இந்நூலைக் காஞ்சிபுரம், கச்சியப்ப சிவாசாரியார் இயற்றியுள்ளார். நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு வருணனைகளையும் பல காவிய நயங்களையும். கற்பனை மெருகுகளையும் ஆழ்ந்த கருத்துக்களையும் கொண்டு விளங்குவது இந்நூல். சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பல, இந்நூலில் அழகாக இடம் பெற்று விளங்குவதை நாம் காணலாம். தமிழகத்தில் மட்டுமின்றி யாழ்ப்பாணத்திலும் தமிழர்கள் அனைவரும் விரும்பிக் கற்கின்ற ஒரு நூல் கந்தபுராணமாகும்.

2. பெரிய புராணம்

சேக்கிழார் என்னும் சைவப் பெரியாரால் 12ஆம் நூற்றாண்டில் இந்நூல் இயற்றப்பட்டது. அருண்மொழித் தேவர் என்னும் இயற்பெயரையும், அமைச்சராய் இருந்த காலத்து 'உத்தம சோழப் பல்லவன்' என்ற பட்டத்தையும், பெரிய புராணம் பாடிய பின்னர்த் 'தொண்டர்சீர் பரவுவார்' என்னும் பட்டத்தையும் பெற்றுத் திகழ்ந்துள்ளார்.

சோழ மன்னன் சைவ நெறி பிறழ்ந்து, சமண காப்பியமான சீவகசிந்தாமணியில் ஆழ்ந்துகொண்டிருப்பதை அறிந்த சேக்கிழார், அரசன் மனத்தைச் சைவந் திருநெறிக்குக் கொணரப் பெரியபுராணம் என்ற சைவ காப்பியத்தை இயற்றினர் என்று ஒரு கதை கூறுவர். இதற்குத் தக்க ஆதாரமில்லை.

நம்பியாண்டார் நம்பியின் நூலாகிய திருத்தொண்டத் தொகையை ஆதாரமாக வைத்துப், பெரிய புராணத்தை இயற்றினர். சுந்தரமூர்த்தி நாயனர் ஒருவரின் வரலாறு கூறுவதாகத் தொடங்கிப் பின்னர், அவர் பாடிய அறுபத்து மூவர் வரலாறுகளையும் விளக்கி, இடையிலும் இறுதியிலுமாகச் சுந்தரமூர்த்தியின் வரலாற்றைக் கூறி முடித்து ஒரு தலைவரின் காப்பியமாகத் திகழும்படி இந்நூலை அமைத்துள்ளார். 'திருத்தொண்டர் புராணம்' என்றுதான் முதன்முதலில் இந்நூலுக்குப் பெயர் சூட்டினர்.

அறுபத்து மூன்று சைவ அடியார்களின் வரலாறுகளை 4,252 பாடல்களில் கற்பனைத் திறத்துடனும், வரலாற்றுச் சிறப்

புடனும், காவியநயத்துடனும் கூறுகிறது. இந்நூல் ஏனைய மதங்களின் செல்வாக்கைப் பரவவிடாது தடுத்ததோடு, சைவமத நம்பிக்கையை நாட்டில் நீரூற்றி வளர்த்த நூலுமாகும். இந்நூல், தேவாரப் பாடல்களில் பொதிந்திருக்கும் சைவக் கருத்துக்களையெல்லாம், கல்லாரும் கற்றுணரும்படி, மிக எளிமையாக எடுத்துக் கூறுகிறது; அதனால்தான் இந்த நூலைச் சைவத் திருமுறைகளில் ஒன்றாகப் 'பன்னிரண்டாம் திருமுறை' எனச் சேர்த்திருக்கின்றனர்.

இடைக்காலத் தமிழக மக்களின் வாழ்க்கை முறையையும் பழக்க வழக்கங்களையும், தொழில் துறைகளையும் பொழுது போக்குகளையும் நமக்கு அறிவிக்கின்ற ஒரு வரலாற்றுக் காப்பிய மாகவும் இந்நூல் விளங்குகின்றது.

பெரிய புராணத்தில், பொதுவாகப் பலதிறப்பட்ட சுவைகளும், சிறப்பாகப் பக்திச்சுவையும் நன்கு விளங்குகின்றன. சேக்கிழாரின் உள்ளத் தூய்மையும், பக்திப் பெருமையுமே ஒரு நூலாக வடிவெடுத்தாற்போலத் திகழ்கிறது, இப் பெரிய புராணம். "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என்று சேக்கிழாரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சிறப்பிக்கிறார். பெரிய புராணம் பத்தியை உயிராகவும் பிறவற்றை உடலாகவும் கொண்ட காவியமெனக் கூறலாம். பெரிய புராண வருணனைகள் பெரும்பாலும், இயற்கையில் முகிழ்த்தவையாகும்.

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடலன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம்.

(திருநாட்டுச். 17)

3. திருவிளையாடற் புராணம்

சோழப் பேரரசின் இறுதிக் காலத்தில் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவர், "திருவாலவாயுடையார் திருவிளையாடற்

புராணம்' என்ற நூலை இயற்றினர். சிறந்த செந்தமிழ் நடையில் இந் நூல் அமையவில்லை. பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம், இந் நூலினும் மேம்பட்டு விளங்குவதால் இந் நூல் தேடுவாரற்றுக் கிடக்கிறது; பரஞ்சோதி முனிவரெழுதிய நூலை எல்லாத் திருவிளையாடற் புராணங்களிலும் மிகச் சிறந்ததென அறிஞர்கள் பாராட்டுகின்றனர். இந்நூல் வடமொழியில் அமைந்துள்ள 'ஹாலாஸ்ய மகாத்மிய'த்தைத் தழுவி எழுந்துள்ளது. அளவிலே பெரியது; சொல் நயம், பொருள் நயம் வாய்ந்தது; பெருங்காப்பிய இலக்கணங்கள் அனைத்தும் பொருந்த விளங்குவது. ஆனால், இந்நூல் கூறும் வரலாறுகள் ஆராய்ச்சிக்குச் சிறிதும் பயன்படுவனவல்ல.

4. அரிச்சந்திர புராணம்

வாய்மையைக் காப்பாற்றுவதற்காகப் பதி இழந்து, பாலனை இழந்து, படைத்த நிதியையும் இழந்து, இறுதியில் இவ்வுலக வாழ்வையும் இழந்து நிற்கும் அரிச்சந்திரனைப்பற்றி 1,225 பாக்களில், இந் நூலைப் பாண்டிய நாட்டைச் சேர்ந்த வீரகவிராயர் என்பார் இயற்றியுள்ளார் இந் நூலாசிரியரின் நடை, எளிமையும் உணர்ச்சியோட்டமும் வாய்ந்ததாகும். வேறுபட்ட உணர்ச்சிகளுக்கு ஏற்ற செய்யுள் வகைகளைத் தேர்ந்து பாடுவதில் இவ்வாசிரியர் மிக வல்லவராவார்.

5. நளவெண்பா

இதிகாச, புராணங்களில் உள்ள கிளைக்கதைகள் சில வற்றைத் தனியே எடுத்து, அவற்றையே, காப்பியமாகப் பலர் தமிழில் செய்துள்ளனர். நளவெண்பா, அத்தகைய காப்பியங்களுள் ஒன்று. நளவெண்பா, செவிக்கு இனிய ஓசையுடையதாயும், சொல்வளம், பொருள்வளம் வாய்ந்ததாயும் விளங்குகிறது. அதனால்தான், "வெண்பாவிற் புகழேந்தி" என அறிஞர்கள் அப் புலவரைப் பாராட்டுகின்றனர். இலக்கியச் சுவைமிக்க பல பாடல்களை, நாம் இந் நூலிலே காணலாம். கானகத்துக் காதலியைக் காரிருளில் கைவிட்டு நளன் ஏகத் தன்னந்தனியாகத் தமயந்தி துயர்ப்படுகின்றாள்; இத் துயரத்

தைக் காணப் பொறுது இறகுகளால் தங்கள் வயிற்றிலடித்துக் கொண்டு சூரியனை விரைவில் தேரேறி வருகவென்று அழைப்பன போலக் கோழிக்கூட்டங்கள் கூவின என ஆசிரியர், அழகாகக் கற்பனை செய்கிறார்.

தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்.

இந் நூலைப் பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் புகழேந்தி என்பார். இயற்றினார். இவர், பொன்விளைந்த களத்தூரினர். ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திக்கும் பகைமை உண்டென்பதைக் காட்டப் பற்பல தாழ்வான கதைகளைக் கூறுவர். அவை நம்புதற்குரியன அல்ல. ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திக்கும் தொடர்பு இருந்திருக்க முடியாதென அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். புகழேந்தி, "அல்லியரசாணிமாலை" "புலந்திரன் களவு" போன்ற சிறு நூல்களையும் இயற்றியிருப்பாரென எண்ணுவதற்கில்லை.

இக்காலத்தில்,யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அரசகேசரி என்ற புலவர், காளிதாசர் எழுதிய இரகுவம்சம் என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் சங்கநூற் புலமை மிக்கவர் என்பதை இந்நூலிருந்து நாம் அறியலாம்.

6. வில்லிபுத்தூராழ்வார் பாரதம்

வடமொழி நூலைப் பின்பற்றித் தமிழ்மொழியில் வில்லிபுத்தூரார் இயற்றியது பாரதம். எனினும் வடநூலிலிருக்கும் பத்துப் பருவங்களையே எடுத்துக் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நூல் பலவகைச் சந்தங்களும் சொல்லணி பொருளணி போன்றவையும் பயின்று வருகின்ற சிறப்பு மிக்க காப்பியமாகும். வடசொற்களும், வடமொழித் தொடரும் இந் நூலிலே மிகுதியாகக் கலந்து வருகின்றன. இஃது இத்தகைய நடையால் எழுந்த முதல் நூலாகும். பிற்காலத்தில் இந் நடையைப் பின்பற்றி நூல்கள் பல இயற்றப்பட்டன.

சேது புராணம் முதலியன

மேற்கூறிய புராணங்களேயன்றி, வடமொழியிலமைந்த பலவற்றை மொழிபெயர்த்தும், சுருக்கியும் எழுதியுள்ளனர். ஒவ்வோர் ஊரிலுள்ள கோயில்களைச் சிறப்பித்துப் பாடும் தல புராணங்கள் பல எழுந்துள்ளன. நிரம்ப அழகிய தேசிகர் என்பார், சேதுபுராணம், கூர்மபுராணம் போன்றவற்றையும் இயற்றினர். இன்னும் பல புராண நூல்கள் தோன்றின. இந் நூல்கள் பொதுவாகப் பழைய கற்பனையையும் பழைய உவமைகளையுமே கொண்டு விளங்கின. இவற்றில் புதிய கருத்தும் இல்லை; கற்பனை வளமும் இல்லை. ஆகையால் இவற்றில் பல படிக்க ஆளற்று வழக்கு ஒழிந்தன.

இலக்கண நூல்கள்

தொன்மைப் புகழ் வாய்ந்த தொல்காப்பிய நூலை ஒட்டிய பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் எழுந்த இலக்கியங் களுக்கு ஏற்பப், பற்பல வகை இலக்கண நூல்கள் தோன்றின. அவற்றைக் கால வரிசைப்படி காண்போம்.

பல்லவர் காலம்

வடமொழி யாப்பு அமைதிகளையும், பிற இலக்கண இயல்பு களையும் விளக்கப் பல்லவர் காலத்துச் சங்க யாப்பு, பாட்டியல் நூல் போன்ற இலக்கண நூல்கள் பல எழுந்தன. "ஐயனரிதனர் இயற்றிய 'புறப்பொருள் வெண்பாமாலை'' என்னும் இலக்கண நூல் "பன்னிரு படலம்" என்ற நூலைத் தழுவிப் புறப்பொருளை வெட்சி முதலாகப் பெருந்திணை ஈருகப் பன்னிரு பகுதிகளாகப் பிரித்துப் பழந்தமிழ் வாழ்வை எடுத்துரைக்கிறது, இக்காலத்தில் எழுந்த மற்றொரு சிறப்பு வாய்ந்த நூல் களவொழுக்கம் பற்றிய செய்திகளை விரித்துக் கூறும் இறையனர் களவியல் உரையாகும். இந்நூலின் ஆற்றல்மிக்க உரைநடை படிப்போர்க்குப் பேரின்பம் பயப்பதாகும்.

சோழர் காலம்

1. வீரசோழியம்

வீரசோழன் என்ற மன்னன் நினைவாகப் புத்தமித்திரர் என்ற பௌத்தர், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களையும் சுருக்கி வடமொழி மரபைத் தழுவி எழுதிய நூலாகும். இந் நூலுக்குப் பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார். இவரும் பௌத்தராவார்.

2. நேமிநாதம்

எழுத்திலக்கணத்தையும், சொல் இலக்கணத்தையும், 95 சூத்திரங்களில் சுருக்கமாக உரைப்பதால் இதனைச் சின்னூல் எனவும் வழங்குவர். இந் நூலின் ஆசிரியர், குணவீர பண்டிதர் என்னும் சமண முனிவராவர்.

3. வச்சணந்திமாலை

இதனை வெண்பாப் பாட்டியல் என்றும் வழங்குவர். இலக்கணத்தை வெண்பாக்களில் கூறுவதால் இந் நூலுக்கு இப் பெயர் ஏற்பட்டது. இந் நூலின் ஆசிரியரும் குணவீர பண்டிதரேயாவார். வச்சணந்தி என்னும் தம் ஆசிரியர் பெயரை இந் நூலுக்கு வழங்கியுள்ளார். பன்னிரு பாட்டியலின் பின்பு எழுந்த பாட்டியல் நூல்களில் வச்சணந்திமாலை மிகச் சிறந்த ஒன்றாகும்.

4. பன்னிரு பாட்டியல்

பாட்டின் இலக்கணத்தைக் கூறுவது பாட்டியலாகும். பாட்டியல் நூல்களில் மிகப்பழையது பன்னிரு பாட்டியலே.

5. அகப்பொருள் விளக்கம்

தொல்காப்பியர் கூறிய அகப்பொருள் இயலை எளிமையாக விரிவுபடுத்த எழுந்த தனி நூலாகும். இந் நூல் அகப்

பொருளை அகத்திணை, புறத்திணை, களவு, வரைவு, ஒழிபு என்ற ஐந்து பிரிவுகளாக வகுத்துரைக்கிறது. நாற்கவிராச நம்பி என்பார், இந்நூலின் ஆசிரியராவார். இவர் ஒரு சமணர். இந் நூலுக்கு இருவர் உரையெழுதி உள்ளனர். இதன் உரையில் தஞ்சைவாணன் கோவைச் செய்யுட்கள் நானூற்றையும் எடுத்துக் காட்டுப் பாடல்களாகக் காட்டியுள்ளனர்.

6. யாப்பருங்கலம்

அமிர்தசாகரர் என்ற சமணர் ஐந்திலக்கணங்களில் ஒன்றுன யாப்பியலை விளக்கும் முகமாக, இந் நூலை எழுதியுள்ளார். குணசாகரர் என்பார் இக் காரிகை நூலுக்கு உரை வகுத்துள்ளார். அவரும் சமண மதத்தைச் சார்ந்தவரே.

7. தண்டியலங்காரம்

தண்டி என்ற வடமொழி ஆசிரியர் எழுதிய "காவ்ய தர்சம்" என்ற அலங்கார நூலைச் சோழர்கள் காலத்தில் தண்டியலங்காரம் என்ற பெயரால் யாரோ தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இவர் அநேகமாக ஒட்டக்கூத்தர் மாணவராய் இருக்கலாம் என்பர். தண்டியாசிரியரைத் தமிழ்நாட்டினர் என்று சிலர் கூறுவர். பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்று நூலை முப்பிரிவுகளாக வகுத்துச், சொல்லணியில் மட்டும் 35 அணி வகைகளைப் பல உட்பிரிவுகளோடு உரைக்கின்றுர். இந் நூலின் உரையையும் எடுத்துக்காட்டுச் செய்யுள்களையும் இவரே இயற்றினர் என்பர்.

இந் நூலில் மேற்கோளாக எடுத்தாளப்படும் செய்யுள்கள் கவிதை நலம் கனிந்தவையாகும். இந் நூல் தமிழ்மக்களால் பெரிதும் பாராட்டப்பட்ட நூலாகும். இந் நூலில் வரும் பல பாக்களை வீரசோழியம் மேற்கோளாக எடுத்துக்காட்டுவது இந் நூலுக்கு அமைந்த சிறப்பாகும். நிலவொளியைப்பற்றி இந் நூலில் வரும் ஒரு பாட்டு:

திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பாலென்று வாய்மடுக்கும்—அங்கயலே
காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரால்
ஏந்திழையார் பூந்துகிலை யென்று.

இத்தகைய நயமிக்க பல பாக்களை, நாம் இந் நூலிலே காணலாம்.

8. நன்னூல்

பவணந்தி என்ற சமண முனிவர் நன்னூலை இயற்றினர். இவர் பதின்மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்த அமராபரணன் சீய கங்கன் என்ற மைசூர்க் குறுநில மன்னன் முன்னிலையில் இந் நூலை அரங்கேற்றியுள்ளார். எழுத்து, சொல் என்ற இரண்டிற்கும் மட்டுமே இந்நூல் இலக்கணம் கூறுகிறது. இந்நூல் பாயிரத்தால் இவர் ஐந்திலக்கணமும் இயற்றினர் எனத் தெரிகிறது. தொல்காப்பியத்தைத் தழுவி இந்நூல் செல்கிறதென்றுலும், வைப்பு முறையில் 'பாணினீயம்' என்ற வட நூலையே பின்பற்று கிறதெனலாம். இந் நூல் தொல்காப்பியச் சூத்திரங்களைச் சுருக்கித் தொகுத்துக் கூறுகிற சிறப்புடையது. எனினும், சில சமயங்களில் நம்மைக் குழப்பத்திற்கு ஆளாக்குகிற குற்றத்தை உடையதுமாம். இருப்பினும், நன்னூல் ஒரு சிறந்த இலக்கண நூலாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந் நூலுக்கு அமைந்த சங்கர நமச்சிவாயர் உரை சிறந்த ஒன்றாகும்.

பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல கால வகையி னனே,

என்ற பழம்பெரும் உண்மையை வெளியிட்ட பெருமை இவ் விலக்கண நூலையே சேரும்.

இந் நூலுக்கு முதன்முதல் உரை வகுத்தவர், மயிலைநாதர் என்னும் சமணமுனிவராவர். இதற்கு ஒரு விருத்தியுரையைச் சங்கர நமச்சிவாயர் இயற்றியுள்ளார். இந் நூலுக்கு ஆறுமுக நாவலர், மிக எளிய இனிய காண்டிகையுரையொன்று எழுதி யுள்ளார்.

9. நிகண்டுகள்

இக்காலத்தில் ஒரு சொல்லின் பொருளை அறிய நாம் அகராதிகளை (Dictionary) பயன்படுத்துவது போல, ஐரோப்பியர் வருகைக்கு முன்னர்த் தமிழ் மக்கள் சொற்களின் பொருளைக் குறிக்கும் நிகண்டுகளைக் கையாண்டனர். இவை அனைத்தும் செய்யுளால் இயன்றவையாகும். தமிழ்மொழியில் முதன் முதலாகத் தோன்றிய நிகண்டு திவாகரர் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்ட 'திவாகரம்' ஆகும். திவாகரருடைய மகன் பிங்கலர் என்பார், தம் தந்தையின் நிகண்டில் இடம் பெறாத அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறும் முறையில் 'பிங்கலந்தை' எனும் நூலை இயற்றியுள்ளார். மண்டல புருடர் என்னும் சமண முனிவர் 'சூடாமணி நிகண்டை' இயற்றிய ஆசிரியராவார். காங்கேயர், வெண்பா யாப்பில் 'உரிச்சொல் நிகண்டை'யும், கயாதரர் 'கயாதர நிகண்டை'யும், இரேவண சித்தர் 'அகராதி நிகண்டை' யும் இயற்றியுள்ளனர்.

நாயக்கர்கள் ஆட்சி செய்த காலத்தில், தண்டி அலங்காரத்தினும் விரிவாக 64 அணிகளைக் கூறும் 'மாறனலங்காரம்' என்ற அணி இயல் நூலை, குருகைப் பெருமாள் கவிராயர் என்பார் எழுதியுள்ளார்.

வைத்தியநாத நாவலர் இயற்றிய 'இலக்கண விளக்கம்' என்ற நூல், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐவகை இலக்கணங்களையும் தொகுத்துரைப்பதாகும். இந் நூல் சிறப்புப்பற்றி இதனைக் 'குட்டித் தொல்காப்பியம்' என்று பாராட்டுவர்.

''இலக்கணக் கொத்து'' என்னும் நூலை இயற்றிய ஆசிரியர் சுவாமிநாத தேசிகராவார்.

6. நாயக்கர் காலம்

(கி. பி. 1200—1600)

முன்னுரை

இக்காலப் பகுதியில் வேற்றுமொழி பேசும் அந்நியர்களே தமிழகத்தில் வேந்தர்களாய் ஆட்சிபுரிந்தனர். தமிழரசர்கள் தம்மரசு இழந்தனர். தமிழ்ப் பேரரசு தகர்ந்து, தமிழ் மொழியே புறக்கணிக்கப்பட்ட அந்நியர் ஆட்சியில் எவ்வாறு நாம் சிறந்த இலக்கியங்களை எதிர்பார்க்க முடியும்? வாழ்க்கை வளமே சிதைந்து, அமைதி குலைந்த சூழ்நிலையில், பாரகாவியங்களைக் கவிஞர்கள் எவ்வாறு படைத்துத் தர முடியும்? எனவே இக்காலப் பகுதியில் வாழ்ந்த கவிஞர்களில் பலர், (காலத்தின் கோலத்திற் கேற்றாற்போல், சிறு சிறு இலக்கியங்களையே (பிரபந்தங்களை) இயற்றினர். காளமேகம் போன்ற திறமை மிக்க கவிஞர்களும்கூடத் தம் புலமை வெளிப்படும் முறையில் புகழ்மிக்க நூல்களை உருவாக்கவில்லை; வசைகவி பாடுவதிலும் சிலேடை இயற்றுவதிலுமே காலத்தைக் கழித்துவிட்டனர்.)

இக் காலக் கவிஞர்கள் இயற்றிய சிற்றிலக்கியங்களையும் அச் சிற்றிலக்கியங்களின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் பண்டும் இன்றும் அவற்றில் சிறந்துவிளங்கும் சிலவற்றையும் காண்போம்:

இலக்கியங்கள் உணர்த்தும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகை உறுதிப் பொருள்களுள் ஒன்றோ, பலவோ குறைந்துவரின் அவற்றைச் சிற்றிலக்கியங்கள் என்பர். அவற்றுள் கலம்பகம், உலா, பரணி, பிள்ளைத்தமிழ் போன்றவற்றைப் பார்ப்போம்:

1. கலம்பகம்

விளக்கம்

பல பூக்களைக் கலந்து, மாலையைத் தொடுத்தல் போல, பலவகையான செய்யுட்களையும், உறுப்புகளையும், அகப் பொருள் புறப்பொருளையும் கலந்து இயற்றப்படும் இலக்கியத்தைக் கலம்பகம் என்பர். இவ் விலக்கியம், புயம், தவம், வண்டு, அம்மானை, ஊசல், மறம் போன்ற பதினெட்டு உறுப்புகளைக் கொண்டு, மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பாக்களும்; தாழிசை, துறை, விருத்தம் என்ற அதன் பாவினங்களும் 100 செய்யுட்களில் வர, அந்தாதித் தொடை அமையப் பாடப்படுவதாகும்.

மேற்கோள்கள்

புதுமை விருந்தாகிய இக் கலம்பக நூல்கள் கி. பி. 9ஆம் நூற்றாண்டு தொடங்கி இந் நூற்றாண்டுவரை பற்பல தோன்றியுள்ளன. தெய்வத்தைப் பொருளாகக் கொண்டு எழுந்தனவே பெரும்பான்மை; அடியார்கள்மேல் பாடப்பெற்ற கலம்பகங்கள் சிலவே யுள்ளன. அரசன்மேல் பாடியதற்கு நந்திக்கலம்பகம் ஒன்றுதான் நமக்குச் சான்றாகக் கிடைத்துள்ளது. 'கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்' என்று கலம்பகம் பாடுவதில் வல்லவர்களாகச் சிறப்பிக்கப்பெற்ற இரட்டையர்கள் பாடினவை தில்லைக் கலம்பகமும், திருவாமாத்தூர்க் கலம்பகமும் ஆம். மதுரைக் கலம்பகம், புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் போன்றவை சைவ பரமான கலம்பகங்களில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாகும். பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாடிய திருவரங்கக் கலம்பகம், வைணவ பரமான கலம்பகங்களில் சிறந்ததாகும்.

இந் நூலில் வரும் சுவைமிக்க ஒரு பாட்டு: மறக்குடியில் பிறந்த பெண்ணை, மன்னன் மணம் செய்யக் கருதித் தூது அனுப்புகிறான். பெண் கொடுக்க இணங்காத மறக்குடியினர் அத் தூதனை நோக்கிப் பெருங் கோபங்கொண்டு பேசுகிறார்கள்:

பேசவந்த தூத/செல் லரித்தவோலை செல்லுமோ?
பெருவரங்கள் அருள் அரங்கர் பின்னைகேள்வர் தாளிலே
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா.

கோவேந்தர் கொண்டுவந்த வெண்கொற்றக் குடையும், வெண்சாமரையும், தலையிலணிந்திருந்த மகுடமும், தாங்கி வந்த வில், வாள்களும் அவர்கள் கையில் பட்ட பாட்டை வீரந் தோன்றக் கூறுகின்றார்கள்.

வாசலுக் கிடும்படல், கவித்துவந்த கவிகை; மா
மகுடகோடி, தினையளக்க வைத்தகாலு நாழியும்
விசுசா மரங்குடில் தொடுத்தகற்றை; சுற்றிலும்
வேலியிட்ட தவர்களிட்ட வில்லும்வாளும் வேலுமே.

நந்திக்கலம்பகம்

மக்களைப்பற்றிய இலக்கியமாக விளங்கும் நந்திக்கலம்பகம் தனியாகக் கூறும் சிறப்புடையது. கலம்பகங்களுள் காலத்தாற் பழைமையானது இதுவேயாகும். தெள்ளாறு எறிந்த மூன்றும் நந்திவர்மனைப் பாராட்டிப் போற்றும் பெருமையினை யுடையது இந் நூல். இந் நூல் நந்திவர்மன்மீது அறம் வைத்துப் பாடப் பெற்றதென்றும், அந் நூல் முழுவதையும் அரசன் எரியும் பந்தரின்கீழ் இருந்து கேட்டு உயிர் துறந்தான் எனவும் கதை கூறுவர். 'நந்திக்கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' என்ற பாடலையும் 'கலம்பகமே கொண்ட காயம்விட்ட தெள்ளாறை நந்தி' என்னும் சதகப் பாடலையும், இதற்குச் சான்றாகக் காட்டுவர். இந் நூலில் கலம்பக உறுப்புக்கள் சிலவே வந்துள்ளன. இதில் பலவகைச் செய்யுள் விகற்பங்களும், அகப்பொருள், புறப்பொருள் துறைகளும் கலந்து வருகின்றன. இந் நூலில் அமைந்த பாக்கள் கற்பனைத் திறமும், கவிதைச்சுவையும் வாய்ந்தவையாகும், கார்காலத்தைக் கண்டு தலைவி வருந்தும் பொழுது,

மங்கையர்கண் புனல்பொழிய மழைபொழியும் காலம்
மாரவேள் சிலைகுனிக்க மயில்குனிக்குங் காலம்

அங்குயிரும் இங்குடலும் ஆனமறைக் காலம்
அவரொருவர் நாமொருவர் ஆனதொடுங் காலம்

என்று கூறுகின்றாள்; இறுதி இரண்டு வரிகளிலும், எத்தகைய எளிமை! இனிமை! இசைநயம்! பொருள்வளம்! நந்தி இறந்த நிலையில் கூறும் கையறுநிலைப் பாவிலும் இத்தகைய எளிமையையும், இனிமையையும், அழகையும், அவலத்தையும் காணலாம்:

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானுமென் கலியும் எவ்விடம் புகுவேம்
நந்தியே நந்தயா பரனே!

பரத்தை வீட்டில் தங்கப் பாடித் தலைவனை மகிழ்வித்த பாணனை, மறுநாள் கண்ட தலைவி அடங்காத சினத்தோடு,

ஈட்டு புகழ்நந்தி பாண! நீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும்—கேட்டிருந்தோம்
பேயென்றாள் அன்னைபிறர் நரியென்றார் தோழி
நாயென்றாள் நீயென்றேன் நான்.

என்று கூறுவது, நகைச்சுவை பயப்பதாய் உள்ளது.

மல்லை, கச்சி, மயிலை முதலிய ஊர்கள்; கச்சி நாடு, வடவேங்கடநாடு, தென்னாடு, சோணாடு முதலிய நாடுகள்; கடம்பூர், குருக்கோட்டை, தெள்ளாறு, பழையாறு போன்ற போர்க்களங்கள் ஆகியவற்றின் குறிப்புகள், பழந்தமிழக வரலாற்றை அறியத் துணைபுரிகின்றன. நந்திவர்மனின் தெள்ளாறு வெற்றியைப்பற்றி மட்டும் 16 பாடல்களில் சிறப்பித்துக் கூறுகின்றார்.

2. உலா

விளக்கம்

அறிவு, செல்வம், ஆண்மை, அன்பு, ஈகை, எழில் போன்ற பண்புகளில் உயர்ந்த ஓராடவனைத் தலைவனாகக் கொண்டு, அவனுடைய குலம், குடிப்பிறப்பு, பரம்பரை முதலியன விளங்கக்கூறி, அவன் முடிபுனைந்தோ, மணம் புரிந்தோ, வெற்றி பெற்றோ, வீதியில் தேர்மீதோ, பிற ஊர்தி மீதோ, ஒரு நாளோ, அன்றி ஏழு நாள்களோ உலா வருங்கால், பேதை, பெதும்பை, மங்கை மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற ஏழுவகைப் பருவ மகளிர் காதல் கொண்டதாகக் கலிவெண்பாட்டில் பாடப்படும் நூல் 'உலா'வாகும்.

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' எனத் தொல்காப்பியர் பாடாண் திணையில் உலா வருதலைப்பற்றி உணர்த்தியுள்ள குறிப்பானது, பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய பெருங் காவியங்களில் தலைமகன் உலாவருதலைச் சிறப்பித்துப் பாடப்படும் இடத்தில் கிளைத்துப் பிற்காலத்தே உலாவெனத் தனித்ததொரு பிரபந்தமாகத் தழைத்தது.

பெருங்கதையில், தலைமகன் முடிபுனை நாளினும், மணம்புரி நாளினும் கண்டோர் காதல்கொள்ளுமாறு வீதி வழியே உலா வருகின்றான். அப்போது அவனைக் காண மைந்தரும் மகளிரும் விரைகின்றனர். மகளிர் அவன்பால் மால்கொண்டு மயங்கு கின்றனர். சீவகசிந்தாமணியிலும், திருத்தக்கதேவர் சீவகன் வீதி வழியே உலா வருங்கால், நிறையழியக் காமுற்று நின்ற மகளிர் நிலையினைப் பல பாடல்களில் கூறியிருக்கின்றார். இராமன் உலா வந்தபொழுது மகளிர் காமுற்றதைக் கம்பர் கூறியுள்ளார். இங்ஙனம் பெருங்காவியங்களில் சுருக்கமாகக் கூறிய உலாச் செய்தியைத் தனக்குரிய பொருளாகக்கொண்டு விரிவாக எழுந்த ஒரு சிற்றிலக்கியமே உலா என்னும் நூலாகும்.

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கைலாய ஞான உலாவே முதலில் தோன்றிய உலாவாகும். அந்த உலாவை 'ஆதி உலா' என்றும், 'தெய்வீக உலா' என்றும் வழங்குவர். இந்த உலா சிறந்த ஓசை நயமுடையது; உயர்ந்த கருத்துடையது. கற்பனையினைக் கடந்து நிற்கும் இறைவனுடைய திருவுருவ மாண்பைக் கூறுவது. அதனை அடுத்து வருவது, திருஞான சம்பந்தர்மீது நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த 'ஆளுடையபிள்ளையார் திருஉலாமாலை' யாகும்.

மூவருலா: இது விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, இராசராச சோழனுலா ஆகிய 3 உலாக்களைத் தன்னகத்தே கொண்டது. இதனை இயற்றிய ஆசிரியர் ஒட்டக்கூத்தர் ஆவார். இவர் உலாப் பாடுவதில் வல்லவர் என்பதைக் "கோவையுலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்ற பழம்பாட்டு வலியுறுத்துகின்றது. இம் மூவருலா சோழர்களின் குலப்பெருமை, வீரம் முதலியவற்றை விரிவாக எடுத்துரைக்கின்றது. ஏழு பருவப் பெண்களும் காமுற்று நிற்பதைப் புலவர் மிக நன்றாக எடுத்தியம்புகின்றார். அதிலொன்று:

கவரு மனங்களுடன் கைகலந்த தன்றித்
தவறு முதுகினவித் தாயர்—அவரெங்குங்
கூசிற்றார் சந்திற் பனிநீர் குழைத்திழைத்துப்
பூசினா ரலி பொழிந்தொழிந்தார்—வீசினார்
இட்டார் நிலவில் இளந்தென்ற லுங்கொணர்ந்து
சுட்டார் குளிரி தொடுத்தெடுத்தார்—விட்டாரோ
பள்ள மதனிற் படரும் பெரும்புனல்போல்
உள்ள முயிரை உடன்கொண்டு—வள்ளல்பின்
ஓதை மறுகி லுடன்போன போக்காலிப்
பேதை நடுவே பிழைத் தொழிந்தாள்.

3. பரணி

விளக்கம்

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி மேம்பட்ட வீரரைச் சிறப்பித்துப் பாடும் சிற்றிலக்கியம் பரணியாகும்.

> ஆனை யாயிர மமரிடை வென்ற
> மானவ னுக்கு வகுப்பது பரணி.

பரணி பாடுங்கால், கடவுளரை வாழ்த்திப் பின்பு கடை திறப்புக்கூறி, பாலைநிலத் தியல்பை விளக்கி, காளி வீற்றிருக்கும் கோயில் சிறப்பையும், கூளிகள் காளிக்குக் கூறியதையும், பாட்டுடைத் தலைவன் சிறப்பு, அவன் படையெடுத்துச் சென்ற முறை, செருமுடித்துக் கூழட்ட கொற்றம் ஆகியவற்றையும் எடுத்துரைக்க வேண்டும்.

'பரணி' என்னும் பெயருக்குப் பல காரணங்களைச் சொல்லு கின்றனர். எனினும், பரணி நட்சத்திரம்பற்றியே இப் பெயர் அமைந்திருத்தல் வேண்டும். போர்க்களத்தில் ஒரு தலைவன் வெற்றி பெற்றானாக, அப் போரில் உயிர் துறந்தோர் களின் உடலுறுப்புகளாலும் பிறவற்றாலும் பேய்கள் கூழமைத்துப் பரணி நாளில் காளிக்குப் படைத்துத் தாமும் உண்டு, பிற பேய்களுக்கும் இட்டு, வென்றோனை வாழ்த்தும் வழக்குக் காரணமாக இப் பெயர் வந்திருக்கலாம்.

பரணி யானை பிறந்த நாள்; காளிக்கும் யம தருமனுக்கும் உரிய நாள்; தன்கட் பிறந்தவனைப் பெருவீரனாக்கும் இயல்புடைய நாள்; அதுபற்றியே தலைவன் ஒருவன் பல யானை களைக் கொன்று, பல உயிர்களைக் காலன் கவர்ந்து கொள்ளுமாறு செய்து, தன் பெரு வீரத்தைக் காட்டிய கள வேள்வியில் காளிக்குக் களிப்புண்டாகக் கூழ் சமைத்தற்குரிய நன்னாள் ஆயிற்று. தொல், புறத்திணை இயலில் காணப்படும் களவேள்வி, வாண்மங்கலம் முதலிய துறைகளின் அமைப்பே, பிற்காலத்தில் தோன்றிய பரணிப் பிரபந்தத்திற்கு அடிப் படையாயிருக்கலாம்.

மேற்கோள்கள்

பண்டைக்காலத்தில் பாடப்பெற்ற பரணி நூல்களுள் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. காலத்தால் முந்திய கலிங்கத்துப் பரணி, ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணி, பிற்காலத்தில் தம் ஞானசிரியர்கள்மீதும், வழிபடு கடவுள்மீதும் தாம் கொண்ட பேரன்பினுல் சில புலவர்கள் இயற்றிய பரணிகள், தத்துவராய சுவாமிகள் இயற்றிய மோகனுவதைப் பரணி, பாசவதைப் பரணி போன்ற நூல்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும்.

கலிங்கத்துப் பரணி

பரணிப் பிரபந்தங்களின் முதன்நூலும் முதன்மையாகிய நூலும் கலிங்கத்துப் பரணியேயாகும். இந் நூல் முதற் குலோத்துங்கனின் படைத் தலைவனுகிய கருணுகரத் தொண்டைமான், கப்பம் செலுத்துவதற்கு மறுத்த கலிங்க வேந்தனுகிய அனந்த பதுமன்மேல் போர்தொடுத்து, அவனை வென்றடக்கிய வீரச் செயல்களைப் புகழ்ந்து பாடுகிறது. இந் நூலில் அமைந்த கற்பனை நயமும், கவிதைச் சுவையும் நம் உள்ளத்தை எளிதில் கொள்ளை கொள்வனவாகும்.

'கடை திறப்பு' எனும் இந் நூலின் முதற்பகுதி காதற் சுவை மிகுந்து விளங்குகிறது. வெற்றி பெற்று வீடு திரும்பும் வீரரைப் பெண்கள் கூடிநின்று வரவேற்பதாகப் பாடுகிருர். அப்பொழுது ஆடவர்கள் கூறுகிருர்கள் :

செக்கச் சிவந்த கழுநீரும்
செகத்தில் இளைஞர் ஆருயிரும்
ஒக்கச் செருகுங் குழல்மடவீர்
உம்பொற் கபாடந் திறமினே
வருவார் கொழுநர் எனத்திறந்தும
வாரார் கொழுநர் எனவடைத்தும்
திருகுங் குடுமி விடியளவுந்
தேயுங் கபாடந் திறமினே.

பாடும் பொருளுக்கு ஏற்ப, சந்தத்தை மாற்றியமைப்பதில் இவ் வாசிரியர் வல்லவர். போர்க்களத்தை வருணிக்கப் புகுந்த புலவர்,

எடுமெடு மெடுமென வெடுத்ததோர்
இகலொலி கடலொலி மிகைக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
விடுவிடு மெனுமொலி மிகைக்கவே
வளைகனல் விழிகனென முளைக்கவே
மினலொளி கனலிடைப் பிறக்கவே
வளைசிலை யுருமென விடிக்கவே
வடிகணை நெடுமழை சிறக்கவே.

என்று விரைவும், ஒலியும் மிக்க சொற்களால் ஆரவாரமிக்க போர்க்களத்தையே நம் கண்முன் காட்சிகளாகச் சித்திரித்து விடுகிறார். 'கருநெடும் பனங்காடு முழுமையும், காலும் கையும் உடையன போல்வன' என்று தொடங்கும் பேய்களின் வருணனைப் பகுதியும், இந்திர சாலப் பகுதியும் சிறந்த நகைச்சுவை பயப்பனவாகும்.

இவ்வாறு சொல்லழகும் பொருளழகும் சந்த இன்பமும் ஓசை நயமும் பாடல் தோறும் விளங்குவதால் இவரைப் "பரணிக்கோர் சயங்கொண்டார்" என்று பாராட்டுகின்றனர்.

கட்புலனுக்குத் தோன்றாத ஆன்மீகப் போராட்டங்களாகப் பரணிநூலை வளர்த்து வருணித்த சிறப்பு, தத்துவராயரைச் சேரும்.

4. பிள்ளைத் தமிழ்

விளக்கம்

இதனைப் 'பிள்ளைப்பாட்டு' எனவும், 'பிள்ளைக்கவி' எனவும் கூறுவர். பாட்டுடைத் தலைவனது குழந்தைப் பருவத்தைக் காப்பு, தால், செங்கீரை முதல், சிறுதேர் ஈறாகிய பத்துப் பருவங்களாகப் பகுத்துக்கொண்டு, ஒவ்வொன்றிற்கும் பத்துச் செய்யுட்கள் விழுக்காடு பாடப்படுவதாகும்.

இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும். ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய சிறுபறை கொட்டல், சிற்றில் சிதைத்தல், சிறுதேர் உருட்டல் என்னும் மூன்று பருவங்களை நீக்கி, அவற்றிற்குப் பதில் அம்மானை, நீராடல், ஊசல் ஆகியவற்றைச் சேர்த்துப் பாடுவது பெண்பாற் பிள்ளைத்தமிழாகும்.

மக்களுள் சிறந்தாரையும், விரும்பும் தெய்வத்தையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இந் நூல் பாடப்பெறும்.

மேற்கோள்கள்

இவ்வகை நூல் பெரியாழ்வார் திருவாய்மொழியைத் தோற்றமாகக் கொண்டு, இன்றுவரையிலும் நல்ல வளர்ச்சியைப் பெற்றிருக்கக் காணுகின்றோம். ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழே இந் நூல்வகையில் எழுந்த முதல் நூலாகும். நூல் முழுவதும் நல்ல சந்தங்களைக் கையாளுகிறார்; ஏனைய நூலாசிரியர்கள் இவருடைய சந்த அமைப்பைப் பின்பற்றியே தம் நூல்களைப் படைத்துள்ளனர். ஒட்டக்கூத்தருடைய ஏனைய நூல்கள் போல, இதுவும் வரலாற்று ஆராய்ச்சிக்குத் துணைபுரியும் சிறந்த நூலாகும்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்றால் கற்றோர் அனைவரும், குமரகுருபரரையே நினைவு கூர்வர். அவர் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் வருகைப் பருவத் தமைந்த,

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்து
எடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருஉள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

என்ற பாடலைப் படித்தின்புறுத தமிழறிஞர்களே இரார். இப் பாடலுக்கு ஆசிரியர் பொருளுரைத்து அரங்கேற்றிய பொழுது மீனாட்சியம்மையே ஒரு பெண் குழந்தை வடிவாய் வந்து திருமலை நாயக்கர் கழுத்திலிருந்த முத்துமாலையை எடுத்து இவர் கழுத்தில் அணிந்து மறைந்ததாகக் கூறுவர். இப் பாவில் விளங்குவது போன்று எல்லாப் பாக்களிலும் தமிழினிடத்துத் தெய்வத் தன்மையைக் கண்டதையும், பாராட்டும் தெய்வங்களையெல்லாம் தமிழ்த் தொடர்பும், தமிழின்பால் வேட்கையுமுடையவர்களாகக் கூறுவதையும் காணலாம். கற்பனை நயம்படப் பாடுவதில் வல்லவரான குமரகுருபரர், தெய்வங்களைப்பற்றியும், கற்பனை செய்து பாடும் திறத்தை முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ் வருகைப் பருவத்தமைந்த,

மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்துகில்
மடித்தலம் நனைப்ப அம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி எம்பிரான்
மார்பினிற் குரவையாடி

முழவுமுதிர் துடியினிற் சிறுபறை முழக்கியனல்
மோலிநீர் பெய்தவித்து
முளைமதியை நெளியரவின் வாய்மடுத் திளபரனின்
முதுபசிக் கறுகருத்தி

விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு தூளெழ
மிகப்புழுதி யாட்டயர்ந்து
விரிசடைக் காட்டினின் திருவிழிகள் சேப்பமுழு
வெள்ளநீர்த் துளையம் ஆடி

குழவுமுதிர் செவ்விப் பெருங்கவின் வரச்சிறு
குறும்புசெய் தவன் வருகவே!
குரவுகமழ் தருகந்த புரியில்அருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே!

என்ற பாடலிலே காணலாம். இவருடைய பாடல்கள் அனைத்தும் பொருளாழமும், உள்ளத்தைக்கொள்ளை கொள்ளும் இன்தமிழ் நடையும் பெற்று விளங்குவனவாகும்.

5. பள்ளுப்பாட்டு

விளக்கம்

இதனை 'உழத்திப்பாட்டு' என்றும் உரைப்பர். பண்ணையாரிடத்தில் அமர்ந்து பயிர்த்தொழில் புரியும் பள்ளனுக்கும் அவனுடைய இருமனைவியருக்கும் இடையே நிகழும் சச்சரவுகளை நகைச்சுவைபட நயமாகச் சித்திரிப்பதாகும்.

இந் நூலில் கடவுள் வணக்கம்; பள்ளன் பெருமை; பள்ளிகள் இருவரின் வரலாறு; நாட்டுவளம்; மழைவேண்டி நிற்றல்; மழைக்குறியறிதல்; ஆற்று வெள்ளத்தைப் போற்றியுரைத்தல்; இடையிடையே காதல்துறை பற்றிய செய்திகளையும் கூறுதல்; பண்ணைத் தலைவன் வருகை, பள்ளன் தோன்றிப் பண்ணைச் செயல்பற்றிக் கூறல்; மூத்த பள்ளி முறையிடுதல்; பள்ளனைத் தொழுவில் மாட்டல்; அவன் புலம்பல்; காளை வெகுண்டு பள்ளன்மேல் பாய்தல்; பள்ளிகள் புலம்பல்; உழவன் எழுதல்; விதைவளம் கூறல்; நாற்று நடுதல்; செப்பம் செய்தல்; நெல் அளத்தல்; பள்ளிகள் தங்களுக்குள் ஒருவரை யொருவர் ஏசல்—ஆகிய உறுப்புகளைப் பொருந்த வைத்துப் பாட்டுடைத் தலைவன் பெருமை இடையிடையே தோன்றும்படி, சிந்தும், விருத்தமும் விரவி வரப் பாடுதல் வேண்டும்.

மேற்கோள்

பள்ளுப்பாட்டு. நூல்களில், தலைசிறந்த நூலாகக் கருதப் படுவது முக்கூடற் பள்ளாகும்.

முக்கூடற் பள்ளு

தாமிரவருணி யாற்ருேடு சிற்ருறும், கயத்தாறும் கூடும் இடத்தைத்தான் முக்கூடல் என்பர். அங்குக் கோயில் கொண்ட அழகர்மீது பாடப்பட்டதுதான் இந் நூல். முக்கூடல் நகரத்தில், ஒரு பண்ணையாரிடத்தில் அமர்ந்து பயிர்த் தொழில் புரியும் பள்ளனொருவன், அதே ஊரைச் சேர்ந்த வைணவ மதத்தைச் சார்ந்த பள்ளியொருத்தியையும், மரு

தூரைச் சேர்ந்த, சைவ மதத்தைச் சார்ந்த பள்ளி ஒருத்தியையும் மணந்தான். மனைவியர் இருவரென்றால் அமைதிக்கு வழி ஏது? எந்நாளும் இருவருக்கும் போட்டி, சண்டை சச்சரவு; அதிலே நாட்டைப்பற்றியும், ஊரைப்பற்றியும் இருவருடைய மதத்தைப்பற்றியும் ஏச்சுக்களும் பேச்சுகளும் நிகழ்கின்றன. இது கலையுலகம் அல்லவா? இவ் விவாதங்கள் நமக்குச் சிறந்த கலை விருந்துகளாக அமைந்துவிடுகின்றன. இவர்கள் பூசலின் விளைவாக, பள்ளனைச் சிறையிலிடுகின்றனர். பின்னர், தமக்குள்ளேயே இணக்கமாகிவிடுகின்றனர். இத்தகைய நயம்மிக்க நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந் நூலிலமைந்த சில நயங்களைக் காண்போம்:

'சித்திரக் காலி, வாலான், சிறைமீட்டான், மணல்வாரி, செஞ்சம்பா, கருஞ்சூறை, பொற்பாளை, கத்தூரிவாணன், பூம்பாளை, கருங்குறுவை, புனுகுச் சம்பா' என்று நெல்வித்தின் வகைகளையும்; 'குடைக்கொம்பன், செம்மறையன், குத்துக் குளம்பன், மோழை, குடைச்செவியன், குற்றாலன், கூடு கொம்பன்' என்று மாட்டின் வகைகளையும்; மேழி, ஏர்க்கால் முதலான இன வகைகளையும் பள்ளன் அடுக்கிக்கொண்டே போகும்பொழுது ஆசிரியரின் அறிவுத் திறத்தைக் கண்டு நம்மால் போற்றாமலிருக்க முடியவில்லை.

மூத்த பள்ளியையும், இளைய பள்ளியையும் வருணிக்கும் முறையிலும், பள்ளனையும், பண்ணைக்காரனையும் அறிமுகப் படுத்தும் நிலையிலும் ஆசிரியரின் குணச் சித்திரத் திறமை நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது.

நெற்றியில் இடும் மஞ்சணைப் பொட்டும்
மற்றொரு திருநாமப் பொட்டும்
நெகிழ்ந்த கருங்கொண்டையும் ரெண்டாய்
வகிர்ந்த வகுப்பும்
பற்றிய கரும்பொற் காப்பும் கையில்
வெற்றிலையும் வாயில் ஒதுக்கிய

பாக்கு ஒருசு நனுக் கொருக்கால்
நீக்கும் இதமேரடு

மூத்தபள்ளி காட்சியளிக்கிருள்.

செஞ்சரணம் பட்டமிடுங் கொச்சியின்
மஞ்சளும்பூம் பச்சையும் மணக்கச்
சிறியநுதற் பிறைவெண் ணீற்றுக்
குறியொளி வீசப்
பஞ்சலேமீன் கெண்டைகள் எனவே
அஞ்சனந்தோய் கண்கள் இரண்டும்
பக்கக் கொண்டையினும் குழையினும்
தைக்கக் குதிக்க

இளம் முறுக்கோடு காட்சியளிக்கின்ருள் இளேய பள்ளி.

கறுக்கும் கடாய் மருப்பின்
முறுக்கு மீசையும்—சித்ரக்
கத்திரிகை இட்ட வண்ணக்
கன்னப் பரிசுமாய்

பள்ளன் தோற்றமளிக்கின்ருன். பண்ணைக்காரனையும் ஒரு பார்வை பாருங்களேன்!

மாறு கண்ணும் பருத்திப்பைக்
கூறு வயிறும்—கீரை
மத்துப்போல் தலேயும் சுரை
வித்துப்போல் பல்லும்
நீறு போல் வெளுத்தவுளே
ஊறு நாசியும்—தட்டி
நெரித்தமரங் கொட்டை போல் ஈ
அரித்த வாயும்
தாறுமாருய் மீசையில் அஞ்
சாறு மயிருமாய்.

கூடற் பண்ணைக்காரன் தோன்றுகிருன். ஆசிரியரின் கற்பனைத் திறத்திற்கு, நாட்டு வருணனைகள் நல்ல சான்ருகும்:

கறைபட் டுள்ளது வெண்கலைத் திங்கள் ;
கட்டுப்பட் டுள்ளது கம்பத்து வேழம் ;
சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு ;
திரிபட் டுள்ளது நெய்படும் தீபம் ;
குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி ;
குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு ;
மறைபட் டுள்ளது அரும்பொருட் செய்யுள் ;
வளமை ஆசூர் வடகரை நாடே.

இது மூத்த பள்ளி கூறும் ஆசூர் நாட்டு வருணனை ! அடுத்து, இளைய பள்ளி கூறும் தென்கரை நாட்டு வளத்தைப் பாருங்கள்:

காயக் கண்டது சூரிய காந்தி ;
கலங்கக் கண்டது வெண்தயிர்க் கண்டம் ;
மாயக் கண்டது நாழிகை வாரம்
மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்குலைச் செந்நெல்
தணிப்பக் கண்டது தாபதர் உள்ளம்
தேயக் கண்டது உரைத்திடுஞ் சந்தனம்
சீவல மங்கைத் தென்கரை நாடே.

மூத்த பள்ளியும், இளைய பள்ளியும் ஒருவரையொருவர் ஏசிக்கொள்ளும் சமயச் சண்டையைப் பாருங்கள் :

மு : மாதொருத்திக் காசைப்பட்டுப் பொன்னின்மயமாம்—பனி
மலையேறிப் போனு னுங்கள் மத்த னல்லோடி.

இ : காதலித்துத் தம்பியுடன் சீதைபொருட்டால்—அன்று
கடலேறிப் போனுனுங்கள் கண்ணனல்லோடி !

மு : சுற்றிக்கட்ட நாலுமுழத்துண்டு மில்லாமல்—புலித்
தோலைஉடுத் தானுங்கள் சோதிஅல்லோடி !

இ: கற்றைச்சடை கட்டிபர வுரியுஞ் சேலைதான்—பண்டு
கட்டிக்கொண்டான் உங்கள் சங்குக் கையனல்லோடி ?

மு: நாட்டுக்குள் இரந்தும்பசிக்கு ஆற்றமாட்டாமல்—வாரி
நஞ்சையெல்லாம் உண்டானுங்கள் நாதனல்லோடி !

இ: மாட்டுப்பிற கேதிரிந்தும் சோற்றுக்கில்லாமல்—வெறும்
மண்ணையுண்டான் உங்கள்முகில் வண்ணனல்லோடி !

மு: ஏறவொரு வாகனமும் இல்லாமையினால் மாட்டில்
ஏறியே திரிந்தானுங்கள் ஈசனல்லோடி ?

இ: விறுசொன்ன தென்னமாடு தானுமில்லாமல்—பட்சி
மீதிலேறிக் கொண்டானுங்கள் கீதனல்லோடி ?

இவ்வாறு அவர்கள் ஒருவரையொருவர் ஏசிக்கொள்கிறார்கள்; ஆனால், நமக்குக் கேட்கச் சுவையாக இருக்கிறது. இம் முக்கூடற்பள்ளை எழுதினானே, அவன் கவிஞன்! நாடகக் கவிஞன்!

6. குறவஞ்சி

விளக்கம்

உலாவரும் தலைவனைக் கண்டு, தலைவி காதல் கொள்ளல்; திங்கள், தென்றலைக்கண்டு தாங்காது பாங்கியைத் தலைவன் பால் தூது அனுப்பல்; மலைவளம் பாடிவரும் குறத்தி, தலைவனுடைய நிலவளம், கிளைவளம் கூறல்; குறத்தியின் குறித்திறம் அறிந்த தலைவி வினவ, குறத்தி தெய்வம் வணங்கிக் குறிதேர்ந்து நலம் கூறல்; தலைவி பரிசில் கொடுத்தல்; கண்ணிவைத்துப் புள்படுக்கும் குறவன், குறத்திமேல் காமுற்றுக் குறத்தியைத் தேடல்; அணிகளோடு வரும் குறத்தியைப் பார்த்துக் குறவன் ஐயுற்று வினவல்; அவள் அலட்சியமாக விடை கூறல்:—ஆகிய நிகழ்ச்சிகளைச் சிந்து, வெண்பா போன்ற நாடகச் செய்யுட்களில் அமைத்துக் கூறுதல் குறவஞ்சியாகும்.

இதனைக் 'குறத்திப் பாட்டு' என்றும் 'குறவஞ்சி நாடகம்' என்றும் கூறுவர்.

இக் குறவஞ்சி நூலின் தோற்றத்தைக் குமரகுருபரர் இயற்றிய மீனாட்சியம்மை குறத்திலே காணலாம்.

குற்றாலக் குறவஞ்சி

குறவஞ்சிகளிலேயே தலைசிறந்ததாகக் கருதப்படுவது திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப்பட்ட திருக்குற்றாலக் குறவஞ்சியே யாகும். இவ் வாசிரியரைப் பாராட்டும் முகமாக மதுரையை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கர் 'குறவஞ்சி மேடு' என்னும் நிலப்பகுதியை இனமாக வழங்கி, சௌரவித்துள்ளார். எளிய சொற்கள், இனிய சந்தம்; இதயத்தை உருக்கும் எதுகைமோனை; காந்தக் கற்பனை; கவரும் கவிதைச் சுவை ஆகிய அனைத்தும் உருவான ஓர் அமுதப் படைப்பு இக் குற்றாலக் குறவஞ்சி. இந் நூலில் அமைந்த சில நயங்களைக் காண்போம்.

காவெலாம் சிவமணமாகக் கனியெலாம் சிவலிங்கமாகக் கனிகள் ஈன்ற சுளையெலாம் சிவ சொரூபமாகத், திருக்குற்றால மலை, இந் நூலில் காட்சி தருகிறது. இம் மலையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருக்குற்றால நாதனே இந் நாடக நூலின் தலைவனாவான். வசந்தவல்லி என்பவள், இந்நூலின் கதைத் தலைவியாவாள்.

இருண்டமேகஞ்சுற்றிச் சுருண்டு சுழிஎறியும்
கொண்டையாள் குழை
ஏறியாடி நெஞ்சைச் சூறையாடும் விழிக்
கெண்டையாள்
திருந்துபூ முருக்கின் அரும்பு போலிருக்கும்
இதழினாள் வரிச்
சிலையைப்போல் வளைந்து பிறையைப்போல் இலங்கு
நுதலினாள்

என்று வசந்தவல்லியின் வனப்பையும்,

செங்கையில் வண்டு கலின்கலின் என்று செயஞ்செயம்
என்றாட இடை
சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு தண்டை
கலந்தாட இரு
கொங்கை கொடும்பகை வென்றனம் என்று குழைந்து
குழைந்தாட மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றனளே''

என்று அவ் வழகி பந்தாடும் ஒய்யாரத்தையும், ஆசிரியர் மிகக் கவர்ச்சியாக வருணிக்கின்றார். இவற்றில் கற்பனை ஒன்றும் புதிதன்று; ஆனால், சொல்லும் முறை புதிது; சொற்களிலே ஒரே புயல் சுழற்சி; முழுவதும் ஒரே இனிமை வெள்ளம்!

பந்து பயிலும் வசந்தமோகினி, பவனி வரும் பெருமான் பால் காதல் கொள்கின்றாள்; பாங்கியைத் தூதனுப்புகின்றாள். அந்நிலையில், கூடை தாங்கி, பாசிமணியும், குன்றிமணியும், அணிந்து, நடைக்கொரு குலுக்கும், வெளிக்கொரு பகட்டுமாய் வரும் குறத்தி, விழிக்கொரு சிமிட்டும் மொழிக்கொரு பசப்புமாய்க் குறிசொல்ல முற்படுகின்றாள். கை பார்ப்பது போல முகக்குறி, விழிக்குறி, மொழிக்குறி முதலானவற்றையும் பார்த்து வசந்தவல்லியின் காதல் உள்ளத்தைக் கண்டுணர்ந்து, அது விரைவில் கைகூடும் என்று அறிவிக்கின்றாள். வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சுகின்ற மலைவளத்தையும், கிழங்கு கிள்ளித் தேனெடுத்துக் கிம்புரியின் கொம்பொடித்து வாழும் குறவர்கள் வாழ்க்கையையும் குறவஞ்சி பெருமை யோடு தேனொழுகும் தீங்குரலில் கூறுகின்றாள்.

இக் குறவஞ்சி 'கூழையுண்ட வாயால் குறியை விண்டு, காட்டுவதும், தலைவி மகிழ்ந்து பரிசில் உதவுவதும், அந்தச் சிங்கியைத் தேடிக் குறச்சிங்கன் வருவதும், அவன் அவளிடம் புதிய அணிகளைக் கண்டு ஐயுற்று வினவுவதும், அவள் அலட்சியமாக விடை கூறுவதும் மறக்க முடியாதனவாகும்.

தமிழ் தந்த முருகனைப்பற்றிப் பாடுங்கால், பன்னிரண் டாவது கையிலே வேல் விளங்கப், பிற பதினொரு கரங்களிலே

மற்றப் படைகள் திகழும்; பத்துத் திசைகளிலும் நவ (ஒன்பது) வீரர்கள் போற்றிப் புகழ்வர்; எட்டு மலைகளுக்கும், ஏழு கடல்களுக்கும் சென்று ஆடிக்களிப்பான்; ஆறு தலைகளையும் பொன் முடி அலங்கரிக்கும்; அஞ்சுவோருக்கு அபயமளிப்பான். நான்கும் மூன்றுமான புயங்களையுடையவனைத் தன் இரு திருவடிகளையும் தரும் ஒருவன் குற்றாலக் குறவஞ்சித் தமிழ் தந்தானே என்கின்றார். இப் பாட்டில் பன்னிரண்டு தொடங்கி, ஒன்று முடிய, எண்கள் இடம் பெறுமாறு இயற்றியுள்ளார். இஃது ஒரு சொற்சிலம்பம்; மற்றொன்றைப் பாருங்கள் :

அஞ்சுதலைக்குள் ஆறுதலை வைத்தார்— எனது மனதில்
அஞ்சு தலைக்கோர் ஆறு தலைவையார்.

ஆசிரியரின் வருணனைத் திறத்திற்கு வேறொரு சான்று :

சூழமேதி இறங்குந் துறையில் சொரியும் பாலைப் பருகியவாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக் கொழும்ப லாக்கனி வாழையில் சாய
வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க வருவிருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடும் சந்த்ரசூடர்தென் ஆரிய நாடே.

அஃதாவது எருமைகள் சொரிந்த பாலைப் பருகிய வாளை மீன்கள், பலாவை நோக்கிப் பாய, அதனால் அதிர்ந்த பலாக் கனிகள், வாழை மேலே உதிர, வாழைமரங்கள் சாய்ந்து, தாழை மரத்தைத் தாக்க, விருந்தினரை உபசரிப்பதுபோல, தாழை மகரந்தத் தாதுக்களைச் சோறு போலச் சொரிய, வாழை தன் குருத்தினை விரித்து அச் சோற்றினை ஏந்தும் என்கின்றார்.

இத்தகைய எண்ணற்ற நயம்மிக்க பாக்களை இந் நூலிலே காணலாம்.

இக் காலத்தில் வாழ்ந்த, புகழ்பெற்ற சில புலவர்களைக் காண்டோம் :

அருணகிரிநாதர்

வாழ்க்கைக் குறிப்புக்கள்

அறுநூறு ஆண்டுகட்கு முன்னர், பிரபுடதேவராயர் ஆண்டுவந்த காலத்தில், திருவண்ணுமலையில் தோன்றினுர். இளமையில் புலமை பெற்றுச், செல்வர்கள்மேல் சிற்றிலக்கியங்களை இயற்றினுர். சிற்றின்பத்துறையில் தம் சிந்தையை இழந்து தீராத தொழு நோய்களை அடைந்தார்; முருகன் திருவருளால் உளம் திருந்தி நெஞ்சு நெக்குருகித் தலம் தலமாகச் சென்று பக்திப் பாடல்களைப் பாடினுர். வில்லி புத்தூராரோடு வாதிட்டு அவரை வென்றதாகக் கூறுவர்.

ஆற்றிய தொண்டுகள்

'முத்தைத் தரு' என்ற முதலடியைச் சிவகுமரன் எடுத்துதவ அன்றிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள பல ஊர்களிலும், நகரங்களிலும் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுள்மீது எண்ணற்ற சந்தப் பாக்களை இயற்றினுர். அப் பாக்களின் தொகுப்பே 'திருப்புகழ்' ஆகும். இன்று 1307 பாக்களே கிடைத்துள்ளன அவற்றில், 1008 சந்தங்கள் அமைந்துள்ளன. சிற்றின்பத்தை விரும்பாமல் மற்றின்பத்தையே மனம் நாடவேண்டுமென்று பாடல் தோறும் வற்புறுத்துகின்ருர். வேதம், உபநிடதம், ஆகமம், புராணம் ஆகியவற்றில் அமைந்த அரிய நுட்பங்களையெல்லாம் அறிந்து தெளிந்து இசைத்தமிழ்ப் பாக்களாகப் பாடியுள்ளார். திருப்புகழ்ப் பாவகையை முதலில் புதிய முறையில் அமைத்தவர் அருணகிரியேயாவர். இத்தகைய சிறப்பால்தான்,

உதிருங்கனியை நறும்பாகில் உடைத்துக்
கலந்து தேனைவடித்
தூற்றி அமுதின் உடன்கட்டி ஒக்கக்
குழைந்த ருசிபிறந்து
மதுரங்கனிந்த திருப்புகழ்ப் பாமாலை

எனத் திருமலை முருகன் பிள்ளைத்தமிழ் பாடிய பெரியார் போற்றிப் புகழுகின்றார். தாயுமானவரோ :

ஐயா! அருணகிரி யப்பா! உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?

என்று உணர்ச்சி ததும்ப வியந்துரைக்கின்றார்.

அன்பின் சிறப்பையும் ஈதலின் பெருமையையும், அடியார் நேசத்தையும், தொண்டின் அருமையையும் அருணகிரிநாதர் விரிவாக விளக்குகின்றார். 'வாக்கிற்கு அருணகிரி,' 'கருணைக்கு அருணகிரி' என இவரைப் பாராட்டுவர்.

அநுமனை அவர் வருணிக்கும் முறை அவருடைய சொல் லாட்சித் திறத்திற்கு ஒரு தக்க சான்றாகும்.

இலங்கையில் இலங்கிய இலங்களுள் இலங்கருள் இலெங்கணும்
இலங்கென—முறையோதி—இடுங்கனல் குரங்கு

எனக் கூறுகின்றார்.

அவருடைய சந்த நடைக்கு ஒரு சான்று:

குயில்மொழிக் கயல்விழித் துகிரிதழ்ச் சிலைநுதல்
சசிமுகத் திளநகைக் கனகுழற் றனகிரிக்
கொடி யிடைப் பிடிநடைக் குறமகள் திருவினைப் புணர் வேளே.

இவர் அருளிய பிறநூல்கள்: திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் ஆகிய பக்திச் சுவை இலக்கியங்களாகும்.

காளமேகப் புலவர்

வாழ்க்கைக் குறிப்புக்கள்

இவர் கும்பகோணத்தை அடுத்த நந்திபுரத்தில் அந்தணர் குலத்திலே அவதரித்தவர். 'வரதன்' என்பது இவர் இயற்பெயராகும். திருவரங்கம் பெரிய கோயிலில்

மடைப்பள்ளித் தொழில் புரிந்தார் எனவும், திருவானைக்கா ஆலயத்துக் கணிகை மோகனாங்கிபால் காதல் கொண்டு சைவராக மாறினார் எனவும் கதை கூறுவர். தேவி பாலித்த திருவருளால் நால்வகைக் கவிகளை மழையாகப் பொழியும் காளமேகம் ஆயினர் எனவும் கூறுவர்; திருமலைராயன் அவையில் திகழ்ந்த தண்டிகைப் புலவர் அறுபத்து நால்வரின் தலைவராகிய அதிமதுர கவிராயரோடு வாதிட்டு "எமகண்டம்" பாடி அவரை எளிதிலே வென்றார். பின்னர்த் திருத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று பாடிப் பாடி இறுதியில் திருவானைக்காவை அடைந்து உயிர் நீத்தார்.

ஆற்றிய தொண்டுகள்

தேவியின் கருணைக்கு நன்றியாகத் "திருவானைக்கா உலா" என்ற சொற்சுவை, பொருட்சுவை மிக்க சிற்றிலக்கியத்தை முதலில் பாடினார்.

கார்கால மேகம்போலக் கணக்கற்ற ஆசுகவிகளையும், இம்மென்னு முன்னே எழுநூறும், எண்ணூறுமாய்த் தனிப்பாடல்கள் பலவற்றையும் இயற்றியுள்ளார். திறமை மிக்க சிலேடைப் பாடல்களைப் பாடுவதில் இவர் தந்நிகரற்றவர் ஆவர்.

நா, நீ, நூ, நே என்ற எழுத்துகளோடு முடியுமாறும், டு டு...என்று பயின்று வருமாறும் பாக்களைப் பாடிச் சொற்சிலம்பம் ஆடியுள்ளார்.

'நஞ்சிருக்கும்; தோலுரிக்கும்; நாதர் முடிமேலிருக்கும்; வெஞ்சினத்தில் பல்பட்டால் மீளாது' என வாழைப் பழத்திற்கும், பாம்பிற்குமாகச் சிலேடை நயம் தோன்றப் பாடியுள்ளார். 'ஆடிக்குடத் தடையும், ஆடும்போதே இரையும்; மூடித்திறக்கில் முகங்காட்டும்...'என்று பாம்பிற்கும் எள்ளுக்கும் சிலேடை அமையச் சித்திரித்துள்ளார்.

மீனுக்கும் பேனுக்குமாக, கூத்திக்கும் குரங்குக்குமாக, வெற்றிலைக்கும் வேசைக்குமாக இவர் பாடிய சிலேடைப் பாக்கள் உள்ளன. இவைபோல இவர் பாடிய சிலேடைப் பாக்கள் எண்ணற்றன.

திருமலைராயன் அவைப்புலவரில், சிலர், தம்மைக் கவி என்று குறிப்பிட்டதும், அவர்களை உடனே "வாலெங்கே? நீண்ட வயிறெங்கே? முன் இரண்டு காலெங்கே? உட்குழிந்த கண்ணெங்கே?" எனக் 'குரங்கு' என்ற உட்பொருளிலே ஏளனம் செய்தார்.

வானத்தில் இருக்கும்பொழுது அதற்குக் "கார்" என்று பெயர். தரைக்கு வந்த பின்னரோ, அதற்கு "நீர்" என்று பெயர். ஆனால், இடைச்சியர் கைபட்ட பின்பு, அதற்கு மோர் என்ரு பெயர்? எனக் கேலி செய்கிருர். ஆறுமுகத்தானின் பெருமையைக் கூறும் முகமாக "அவன் அப்பன் (சிவன்) இரந்து உண்ணி. ஆத்தாள் (பார்வதி) மலை நீலி; மாமனோ (கண்ணன்) உறிதிருடி; அண்ணனோ (விநாயகர்) சப்பைக் கால்; பெருவயிறன்" என நகைச்சுவையாகக் குறிப்பிடுகின்ருர்.

சிலேடை நயத்தோடு சிந்தனைத் திறம் செறிந்த ஒரு பாடல்:

முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றேது.

"மூன்று கால்களாகத் தடி தாங்கும் முதுமைப் பருவத்தை அடையுமுன், தலையில் நரை விழுமுன், கால தூதர்களின் காலைக் கண்டு அஞ்சுமுன், விக்கி இருமுவதற்குமுன், சுடுகாட்டிற்குச் செல்லுமுன், காஞ்சிபுரத்தில் மாமரத்தின்கீழே வீற்றிருக்கும் இறைவனை வழிபடு' என்கின்ருர்.

இப் பாடலில், முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை என வாய்பாடு வரிசை பிறழாமல் வந்தமையையும் காண்க.

கவி இயற்றும் தம் திறம் குறித்துக் காளமேகம் பாடுவதைப் பாருங்கள்:

தூதைந்து நாழிகையில்; ஆறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலை சொல்லத்
துகளிலா அந்தாதி ஏழுநா ழிகைதனில்
தொகைபட விரித் துரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்து நாழிகைதனில்
பரணியொரு நாள்முழுதுமே
பாரகாவிய மெல்லாம் ஒரிரு தினத்திலே
பகரக்கொ டிகட்டினேன்;
சீதஞ்செயுந் திங்கள் மரபினுல் நீடுபுகழ்
செய்யதிரு மலைராயன் முன்
சீறுமாருகவே தாறுமாறுகள் சொல்
திருட்டுக் கவிப்பு லவரைக்
காதங் கறுத்துச் செருப்பிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்து வெற்றிக்
கல்லணையி னெடுகொடிய கடிவாளம் இட்டேறு
கவிகாள மேகம் நானே!

எவ்வளவு ஆணவம் மிக்க கவிஞன்!

நகைச்சுவையாகப் பாடுவதிலே இவர் வல்லவர். நாகப் பட்டினத்திலுள்ள காத்தான் சத்திரத்திலிருக்கும் பரிசாரகர்கள் காலந்தாழ்த்தி உணவு பரிமாறுவதைக் கண்ட காளமேகம் வேடிக்கையாகப் பாடுகிருர்:

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.

குமரகுருபரர்

வாழ்க்கைக் குறிப்புக்கள்:

நெல்லை மாவட்டத்தில் வேளாளர் குலத்திலே உதித்தார். மூங்கைப் பிள்ளையாக இருந்த இவர், முருகன் திருவருளால் பேசினர் என்பர்; துறவியாக விரும்பித் தருமபுர ஆதீனம் சேன்ருர். அவ் வாதீனத் தலைவரின் கட்டளைக்கு இணங்கித்,

தில்லையை அடைந்து அம்பலவாணரின் அருளைப் பெற்றுத் துறவு மேற்கொண்டு காசி சென்றார். அம் மண்ணை ஆண்ட மன்னனின் உதவி பெற்று மடம் ஒன்றை அமைத்து, இந்தி மொழியில் கம்பராமாயணத்தை விரித்துரைத்தார். துளசி தாசர் அவற்றைச் செவி மடுத்துத் தம் நூலை வளப்படுத்தி யுள்ளார். மீண்டும் மதுரை வந்து திருமலை நாயக்கர் முன்னிலையில் 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை' அரங்கேற்றினார்: ஆங்கு அவ் வம்மையே குழந்தையாகத் தோன்றி முத்துமாலை ஒன்றைப் பரிசளித்து மறைந்தார் எனக் கூறுவர். இவர் 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராவார்.

ஆற்றிய தொண்டுகள்

இளவயதிலேயே 'கந்தர் கலிவெண்பா' என்ற நூலை இயற்றினார். ஆண்பாற் பிள்ளைத்தமிழாக முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழையும், பெண்பாற்பிள்ளைத்தமிழாக மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழையும் படைத்துள்ளார். இந் நூல்களில் சந்த இன்பம் மிகுந்து விளங்கும். இவற்றில் கற்பனை நயமும், புலமைத் திறமும் செறிந்து நிகழும். சிவபெருமானின் அருள் திறத்தையும் சிவனடியார் பற்றையும், சைவசித்தாந்தக் கருத்துக்களோடு கலந்து உரைத்துள்ளார்.

குறவஞ்சி இலக்கியத்திற்குத் தொடக்கமான 'மீனாட்சியம்மை குறம்' என்ற நூலின் ஆசிரியருமாவார். இந் நூலில் குறவர் தொழில் 'இவை இவை' யெனக் குறத்தி கூறும் பகுதி, கவிதை நலம் வாய்ந்ததாகும்.

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி யெடுப்போம்!
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரஉரியும் இசைந்திடவே உடுப்போம்;

செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்!
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போம்;
எழுந்துகயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள்குறக் குடிக்கடுத்த இயல்பிதுகாண் அம்மே!

எளிய சொற்கள்! கவிதை முழுதும் ஒரே இனிமை வெள்ளம்!

இப் புலவர் தமிழன்பு மிக்கவர். "தீஞ்சுவைக்கனியும் தண் தேன் நறையும் வடித்தெடுத்த சாரம் கனிந்தூற்றிருந்த பசுந்தமிழ்" என உளம் உவந்து தமிழ்மொழியைப் பாராட்டுகின்றார்.

இவர் இயற்றிய பண்டார மும்மணிக் கோவையைச் 'சைவசித்தாந்த சிறுகாப்பியம்' என்று சிறப்பித்துப் போற்றுவர். இவர் இயற்றிய பிற சிறந்த நூல்கள் மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம், சிதம்பர மும்மணிக்கோவை, நீதிநெறி விளக்கம் ஆகும். கலம்பக நூல்களில் சொற்சுவையும், பொருட்சுவையும் திறம்படத் திகழும்.

சிதம்பர மும்மணிக்கோவையில் 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே; அல்கா நல்குரவு அவாவெனப் படுமே' எனகின்றார்,

மனித வாழ்க்கைக்கு வேண்டிய பேருண்மைகளை எளிய முறையில் இனிமையாக உணர்த்துகின்ற பெருமை நீதிநெறி விளக்கத்திற்கே உரியது. பிறரால் பெருமதிப்புப் பெற விரும்பும் ஒருவன்.

—பிறர் பிறர்

சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்

வேண்டுமென ஆசிரியர் அறிவுறுத்துகின்றார்; புலவனுக்கும் பிரமனுக்கும் உள்ள வேற்றுமையைக் கவிதை நயம்பட உணர்த்தும்பா மிகச் சிறந்ததொன்றும்:

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு.

சிவப்பிரகாச சுவாமிகள்

வாழ்க்கைக் குறிப்புக்கள்

காஞ்சிபுரத்தில், வேளாளர் குலத்தில், குமாரசாமி தேசிகர் என்பார்க்கு மகவாய்ப் பிறந்தார். தந்தையின் மறைவிற்குப் பின்னர்த், தம்பியருடனும், தங்கையுடனும், திருவண்ணாமலைக்குச் சென்று தங்கினர். ஆங்கு, குருதேவர் என்னும் பெரியாரிடம் தமிழ் கற்றார். அடுத்து, துறைமங்கலம் சென்று அண்ணாமலை ரெட்டியார் மடத்தில் தங்கி வாழ்ந்தார். பிறகு, திருநெல்வேலி வெள்ளியம்பலத் தம்பிரானிடம் இலக்கணங் கற்று, ஆசிரியரின் ஆணைக்கு இணங்க, புலவர் ஒருவரோடு போட்டியிட்டு இதழ் ஒட்ட இயலாத 'நிரோட்டக யமக அந்தாதி' நூலைப் பாடி அவரை வென்றார். மீண்டும் துறைமங்கலத்தை அடைந்து துறவு பூண்டார். சிதம்பரம் சென்று சேவித்தார்; செய்யுள் பல இயற்றினர். பின்னர்க் காஞ்சிப் பதிக்கு வந்தபொழுதும் பல நூல்களைப் படைத்தருளினர். இவர் வீர சைவராவார். இறந்தபொழுது இவர் வயது முப்பத்திரண்டேயாகும். தம் வாழ்நாளில் சமயத் தொண்டோடு தமிழ்த்தொண்டும் ஆற்றிய பெருந்தகை ஆவர்.

ஆற்றிய தொண்டுகள்

அண்ணாமலை ரெட்டியார்க்குரிய திருவெங்கை மாநகரிலே தங்கியிருந்தபொழுது 'திருவெங்கைக்கோவை' 'திருவெங்கைக் கலம்பகம்' என்ற அரிய நூல்களைப் பாடினர். தில்லைக்குச் சென்று கூத்தனை வழிபட்டபொழுது நால்வர் நான்மணி மாலை, தருக்க பரிபாடை, சதமணிமாலை ஆகிய நூல்களை இயற்றினர்.

தம் ஞான ஆசிரியரான சிவஞான பாலைய சுவாமிகள்மீது கலம்பகம், தாலாட்டு, நெஞ்சுவிடு தூது, திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ் போன்ற நூல்களைப் புனைந்தருளினர். காஞ்சிபுரத்தில் தங்கியபொழுது, வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி ஆகியவற்றையும், அவருக்குப் பெருமை தந்த 'பிரபு

லிங்க லீலை' என்ற அரிய படைப்பையும் ஆக்கியருளினர். இந் நூலின் மூலம் கன்னடமொழியில் அமைந்துள்ளது.

சிவபெருமான் அல்லமப் பிரபுவாக வந்து செய்தருளிய திருவிளையாடலை இந்நூல்குறிக்கின்றது. சிவபெருமானைமணக்கும் கருத்தோடு, மண்ணுலகில் தவம்புரிந்த மாயை என்ற மங்கை, தன் குறிக்கோளைக் கைவிடுத்துத் தண்ணுமைக்கார ஞக வந்த ஒருவரைக் கண்டு மயங்கித் தவிக்கின்ருள்—என உருவகமாக ஆன்ம தத்துவத்தை 25 கதிகளாகப் பகுத்துக் கொண்டு விளக்குகின்ருர். இறுதியில் மாயையால் சிவனை எய்த முடியாது என மாந்தர்க்கு வலியுறுத்துகின்ருர். இந் நூல் சொல்லழகும், பொருளழகும், பிற காவியச் சுவை நயமும் இழைந்து செல்வதாகும். கற்பனையின் மலர்ச்சியாக இந்நூல் திகழ்வதால், இவ்வாசிரியரைக் 'கற்பனைக் களஞ்சியம்' எனப் போற்றிப் புகழுவர். மாயையின் குழந்தைப் பருவத்தை ஆசிரியர் குழைந்து கூறும் நயத்தைப் பாருங்கள் :

குழலும் யாழும் இனியவெனக் கூறு வண்ணம் மென்கனிவாய்
மழலை மொழிந்தும் உடற்கின்பம் மருவ ஓடி மேல்விழுந்தும்
விழையும் அமிர்தின் மிகஇனிமை விளைய நுகரும் சுவையடிசில்
செழிய சிறுகை யாலளைந்தும் செய்தாள் மோகம் ஈன்ருேரை.

கருத்துச் செறிவுமிக்க 'நன்னெறி' என்ற நூலின் ஆசிரியரும் இவரேயாவர். பால்நிலவைக் காண்டால்தான், பரந்த கடல் பொங்கும். அதுபோல், இன்சொல்லைக் கேட்டால்தான் இவ் வையகமும் மகிழும்—கன்றின் துணையால்தான் பசுவின் பாலைக் கறக்கிருேம். அதுபோல, அறிமுகம் ஆனவரைக் கொண்டே அறிமுகம் இல்லாதவர்பால் செயலைக் கைக் கொள்ள வேண்டும்—கண் இரண்டும் ஒன்றைக் காண்பது போலவே, காதலனும் காதலியும் செயல்புரிய வேண்டும் என்கின்ருர்.

ஓட்டைக் குடத்தில் நீர் ஒழுகுவது வியப்பன்று. ஒழுகாமல் இருப்பதே வியப்பு. ஆனல், ஒன்பது துளைகளைக்

கொண்ட உடம்பினின்று, உயிர் நீங்குவது வியப்பன்று; நிற்பதுதான் வியப்பு என்கின்றார். பிற உறுப்புக்கள் வாதனைப் பட்டால், கண்தான் கலங்கியழும்; அதுபோலப் பிறர் துன்பப் பட்டால், பெரியோர்தாம் துயர் அடைவர் என்கின்றார்.

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவ ரென்க—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

---

7. ஐரோப்பியர் காலம்

(கி. பி. 1600—1947)

முன்னுரை

ஐரோப்பியர் வருகையால், இந்தியாவிற்கு ஏற்பட்ட பல நன்மைகளில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது தமிழ் நாட்டில், முதன்முதலாக, அச்சுக்கூடத்தை நிறுவியமை யாகும். அதன் விளைவாக, நாடெங்கும் பல்வேறு வகைப் பட்ட உரைநடை நூல்கள் தோன்றி, தமிழ்மொழியில் உரைநடை இலக்கியத்தை வளப்படுத்தின. நாடெங்கும் கல்விச் சாலைகள் தோன்றி, தமிழ் வளரப் பெருந்தொண் டாற்றின. மேனாட்டு இலக்கியங்களோடு அறிமுகமான தமிழ்மக்கள், அம் மொழிகளில் அமைந்துள்ள புதிய இலக்கியத் துறைகளான சிறுகதை, நாவல், நாடகம் போன்றவற்றைக் கற்றறிந்து, தம் மொழியிலும் தோற்றுவித்தனர். வேறு பிற துறை நூல்களும் வேர்விட்டுத் தழைத்தன. இப் புதிய இலக்கிய வகைகளைப் போட்டி போட்டுக்கொண்டு வளர்த்த பெருமை பத்திரிகைகளையும், திங்கள் வார வெளியீடுகளையுமே சாரும். விஞ்ஞானம் தந்த விந்தைகளான வானொலி, சினிமா போல்வனவும் முத்தமிழும் வளரப் பணிபுரிந்து வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் கவிதை இலக்கியத்தின் பொருளும், முறையும் புரட்சிகரமாக மாறின. எனினும் பழைய மரபைப் பின்பற்றிப் பலர் கவிதை புனைந்துள்ளனர். அவர்களை முதலிலும், இந் நூற்றாண்டு மறுமலர்ச்சிக் கவிஞர் களுக்கு முன்னோடியாகத் திகழும் பாரதியை அடுத்தும், காண்போம்.

19 ஆம் நூற்றாண்டு

தாயுமான சுவாமிகள்

சமரச சன்மார்க்கத்தை உலகிற்கு முதன்முதலாக உணர்த்திய சைவசித்தாந்தப் பெரியார் தாயுமான சுவாமிகள் ஆவார். திருமறைக்காட்டில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர்; மெய்ஞ்ஞானப் பற்றால் துறவுக்கோலம் பூண்ட பெருந்தகையாவார். சைவ சமயத்தின் பரந்துபட்ட நோக்கத்தைப் பல பாடல்களாகப் பாடியுள்ளார். இவர் இயற்றிய பாடல்களைத் தமிழ்மொழியின் 'உபநிடதம்' எனப் பாராட்டுவர்.

ஆசைத்தளையில் கட்டுண்டு, விடுதலை காண இயலாமல் அலையும் மாந்தர் நிலைமையைப் பார்த்துத் தாயுமானவர் கூறுகின்றார்:

ஆசைக்கோர் அளவில்லை! அகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர்; அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவர்; எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவது மாக முடியும்
உள்ளதே போதும்நான் நானெனக் குளறியே
ஒன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்!
பார்க்கும்இடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கத் தெய்வ அருட்கருணை புரியவேண்டும்,'' என இறைவனை நோக்கி

இறைஞ்சுகிறார். இறைவனுக்குப் பூசை செய்ய மலர் பறிக்க அருகே செல்கிறார். ஆனால், எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கிருப்பவர் இறைவனல்லவா? 'பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி, யப் பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்'' என்று நடுநடுங்கித் திரும்புகிறார். இருப்பினும், தாயுமானவர் இறைவனுக்குப் புதிய வழிபாடொன்று இயற்றுகிறார்; அவ் வழிபாட்டைப் பாருங்கள்:

நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம்; அன்பே
மஞ்சனநீர்; பூசைகொள்ள வாராய் பராபரமே.

இத்தகைய மெய்ஞ்ஞானியார் கற்பிக்கும் வாழ்க்கைக் குறிக்கோள் மிக உயர்ந்ததாகும்.

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை

வாழ்க்கைக் குறிப்புக்கள்

திருச்சிக்கு அருகிலுள்ள எண்ணெய்க் கிராமம் என்ற ஊரில் 1815 ஆம் ஆண்டில் பிறந்தார். சிறந்த புலமை மிக்க ஆசிரியராகிய தம் தந்தையிடமே இலக்கண இலக்கியங்களை ஐயமறக் கற்றுக் கவிபாடும் வன்மையைப் பெற்றார். தந்தை இறந்தபின் திரிசிரபுரம் சென்று தீந்தமிழ் அறிஞர்களோடு உரையாடியும், சென்னை சென்று அங்குள்ள புலவர்களோடு கலந்து பழகி உறவாடியும், தம் தமிழ்அறிவை வளர்த்துக் கொண்டார்.

32 ஆம் அகவையில் பெங்களூருக்குச் சென்று தேவராச பிள்ளைக்குத் தமிழ் கற்பித்துப் பரிசுகள் பல பெற்றார். அடுத்துத் திருவாவடுதுறை ஆதீனத் தமிழ்வித்துவான் ஆனார். ஆங்குத் திகழ்ந்த அம்பலவாண தேசிகர்மீது கலம்பகம் ஒன்று இயற்றினார். அதுபோது அவருக்கு 'மகாவித்துவான்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர்.

ஆற்றிய தொண்டுகள்

நாள் ஒன்றுக்கு முந்நூறு செய்யுள் இயற்றுவதிலே மிக வல்லவர்; மாணவர்க்குப் பாடம் கற்றுக்கொடுப்பதிலே மிகச் சிறந்தவர்; சொற்பொழிவு ஆற்றுவதிலே கை தேர்ந்தவர் ஆவர். அவருடைய தலையாய மாணுக்கர்களிலே தியாகராசச் செட்டியார், டாக்டர் உ. வே. சாமிநாதையர், வேதநாயகம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவர்.

16 தல புராணங்களையும், 16 அந்தாதிகளையும், 4 மாலைகளையும் இயற்றியுள்ளார். இவர் பாடிய உலா, கோவை முதலிய பிரபந்தங்கள் கணக்கில. இவர் இயற்றிய தனிப் பாக்களும் எண்ணற்றன. இவர் பாடிய பாக்களின் எண்ணிக்கை காரணமாக இவரை 'நவீன கம்பர்' எனப் பாராட்டுவர். இவர் பாடிய 'சேக்கிழார் பிள்ளைத்தமிழ்' சிறப்பு மிக்க சிற்றிலக்கியமாகும்.

இராமலிங்க அடிகள்

வாழ்க்கைக் குறிப்புக்கள்

தென்னுற்காடு மாவட்டத்தில் மருதூர் என்ற சிற்றூரில் இராமையா பிள்ளை என்பாருக்கும், சின்னம்மையாருக்கும் ஐந்தாம் மகவாக 1823 இல் தோன்றினுர். கற்ருேர் போற்றும் வண்ணம் இளமையிலேயே பெரிய புராணச் சொற்பொழிவுகள் ஆற்றினுர். மணமான பின்னர்த் துறவியானுர். பின்னர் வடலூரில் தங்கிச் சமரச சன்மார்க்கத்தைப் போதித்தார்.

ஆற்றிய தொண்டுகள்

இளமையில் முருகன்பால் உளம் உருகி இவர் பாடிய பத்திப் பாடல்கள் பல. இவர் பாடிய பாடல்கள் அனைத்தையும் ஆறு திருமுறைகளாக வகுத்து அவற்றைத் 'திருவருட்பா' என வழங்குகின்றனர். அவை 'அருட்பா' அல்ல 'மருட்பா' என ஆறுமுக நாவலர் வழக்காடித் தோற்றது உண்டு. இவர்தம் பாடல்கள் தோத்திர முறையைத் தழுவியவை; எளிமை

நிறைந்தவை. இனிமை மிகுந்தவை. கல் நெஞ்சையும் கனி விக்கும் இச் செய்யுட்கள், பண்டிதரும் பாமரரும் ஒருங்கே பாடி இன்புறுதற்கு ஏற்றவை.

அன்பிற்கு எளியவராகும் ஆண்டவனைப்பற்றிப் பாடுகின்றார் :

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!
அன்பெனும் குடில்புகும் அரசே!
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே!
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளி அறிவே!
அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே!
அன்புரு வாம்பர சிவமே.

அடிகளின் அருள் உள்ளத்தைப் பாருங்கள்:

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்

உயிர்களுக்காக உருகும் அவ் வுள்ளத்தைப் படியுங்கள்:

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்! பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
நேருறக் கண்டுஉளம் துடித்தேன்!
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.

மதியால் இறையருளைப் பெற்று, அதன் துணையால் ஊழை வெல்ல வேண்டுமென அறிவுறுத்துகின்றார். உள்ளத்தில் இருக்கும் கள்ளத்தை நீக்கி ஒளிவடிவான இறைவனைக் காணுமாறு ஓதுகின்றார். 'அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை' என்பதே அடிகளார் வலியுறுத்தும் அருள் வாக்குகளாகும். பண்டைய சித்தர்களைப் பின்பற்றி எளிய சொற்

களில் ஆழ்ந்த கருத்துக்களை அமைத்துப் பாடுகிறார். இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் பாவித்துப் பாடல்கள் பல புனைந்துள்ளார். 'இங்கித மாலை' இத்தகைய நூலாகும்.

மனுநீதிச் சோழனின் வரலாற்றை இனிய உரைநடையில் "மனுமுறை கண்ட வாசகம்" என்ற நூலாக இயற்றியுள்ளார். சீவகாருணியத்தின் சிறப்பை 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்ற நூலாகப் புனைந்துள்ளார். உரைநடை இவருடைய தருக்க அறிவையும், மொழிவளத்தையும் நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

இராமச்சந்திர கவிராயர்

எல்லீசரால் பெரிதும் பாராட்டப்பெற்றவர். சென்னையில் வாழ்ந்து வந்த சிறந்த தமிழ்க் கவிஞருள்ளே தலையாயவராவர். எளிய இனிய பாடல்களைத் தம் உளம் கனியப் பாடுவதிலே ஆற்றல் மிக்கவர்.

ஒரு காலத்தில் புல்லுக்கட்டையும், விறகுக் கட்டையும் விற்றுப் பிழைத்தவர்கள், பூர்வகாலத்துப் புண்ணிய வசத்தினால், நெல்லுக் கட்டையும், பணக்கட்டையும் காணும் செல்வர்களான நிலையில், சொல்லுக் கட்டும் புலவர்களைக் கண்டால் அக் கருமிகள் எத்தகைய முகவாட்டத்தை அடைகிறார்கள் என்பதை நகைச்சுவை தோன்றக் கவிஞர் வருணிக்கிறார்:

வணக்கம்வரும் சிலநேரம், குமர கண்டம்
வலிப்புவரும் சிலநேரம், வலியச் செய்யக்
கணக்குவரும் சிலநேரம் வேட்டை நாய்போல்
கடிக்கவரும் சிலநேரம்.

கடியவர்களுடைய மனம் இணங்கும்படியெல்லாம் தமிழைப் பாடிப்பாடித் திரிந்தமைக்குப் பெரிதும் வருந்தித் தம்மைத் தாமே நொந்துகொள்கின்றார்:

கல்லாத ஒருவனைநான் கற்றாய் என்றேன்
காட்டெறியு மறவனைநா டாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியேறு என்றேன்
மல்லாரும் புயம்என்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனைநான் வள்ளால் என்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான்
யானும்என்தன் குற்றத்தால் ஏகின் றேனே.

இவருடைய பாடலிலே உள்ளம் உண்டு; உண்மை உண்டு தேர்ந்தெடுத்த சொல் உண்டு; தெளிவான ஓட்டம் உண்டு; திறமையான நகைச்சுவையும் உண்டு.

வேதநாயகம் பிள்ளை

வாழ்க்கைக் குறிப்புக்கள்

திருச்சி மாவட்டத்தில் குளத்தூரில் 1826 ஆம் ஆண்டில் கத்தோலிக்க கிறித்தவக் குடும்பத்தில் தோன்றினர் தமிழ்ப் புலமையும் ஆங்கில அறிவும் ஒருங்கே பெற்று வழக்குமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினர். 1856 இல் மாவட்ட முன்சீப்பாகச், சீர்காழி, மாயூரம் போன்ற இடங்களில் வேலை புரிந்து, மாயூரம் நகரசபைத் தலைவராகவும் தொண்டு செய்தார். பஞ்சத்தின்போது, கஞ்சித்தொட்டிகள் ஏற்படுத்தி இவர் உதவி புரிந்ததை யாவரும் பாராட்டுவர்; மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர் களிடம் தமிழ் பயின்றவராவர்; நீதி தவறாத நேர்மையாளர்; சமயக் காழ்ப்பு அற்றவர். சமரச நோக்கு உடையவர். இவ ருடைய பண்பையும் நட்பையும் பாராட்டிக் 'குளத்தூர் வேத நாயகன் கோவை' என ஒரு கோவை நூலைப் பிள்ளையவர்கள் பாடியுள்ளார்கள். பொதுமக்கள் எல்லோருக்கும் ஏற்ற இனிய முறையில் நீதிக் கருத்துக்களை 'சர்வ சமய சமரசக் கீர்த்தனை' எனப் பாடியுள்ளார். நகைச்சுவை ததும்பப் பாடுவதில் வல்லவர் ஆவார்.

மனிதர் தம் உடலை அதிகமாகப் பேணுவதைப்பற்றி நகைச்சுவை தோன்றக் குறிப்பிடுகிருர்.

உடலை நம்பாதே—மனமே (உடலை)

குடலுந் தசையும் எலும்பும் நரம்பும்
கொழுத்துப் பழுத்துப் புழுத்து நிரம்பும் (உடலை)

இந்திரியமல மூத்திரம்—தசை
இரத்தம் நிறைந்த பாத்திரம்—பாச

பந்தப்பேய் வளர் க்ஷேத்திரம்—வெறும்
பவந்த நாடக சூத்திரம் (உடலை)

பயனின்றிவிழு மட்டை—கொடு
பாம்புகழற்றுஞ் சட்டைபோல

உயிர்போனல்வெறுங் கட்டை—இதை
உற்றுப்பார்த்தால் லொட்டி லொட்டை (உடலை)

'மறுமாதரை நினையாதே' என்ற தலைப்பில், பெண்களைப் பற்றிக் கவிஞர்கள் பெரிதாக வருணிப்பதை, வேதநாயகம் மிக வேடிக்கையாக,

சட்டி முகத்தைச் சந்திரபிம்பமென்றும்—வெறும்
சதைக்கட்டிகளைத் தங்கக் கும்பமென்றும்

முட்டிக்கால்களை சொர்ணஸ்தம்பமென்றும்—மாதா
முன்கமலைக்குஞ் சபாக் கம்பமென்றும்

உச்சிட்டத்தை அமிர்தக்கட்டி யென்றும்—நாறும்
ஊத்தைவாயைப் பவளப் பெட்டி யென்றும்

மச்சம்பினை வடியுந்திட்டி யென்றும்—தே
வாங்குருவை அபூர்வசிட்டி யென்றும்

குறிப்பிடுகிருர்.

'கள்ள ஞானம்' என்ற தலைப்பில், இவர் கூறும் கருத்துக்கள் சிறந்த நகைச்சுவையும், ஆழ்ந்த சிந்தனைச் செறிவும் உடையன:

கையிலே நாம்பிடிப் பதுஜெபமாலை
கக்கத்தில் வைப்பது வேதன்னக்கோலை
மெய்யாகத் தினம்படிப் பதுதர்ம நூலை
மேலும் மேலும் நமக்குத் துன்மார்க்கவேலை

உள்ளத்தின் அழுக்கை எந்நாளும் கழுவோம்
உடலைக் கழுவநீரில் அடிக்கடி விழுவோம்
கள்ளத் தனமாகச்சந் நிதிமுன்னே அழுவோம்
காசுக்கு நாயையுங் கைகட்டித் தொழுவோம்.

இவர் இயற்றியுள்ள "நீதி நூல்" இவருடைய ஆழ்ந்த அனுபவ அறிவையும் கருத்துச் செறிவையும்காட்டுகின்றது. இவர் ஆங்காங்குக் கையாளுகின்ற புத்தம் புதிய உவமைகள் இவருடைய சிறந்த கற்பனைத் திறத்தையும், புதுமை வேட்கையையும் நன்கு பறைசாற்றுகின்றன. "நீதி நூல்" ஒழுக்கத்தைப் போதிக்கும் அற நூலாகத் திகழவில்லை; படிப்போர் உள்ளத்தை மகிழ்விக்கும் சிறந்த இலக்கிய நூலாகவே பயன்படுகிறது. கவிதை இலக்கியங்களை எளிமைப்படுத்திக் கீர்த்தனங்களாகப் பாடிப் பாரதியாருக்கு வழிகாட்டியவர் வேதநாயகம்பிள்ளை எனலாம்.

ஆங்கில மொழியிலிருந்து உயர்தர நீதிமன்றச் சட்டங்களைத் திரட்டித் தமிழில் 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலை உருவாக்கியுள்ளார்.

இவர் மேலும், திருவருளந்தாதி, திருவருள்மாலை, தேவமாதா அந்தாதி, பெரிய நாயகியம்மன் பதிகம் என்ற செய்யுள் நூல்களையும், பிரதாபமுதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி போன்ற நாவல்களையும் படைத்துத் தந்துள்ளார். தமிழ் நாவலின் தந்தை வேதநாயகம்பிள்ளையே ஆவர்.

20 ஆம் நூற்றாண்டு

கவிதை இலக்கியம்

20 ஆம் நூற்றாண்டில் தமிழகம் ஈன்ற பெருங் கவிஞர்கள் பாரதி, பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஆகிய நால்வர் ஆவர். இந் நால்வருள், பாரதியையும் பாரதிதாசனையும் ஒருவகைக் கவிதை இனத்திலும், இரு பிள்ளைகளையும் மற்றொரு வகைக் கவிதை இனத்திலுமாகப் பாகுபடுத்தலாம்.

"முன்னைய இருவரும் புதுமை மேலீட்டின் வயப்பட்டவர்! பின்னைய இருவரும் பழமையின் சாயலை மறவாத பண்பினர். முன்னையர், புரட்சிக் கவிஞர்; பின்னையர், சீர்திருத்தக் கவிஞர்; முன்னைய இருவர் கவிதையிலே வீரமும் ஆண்மையும் சிறந்து நிற்கின்றன! பின்னையர் கவிதையிலே சாந்தமும் பெண்மையும் மிகுந்து விளங்குகின்றன; பழமைப் பண்பை அறவே மறந்தவரல்லர் பாரதியும், பாரதிதாசனும்; புதுமையை அறவே புறக்கணித்தவரல்லர் இரு பிள்ளைகளும்; முன்னவர் புரட்சி சகாப்தத்தினர்; பின்னவர், காந்தி சகாப்தத்தினர், பாரதியும் பாரதிதாசனும், 'இன்பவெறி' கொண்டு பாடும் கவிஞர்கள்; பிள்ளைகள் இருவரும், இயற்கை அருள் சுரக்கப் பாடுபவர்" என்று கூறுகிறார், பொருளியற் பேரறிஞர் டாக்டர் பா. நடராசன்.

பாரதியார்

தேசிய இயக்கத்தின் காரணமாக நாட்டில் நிகழ்ந்த மறுமலர்ச்சியில் தோன்றிய கவிஞர்களுள் தலைசிறந்தவர் சுப்பிரமணிய பாரதியாராவர். "இவருடைய பாடல்களில் கருத்தாழமும், ஆற்றலும், எளிமையும், இசை நயமும், தொடர் இன்பமும் ஒருங்கு அமையக் காண்கின்றோம். இவ்வளவு சிறந்த கவிஞர் தமிழ்உலகில் சில நூற்றாண்டுகளாகத் தோன்றியதில்லை" என்று வியந்து மொழிகிறார், அறிஞர் வையாபுரிப் பிள்ளை.

வாழ்க்கைக் குறிப்புக்கள்

1882ஆம் ஆண்டில் பிறந்த சுப்பிரமணியன் கல்வி கேள்விகளில் நன்கு தேர்ந்து, தம் புலமைச் சிறப்பால் தம் பதினொன்ரும் வயதில், புலவர்கள் குழு பாராட்டப் "பாரதி" என்ற பட்டத்தைப் பெற்ருர். ஏறத்தாழ ஏழு மொழிகளைக் கற்ற பெருமையினை யுடையவர் நம் பாரதி.

தொடக்கத்தில் தமிழாசிரியராகத் தொண்டாற்றிப் பின் பத்திரிகை ஆசிரியராகவும் பணியாற்றினர். தம் சீற்றம் மிக்க எழுத்தால் அரசாங்கத்தின் சினத்திற்கு ஆளாகிப் பற்பல தொல்லைகளுக்கு உள்ளானர். புதுவையிலும், சென்னையிலுமாகத் தங்கி வாழ்ந்து தம் இலக்கியப் பணியையும், தேசத் தொண்டையும் ஆற்றி வந்தார். திறமிக்க இப் பெருங் கவிஞர் தம் முப்பத்தொன்பதாம் வயதில், 1921 ஆம் ஆண்டில் தமிழகத்தைத் தவக்குறைவான நாடாக்கித் தம் உயிர் நீத்தார்.

தம் திறமையையும், நாட்டின் தேவையையும் அறிந்து பாட்டுத் திறத்தால் இவ் வையகத்தைப் பாலித்துச் சிறந்தவர் நம் பாரதியாராவார். "புவியனைத்தும் போற்றத் தமிழ்மொழியைப் புகழில் ஏற்ற, கவியரசன் இல்லை என்ற குறை என்னால் தீர்ந்தது· நமக்குத் தொழில் கவிதை! நாட்டிற் குழைத்தல்! இமைப் பொழுதும் சோராதிருத்தல்" என்று பறையறைவித்தார். "சுவை புதிது! பொருள் புதிது! வளம் புதிது! சொல் புதிது! சோதிமிக்க நவகவிதை! எந்நாளும் அழியாத மாகவிதை என் கவிதை!" என்று சூளுரைத்தார். அவ்வாறே பல 'வேடிக்கை மனிதரை'ப்போல் வீழாமல், சிந்துக்குத் தந்தையாக, செந்தமிழ்த் தேனீயாக, திறம் பாட வந்த மறவனுகப் புதிய அறம் பாடவந்த அறிஞனுக வாழ்ந்து மறைந்தார்.

என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்

என்ற ஆவேசப் பாடல்களைப் பாடி அடிமைப்பட்டுக் கிடந்த தழிழகத்தில் சுதந்திர வெறியைத் தீ போலப் பரவச் செய்தவர் பாரதி.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே

என்று இனிமையாகப் பாடித் தமிழ்நாட்டுப் பற்றைத் தமிழக மக்கள்பால் ஊட்டியவர் பாரதி.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்
'தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்'

என்று தன்மானம் இழந்த தமிழ்மக்களுக்குத் தாய்மொழிப் பற்றையும் நல்கினார் பாரதி. புத்தம் புதிய மேன்மைக் கலைகள் தமிழ்மொழியில் வளர்வதற்குரிய பல வழி வகைகளையும் வகுத்துக் காட்டிய வள்ளல் பாரதி,

நாட்டுமக்கள் சாதிச் சிக்கலால் நலிவுறுவதைக் கண்ட கவிஞர்,

ஏழை என்றும் அடிமை என்றும்
எவருமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மாந்த ரென்பார்
இந்தியாவில் இல்லையே

என்று பாடினார்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்

என்று பெண் விடுதலை பேசத் தொடங்கினார். சமுதாய அறத்திற்காகப் போராடிய சம உரிமைக் கவிஞன் பாரதி.

முப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொது உடைமை

* * *

மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ ?
'தனியொருவனுக் குணவில்லையெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்'

என்று வீர முழக்கம் செய்தார்.

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும். இங்கு வாழும் மனிதர்க் கெல்லாம்' என்று ஆணையிடும் கவிஞன், சோலைகள் எழுப்பு வதிலும், சுனைகள் இயற்றுவதிலும், அன்ன சத்திரம் ஆயிரம் வைப்பதிலும், ஆலயம் நாட்டுவதிலும் மிகச் சாலச் சிறந்த புண்ணியம் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதே எனப் பறை சாற்றுகின்றார்.

'ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று கூறும் அறிவிலிகாள் அறிவு ஒன்றே தெய்வம்' என அறை கூவுகின்றார்.

> தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற—எங்கள்
> தாயென்று கும்பிடடி பாப்பா

எனக் குழந்தையின் பிஞ்சு உள்ளத்தில் நாட்டுப்பற்றை விதைத்தவர் பாரதி. 'ஓடி விளையாடு பாப்பா' 'புதிய ஆத்தி சூடி' போன்ற பல பாப்பாப் பாடல்களை இயற்றித் தமிழ் இலக் கிய வரலாற்றில் முதன் முதலாகக் குழந்தை இலக்கியத்தைத் தோற்றுவித்தவர் பாரதி.

நாட்டு விடுதலைக்காகவும், சமுதாய நீதிக்காகவும், பெண்கள் நலத்திற்காகவும் போராடிய பாரதி, தேசிய கவி மட்டுமல்லர்; சிறந்த கற்பனைத் திறம் படைத்த இயற்கைக் கவிஞனும் ஆவார்:

> நிலவையும் வானத்து மீனையும் காற்றையும்
> நேர்படவைத் தாங்கே
> குலாவு மதுவின் குழம்பைக் குடித்தொரு
> கோலவெறி படைத்தோம்
> தென்னையின் கீற்றுச் சலசல வென்றிடச்
> செய்து வருங் காற்றே
> உன்னைக் குதிரைகொண் டேறித் திரியுமோர்
> உள்ளம் படைத்து விட்டேன்

என்று இயற்கை எழிலில் தம்மையே மறந்து பாடுகிறார். வெள்ளைத்தாமரைப் பூவிலும், வீணை செய்யும் ஒலியிலும், மாதர் தீங்குரல் பாட்டிலும், மக்கள் பேசும் மழலை மொழி யிலும், குயிலின் குரலிலும், கிள்ளையின் நாவிலும், கொள்ளை

இன்பம் தரும் கவிதை புனையும் கலைஞர் நெஞ்சத்திலும் கொலு வீற்றிருக்கும் அழகு தெய்வத்தைக் கண்டு பாரதி வழிபடுகிறார். கலகலக்கும் ஓசைகள் பலவற்றிலே தம் நெஞ்சைப் பறிகொடுக்கிறார்.

காக்கை குருவி எங்கள் ஜாதி நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

என்று தாயுமானவர் போன்று, ஆன்ம வெறிகொண்டு இசைக்கின்றார்.

பாரதி இயற்றிய முப்பெரும் பாடல்களில், கற்பனைக்காவியமான கண்ணன் பாட்டில் தேங்கிக் கிடக்கும் அருள் வெள்ளமும் கவிதைப் பெருக்கும் படிப்போர் உள்ளத்தைப் பரவசமாக்கும் இயல்பின. நம்மாழ்வார் போன்று, இயற்கை எங்கணும் கண்ணனின் உருவையே கண்டுகளிக்கின்றார்.

சுட்டும் விழிச்சுடர்தான் —கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக் கரியவிழி—கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ?
பட்டுக் கருநீலப்—புடவை
பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில்—தெரியும்
நட்சத் திரங்களடி!

"கண்ணம்மா ஒரு குழந்தை" என்ற பாடல் அற்புதமான சொற்சித்திரமும், ஆன்மத்துடிப்பை எழுப்பவல்ல சிறந்த கவிதை அமுதும் ஆகும்.

பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே!
அள்ளி அணைத்திடவே—என் முன்னே
ஆடி வருந்தேனே!

எல்லாம் சிறகு முளைத்த சொற்களாகும்;

சாதாரண நடையாகிய நொண்டிச் சிந்தால் ஆற்றல் மிக்க காப்பியமாகப் பாரதியாரால் அமைக்கப்பட்டதே பாஞ்சாலி சபதமாகும்.

கற்பனை யூற்றமும், கனிந்த கவிதை ஆற்றலும் நெஞ்சை யள்ளும் கான இனிமையும் பொருந்த விளங்கும் அரிய இலக்கியமே குயில் பாட்டாகும்.

காதல், காதல், காதல்;
காதல் போயிற் காதல் போயிற்;
சாதல், சாதல், சாதல்.

என்ற தத்துவப் பொருளோடு இப் பாட்டைத் தொடங்கி,

ஆசைக் கடலின் அமுதமடா! அற்புதத்தின்
தேசமடா! பெண்மைதான்
தெய்விகமாங் காட்சியடா!

என்ற பெருமிதப் பெருக்கோடு முடிவது, படிப்போர் உள்ளத்தில் உணர்ச்சி அலைகளை அடுக்கடுக்காக எழுப்பி மறைவதாயுள்ளது. வேதாந்தப் பொருள் விளக்கும் அரிய ஏடாகவும் இக் குயில் பாட்டு விளங்குகிறது.

மேலும் பாரதி தத்துவப் பொருள் பொதிந்த "ஞான ரதம்,', புரட்சிக் கருத்தமைந்த "சந்திரிகையின் கதை", நீதி போதிக்கும் "நவதந்திரக் கதைகள்" ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவருடைய பாடல்களை உளம் ஒன்றிச் சுவைத்த இலக்கியத் திறனாய்வாளர் ஒருவர் பாரதியின் கவிதையிலே, ஷெல்லியின் கற்பனையையும், வேர்ட்ஸ்வொர்த்தின் கடவுட் கொள்கையையும், பிரௌனிங்கின் வாழ்வு நோக்கையும், டெனிசனின் கவிதை எளிமையையும் காணலாம் என்று குறிப்பிடுகிறார்.

Dr H. Cousins என்பார் Verhaeren என்ற பெல்ஜிய தேசத்துக் கவிஞனைப்பற்றிக் கூறும்பொழுது தாகூர், நாயுடு, கோஸ், பாரதி, அயர்லாந்து நாட்டு ஆன்மீகக் கவிஞர்கள் முதலியோருடைய கவிதையில், உன்னத அழகின்

உண்மையான, தூய்மை வடிவத்தைக் காணமுடியும் என்று குறிப்பிடுகிருர்.

பாரதிதாசன்

1891ஆம் ஆண்டில் புதுவையில் தோன்றிய புரட்சிக் கவிஞர் கனக சுப்புரத்தினம் இளமையில் புலமை பெற்றுத் தம் 18 ஆம் வயதில் ஆசிரியராகிப் பாடல்கள் பல புனைய முற்பட்டார். பாரதியின் வேண்டுகோளுக்கிணங்க "எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்ற பாடலை இயற்றினர். இப் பாட்டின் அழகும் பொருளுந்தான் இவரைப் 'பாரதிதாசன்' எனத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தின.

"சஞ்சீவி பார்வதத்தின் சாரல், சுதந்திரம், சகோதரத்துவம்" போன்ற பொது உடைமைப் புரட்சிக் கவிதைகளையும் "எதிர் பாரா முத்தம், குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, தமிழச்சியின் கத்தி" போன்ற சிறு காவியங்களையும் இயற்றி யுள்ளார்.

இவர் இயற்றிய "புரட்சிக்கவி" என்ற சிறந்த பாடல் இவருக்குப் "புரட்சிக் கவி" என்ற புத்தம் புதுப் பெயரைத் தேடிக் கொடுத்தது. இப் பாடலில் அமைந்த கதா பாத்திரப் படைப்பு மிக அற்புதமானதாகும்.

"பாண்டியன் பரிசு" சுவையான கதையைக்கொண்ட நீண்ட காவியமாகும். இந் நூலில், கதைச் சுவையோடு காவியச் சுவையும் போட்டி இடுதலைக் காணலாம். அரசியல் சூழ்ச்சி, அரியாசன வேட்கை, அச்சம், காதல், போர் யாவற்றையும் சித்திரிக்கும் ஒரு நயமான சிற்றிலக்கியமாகும். போர்க்களக் குமைச்சலில் ஒரு காட்சியைக் காட்டுகின்ருர் கவிஞர்:

"....................சாவு
கொற்றவர்கள் இருவர்பால்-மாறிமாறி
நொடிக்கு நொடி நெருங்கிற்று! வெற்றிமங்கை
நூறுமுறை ஏமாந்தாள் ஆளைத்தேடி."

மிக அழகான கற்பனை!

கற்பனை மெருகும், காவியச் சுவையும் கலந்த அற்புதப் பாடல்களை ஆக்குவதில் இவர் ஆற்றல் மிக்கவர். வானத்து நிலவை இவர் வருணிக்கும் திறம் படிப்பவரை எளிதிலே பரவசப் படுத்திவிடுகிறது.

நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து
நிலாமுகமென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ! நீதான்
சொக்க வெள்ளிப் பாற்குடமோ! அமுதஊற்றே!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அமரப்படைப்பான 'அழகின் சிரிப்'பிலிருந்து ஒரு பாட்டு; பகலவன் ஒளி இப் பாரிலே பாட்டுப்பரவும்பொழுது,

அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி, பச்சைப்பட்டே!
குருவிகள், தங்கக் கட்டி!
குளிர்மலர், மணியின் குப்பை!
எருதின்மேற் பாயும் வேங்கை
நிலவு பால் எழுந்த மின்னல்!
சருகெலாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பாரடா நீ!

என்று கவிஞன் வியக்கிறான்.

காலையிளம் பரிதியிலும், கடல்பரப்பின் ஒளிப்புனலிலும், சோலையிலும், தளிர்களிலும், மாலையில் இலகும் மாணிக்கச் சுடரிலும் இக் கவிஞன் அழகுத் தெய்வத்தைக் கண்டு ஆராதிக்கின்றான். விழியின் ஒளியில், விளக்கின் சிரிப்பில், மலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில்; கலப்பையுடன் உழவன் செல்லும் புதுநடையின் பூரிப்பில் கவிஞன் தன் நெஞ்சத்தைக் களிப்பாகப் பறிகொடுக்கிறான்.

இயற்கையின் நாதத்தை இனிமையாக மீட்டுவதில் தாசனுக்கு ஒத்த தமிழ்க் கவிஞனே யில்லை எனலாம்.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு,
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்

என்று அச்சத்தின் உச்சத்தைத் தொட்டுக் காட்டுகிறான்.

கனிந்த உணர்ச்சி மிக்க காதல் சித்திரங்கள் தீட்டுவதிலே இவர் கை தேர்ந்தவர்.

கூடத்திலே மனப் பாடத்திலே—விழி
கூடிக் கிடந்திட்ட ஆணழகை
ஓடைக்குளிர் மலர்ப் பார்வையினால்—அவன்
உண்ணத் தலைப்படு நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்தவிழி—தனில்
பட்டுத் தெறித்தது மானின் விழி
ஆடைதிருத்தி நின்றாள் அவள்தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்

என்கின்றார்.

கனியின் சுளையும், கரும்பின் சாறும், பசுவின் பாலும், பனி மலர்த் தேனும் இனியன என்பேன் எனினும், தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்! எனத் தன் தமிழ் அன்பைப் பறையறிவிக்கின்றான்.

“நமதடா இந்நாடு! என்றும் நாமிந் நாட்டின் வேந்தர்! சமம் இந்நாட்டு மக்கள் என்றே தாக்கடா வெற்றி முரசை” என்று வீரமுழக்கம் இடுகிறான்.

சாதிக் கொடுமைகளை, சமயப் புரட்டுக்களை, மூடக்கோட்பாடுகளைச் சாடி எறிகின்றான்.

சென்னை நகரில் அமைந்துள்ள வீட்டுவசதி பற்றிக் குறிப்பிடும்பொழுது, ஒரு படித் தினையை வீட்டில் வைத்து வெளியில் சென்று விடியவந்து எடுத்துக்கொள்கிறேன் என்று கேட்டவனை நோக்கி, வீட்டுக்காரன் கூறுகிறுன்: "படித்தினைக்கு இடம் இருந்தால், குடித்தனத்துக்கு இடம் கொடுத்திருப்பேனே" என்று. சென்னையில் வீட்டுவசதி அவ்வாறு அமைந்துள்ளதாம்!

கும்பகோணத்திற்குச் செல்பவர்கள் சம்பள வீரர் பிடிக்க வேணும்; அங்கு சாவுக்கும் அஞ்சாத தன்மை வேணும் என்கிருர். ஏன் தெரியுமா? அங்கு அம்பு பிடித்த கொசுக்கூட்டம் ஆட்களை அப்படியே புரட்டும் என்கிருர்.

பிரெஞ்சு இலக்கிய முறையைத் தழுவிப் பாரதிதாசன் எழுதிய தமிழ்க் "குடும்ப விளக்கு" அழியாத ஓர் அபூர்வ இல்லற வாழ்க்கைச் சித்திரமாகும். ஓர் உத்தமமான மனைவியின் இல்லற தருமம், இந்தப் பாட்டில் ஒளிப்படமாகவே சுழன்று சுழன்று வருகிறது. சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளும் சுந்தரப் பொலிவுடன் மின்னுகின்றன. மனைவி இதய நிறைவுடன் இன்னிசை பாடி, தன் கணவனையும், குடும்பத்தையும் மகிழ்விக்கும் நிலையைப் பாருங்கள்:

வீடெல்லாம் இசையே; வீட்டில்
நெஞ்செல்லாம் மெருகே; நெஞ்ச
ஏடெல்லாம் அறிவே; ஏட்டின்
எழுத்தெல்லாம் களிப்பே; அந்தக்
காடெல்லாம் ஆடும் கூத்தே
காகங்கள் குருவி எல்லாம்
பாடெல்லாம் இவ்வா ருனல்
மனிதர்க்கா கேட்க வேண்டும்?

"புரட்சிக்கவி பாரதிதாசன் புதிய கவிதையை சிருஷ்டி செய்கிருர்; இயற்கையாகவே செய்கிருர்; தமிழ்மொழியில் புதிய வனைவும், நெளிவும் மெருகும் ஏற்றுகிருர்; அவர் இசை வெறியில் கவிதைக் கனலுடன் பாடும்போது, நாம் எத்தனை மணிநேரம் வேண்டுமானலும் சலிப்பின்றிக் கேட்டு இன்புற

லாம். இது உண்மை! உண்மை!—மறுக்க முடியாத உண்மை!'' என்று கூறுகிறார் வி. ஆர். எம். செட்டியார்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

''பெண்மை, தண்மை, எளிமை'' இம் மூன்று பண்புகளுமே கவிமணியின் பாடல்களின் உள்ளும் புறமும் அமைந்துள்ளன எனலாம். கருணை, அன்பு, ஆழ்ந்த கடவுள் பக்தி ஆகியவை இவர் கவிதையில் அடிப்படை ஊற்றுக்களாகும்.

இவர் பாடிய பல பாடல்களுள், புத்தர் பெருமான் வரலாற்றைக் கூறும் ''ஆசிய ஜோதி'' என்னும் சிற்றிலக்கியம் குறிப்பிடத்தக்கதாகும்; இந்நூல் எட்வின் ஆர்னல்ட் என்பார் இயற்றிய "Light of Asia" என்ற ஆங்கில நூலின் தழுவலாகும். இந் நூலில் புத்தர் தோற்றத்தைக் கண்ட மக்கள் அடையும் மாற்றத்தை ஆசிரியர் வருணிக்கும் திறம் அழகுற அமைந்துள்ளது.

கன்னி ஒருமகள் மையெழுதி—இரு
    கண்ணும் எழுதுமுன் ஓடி வந்தாள்;
பின்னும் ஒருமகள் கூந்தலிலே—சூடும்
    பிச்சிமலர் கையில் சுற்றிவந்தாள்;
செம்புநிறைந்து பால் சிந்தட்டவே—சிலர்
    சிந்தை மறந்து கறந்து நின்றார்
எம்பிரான் செல்லும் வழியின் சிறப்பெல்லாம்
    எங்ஙனம் சொல்லி முடிப்பேன் அம்மா!

இந் நூலில் வரும் தாயழுகை, நம் கவிமணியின் குழந்தை ஏக்கத்தைத்தான் நினைவுறுத்துகிறது.

மலரின் நிறத்திலே, அதன் மணத்திலே, பறவையின் அழகிலே, அதன் குரலிலே, நிலவிலே, கடலிலே, ஓடும் நீரிலே கவிஞர் தம் இதயத்தை இழக்கின்றார்.

மீனினம் ஓடிப் பறக்குதம்மா—ஊடே
    வெள்ளி ஓடமொன்று செல்லுதப்பா!
வானம் கடலாக மாறுதம்மா!—இந்த
    மாட்சியில் உள்ளம் மூழ்குதம்மா!

முல்லை மலர்ப் பந்தல் இட்டனரோ!—தேவர்
முத்துவிதானம் அமைத்தனரோ
வெல்லு மதியின் திருமணமோ—அவன்
விண்ணில் விழாவரும் வேளை இதோ!

என வியக்கின்றார்.

வளர்ந்து வரும் வாலை வெட்டி, வாயில் இரும்புக்கடி வாளத்தை மாட்டி, பக்கம் திரும்பிப் பார்க்க விடாமல் பார்வையைக் கட்டி மறைத்துச் சற்றும் இரக்கம் இல்லாமல் குதிரைகளைச் சவுக்கால் அடிக்கும் கொடுமைகளை நினைத்துக் கவிஞரின் மென்மையான உள்ளம் புலம்புகிறது.

தழைக்கும் புல்லின் தலையைப் பாவிகள் காலால் மிதித்துக் கழுத்தையும் அறுத்து ஆட்டையும் மாட்டையும் அதன்மேல் மேய்க்கும் அவலக் காட்சியைக் கண்டு கவிஞர் கண்ணீர் விடுகின்றார்.

"மருமக்கள் வழி மான்மியம்" என்ற நகைச்சுவை நூலையும், "காந்தளூர்ச்சாலை" என்ற ஆராய்ச்சிக் கட்டுரையையும் இயற்றியுள்ளார்.

"பாரசீகக் கவியமுதத்தினைத் தமிழிலே, ஓடும்போதும் கற்கும் நிலையில் மிக எளிய நடையில் பாடியுள்ளார்." டெனிசன், பிளேக் போன்ற ஆங்கிலக் கவிஞர்களின் பாடல்களைத் தமிழ் மரபிற்கேற்பத் தழுவிப் பாடியுள்ளார்.

சிறுவர்க்கான பல செந்தமிழ்ப் பாக்களை எளிய இனிய நடையில் இயற்றியுள்ளார். 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு—அங்கே துள்ளிக்குதிக்குது கன்றுக்குட்டி' என்ற பாடலை எந்தச் சிறுவராலும் மறக்கமுடியாது. கவிமணி, சிறந்த குழந்தைக் கவிஞர்; உயர்ந்த தழுவல் கவிஞர்.

இராமலிங்கம் பிள்ளை

"திலகர் விதைத்த வித்து, பாரதியாக முளைத்தது; காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது;"

எனத் தம் ஆழ்ந்த அனுபவத்திலிருந்து ராஜாஜி அவர்கள் அழகாகக் கூறியுள்ளார்.

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்—

என்ற சந்த இன்பம் நிறைந்த பாடலே இவருக்கு நாட்டில் மிகுந்த புகழ் ஏற்பட முக்கிய காரணமாயிருந்தது. குழந்தைகள் பாடுவதற்கேற்ற இசையின்பம் இவருடைய பாடல்களில் விளங்கக் காணலாம்.

தமிழனென்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா! என எழுச்சியூட்டும் முறையில் பாடியுள்ளார். "தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணம் உண்டு" எனப் பறை சாற்றுகின்றார்—பாரதத் தலைவர்கள் பலரைப் பாராட்டிப் பாக்கள் பல இயற்றியுள்ளார்.

தமிழன் இதயம், சங்கொலி ஆகியவை இவர் இயற்றிய கவிதைத் தொகுப்புகளாகும். இவர் இயற்றிய மற்றொரு காவியம் 'அவனும் அவளும்' ஆகும். மர்மச்சுவை நிறைந்த நாவல் இவருடைய மலைக்கள்ளன் ஆகும். எந்தக் கதை நூலையும் வெல்லும் திறம் மிக்க நூல் இவருடைய 'என் கதை' என்ற தன் வரலாற்று நூலாகும்.

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஆற்றொழுக்குப் போன்ற நடையைக் கொண்ட சிறந்த உரைநடையாசிரியராவார்.

ச. து. சுப்பிரமணிய யோகி

இவரைப் 'பால பாரதி' என அழைப்பர். அகலியா, மேரி மக்தலேனு போன்ற சிறு காவியங்களையும் இன்னும் சில கவிதைகளையும் இயற்றியுள்ளார். உமர்கயாம் பாடல்களையும் மொழி பெயர்த்திருக்கிறார்.

அகலிகை கதையை, வால்மீகி, கம்பன், வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார், ச. து. சு. யோகியார் முதலியோர் எழுதியுள்ளனர். ஆனால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகை

யாகச் சித்திரித்துள்ளனர். வால்மீகி அகலிகையைத் தாழ்வு படுத்துகிறான்; கம்பன், அவளை உயர்த்தவில்லை; முதலியார் அகலிகையைப் பெருமைப்படுத்துகிறார். ஆனால், யோகியாரோ அகலிகையை, அப்பழுக்கற்றவளாக்கிக் கௌதமரை அவருக்குத் தக்கவராக்கி விடுகிறார். பெண் குலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகளாக அநீதி இழைத்து வந்த ஆடவர் குலத்தைக் கௌதமர் மூலம் பழி தீர்த்துக் கொள்கிறார் யோகியார்.

பைபிளிலுள்ள 'மேரி மக்தலேனா' வரலாற்றை 112 பாடல்களில் சிறு காவியமாக இயற்றியுள்ளார். 'உடலை விற்று உயிர் வாழும் பேரழகி, மேரி, அவள் அழகு அனைவருக்கும் கொல்லி; அவள் அழகின் எல்லை; அன்பின் பாசாங்கு; இன்பத்தின் ஏமாற்று. அவர் தேவன்; தெய்வ வடிவான தேவகுமாரன்; அவரும் அழகன். ஆனால் அவ்வழகு ஆன்மீக அழகு; 'சாந்தத்தின் சைதன்யம்' 'அன்பின் அடைக்கலம்' இன்பத்தின் சம்பூரணம்.

அழியும் அழகு, அமர அழகைக் கண்டது. அன்பின் பாசாங்கு, அமைதியின் நிலைக்களத்தைச் சந்தித்தது. இன்பத் தொடுவானம் பேரின்பப் பிழம்பை ஏறிட்டு நோக்கியது.

''பாவக் கருநிழல் புண்ணியப் பொன்னொளியிலே கலந்தது; அதன் விளைவாகப் புண்ணியத் தழலிலே பாவம் கருகியது. கடவுள் காட்சியில் காமம் சாம்பியது; உயிரின் மலர்ச்சியில் உடல் கூம்பியது, அவள் பெயர் மேரி; அவரைக் கண்டாள்; அடைக்கலம் புகுந்தாள்; அமரத்வ மடைந்தாள். அவர் பெயர் இயேசு! பேரின்ப ஒளியைக் காணத் தவிக்கும் மேரியைக் கண்டார்; வாழ்வளித்தார், உயிரளித்தார். அவர் வாழ்க! அவர் அடிமை மேரி வாழ்க!'' இவ்வாறு ஆசிரியர் மேரி மக்தலேனா கதையைச் சித்திரிக்கிறார். மேரியின் அழகை ஆசிரியர் வருணிக்கும் திறம் கம்பனை நினைவூட்டுகிறது:

> வான்கோழிகள் இடையேஒரு
> மயிலாடுதல் போலும்
> மீன்பாடிய வானத்தொளி
> மேவும்மதி போலும்

தேன்பாடிய மலரின்னிடை
செந்தாமரை போலும்
மான்பாடிய விழியாரிடை
மரியாள்எனும் ஒருமான்.

மேகம்தவழ் அலைமேவிய
அளகந்தவழ் முகமும்
வேகம்தவழ் அலைமேவிய
கடல்போல் உருள்விழியும்
பாகும்தெளி தேனும்தவழ்
பவளக்கனி இதழும்
மோகம்தரு தரளக்கனி
இளமுரலின் முதிர்வும்.

உமரின் பாடல்களை ஆங்கிலத்தில் அழகாக மொழிபெயர்த்தவர், எட்வர்ட்பிட்ஜெரால்ட். இவர் இரு மொழி பெயர்ப்புக்கள் செய்துள்ளார். முதலாவது மொழிபெயர்ப்பைத் தழுவிக் கவிமணி தமிழாக்கியுள்ளார். இரண்டாவது மொழி பெயர்ப்பை ஆழமாகப் பின்பற்றி, ஆங்கில மெருகுடன் தமிழ்ப் பாடல்களை, ஆவேசத்துடன் பாடியிருக்கிறார் ச. து. சு. யோகியார். "தேவியின் நடையில் பழுத்துக் கனிந்த உள்ளம் ஆனந்தமாக அமைதியுடன் உலவுகிறது; யோகியாரின் நடையில் இளமையின் ஜிலுஜிலுப்பு விழுவிறுப்புடன் சுழல்கிறது"

கண்ணதாசன்

பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பின்னர், இன்று தமிழகம் போற்றும் கவிஞர் கண்ணதாசன் ஆவர். இக்கவிஞர், தமிழ் நாடு, தமிழ்மொழி, தமிழ்மக்கள் பற்றி வீரமாகவும், சோகமாகவும், இடையிடையே நகைச்சுவையாகவும், சொல்லினிமை சொக்கிவரப் பாடியுள்ளார். இசை பாடுவோர் அமைப்போர் திறத்தினும் பாநயத்தாலேயே நிற்கும் இயல்பு வாய்ந்த பல இனிமையான திரைப்பாடல்களை இயற்றியுள்ளார். மக்களுடைய உள்ளத்தை மகிழ்விக்கும் முறையில் சினிமாப் பாடல்களைச் சிறப்புறச் செய்த பெருமைகண்ணதாசனையே சாரும்.

இலக்கிய நயம் இழைந்த சிறு காவியங்களையும் இயற்றியுள்ளார். அவர் இயற்றியுள்ள 'மாங்கனி' என்ற தீந்தமிழ்க் காவியத்திலிருந்து சில தேனூன பகுதிகள்:

விரிக்காத தோகைமயில்! வண்டு வந்து
மடக்காத வெள்ளைமலர்! நிலவு கண்டு
சிரிக்காத அல்லிமுகம்! செகத்தில் யாரும்
தீண்டாத இளமைநலம்! பருவ ஞானம்.

என்று மங்கையின் அழகை வருணிக்கின்றார்.

அவள் ஆடும் ஆட்டத்தைக் கண்ட மக்கள் அடைந்த நிலையைக் கூறுகின்றார்:

செம்பருத்திப் பூப்போலும் உள்ளங் கையும்
செங்காந்தள் ஐந்தன்ன விரலும் காட்டி
அம்பெடுத்து வலைவேற்றித் தொடுத்து விட்டு
ஆடுகிறள் பிணமாக அவையோ ராங்கே.

*   *   *   *

தெந்தமித்தீம் என்றவரும் ஆடு கின்றார்!
'செத்தொழிந்தேன' என்றுசிலர் வாடு கின்றார்;
தந்தனத்தான் என்றவரும தாவு கின்றார்;
'தஞ்சமுற்றேன்' என்றுசிலர் மேவு கின்றார்.

மாங்கனி அகன்ற நிலையில், அவள்பால் மையல்கொண்ட அமைச்சர் மகன் செயலைப் பாருங்கள்!

சித்திரத்தான் அடிச்சுவட்டைத் தேடிப் பார்த்தான்
தென்றலது சென்றதற்குச் சுவடு ஏது?
கைத்திறத்தால் தரைதடவிப் பார்த்து அன்னாள்
கால்பட்ட இடத்திலிளஞ் சூடு கண்டான்' — என்கிறார்.

பருவம் அடைந்த ஒரு மங்கையை வருணிக்கும்பொழுது,

மானிடம் பார்வை பெற்றாய்!
மயிலிடம் சாயல் பெற்றாய்!

வான்முகில் கூந்தலே பெற்றாய்
மார்பினைத் தெங்கில் பெற்றாய்!
நூலிடை கொடியிற் பெற்றாய்!
நுவலரும் தாயின் மார்புப்
பாலிலே கன்னம் பெற்றாய்!
பனியிலே குவிரும் பெற்றாய்!

உனக்கெனச் சொந்தமாக ஒரங்கம் தனியே உண்டோ? அனைத்தும் இரவலே! இரவலே!—என்று கற்பனைக் களிப்பாடு கின்றான்.

தாயினை இழந்து நாதம் தவித்திட, நாதசுர மன்னன் இராசரத்தினம் இறந்த நிலையில், "இருந்ததோர் இசையைக் கையில் எடுத்து நீ வளர்த்தாய் என்றால் வருந்துவம் வழக்கம் போல ஆனால், பிறந்ததோர் இசையை ஈண்டு பெற்றவன் நீயே அல்லவா?" என்கின்றான்.

"குறுகிய சுரத்துக்குள்ளே குவலயம் படைத்தவன் நீ! செவியினில் ஓடி, எங்கள் சிந்தையில் ஓடி, இந்தப் புவியெல்லாம் ஓடி, நின்பால் பொங்கிய தோடி, வேறு இங்கு எவரிடம் போகும்?"

"நாட்டையே கலக்கி வைத்து, நாளுக்கு நாள் வளர்ந்த 'நாட்டை'யைக் கொண்டு சென்றாயே! அட! நான் மறந்து போனேன்! அன்ப நின் பெயரைச் சொன்னால், 'அடாணு' என்று அனைவரும் சொல்வரே!" என்று சோகச் சுவையில் தன் இராக அறிவையும் கவிஞன் கலந்து காட்டுகின்றான்.

வள்ளல் அழகப்பா இறந்த நாளில் சாவை நோக்கிக் கவிஞன் கேட்கின்றான்.

முதலாளி மார்களிலே முழுமுதலைக்
கல்விக்கே முடிந்து வைத்த
முதலாளை நீகொன்றாய்! மற்றவர்கள்
வாழ்கின்றார், முதலடிக்க

சதிகாரச் சாவே! நின்வயிற்றில்
சர்வகலா சாலை காண
இதமான ஆள்வேண்டு மென்றேஎம்
பெருமகனை எடுத்துச் சென்றாய் ?

கவிஞனுக்குச் சோகச்சுவை கைவரப்பெற்ற கலையாக உள்ளது எனலாம்.

சுரதா

பாவேந்தர் பாரதிதாசனுக்குத் தாசனாகத் திகழ்வதில் பெருமை கொள்பவர் இச் சுரதா என்ற கவிஞர்: சுப்புரத்தின தாசன் என்ற பெயரைச் சுருக்கி 'சுரதா' என்று தம் பெயரை அமைத்துள்ளார்.

அவருடைய சுவையான கவிதைகளைத் தொகுத்து சுரதாவின் தேன்மழை என்ற தலைப்பிலே ஒரு நூலை வெளியிட்டுள்ளார்.

முகிலைச் சிறப்பித்துக் கானல் வரிச் சந்தத்தில் இவர் பாடியுள்ள ஒரு பாடல்:

கடலுடன் தொடுபவனே! கருவொடு வருபவனே!
நெடுமலை துயில்பவனே! நிதிதரு மழைமகனே!
இடையிடை யிடியுடனே; இருள்நிற எழிலுடனே
கொடுவெயில் துயர்கெடவே குளிரொடு வந்தனையே!

'எப்போதும் இருப்பவர்கள்' என்ற தலைப்பில் மறைந்த தமிழ்த் தொண்டர்கள் பலரின் பணியைப் போற்றிப் புகழுகின்றார். வேதநாயகம் பிள்ளையைப்பற்றி, "வேதனை நாயகர், வேடிக்கை நாயகர், வீண்கதை நாயகரோ?—அவர் சாதனை நாயகர், சரித்திர நாயகர், தண்டமிழ் நாயகரே" என்கிறார். பாஸ்கர சேதுபதியைப்பற்றி 'அவர் ஆற்றல் மிகுந்தவர், ஆட்சி புரிந்தவர், ஆஸ்திக நீதிபதி—அவரே பாஸ்கர சேதுபதி' என்கிறார்.

8. பொது
உரைநடை வளர்ச்சி

முன்னுரை

பழங்காலத்தில் எழுதுவதற்குப் போதிய எழுதுகருவி களும் இல்லை; எழுதிய நூல்களைப் பாதுகாக்கப் போதிய வசதி களும் இல்லை. எனவே, பண்டைத் தமிழ்மக்கள் எழுத்து வேலையைப் பெரிதும் குறைக்கும் வகையில், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் செய்யுள் முறைகளையே கையாண்டுள்ளனர். மனப்பாடம் செய்வதற்கும், உரை நடையைக் காட்டிலும் எதுகை மோனையோடு இசைந்து வரும் செய்யுட் பகுதிகளே சிறந்தன வாகும். இத்தகைய பல காரணங்களால்தான், பழந்தமிழ் நூல்களில் உரைநடை இலக்கியம் குறைவாக விளங்கக் காண் கிறோம். பண்டு விளங்கிய உரைநடை நூல்களையும், இன்றைய உரைநடை இலக்கியத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் வரிசையாகக் காண்போம்.

பழந்தமிழ் உரைநடை நூல்கள்

தொல்காப்பியர் அடிவரையறையின்றி வரும் செய்யுள் வகைகளை ஆறு எனக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றாகிய உரைப்பகுதி வழக்கைப் பாட்டிடை வைத்த குறிப்பும், பாவின் றெழுந்த கிளவியும், பொருளொடு புணராப் பொய்ம்மொழியும், பொருளோடு புணர்ந்த நகைமொழியும் என நான்கு வகை களாக விளக்குகின்றார். எனவே முதன்முதலில் உரை நடையைச் செய்யுள் வகைகளுள் ஒன்றாகவே கருதியுள்ளனர் எனத் தெரிகிறது.

பின்னர் உரைநடையையும், செய்யுளையும் கலந்து கதை நூல்களை ஆக்கியுள்ளனர். இவ்வாறு உரை விரவிச் செய்யப் படும் கதைப்பொருளுக்கு எடுத்துக்காட்டாக உரையாசிரியர்

''பெருந்தேவனாரின் பாரதம்'' ''தகடூர் யாத்திரை'' என்ற இரு நூல்களைக் குறிப்பிடுகின்றார். பாரத நூலின் இடையிடையே உரைநடையும் கலந்து வருவதால், இதனை 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்றனர். 'தகடூர் யாத்திரை' என்னும் நூல் பெருஞ்சேரலிரும்பொறை என்ற சேர மன்னன் ஒருவன் தகடூரை ஆண்டுவந்த அதியமான் நெடுமானஞ்சி என்ற அரசனோடு போரிட்டு, அவனது நாட்டைக் கைப்பற்றிய விவரத்தைக் கூறுவதாகும். ''பாட்டு சிறுபான்மையாதலின்; அவை தகடூர் யாத்திரை போல்வன'' என்று (செய். சூத். 173) ஒன்றின் உரையில் காணப்படுவதால், இந் நூலில் பெரும்பான்மை உரை நடையும், சிறுபான்மைச் செய்யுளும் வந்துள்ளதாக அறியலாம். ஆனால், இன்று நமக்கு, இந் நூல் கிடைக்கவில்லை. இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகார நூலை ''உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்'' எனக் கூறுவர்.

பல்லவர்கள் காலத்தில் வாழ்ந்த சில சமண முனிவர்கள், வடமொழியும் தென்மொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் 'ஸ்ரீபுராணம்' 'கத்யசிந்தாமணி' போன்ற வசன நூல்களை இயற்றியுள்ளனர்.

எனினும், இக்காலத்தே தோன்றியதாகக் கருதப்படும் 'இறையனார் களவியல் உரை' நூல், குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும். இதனை, 'இறையனார் அகப்பொருள் உரை' எனவும் அழைப்பர்; வாய்வழி வந்த நக்கீரர் உரையை, நீலகண்டனார் என்பார் எழுதியுள்ளார். இந் நூலின் வாக்கியங்கள் மிக நீளமாய் உள்ளன. கரடுமுரடான இலக்கியச் சொற்கள் நிறைந்திருந்தாலும், எதுகைமோனை நயத்தோடு இன்பம் பயக்கவல்ல செய்யுள் நடையாகவே விளங்குகிறது.

இன்றைய உரைநடையின் தோற்றம்

சோழர் காலத்தில் பற்பல உரையாசிரியர்கள் தோன்றித் தமிழ்மொழியில் உரைநடை தோன்ற வழிகாட்டியுள்ளனர். தொல்காப்பியத்திற்கு முதன்முதல் உரையெழுதிய பெரியார் இளம்பூரணர் ஆவர். எழுத்ததிகாரத்திற்கு அவர்

இயற்றிய உரை மிகச் சிறந்ததாகும். சொல் சுருக்கம் வாய்ந்த எளிய உரைநடையைக் கையாண்டுள்ளனர். கல்லாடர், பேராசிரியர் என்னும் பெருமக்களும் தொல்காப்பியத்திற்கு உரை வகுத்துள்ளனர். வடமொழி அறிவும், தமிழ் இலக்கியப் பயிற்சியும் நிறைந்த சேனாவரையர், தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு எழுதிய உரை சிறப்புடையதாகும். தொல்காப்பியம் முழுமைக்கும், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி ஆகிய இலக்கிய நூல்களுக்கும், விரிவான உரை இயற்றியவர் நச்சினார்க்கினியர் ஆவர்; அவருடைய தொல்காப்பிய உரையை யாவரும் பாராட்டுவர். இலக்கிய நூல்களை நுணுகிச் சுவைத்து நுட்பமாக எழுதுவதில் ஆற்றல் மிக்கவர்; தாம் எழுதிய உரையில் 80க்கு மேற்பட்ட இலக்கிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார். மிகச் சுருக்கமாகக் கவிதைச் சுவை படத் திருக்குறளுக்கு உரை வகுத்த மற்றொரு பெரியார் பரிமேலழகராவார். சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் சிறந்த முத்தமிழ் வித்தகராவர். 39 இயல் தமிழ் நூல்களிலிருந்தும் 7 இசைத் தமிழ் நூல்களிலிருந்தும், 10 நாடகத் தமிழ் நூல்களில் இருந்தும் மேற்கோள் காட்டித் தம் நூல் உரையை வளப்படுத்துகிறார். இவ்வாறு உரையாசிரியர்கள் தமிழ் உரைநடைத் தோற்றத்திற்கு வித்திட்டனர் எனலாம். இவர்கள் இயற்றிய நூல்களை இன்று வழங்கும் உரைநடை (Prose) என்னும் பொருளில் அழைக்க முடியாது. அவற்றை விளக்க உரை (Commentary) என்றுதான் கூறவேண்டும். எனினும், தமிழ்மொழியில் உரைநடை முதன்முதலாக, இவர்கள் எழுதிய உரைகளிலிருந்தே உருவாகியதெனக் கூறலாம்.

முதல் உரைநடை நூல்

ஐரோப்பியர் வருகையால் இந்தியாவிற்கு ஏற்பட்ட பல நன்மைகளில் தலையாயது, முதன்முதலாகத் தமிழ்நாட்டில் அச்சுக்கூடத்தை நிறுவிப் பல உரைநடை நூல்களை அச்சிட்டு வெளியிட்டமையாகும். அம்பலக்காடு, புன்னைக்காயல், கொச்சி முதலான இடங்களில் இந்தியாவிலேயே முதன் முதலாக அச்சுக்கூடங்களை நிறுவிப் பல தமிழ்ப்புத்தகங்களை வெளியிட்டு இயேசு சபைக்

குருக்களுக்கு (Society of Jesus) தமிழகம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளது.

1555 ஆம் ஆண்டு முதன்முதலாகத் தமிழ்நூல் போர்த்துக் கல்லின் தலைநகராகிய லிஸ்பன் மாநகரில் அச்சாகியது. அஃது ஐரோப்பிய அச்சு வரலாற்றில் புதுமையாக வெளியிடப்பட்ட கிறித்தவ மறைநூலாகும்.

1577 ஆம் ஆண்டு 16 பக்கங்கள் அடங்கிய 'தம்பிரான் வணக்கம்' என்னும் நூலைக் கொல்லத்தில் அச்சிட்டனர். இஃது இந்திய நாட்டில் முதன்முதலாக அச்சாகிய நூலாகும்.

"உரைநடையில் நூல் இயற்றும் வழக்கம் ஐரோப்பியர் தொடர்பால் ஏற்பட்டதாகும்" என மர்டாக் துரை குறிப்பிடு கிறார். இக் கூற்று, தமிழ்மொழிக்கு மட்டும் அன்று, இந்திய நாட்டிலுள்ள எல்லா மொழிகளுக்கும் பொருந்துவதாகும். எனினும் இந்தியமொழிகளுள் முதன்முதலாக உரைநடை நூல் தோன்றிய பெருமை தமிழ்மொழியையே சாரும்.

தமிழ் உரைநடையின் தந்தை

இன்றைய தமிழ் உரைநடையின் தந்தையாகப் போற்றப் படும் வீரமாமுனிவருக்கு முன்னரே தமிழ்மொழிக்குத் தொண் டாற்றிய மேனாட்டினர் பலராவர். 17 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில், இந்துத் துறவிபோல் எளிய வாழ்வு வாழ்ந்து, இயேசு சபைக் குருவாகக் கிறித்தவ மதப் பணிபுரிந்த தத்துவ போதக சுவாமி என்பவர், இத்தாலி நாட்டினராவர். ராபர்ட் டி நொபிலி என்பது இவருடைய இயற்பெயராகும். இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். அச்சிடப்படாததால் இவருடைய நூல்களில் பெரும்பாலானவை அழிந்துவிட்டன. எனினும் வெளிப் படுத்தக் கடினமான வேதாந்தக் கருத்துக்களையும், தத்துவ உண்மைகளையும், தமிழ்மொழியில் எழுதிக் காட்டமுடியும் என்பதனை உறுதிசெய்த பெருந்தகை தத்துவ போதகராவர். தரங்கம்பாடியில் அச்சுக் கூடத்தையும், அச்சடிக்கும் காகிதங் களைத் தயாரிப்பதற்காகப் பெரும் பொருட் செலவில் காகிதத்

தொழிற்சாலை ஒன்றையும் நிறுவித் தமிழ்நாட்டில் பண்டிதர் முதல் பாமரர் வரை எல்லா மக்களுக்கும், முதன்முதல் அச்சுப் புத்தகத்தை வழங்கிய பெருந்தகை ஸீகன் பால்கு என்ற புராட்டஸ்ண்டு கிறித்தவ மதத்தைப் போதித்த ஜெர்மானிய குரு ஆவார்.

இவர் காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்து. இயேசு சபைக் குருவாகத் தொண்டாற்றிய பெருந்தகைதான் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர். இவர் பல உரைநடை நூல்களைப் பற்பல நடையில் இயற்றித் தந்துள்ளார். ''வேதியர் ஒழுக்கம்,' 'வேத விளக்கம்' போன்ற நூல்கள் இலக்கியத் தமிழில் அமைந்துள்ளது. எளிய பாமர நடையிலே இவர் எழுதிய 'பரமார்த்த குரு கதை' என்ற நகைச்சுவை நூல் தமிழில் தோன்றிய முதல் ஏளன இலக்கிய மாகும். இவ்வாறு தமிழ்மொழியில் முதன்முதலாகப் பல சிறந்த உரைநடை நூல்களை இயற்றிய வீரமாமுனிவரைத் ''தமிழ் உரைநடையின் தந்தை'' எனத் தமிழ் உலகம் பாராட்டிச் சிறப்பிக்கிறது.

உரைநடையின் வளர்ச்சி

19 ஆம் நூற்றாண்டு

18ஆம் நூற்றாண்டுவரை எழுந்த பற்பல வகையான அரசியல் குழப்பங்கள் 19ஆம் நூற்றாண்டில் அடங்கி, நாட்டில் அமைதியும், ஒழுங்கும் நிலைபெறவே, மிக்க வலுவான ஆங்கில அரசாட்சி வேரூன்றியது. இந் நூற்றாண்டில் அரசியலாரும் கிறித்தவக் குருக்களும் நாடு முழுவதும் பல்கலைக் கழகங்களையும், பாடசாலைகளையும் நிறுவினர்; ஐரோப்பிய முறைப்படி மாணவர்களுக்குப் பற்பல பாடங்களைக் கற்பித்தனர். சென்னைக் கல்விச் சங்கம் (Madras College) என்பதை நிறுவிப் பாடப் புத்தகங்களையும், மற்றும் சில உரைநடைப் புத்தகங்களையும் எழுதி வெளியிட்டனர். சென்னைப் பள்ளிப் புத்தகக் கழகம் (The Madras School Society) என்பதை 1850 இல் நிறுவிச் சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களுக்கு இக் கழகத்தார் தகுந்த பரிசுகளை

வழங்கி, உரைநடை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றினர். இந்திய நாட்டை அப்பொழுது ஆண்ட கிழக்கிந்தியக் கம்பெனியார், இலக்கண நூல்களை, எளிய உரை நடையில் எழுதி வெளியிடுவோர்க்குப் பரிசளிப்பதாகக் கூறவே, தமிழில் பல இலக்கண நூல்களைச் சிறந்த உரைநடை வடிவில் எழுதி வெளியிட்டனர்; இந் நூற்றாண்டில் நாடு முழுதும் அச்சுக் கூடங்களை ஆங்காங்கு நிறுவி, எண்ணற்ற உரைநடைநூல்களை இயற்றி அச்சிட்டனர். முக்கியமாக 'மிஷன்' என்னும் கிறித்தவ சங்கங்கள், மதச் சார்பான உரைநடை நூல்களை ஏராளமாக அச்சிட்டுக் குறைந்த விலைக்குக் கொடுத்தன. கிறித்தவர்களின் சமய ஊழியத்தைக் கண்ட இந்துக்கள் எழுச்சி பெற்று இந்து மதச் சார்பான புராண இதிகாச நூல்களை வசன நடையில் எழுதி வெளியிட்டனர். சென்ற நூற்றாண்டில்தான் முதன் முதலாகச் செய்தித் தாள்களும், திங்கள், வார வெளியீடுகளும் தமிழ்நாட்டில் தோன்றின. இவ்வாறு 19 ஆம் நூற்றாண்டில் பற்பல வழிகளில், உரைநடை இலக்கியங்கள் வளரத் தொடங்கின.

ஆறுமுக நாவலர்

வாழ்க்கைக் குறிப்புக்கள்

யாழ்ப்பாணத்து நல்லூரில் சைவ வேளாளர் குலத்தில் 1832 ஆம் ஆண்டில் தோன்றினார். ஆங்கில அறிவும், தமிழ்ப் புலமையும் இளமையிலேயே கைவரப்பெற்றுத் தம் 19 ஆம் வயதிலேயே இருமொழி கற்பிக்கும் ஆசிரியராக அமர்ந்தார். தூய தமிழில் பைபிள் நூலை மொழிபெயர்க்கத் துணைபுரிந்தார். சைவசித்தாந்த நூல்களையும், திருமுறைகளையும் தெளிவாகக் கற்றுச் சைவ சமயத்தைப் பரப்பப் பெரிதும் முயன்றார்; அதற்காகப் பற்பல நூல்களையும் இயற்றினார். அவருக்கு 27 வயது ஆகும்பொழுது 'நாவலர்' என்ற பட்டத்தைத் திருவாவடுதுறை ஆதீனத்தார் வழங்கி அவரைச் சிறப்பித்தனர். அவரிடம் கல்வி கற்ற மாணவர்களிலே 'சபாபதி நாவலர்' தலைசிறந்தவராவார்.

ஆற்றிய தொண்டுகள்

சென்னையில் ஓர் அச்சகத்தை நிறுவிச் சைவ வினவிடை, சைவ சமயநெறி உரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற சமய நூல்களை வெளியிட்டார். ஆங்காங்குச் சென்று சமயச் சொற்பொழிவுகளையும் ஆற்றினர். பாரதம், பெரியபுராணம், கந்த புராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை, சிவஞானபோதச் சிற்றுரை போன்ற இலக்கிய நூல்களையும், இலக்கண வினவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூல் விருத்தி, காண்டிகை உரை. இலக்கணக் கொத்து, இலக்கணச் சூருவளி போன்ற இலக்கண நூல்களையும் எழுதிப் பதிப்பித்தார். 1, 2, 3, 4 ஆம் வகுப்புக்களுக்குரிய பால பாடங்களை எழுதினர். கணிதவாய்பாடுகளை வெளியிட்டார். திருவிளையாடற்புராண வசனம் பெரியபுராண வசனம் ஆகியவற்றையும் செம்மையாக அச்சாக்கி வெளியிட்டார். இவர் காலந்தோறும் வெளியிட்ட கட்டுரைகளும் கண்டனங்களும் கணக்கற்றன; கீர்த்தனங்கள், பாடல்கள் சிலவற்றையும் இயற்றியுள்ளார்.

சிறந்த பதிப்பாசிரியர், ஆழ்ந்த சமயாசிரியர், தேர்ந்த உரைநடை ஆசிரியர் ஆவார் நம் ஆறுமுக நாவலர். இலக்கண வழு இல்லாத தூய்மையான எளிய நடையை முதன் முதல் கையாண்டவர் நாவலரேயாவர். நாவலர் இறந்ததைச் செவியுற்ற ஒரு புலவர் "வைதாலும் வழுவின்றி வைவாரே" எனப் புலம்பிக் கூறுகிறர். சிறுவர்கட்கென்று வயது வாரியாகப் பல பாடநூல்களை இயற்றியுள்ளார். இவ்வாறு தமிழ் உரைநடை வளர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றிய ஆறுமுக நாவலரை "**வசனநடை கைவந்த வல்லாளர்**" எனப் பரிதிமாற் கலைஞர் பாராட்டுகிறர்.

நாவலர் காலத்திலேயே வாழ்ந்து, பொருட்செறிவும் அருட் கனிவும் நிறைந்த "மனுமுறை கண்ட வாசகம்" எனும் நூலைச் சொல்லடுக்குச் சுவைபட இயற்றித் தந்தவர், அருட்பெருங் கடலான இராமலிங்க அடிகளாராவர். இவர் இயற்றிய 'ஜீவ காருண்ய ஒழுக்கம்' என்ற நூல் கற்போர் உள்ளத்தைக் கனிய

வைக்கும் இயல்பினதாகும். 19 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த மற்ருெரு சிறந்த உரைநடையாசிரியர், சென்னைக் கல்விச் சங்கம் தோன்றுவதற்கு உறுதுணையாக இருந்த தாண்டவராய முதலியார் ஆவர். சிறந்த கதைப் பின்னலும் நகைச்சுவையும் கொண்டு நீதிநூல் கருத்துக்களும் எண்ணற்ற பழமொழிகளும் மிகுந்து விளங்கும் பஞ்சதந்திரக் கதை எனும் இவர் இயற்றிய நூல், குறிப்பிடத்தக்க சிறப்புப்பெற்ற நூலாகும்; நாவலரின் மாணவரான சபாபதி நாவலர் 'திராவிடப் பிரகாசிகை' என்னும் நூலை இயற்றித் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களுக்கு வழி காட்டியுள்ளார்

வீராசாமி செட்டியார்

19 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க மற்ருெரு சிறந்த உரைநடை ஆசிரியர் அட்டாவதானம் வீராசாமி செட்டியாராவர். இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றியுள்ளார். ஔவையார், கம்பர், புகழேந்தி போன்ற தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கைபற்றி, நாட்டில் வழங்கும் சுவையான கதை நிகழ்ச்சிகளைத் தொகுத்து, "விநோதரச மஞ்சரி" என்ற ஓர் அருமையான உரைநடை நூலை இயற்றியுள்ளார். உவமைகளும், பழமொழிகளும், பிற மொழிச் சொற்களும் இவர் எழுதும் உரைநடையை ஆங்காங்கு அலங்கரித்துச் செல்லும். கவிதைச் சுவையும் கற்பனை இனிமையும் இவரது உரைநடையில் விரவி வரக் காணலாம்.

வேதநாயகம் பிள்ளை

மேனுடுகளில் நாவல் என்னும் புதுவகை இலக்கியத்தைச் சாமுவேல் ரிச்செட்சன் என்பவர் தொடங்கி வைத்ததுபோலத் தமிழகத்தில் பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி ஆகிய நாவல்களை இயற்றிப் புத்தம் புதிய இவ்விலக்கிய வகைக்கு, வழிகாட்டிய பெருமை வேதநாயகம் பிள்ளையைச் சேரும். பாடல், வசனம், கீர்த்தனைகளை எளிய இனிய நடையில் இயற்றிய பாரதிக்கு வழிகாட்டியவர் இவ் வேதநாயகம் பிள்ளையாவர். இவர்தம் நூல்களில் கூறும் கருத்துக்கள்

மிக முற்போக்கு உடையன. அவர் கூறும் அறிவுரை இன்றைய நிலைமைக்கு ஏற்றதாகவே உள்ளது. சிறந்த தாய்மொழிப் பற்றுடையவர்; தமிழ்மொழி வளருவதற்கான வழிவகைகளையும் நன்கு சுட்டிக் காட்டுகின்றார்.

20ஆம் நூற்றாண்டு

20ஆம் நூற்றாண்டை உரைநடை இலக்கியத்தின் பொற் காலம் என்று கூறலாம்.

இதுவரை ஓலைச் சுவடிகளிலே உறங்கிக்கொண்டிருந்த பழந்தமிழ்ச் செய்யுட்களைத் தேடியெடுத்துத் தமிழ் அறிஞர்கள் சிலர் பதிப்பிக்க முன்வந்தனர்; கடினமாக விளங்கிய அந் நூல்களுக்கு எளிய உரைகளும், அரிய முன்னுரைகளும் எழுதி நூல்களைத் தெளிவாக்கி வெளியிடலாயினர்; சிலர் பழஞ் செய்யுள்களில் தேங்கிக் கிடந்த கவிதை வெள்ளத்தைக் காட்சி காட்சிகளாகச் சுருக்கித் தொகுத்துத் தனி நூல்களாக எழுதினர். சில பதிப்பகத்தார்கள் முன்வந்து பழந்தமிழ் நூல்களைக் குறிப்புக்களுடன் ஆயிரக்கணக்கில் மலிவுப் பதிப்புக்களாக வெளி யிட்டுத் தமிழறிவை நாடெங்கிலும் பரப்பினர்; ஆங்கிலக் கல்வியின் பயனாகத் தமிழில் சிறுகதை இலக்கியங்களும், நாவல் களும் ஓரங்க நாடகங்களும் எழுந்தன; சிறந்த மேனாட்டு நூல் களை மொழி பெயர்த்து எழுதினர். வானொலியும், திரைப்படங் களும் தமிழ் வளர்க்க முன்வந்தன. பல்கலைக் கழகங்கள் பாடத் திட்டங்கள் வகுத்துக் கொடுத்தன; தமிழ் வளர்க்கப் பல சங்கங் களும், எழுத்தாளர்களை ஊக்குவிக்கப் பல கழகங்களும் தோன் றின. இவ்வாறு 20 ஆம் நூற்றாண்டில் உரைநடை இலக்கியம் பற்பல புத்தம்புதுத் துறைகளில் வளர்ச்சியுற்றது.

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த அறிஞர்களில் சி. வை. தாமோதரம் பிள்ளை முன்னோடியாவார். பதிப்பாசிரியர்களில் இன்றுவரை தலைசிறந்தவராகக் கருதப்படுபவர் டாக்டர், உ. வே. சாமிநாதையர் ஆவார்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

வாழ்க்கைக் குறிப்புக்கள்

தஞ்சை மாவட்டம் உத்தமதானபுரத்தைச் சேர்ந்த வேங்கடசுப்பையர் என்பாருக்கு மகவாக 1855 ஆம் ஆண்டில் தோன்றினர். இளமையில், அரியலூர் சடகோப ஐயங்கார், விருத்தாசல முதலியார் ஆகியோரிடம் தமிழ் கற்றுத் தமிழ் இலக்கியத்தின் பரப்பையும், சிறப்பையும் உணர்ந்தார். தமது 17 ஆம் வயதில் முதுபெரும் புலவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்கத் திருவாவடுதுறைக்குச் சென்றார்; ஆங்கு 5 ஆண்டுகள் கல்வி கற்றார். அங்கு வந்த பற்பல சான்றோர்களோடு உறவாடித் தமிழ் அறிவை வளர்த்தார். அங்கு ஆசிரியராகவும் அமர்ந்து பற்பல மாணவர்களுக்குப் பாடங்களையும் கற்பித்தார். தம் 24 ஆம் வயதில் தியாகராசச் செட்டியாரின் உதவியால், அவர் ஆசிரியராயிருந்த கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக அமர்ந்தார். அவர் அந் நன்றியை மறவாமல், தாம் வாழ்ந்த வீட்டிற்குத் 'தியாகராச விலாசம்' என்று பெயரிட்டு மகிழ்ந்தார். அங்கு தான் சேலம் இராமசாமி முதலியார் அவர்கள், ஐயர் அவர்களைக் கண்டு சிந்தாமணிப் பிரதியைக் கொடுத்து அவரை நூல் பதிப்பிக்கும் துறையில் முதன்முதலாக ஈடுபடுத்தினர்.

1903ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியர் பதவியை ஏற்றார். தாம் ஆசிரியராகப் பணியாற்றிய பொழுது மாணவர்கள் நெஞ்சிலே நிலையான இடத்தைப் பெற்றார்; மாணவர்களையும் மற்றவர்களையும் தமிழை மதிக்கவும் துதிக்கவும் செய்தார்.

தம் வாழ்வில் ஏறத்தாழ 60 ஆண்டுகள் தமிழ்ப்பணியே புரிந்தார்; எண்ணற்ற தமிழ் நூல்களைப் பதிப்பித்தார். ஆங்கில அரசினர், "மகாமகோபாத்தியாயர்" என்ற பட்டத்தை அளித்தனர்; பல்கலைக் கழகத்தினர், "டாக்டர்" பட்டத்தை வழங்கினர்; 1942 இல் நம் "தமிழ்த் தாத்தா" இயற்கை எய்தினர்.

ஆற்றிய தொண்டுகள்

ஐயரவர்கள் தமிழகம் எங்கும் சிதறிக்கிடந்த இலக்கிய ஏடுகளை எல்லாம் தேடிப்பெற்று அவற்றில் செல்லரித்துக் கிடந்த பகுதிகளைச் சீராக்கி, "பண்டிதரே யன்றிப் பாமர மக்களும் படித்துப் பயன்பெறும் வண்ணம்" அச்சிட்டு உதவினர்.

"பத்துப்பாட்டு என்ற சங்க இலக்கியத்தைப் பதிப்பித்து அதற்குச் சாகாவரம் அளித்தார். சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி என்ற மூன்று காப்பியங்களையும் அழியாமல் காத்தார். மற்றும் எட்டுத் தொகைகளில், ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு ஆகியவற்றையும், காலனிடமிருந்து காப்பாற்றினர்." இவ்வாறு சங்க இலக்கியங்களைச் சமூக உடைமையாக்கினர். மடங்களிலே மறைந்து கிடந்த தமிழை மக்கள் மடியிலே தவழச் செய்த பெருமை சாமிநாதையரையே சாரும்.

மேலும், பெருங்கதை, புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்களையும் பதிப்பித்தார். திருவிளையாடற் புராணம், சீகாளத்திப் புராணம், நன்னூல் மயிலைநாதர் உரை ஆகியவை இவர் பதிப்பித்த வேறு பிற நூல்களாகும். இவர் பதிப்பித்த எல்லா நூல்களிலும் முன்னும் பின்னும் ஆராய்ச்சிக் குறிப்புக் களும், நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறுகளும், மேற்கோள் காட்டும் நூல்களின் பட்டியல்களும், அரும்பத அகராதியும், ஒழுங்காக ஆங்கில நூற்பதிப்பு முறைப்படி எழுதிப் பதிப்பித் திருப்பது தனிப்பெருஞ் சிறப்பெனலாம்.

'சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்'' என்ற நூல் அவர் தம் ஆராய்ச்சித் திறத்தையும், 'கண்டதும் கேட்டதும்,' 'புதியதும் பழையதும்', 'நினைவுமஞ்சரி' போன்ற நூல்கள் அவர்தம் வாழ்க்கை அனுபவங்களையும் தெளிவாக விளக்குவன வாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி ஆகிய நூல் களின் கதைகளைச் சுருக்கி வெளியிட்டுள்ளார். தம் சொந்த வரலாற்றை 'என் சரித்திரம்' என்ற நூலாகவும், தம் ஆசிரியர் வரலாற்றை ''மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்'' என்ற நூலாகவும் எழுதியுள்ளார்.

"தமிழ்ச் சுவடிகள்" இருக்கும் இடங்களுக்கெல்லாம் ஓடோடிச் சென்ற திருவடிகளோடும் அவை பெற்ற மகிழ்ச்சியால் விதிர்விதிர்க்கும் திருக்கரங்களோடும், தமிழன் பெருமையை நினைத்த அளவில் உவகையால் ஓங்கியமைந்த திருப்புயங்களோடும், தமிழ் ஒளியோடு திகழும் திருநயனங்களோடும் அமைந்த இவர் புகழுடம்பு சென்னைக் கடற்கரையில், மாநிலக் கல்லூரியின் முகப்பிலே, சிலை வடிவாக நின்று காட்சியளிக்கக் காணலாம்.

"குடந்தை நகர்க் கலைஞர்கோவே! தமிழ்மொழியின் வாழ்வுள்ள காலம்வரை புலவர் நெஞ்சம் போற்றிய வண்ணம் இறப்பின்றித் திகழ்வாயே" எனப் பாரதி இவரைப் பாராட்டியுள்ளார்.

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைக்கும், ந. மு வேங்கடசாமி நாட்டார் அகநானூறு, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களுக்கும், ஒளவை துரைசாமிப் பிள்ளை பதிற்றுப்பத்து, புறநானூறு போன்றவற்றிற்கும், கோபால கிருஷ்ணமாச்சாரியார் கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகியவற்றிற்கும் உரை கண்டுள்ளனர். சங்கநூல் கருத்துக்களை எளிய முறையில் டாக்டர் மு. வரதராசனுர், கி. வா. ஜகந்நாதன் போன்றோர் சிறுசிறு நூல்களாகச் சுருக்கி, அழகாக வெளியிட்டுள்ளனர்.

மறைமலையடிகள்

வாழ்க்கைக் குறிப்புக்கள்

இவர் நாகப்பட்டினத்தை அடுத்த காடம்பாடி என்ற ஊரில் 1876 ஆம் ஆண்டில் தோன்றினர்; இளமையில் புலமை பெற்று 'மனோன்மணீயம்' இயற்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் போற்றுதலுக்கு ஆளாகி, அவர் அளித்த சான்றிதழால், சென்னை கிறித்தவக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பதவியேற்றுப் பணிபுரிந்தார். தமிழ் அறிவோடு ஆங்கில வடமொழிப் புலமையும் பெற்றவராவர். வாழ்நாள் முழுவதும் சொற்பொழிவுகள் ஆற்றியும், ஆராய்ச்சிகள் செய்தும், அரிய கருத்துக்கள் பொதிந்த நூல்களை வெளியிட்டும் தமிழ்ப்பணி புரிந்துள்ளார்.

ஆற்றிய பணிகள்

தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த பெருமை அடிகளாரையே சாரும். சுவாமி வேதாசலம் என்ற தம் பெயரை மறைமலை அடிகளாகவும், தாம் நடத்திய ஞானசாகரம் என்ற இதழை "அறிவுக் கடலா"கவும் மாற்றி அமைத்துக்கொண்டார். இவரைப் பின்பற்றித் தமிழகத்தில் பலரும் தம் பெயரை மாற்றிக் கொண்டனர்; பற்பல தனித்தமிழ்ப் பெயர்கள் இவரால் வழக்கிற்கு வந்தன.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, சிவஞான போத ஆராய்ச்சி, மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், திருவாசக விரிவுரை ஆகிய நூல்கள் அவர் அறிவுத்திறத்தை எடுத்துக்காட்டுவனவாகும். வடமொழி ஆதிக்கத்தை வெறுத்தாலும், அதன் அறிவைப் போற்றும் முறையில் "சாகுந்தல நாடக"த்தைக் கருத்து வளம் குன்றாமல் தமக்கேயுரிய தன்னேரிலாத் தமிழ் நடையில் மொழிபெயர்த்துள்ளார். திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சி ஆகிய செய்யுள் நூல்களை இயற்றியுள்ளார். கோகிலாம்பாள் கடிதங்கள், நாகநாட்டரசி ஆகியவை இவர் எழுதிய நாவல்களாகும். "சிறுவர்க்கான செந்தமிழ்" என்ற தலைப்பில் பாட நூல்களையும் வரைந்துள்ளார். அடிகளின் "அறிவுரைக் கொத்து" என்ற நூலே "கட்டுரை" என்ற தமிழ்ச்சொல்லையும் கட்டுரை எழுதும் முறைகளையும் மாணவர்களிடையே பரப்பிற்று.

அடிகளார் "The Ocean of Wisdom' என்ற ஆங்கில இதழின் ஆசிரியருமாவார். ஆங்கிலமொழியில் "Ancient and Modern Tamil Poets" என்ற நூலை எழுதியுள்ளார். தாம் எழுதும் நூல்களில் ஆங்கில ஆசிரியர்கள் பலரின் கருத்துக்களை மேற்கோளாகக் காட்டுவார். ஆங்கில அறிஞர் அடிசனைப் பின்பற்றிச் "சிந்தனைக் கட்டுரை"களைப் புனைந்துள்ளார். மரணத்தின் பின் மனிதர் நிலை, யோக நித்திரை, மக்கள் நூறுண்டு உயிர் வாழ்தல் எப்படி? போன்றவை அத்தகைய புதிய படைப்புக்களாகும்.

"பரிமேலழகரின் உரைநடை இனிமையும், நக்கீரரின் தருக்க நெறிபிறழாத் தடைவிடை நலமும், சேனாவரையரின் திட்ப நுட்பமும், சிவஞான முனிவரின் சொற்றொடர் நீட்சியும், மறுப்புரை மாட்சியும் மிக்க செந்தமிழ் உரைநடையாளர் நம் மறைமலை அடிகளார் ஆவார்.

"அடிகளார், தனித்தமிழ் இயக்கத்தின் தலைவராவார்; தன்மான இயக்கத்தின் முன்னோடியாவார்.

"மறைமலை ஒரு பெரும் அறிவுச்சுடர்; தமிழ் நிலவு; சைவ வான்; தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ் வுறக்கம் போக்கிய பெருமை அடிகளாருக்கே உண்டு'' என்கிறார் திரு. வி. க. அடிகளாருடைய அடிச்சுவட்டைப் பின் பற்றி டாக்டர் மு. வ. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், ஓவச்செய்தி போன்ற நூல்களையும், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ. வள்ளுவர் கண்ட நாடும் காமமும், கானல்வரி என்ற ஆழ்ந்த புலமை மிக்க நூல்களையும், டாக்டர் வ. சுப. மாணிக்கம், வள்ளுவம், தமிழ்க் காதல் என்னும் அரிய நூல்களையும், ரா. பி சேதுப்பிள்ளை ஊரும்பேரும் என்ற ஒப்பற்ற இனிய நூலையும், ஆராய்ச்சித் திறம் மிக்க 'நெடுநல் வாடை ஆராய்ச்சி' என்ற நூலைக் கோதண்டபாணிப் பிள்ளையும், இயற்றித் தந்துள்ளனர்.

திரு. வி. கலியாணசுந்தரனார்

வாழ்க்கைக் குறிப்புக்கள்

திருவாரூரைச் சேர்ந்த விருத்தாசலம் முதலியாருக்கும் சின்னம்மாளுக்கும் மகனாகத் துள்ளம் என்ற சிற்றூரில் 1883 ஆம் ஆண்டில் பிறந்தார். சென்னையில் யாழ்ப்பாணம் கதிரை வேற் பிள்ளையவர்களிடம் தமிழ் கற்றார். மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரிடம் சித்தாந்த சாத்திரம் பயின்றார்; மறைமலையடிகளாரிடம் இலக்கிய நூல்களைக் கற்றார். அவர் அளித்த சான்றிதழால் வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரிய ராகப் பணிபுரிந்தார். 1917 இல் தேசபக்தன் என்ற செய்தித்

தாளைத் தொடங்கினர். இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொழிலாளர் சங்கத்தைச் சென்னையிலேயே தோற்றுவிக்கத் துணைபுரிந்தார். பற்பல மாநாடுகளுக்குத் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றியுள்ளார். 'நவசக்தி' என்ற கிழமை இதழின் ஆசிரியருமாவார். நோய்வாய்ப்பட்டு உடல் தளர்ந்த நிலையிலும் கண்பார்வை இழந்த நேரத்திலும் பிறர்க்குச் சொல்லிச் சொல்லி எழுதச் செய்தார்.

ஆற்றிய தொண்டுகள்

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று, வாழ்நாள் முழுவதும் ஓயாது உழைத்த பெருந்தகையாவார். இலக்கியக் கழகங்கள், இளைஞர் முன்னேற்ற அமைப்புக்கள், சீர்திருத்தத் துறைகள், சீவகாருணியச் சங்கங்கள் முதலிய பலவற்றில் தொடர்பு கொண்டு தொண்டு புரிந்துள்ளார். எழுத்திலும் பேச்சிலும், காந்தியடிகளின் அஹிம்சை நெறியைப் பரப்பினர். பெண்மையைச் சிறப்பித்தார். தூய தமிழில் இனிமையும், எளிமையும் தோன்றப் பேசுவதில் வல்லவராவர். எளிமை, தூய்மை, பொதுமை இவர் வாழ்வில் காணப்படும் முக்கிய குறிக்கோள்களாகும்.

பெரியபுராணத்திற்குக் குறிப்புரையும், திருக்குறளில் முதல் பத்து அதிகாரங்களுக்கு விரிவுரையும் வரைந்துள்ளார்.

உத்தமர் காந்தியின் உயர்வை விளக்க "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்ற நூலையும், பெண்ணின் பெருமையை விளக்கப் "பெண்ணின் பெருமை அல்லது, வாழ்க்கைத் துணை நலம்" என்ற நூலையும் இயற்றியுள்ளார். 'முருகன் அல்லது அழகு' 'சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து' 'தமிழ்த் தென்றல்' ஆகிய நூல்கள், நடை நயம் வாய்ந்தவையாகும். தாயுமானவர், இராமலிங்க அடிகள் ஆகியோரின் சிறப்பை விரித்துரைத்த இப் பெரியார் 'கிறித்துவின் அருள் வேட்டல்' போன்ற நூல்களையும் ஆக்கியுள்ளார்.

திரு. வி. க முனைப்புடைய விடுதலை வீரர் ஆவார்; தேர்ந்த தமிழ் அறிஞர் ஆவார்; உயர்ந்த மக்கள் தொண்டர் ஆவார்.

பிற நூல்கள்

'கம்பராமாயண ரசனை' யை எழுதி, வ. வே. சு. ஐயரவர்கள் இலக்கியத் திறனாய்வுத் துறையைத் தமிழில் முதன் முதலாகத் தொடங்கிவைத்தார். அதைத் தொடர்ந்து ஆ. முத்துசிவன் 'அசலும் நகலும்', 'அசோக வனம்' என்ற நூல்களை எழுதினார். அ. ச. ஞானசம்பந்தன் 'இலக்கியக்கலை', 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' போன்ற பல திறனாய்வு நூல்களை வெளியிட்டார். 'இலக்கிய மரபு' 'இலக்கியத் திறன்' போன்ற நூல்களை டாக்டர் மு. வ. இயற்றித் திறனாய்வுத் துறையை மேன்மையுறச் செய்தார். இத் துறையில் குறிப்பிடத்தக்க மற்றிரு நல்லறிஞர் திரு. மார்க்கபந்து சர்மா, கோவிந்தசாமி ஆகியோர் ஆவர்.

தமிழிலக்கிய வரலாற்றை முதன் முதலாக ஆங்கிலத்தில் பூரணலிங்கம் பிள்ளை அவர்களும், தமிழில் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்களும் எழுதினார்கள்.

வெள்ளை வாரணனாரும், வரதராச ஐயரும் சமய இலக்கிய வரலாறுகளை இயற்றியுள்ளனர். தமிழ்நாட்டு வரலாறுகளை எழுதித் தந்த இராமச்சந்திர தீட்சிதர், கிருஷ்ணசாமி ஐயங்கார், இராசமாணிக்கனார், சதாசிவ பண்டாரத்தார் ஆகிய பேரறிஞர்களைத் தமிழகம் என்றென்றும் எண்ணிப் போற்றும்.

'மொழி நூல்' ஒன்றை முதன் முதலாக டாக்டர் பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியவர்கள் எழுத, டாக்டர் மு. வ. 'மொழி நூல்', 'மொழி வரலாறு' போன்ற பல நூல்களை எழுதி, அத் துறையை வளப்படுத்தினார்.

'எனது இலங்கைச் செலவு' என்ற நூலை எழுதிய திரு. வி. க. வின் அடிச்சுவட்டைப் பின்பற்றி 'சோமலெ' இத் துறையில் பல நூல்களை இயற்றியுள்ளார். 'அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்' என்ற சோமுவின் நூல் இத் துறையில் இந்திய அரசினரின் பரிசு பெற்ற நூலாகும்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் சரிதத்தை முதன்முதலாக இயற்றி, வாழ்க்கை வரலாற்று நூல்களுக்கு

வழிகாட்டிய பெருந்தகை, டாக்டர் உ. வே. சாமிநாதையராவார். இப் போக்கில், 'கப்பலோட்டிய தமிழன்,' வீரபாண்டிய கட்ட பொம்மன்' ஆகியோரின் வரலாறுகளை, ம. பொ. சி. நூல்களாக வடித்துள்ளார். புதுமைப்பித்தனின் வாழ்க்கை வரலாற்றை, சிதம்பர ரகுநாதன் படைத்துத் தந்துள்ளார். டாக்டர் உ. வே. சா. 'என் சரித்திரம்' என்னும் சுயசரிதை நூலை எழுதினார். இத் துறையில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் திரு. வி. க. வின் வாழ்க்கைக் குறிப்புக்கள் என்னும் நூல் ஒப்பற்ற நூலாகும்.

வேறு பல அரசியல், பொருளாதார நூல்களும், மொழி பெயர்ப்புக்களும் ஆண்டாண்டுதோறும் வெளிவந்துகொண்டேயிருக்கின்றன. இவற்றிற்கு அரசினரும், கலைக்களஞ்சியங்களை வெளியிட்ட தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரும் ஆதரவு அளித்து வருகின்றனர்.

சிறுகதை

முன்னுரை

ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான், எட்கர் ஆலன்போ, கோகோல் (Gogol) போன்ற ஆசிரியப் பெருமக்களின் புத்தம் புதுப் படைப்பாக, 'சிறுகதை' என்ற தனி இலக்கியம் உலகில் உதயமாகியது; முதன்முதல், அமெரிக்காவில் தோன்றி, பின்னர் உலகம் முழுவதும் பரவியது. மேனாட்டினர் உறவால் சிறுகதைப் படைப்பு தமிழ் இலக்கியத்திலும் தலை தூக்கியது. அன்றாட, திங்கள், வார வெளியீடுகளும், பத்திரிகைகளும் சிறுகதைகளை மிகுதியாக வெளியிட்டு அவற்றின் வளர்ச்சிக்கு உரமிட்டன.

விளக்கம்

நிற்கவே நேரமில்லாத இன்றைய மனிதனின் பரபரப்பும், விறுவிறுப்பும் மிக்க மனநிலைமைக்கு ஏற்ப அளவில் சிறியதாகவும் சுவையில் கதையாகவும் தோன்றிய தனி இலக்கியமே "சிறுகதை" யாகும்.

சிறுகதை அரைமணியிலிருந்து இரண்டு மணி நேரத்திற்குள் படித்து முடிக்கக்கூடிய அளவுடையதாயிருக்க வேண்டுமெனச் சிறுகதையின் தந்தையான 'எட்கர் ஆலன்போ' கருதுகின்றார். சிறுகதைகள் சில சமயங்களில், கதையே இல்லாமல் ஒரு குறிப்பிட்ட செய்தியையோ, அல்லது நிகழ்ச்சியையோ, அல்லது வெறும் மன நிலையையோ, அல்லது மனமாற்றத்தையோ, ஏதேனும் ஒன்றை மட்டும் விளக்க எழலாம். சிறுகதையில் சிறப்பாக; ஒரு சுவையே கதை முழுவதும் ஊடுருவிச் சொற் சிக்கனத்தோடு திகழவேண்டும். ஸெட்ஜ்விக் என்பார் கூறுவதுபோலச், சிறுகதை குதிரைப் பந்தயம் போன்று, தொடக்கமும், முடிவும், விரைவும் சுவையும் மிக்கதாக விளங்க வேண்டும்.

தோற்றம்

'பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும் பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்' என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இன்றைய Ficton என்ற பொருளில் எண்ணற்ற உரைநடை வகைகள் இருந்திருக்கலாம். ஆனல், பண்டைக் காலத்தில் தோன்றிய கதைகளில் ஒன்றும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. வீரமாமுனிவர் இயற்றிய 'பரமார்த்த குரு கதை' எனும் நூலும், தாண்டவராய முதலியார் எழுதிய 'பஞ்சதந்திரக் கதைகள்' என்ற நூலும் பற்பல கதைகளின் தொகுப்பாகவே விளங்கக் காணலாம். ஆறில் ஒரு பங்கு' 'சுவர்ணகுமாரி' போன்ற பல கதைகளை எழுதியும் தாகூரின் கதைகளை மொழிபெயர்த்தும் பாரதியார், தமிழ்மொழியில் சிறுகதை உதயமாவதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளார் எனலாம்.

எனினும் இன்றைய சிறுகதை இலக்கியத்திற் கேற்ப முதன்முதலாகச் சிறுகதைகளை எழுதித் தமிழ்நாட்டில் சிறுகதை இலக்கியத்தைத் தோற்றுவித்த பெரியார் பாரதியோடு உடன் வாழ்ந்த வ. வே. சு. ஐயரவர். 1927 இல், எட்டுக் கதைகள் அடங்கிய, "மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்" என்ற நூலை வெளியிட்டார். இவையனைத்தும்

கவிதைச் சுவையும், உணர்ச்சிக் கொந்தளிப்பும் மிக்கனவாகும். இவற்றில், கணவன் இதயத்தை உணராமல், தற்கொலைபுரிந்து கொண்ட பேதைமைமிக்க பெண் ருக்மிணியின் வாழ்வைக் கூறும் 'குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை' என்ற அரிய படைப்பு அமரமுத்திரை பெற்றதாகும்.

ஐயர் காலத்தில் வாழ்ந்த "மாதவையர்" என்பார் "குசிகர் குட்டிக் கதைகள்" என்ற நூலை எழுதித் தமிழ்க் கதைகளில் சமுதாய உணர்வைப் புகுத்தினர். மது விலக்கு, கைத்தறி, தீண்டாமை போன்றவற்றை மக்களுக்கு விளக்குவதற்காக ராஜாஜி, கல்கி போன்ருேர் பல கதைகளை இயற்றினர். 'தேவானை' 'முகுந்தன் பறையனுன கதை' போன்றவற்றை ராஜாஜி படைத்துள்ளார். பாமர மக்களுக்கேற்ற எளிய, இனிய நடையில் கதை புனைந்தவர் கல்கி. அன்ருட வாழ்வில் காணும் மனிதர்களையே தம் கதை உறுப்பினர்களாக்கிக். கதையைச் சுவைபட நடத்திச் செல்வார்; சமுதாயத்தை மாற்றி யமைக்க வேண்டும் என்ற வேட்கையோடு சிரிப்பிலே அழுகை யையும், சிந்தனையையும் குழைத்துக் கொடுக்கும் ஆற்றல் பெற்றவராவர். அவர் எழுதிய அழியாக் கதைகளில் "கணை யாழியின் கனவு" "வீணை பவானி" "திருவழுந்தூர் சிவக் கொழுந்து" "கேதாரியின் தாயார்" முதலியன புகழ்பெற்றன வாகும்.

வளர்ச்சி

133 இல் ஆனந்தவிகடன் நடத்திய சிறுகதைப் போட்டி யில் "ஊமைச்சியின் காதலன்" என்ற கதையை எழுதிய இராமலிங்கம் என்பாருக்கு முதல் பரிசு வழங்கியதும், கலைமகள், காந்தி போன்ற பிற வெளியீடுகளும் சிறுகதை எழுத்தாளர் களைப் பெரும் அளவில் ஆதரித்து ஊக்கம் அளித்தன. அதில் புதுமை வேட்கைகொண்ட புரட்சி எழுத்தாளர் வ. ரா. தலைமை யில் உருவான இரு பெரும் எழுத்தாளர்களில் ஒருவரான, கு. ப. ராஜகோபாலன் மனித மனத்தில் எழும் இன்ப துன்ப உணர்ச்சிகளையும், நிராசைகளையும் நிறைவேருக் கனவுகளை யும், சொற்சுவை தோன்றக் கலையுணர்வோடு சித்திரமாக

வரையும் சிறப்புப் பெற்றவர். மணமான தங்கைக்குப் பணி புரிந்து, மன அமைதி பெறும் இளம் விதவையின் ஏக்கத்தைச் சித்திரிக்கும் 'திரை' என்ற கதையும், மனித நம்பிக்கையைத் தகர்த்தெறியும் விதியின் கோரக் களியாட்டத்தை விளக்கும் 'விடியுமா?' என்ற கதையும் காலங்கடந்து வாழ்வனவாகும். ஆண் பெண் உறவை அடித்தளமாகக் கொண்ட கதைகள் பல வற்றைப் படைத்திருக்கிறார். குடும்ப வாழ்க்கையில் இன்பத்தை நுகர முடியாமல் ஏக்கமுற்றுத் தவிக்கும் பல ஆடவர்களேயும் பெண்டிரையும் தம் கதைகளிலே உலவவிடுகின்றார். 'எவன் பிறந் திருக்கிறானே' என்ற கதை பொருந்தா மணத்தின் கொடுமை யைப் புலப்படுத்தும்: பிராப்தம் என்ற கதையோ ஜாதகம், சகுனம் போன்ற மூடநம்பிக்கைகளைச் சாடி எறியும். 'அர்ச்சனை ரூபாய்' 'தாயாரின் திருப்தி' 'பண்ணைச் செங்கான்' போன்ற இவருடைய மற்ற கதைகள் இவர்தம் கலைத்திறத்தை நன்கு காட்டும்.

ஏழை எளியவருக்காக இரங்கும் பித்த மனத்தோடு புத்தம் புதிய வடிவங்களையும், உத்திகளையும் கையாண்டு புரட்சி நடை யிலே கதை புனைந்தவர் புதுமைப்பித்தன் என்ற புனைபெயர் கொண்ட சொ. விருத்தாசலம். வாழ்க்கையில் தோன்றும் பல வகையகன சிக்கல்களையும் அச் சிக்கல்களைத் தீர்க்க முனையும் பல்வேறு மாந்தர்களின் மனச் சலனங்களையும், சபலங்களையும் குத்தலாகவும் கிண்டலாகவும் கதை புனைவார். சமுதாயச் சுகவாசிகளைச் சாடி எறிவார்; சனாதனச் சம்பிரதாயங்களைத் தகர்த்து வீழ்த்துவார்; இவர் தீட்டிய அகல்யை சாப விமோ சனம் அத்தகையது. இவர் ஆளும் சொற்கள் அனைத்தும் சுட்டெரிக்கும் தீப்பொறிகளாகும். பொருளற்ற சமூகக் கட்டுப் பாடுகள் இவர் கதைகளிலே பொசுங்கிவிடும்; மூடநம்பிக்கைகள் முனை முறியும்; பொருளாதாரப் போராட்டமும் வறுமையின் கோரக் களியாட்டமும் இவர் கதைகளிலே கொக்கரிக்கும், வக்கரிக்கும். பொன்னகரம், துன்பக்கேணி, மனித யந்திரம் போன்ற கதைகள் இத்திறத்தன,

'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' என்ற கதையிலே, வரத்தைப் பொழியும் கடவுளாலும், மனிதனை மண்ணில் வாழ

வைக்கமுடியாத அவலநிலையை நகைச்சுவையாகச் சித்திரிக்கிறார். இவருடைய கதைகளிலே, மனித நெஞ்சத்தோடு வேதாளமும் பேசும்; மூட்டைப் பூச்சியும் முணுமுணுக்கும்! கட்டிலும் தன் கதை கூறத் தொடங்கும். அனைத்தும், கதாசிரியர் வாழ்ந்த காலத்தைக் காட்டும் கண்ணாடிகளாகும். விநாயகசதுர்த்தி, பக்த குசேலா என்ற புராணத் தலைப்புக்களைக் கொண்டு வேடிக்கையான சமூகக்கதைகளை எழுதுவார்.

காண்பதைக் கண்கூடாக உரைக்கும் கலைத்திறத்தைத் தமிழ்க் கதைகளிலே உலவவிட்ட புரட்சி எழுத்தாளர் புதுமைப் பித்தன். வழி வழி வரும் எழுத்தாளர் குலத்திற்கெல்லாம் வழி காட்டியாகத் திகழ்பவர் புதுமைப்பித்தன். தம் பெயருக்கேற்பப் பொருளிலும் போக்கிலும் பெரும் புரட்சி கண்ட புதுமைப்பித்தனை அறிஞர்கள் 'சிறுகதை மன்னன்' என்றே இன்றும் சிறப்பித்துக் கூறுகின்றனர்.

மணிக்கொடி கூட்டத்தைச் சேர்ந்த மற்றோர் எழுத்தாளர் பி. எஸ். ராமையா. முந்நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் மூன்று நாவல்களையும், தேரோட்டி மன்னன், கைவிளக்கு முதலான நாடகங்களையும் இயற்றியுள்ளார். தம்முடைய பரந்து பட்ட பல்வகை அனுபவங்களையும் கலைமெருகு மிகுந்த கதைப் பின்னலாக்கித் தருவதில் வல்லவர். இவர் எழுதிய 'நட்சத்திரக் குழந்தை' அத்தகைய சிறப்பு வாய்ந்த புகழ்பெற்ற சிறுகதை யாகும்.

மிகவும் ஆழ்ந்து கற்பதற்குரிய அரிய கதைகளைத் தருபவர் மௌனி. இவர் எழுதிய மனக்கோலம், காதல்சாலை, மாறுதல், பிரபஞ்சகானம், அழியாச்சுடர் போன்ற கதைகள் அத்தகைய பாங்குடையவை. எதனையும் வசீகரமாக வருணிக்கும் திறம் இவ்வாசிரியருக்குக் கைவந்த கலையாகும்.

தத்துவச் சிந்தனைகளைப் புகுத்திச் சிறுகதைகளின் தரத்தை உயர்த்தும் பெருமை மிக்க எழுத்தாளர் ந. பிச்சமூர்த்தி. மனிதன் தேடியலையும் மகத்தான இன்பம் அவன் மனத்திற் குள்ளேயே புதைந்து கிடப்பதைப் புத்துணர்ச்சியோடு

சித்திரிப்பது இவருடைய 'மாய மான்' என்ற கருத்தோட்டமிக்க கதை. மனிதர்களின் மாறுபட்ட மனவிகாரத்தை எடுத்துணர்த்துவது 'ஈஸ்வர லீலை' என்ற அமரமுத்திரை பெற்ற கதை. புரட்சிமிக்க சமுதாய சிந்தனைகளையும், பிச்சமூர்த்தி தம் கதைகளிலே மிகுதியாகப் புகுத்தியுள்ளார். அத்தகைய சிந்தனைகளைச் சித்திரித்துக் காட்டுவனவே அவருடைய 'இரும்பும் புரட்சியும்' 'பாம்பின் கோபம்' என்ற கதைகள்.

அழியும் மனித வாழ்வின் அவலத்தையும், அனைத்தையும் ஆட்டிப் படைக்கும் விதியின் ஆற்றலையும் சாவின் சர்வ சக்தியையும் திறம்படத் தம் கதைகளில் தீட்டுவதில் மிகவும் தேர்ந்த எழுத்தாளர் சிதம்பர சுப்பிரமணியம். அவர் படைத்த 'புவனேஸ்வரி' 'ஊர்வலத்தில்' என்ற இருகதைகள் இவ்வியல்பினை நன்கு பறைசாற்றும்.

தஞ்சை மாவட்ட மக்களின் நாட்டுப்புற வாழ்க்கையை நையாண்டியாக வட்டார மொழியிலே எழுதிப் புகழ் பெற்றவர் தி. ஜானகிராமன். அவர் இயற்றிய பதினொரு சிறுகதைகளின் தொகுப்புக் கொண்ட நூலுக்கு அவர் கொடுத்த கிண்டலான தலைப்பே அக் கதைகளின் நகைச்சுவைப் போக்கையும் வக்கிரத் தன்மையையும் புலப்படுத்துவதாகும். அழுத்தமான பாத்திரங்களைப் படைத்துத் தருவதில் வல்லவர். பஞ்சத்து ஆண்டி, ரசிகரும் ரசிகையும் என்ற இவருடைய கதைகள் மனிதனுடைய மன விகாரங்களைக் குத்தலாகவும் கேலியாகவும் சித்திரிப்பன. உரையாடலைக் கொண்டே கதைபுனையும் உத்தியை இவர் பல சிறு கதைகளில் கையாண்டுள்ளார்.

புரியாத சிந்தனைகளைப் புதிரான நடையிலே தத்துவ மணத்தோடு எழுதும் சிறுகதைஎழுத்தாளர் லா. ச. ராமாமிருதம். இதழ்கள், ஜனனி என்ற சிறுகதைத் தொகுப்புக்கள் இத்தகைய போக்கினை எடுத்துக் காட்டும்.

உலகில் நடப்பனவற்றை ஒளிவின்றி உரைக்கும் மற்றோர் எழுத்தாளர் சி. சு. செல்லப்பா. அவர் எழுதிய 'ஸரஸாவின் பொம்மை' என்ற சிறு கதைத் தொகுப்பு அவருடைய தனித் தன்மையை நன்கு நிலைநாட்டும்.

திறம்மிக்க சொல்லைத் தெளிந்த நடையில் கையாண்டு எளிமையாக எழுதும் சிறுகதை எழுத்தாளர் தி. ஜ. ர. நுட்பமான கலைவடிவம் கொண்ட கதைகள் பலவற்றைப் புனைந்துள்ளார். 'சந்தனக் காவடி' என்ற இவருடைய சிறுகதைத் தொகுப்பு இத்தகையது. பணக்காரி, குஞ்சிதம், பவுன்செடி, மஞ்சள் துணி, சங்கு மோதிரம் என்பன அவருடைய புகழ்பெற்ற சிறுகதைகளாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் வாழும் கிராமமக்களின் வாழ்வையும், பழக்கவழக்கங்களையும் படம் பிடித்துக் காட்டும் சிறந்த சிறுகதை எழுத்தாளர் கு. அழகிரிசாமி. கவர்ச்சி நடையிலே கதை சொல்ல வல்லவர்; அத்தகைய கலைநயத்தோடு 'அன்பளிப்பு' 'திரிவேணி' 'ராஜா வந்திருக்கிறார்' போன்ற பல கதைகளைப் புனைந்திருக்கின்றார்.

பொருளாதார சமுதாயப் புரட்சிகளை நையாண்டி நடையில் எழுதும் சிறுகதையாசிரியர் சுந்தர ராமசாமி, கொச்சைப் பேச்சிலேயே கதைகளைப் புனைவார். சராசரி மாந்தர்கள் இவருடைய கதைகளிலே சாகாவரம் பெற்றுவிடுவர்.

மென்மையான மனித உணர்ச்சிகளைக் கலைப்பாங்கோடு கதையுரைப்பவர் கலைமகள் இதழின் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன். பல சிறந்த சிறுகதை ஆசிரியர்களை நாட்டிற்கு அறிமுகப்படுத்திய பெருமை கி. வா. ஜவைச் சாரும். குழந்தை மனத்தின் குழைவான இயல்பைப் பவழமல்லிகை, மிட்டாய்க்காரன் ஆகிய கதைகளிலே புலப்படுத்தியுள்ளார். பழைய மரபுகளையே பின்பற்றுவார். எனினும் தம் கதைகளில், உயர்ந்த கொள்கைகளையும், உன்னத நோக்கங்களையுமே இவர் வற்புறுத்துவார். 'வரப்பிரசாதம்' என்ற தொகுப்பு இவ்வுண்மையை நிலைநாட்டும் சான்று.

சோகச் சித்திரங்களைத் தீட்டிக்காட்டுவதில் திறமை மிக்கவர் சூடாமணி. 'ஒளியின் முன்' என்ற அவருடைய கதைத் தொகுதி உள்ளத்தின் நெகிழ்ச்சிகளை உணர்வு ஓவியமாகத் தீட்டித் தருகின்றது.

உயர்ந்த நாவலாசிரியரான அகிலன் சிறந்த சிறுகதை எழுத்தாளரும் ஆவார். காசுமரம், பூச்சாண்டி, கே. யில் விளக்கு, குழந்தை சிரித்தது போன்ற கதைகள் அவருடைய கைவண்ணத்தைக் காலமெல்லாம் உணர்த்தும்.

வேகமும் விறுவிறுப்பும் கொண்ட மிடுக்கான நடையிலே புரட்சிகரமான சமூக சிந்தனைகளைக் கதையாக ஆக்கித் தருபவர் அறிஞர் அண்ணாதுரை. இவர் படைத்த செவ்வாழை, சொர்க்கத்தில் நரகம், பிடிசாம்பல் ஆகிய சிறு கதைகள் சமூக சீர்திருத்தங்களைப் பரப்பும் துடிப்பு மிக்கவை.

நம் சமூகம் சீரணிக்க முடியாத சீர்திருத்தக் கருத்துக்களைச் சிந்தனைச் செறிவோடும், நெஞ்சப் பரிவோடும் கதை சொல்லும் சிறந்த சிறுகதைக் கலைஞர் ஜெயகாந்தன். 'சமூகம் என்பது நாலுபேர்,' 'கோகிலா என்ன செய்துவிட்டாள்?'' 'ஆடும் நாற்காலிகள் ஆடுகின்றன' என்ற அவருடைய படைப்புக்கள் இவ்வுண்மையைப் பறைசாற்றும். வேரறுந்து வீழ்ந்துகொண்டிருக்கும் சாதி வேற்றுமைகளைப் 'பகல் நேரப் பாசஞ்சர் வண்டி' என்ற கதையிலும், ஒழுக்கத்தில் சிறந்தோரே உத்தமபிராமணர் என்ற கருத்தைப் 'பிரம்மோபதேசம்' என்ற அரிய கதையிலும் வலியுறுத்துகின்றார். அல்லும் பகலும் அயர்வின்றிப் பாடுபடும் வியர்வை வர்க்கத்தினரையே, தம் கதை மாந்தர்களாகத் தேர்ந்தெடுக்கின்றார். அச் சாமானிய மனிதர்களின் சஞ்சலமிக்க வாழ்க்கையினையே நெஞ்சம் நெகிழ்ந்து எழுதுகின்றார். அவர்கள்பால் நம் பரிவையும் அன்பையும் படரச் செய்கின்றார். ஆதரவற்றவர்களின் அங்கலாய்ப்பை ஒருபிடி சோறு, ஓவர்டைம், தாம்பத்தியம், தேவன் வருவாரா ? என்ற கதைகளிலும், வாழ்க்கையின் தாங்கமுடியாத வெப்பத்தைத் திரிசங்கு சொர்க்கம் என்ற கதையிலும் ஏக்கமுறச் சித்திரிக்கின்றார். நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார் நலிவதைக் காணுகின்றார்; நெஞ்சம் நாணுகின்றார்; அவர்களுக்கு ஒரு பாடம் புகட்டும் முறையில் நாயை மையப் பொருளாகக் கொண்டு 'நீக்கி' 'தோத்தோ' என்ற கதைகளையும், காயடிக்கப்பட்ட காளைமாட்டை வைத்துப் 'பால்பேதம்' 'இதோ ஒரு காதல்கதை' என்ற கதைகளையும்

புனைந்திருக்கின்றார். குழந்தைகளையும் சமுதாயப் பிரச்சினைகளாக்கிப் பல கதைகள் எழுதியுள்ளார். அவற்றைத் 'தேவன் வருவாரா?' என்ற கதைத் தொகுதியிலே காணலாம். முரண்பட்ட மனித அனுபவத்தை 'இருளைத்தேடி' 'உண்மை சுடும்' என்ற கதைகளிலே நுகரலாம்.

புரட்சி எழுத்தாளர் புதுமைப்பித்தனின் 'போக்கும் நோக்கும்' இவரைப் பெரிதும் கவர்ந்துள்ளன. மாளிகை வாசிகள், மண்குடிசை மக்கள் என்ற வேற்றுமையின்றி அனைவரின் மன நிலையையும் தம் அனுபவப் பொருளாக்கி ஆவேசமான உணர்ச்சி வெள்ளத்திலே அவற்றை அமிழ்த்தியெடுத்து, அறிவுத்தெளிவோடு அழுத்தமாகத் தம் கட்டமைப்பான கதைகளிலே வெளியிடுகின்றார். ஜெயகாந்தன் ஓர் ஒப்பற்ற அனுபவக் கலைஞன்! ஒரு சிந்தனைச் சிற்பி! சிறுகதை மன்னன்!

மராத்திய எழுத்தாளர் காண்டேகரின் படைப்புக்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர் கா. ஸ்ரீ. ஸ்ரீ. வங்கமொழிக் கவிஞர் தாகூரின் கதைகளையும் கவிதைகளையும் சேனாபதியும் குமாரசாமியும் மொழிபெயர்த்துள்ளனர். இந்தி, மலையாளக் கதைகளையும், தெலுங்கு, கன்னடக் கதைகளையும் பலர் மொழிபெயர்த்துத் தந்து தமிழ்ச் சிறுகதை உலகை வளப்படுத்தியுள்ளனர். அதுபோன்றே மேனாட்டு மொழிகளான பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்ய மொழிகளில் அமைந்த பல சிறுகதைகளையும் மொழிபெயர்த்து உதவியவர்கள் பலர். தமிழ்மொழியில் கதை இலக்கியம் வளர்வதற்குப் பத்திரிகைகள் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது.

புதினம்

முன்னுரை

உலகில் புதினம் (நாவல்) இலக்கியத்தின் தாயகமாகத் திகழ்வது இத்தாலி நாடாகும். 1350 இல், Boccaccio என்பார், Novella Storia of Fresh Stories என்ற தலைப்பில் 'Decameron' என்னும் தம் கதைத் தொகுதிகளை நூலாக வெளியிட்டார்

பின்னர் அஃது அகில உலகமும் பரவியது. அன்றாட வாழ்வில் காணப்படும் நிகழ்ச்சிகளையும் மனிதர்களையும் அடிப்படையாகக் கொண்டு அவற்றிற்கு உயிரும் உணர்ச்சியும் ஊட்டிக் கற்பனை யாகப் புனையப்படும் இலக்கியமே 'நாவல்' ஆகும்.

தோற்றம்

அத்தகைய புதிய இலக்கியத் துறையை முதன்முதலாகத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய வித்தகர் நம் வேதநாயகம் பிள்ளை ஆவர். 1879 ஆம் ஆண்டில் அவர் எழுதிய பிரதாப் முதலியார் சரித்திரம் ஈன்ற நூலே தமிழில் எழுந்த புதிய நாவலாகும். அவரைப் பின்பற்றிக் கமலாம்பாள் சரித்திரத்தை ராஜம் ஐயரும், பத்மாவதி சரித்திரத்தை மாதவ ஐயரும் எழுதி யுள்ளனர்.

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையையும், அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் உள்ளவாறு உணர்த்தும் சிறப்பினை யுடையது கமலாம்பாள் சரித்திரம். பத்மாவதி என்ற பாவை மேல் அவள் கணவன் கொண்ட சந்தேகத்தையே வளர்த்துச் சிக்கலாக்கி அக் கதாபாத்திரத்தை மிக அழுத்தமாகச் சித்திரித்துக் காட்டுவதே பத்மாவதி சரித்திரம். நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள், மறவர்குல மக்கள் முதலியோரின் சமுதாய வாழ்வைக் கலைநயத்தோடு புலப்படுத்துவதே விஜயமார்த் தாண்டம் என்ற நாவல். இளம் வயதிலேயே விதவையான பெண் ஒருத்தி தான்பட்ட துன்பங்களைத் தானே கூறுவது போன்ற சுய சரிதைப் பாங்கில் அமைத்த புதுமை மணம் கமழும் புரட்சியான நாவலே முத்துமீனாட்சி. இவ்வாறு கதைக் கருவிலும் கட்டமைப்பிலும் புரட்சி செய்த முதல் தமிழ் நாவலாசிரியர் மாதவையா அவர்களே பஞ்சாமிர்தம் என்ற பத்திரிகையையும் நடத்தி, 'கோணக்கோபாலன்' என்ற புனைபெயரில் சமூக சீர் திருத்தத் தொண்டுக்கு ஏற்ற கதைகளையும், கவிதைகளையும் கட்டுரைகளையும் மிகுதியாக வெளியிட்ட பெருமகனார் ஆவர்.

மாதவையாவிற்குப் பிறகு தமிழ் நாவல் துறையிலே ஒரு தொய்வு காலம் தோன்றிற்று. இடைப்பட்ட இக் காலத்தில்தான்

பொழுது போக்கும் நோக்கிற்காகவே, துப்பறியும் நாவல்கள் பலவற்றையும், தழுவல் நாவல்களையும் வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், கோதை நாயகி அம்மாள் ஆகியோர் எழுதினர்.

தென்னாட்டுத் தாகூர் என்று புகழ்பெற்ற வேங்கடரமணி என்பார், மக்கள் உள்ளத்தில் தேசபக்திக் கனலை மூட்டுவதற்காகத் 'தேசபக்தன் கந்தன்' என்ற நாவலை வெளியிட்டார்.

படித்தோருக்கும் பாமரருக்கும் இதயத்தில் இலக்கியப் பசியை உண்டாக்கிய எழுத்தாளச் செம்மல் கல்கியே. கதை புனையும் எழுத்தாளர் குலத்திற்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்பவர் கல்கியே.

கேலியும் கிண்டலும் கலந்த நடையில், கதைகளை மட்டுமல்ல, நாடகம், இசை, நாட்டியம், ஓவியம், சிற்பம் போன்ற பற்பலவகைக் கலைகளையும் சுவைத்து எழுதும் ஆற்றல் உடையவர். எவருக்கும் புரியக்கூடிய எளிய பேச்சுத் தமிழில் எழுதும் திறம் படைத்தவர், சமுதாய உணர்வு படைத்த கலைஞர் கல்கி. எனவே, தம் சம காலத்து வாழ்க்கைச் சிக்கல்களைத் தம் கதைகளில் சித்திரிப்பார்; சாதிக் கொடுமை, விதவையின் வேதனை, பொருந்தா மணத்தின் போக்கு, விடுதலைப் போராட்ட வேட்கை ஆகியவற்றைத் தம் கதைக் கருவாக்கி நூல்களைப் படைப்பார்.

அவர் படைத்த முதல் நாவல் கள்வனின் காதலி. நாட்டில் நிகழ்ந்த விடுதலைப் போராட்டத்தை வித்தாகக் கொண்டு விளங்குவன அவர் பின்னர் உருவாக்கிய மகுடபதி, தியாக பூமி ஆகிய நாவல்கள். காந்தீய தத்துவத்தின் அடிப்படையில் இந்திய மக்கள் 1930 க்கும் 1942 க்குமிடையே நிகழ்த்திய அரசியல் போராட்டத்தை விரிவாக விவரிக்கும் அருமையான கதை நூலே அலையோசை. அவர் படைத்த சமூக நாவல்களை விட அவருக்கு அழியாத புகழை ஈட்டித் தந்த இணையற்ற நாவல்கள், அவர் சிறப்புற உருவாக்கிய சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் என்ற வரலாற்றுப் படைப்புக்களே!

மகேந்திரவர்மப் பல்லவனை மையமாகக் கொண்டு திகழுவது பார்த்திபன் கனவு. பல்லவர் காலப் பின்னணியிலே ஆயனச் சிற்பியின் மகளான சிவகாமி என்ற நடனக் கலையரசி, அரசியல் சதுரங்கத்தில் சிக்கி அலைக்கழிக்கப்படும் அவலத்தைக் கற்பனைத் திறமும் கலைநயமும் போட்டிபோடச் சித்திரிக்கும் அற்புதப் படைப்பே சிவகாமியின் சபதம். இதை ஒரு மாபெரும் உரைநடைக் காப்பியம் என்று கற்றோர் போற்றுவர். தஞ்சை மாநகரைத் தம் தலைநகராக்கித் தரணிமுழுதாண்ட பிற்காலச் சோழவேந்தன் பேரரசன் இராஜராஜனின் பெருமைக்குரிய வரலாற்றைப் பல்வேறுபட்ட பாத்திரங்களுக்கு மத்தியிலே, கதைச் சுவையும் கற்பனைத் திறமும் ஒன்றையொன்று விஞ்ச உருவாக்கப்பட்டதே பொன்னியின் செல்வன் என்ற இவருடைய புகழ்பெற்ற மற்றொரு நாவல். சரித்திர நாவல் புனைவோருக் கெல்லாம், கல்கி ஒரு கலங்கரை விளக்கம் ஆவார்.

1942 இல் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தின் சுவடு களைத் 'தியாகத் தழும்பு' என்ற தம் நாவலிலே, நாரண துரைக் கண்ணன் பதித்துள்ளார். நாட்டு மக்களின் நெஞ்சத்தில் மூண்ட விடுதலைக் கனலை விரித்துரைப்பதே அகிலன் இயற்றிய பெண் என்ற நாவல். 1944 ஆம் ஆண்டு கலைமகள் நடத்திய நாவல் போட்டியிலே முதல் பரிசு பெற்றுள்ளது இந் நாவல். நேதாஜி அமைத்த விடுதலைப் படையை மையமாக வைத்து இந்திய தேசிய எழுச்சியைப் படம் பிடித்துக் காட்டும் வரலாற்று நாவல், ஆசிரியர் அகிலன் புனைந்த நெஞ்சின் அலைகள். பாண்டியநாடு மீண்டும் பலம்பெற்று எழ வீரப்போர் ஆற்றிய வேந்தன் சுந்தர பாண்டியனுக்கு உறுதுணையாக விளங்கும் கயல்விழி என்ற பாணர்குலப் பாவையை மையமாகக் கொண்டு கயல்விழி என்ற நாவலைப் படைத்துள்ளார். விஜயநகர ஆட்சியைப் பின்னணியாகக் கொண்டு திகழ்வது வெற்றித் திரு நகர் என்ற நாவல். பதினொன்றாம் நூற்றாண்டில் பெருமையோடு விளங்கிய சோழப் பேரரசைப் பின்னணியாகக் கொண்ட நாவலே வேங்கையின் மைந்தன்.

காந்திய சிந்தனையின் அடிப்படையில் நம் நாட்டுச் சமூகப் பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்ந்து மனித பாசத்தோடு சித்

திரிப்பது புதுவெள்ளம் என்ற நாவல். உணர்ச்சி வெள்ளத்தில் சஞ்சலப்பட்ட ஓர் எழுத்தாளனின் வாழ்வைச் சத்திய சோதனையிலே புடமிட்டுக் காட்டும் ஓர் ஒப்பற்ற சமூகக் காப்பியமே அவர் இயற்றிய பாவைவிளக்கு. ஆணையும் பெண்ணையும் சரிநிகர் சமானமாக்கி, இருசாராருக்கும் குடும்ப வாழ்க்கையிலே சிக்கல் முற்றுங்கால், பிரிந்துபோகும் உரிமையை வலியுறுத்தும் சமூக நாவலே சித்திரப்பாவை. கள்ளக்கடத்தல், கறுப்புப் பணம் ஆகிய தீயசக்திகளைத் தீய்த்து எறியத்துடிக்கும் தினவு மிக்க நாவல் பொன்மலர். பக்தி, பகுத்தறிவு ஆகியவற்றின் பெயரால் நடக்கும் பித்தலாட்டங்களையும், கலப்புமணச்சிக்கலையும் நன்கு காட்டுவது 'வாழ்வு எங்கே' என்ற நாவல்.

அலைபட்டுச் சிதறும் மனித உணர்ச்சிகளை, அறிவும் பரிவும் கொண்ட பண்பட்ட நெஞ்சத்தோடு அணுகி ஆராய்ந்து கலை நயம் குன்றாத தம் கற்பனையை உணர்ச்சி வெள்ள நடையிலே எழுதும் ஓர் உன்னத எழுத்தாளர் அகிலன். முதன்முதலாக ஞானபீடப் பரிசு இலட்ச ரூபாயைத் தம் படைப்பிற்குப் பெற்றுத் தமிழ் எழுத்தாளர் உலகிற்குப் பெருமையினைச் சேர்த்த சிறப்பு, பெருந்தகை அகிலனையே சாரும்.

தமக்கென்று ஒரு தனி நடை வகுத்து, கருத்துச் செறிவுள்ள நாவல்கள் புனைந்தவர் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார். ஆண் பெண் உறவு, பெண் உரிமை, கட்சி அரசியலில் தோன்றும் கயமை, ஏழை எளியோரை வாட்டும் வறுமை, பலதரப்பட்ட அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் ஆகிய பல்வேறு பிரச்சினைகளைக் கருப்பொருளாக்கித் தம் கதை இலக்கியங்களை உருவாக்கியுள்ளார். சமுதாயத்தில் நிகழும் ஒழுக்கக் கேடுகளையெல்லாம் தம் படைப்புக்களிலே மிகுதியாக உணர்த்தியுள்ளார். குலைந்துபோன குடும்பக் காட்சிகளையும், ஆரவாரமான அலுவலக வாழ்க்கையையும் தம் நாவல்களிலே திறம்பட வருணிக்கின்றார். சமுதாயத்தில் புகுந்து கொட்டமடிக்கும் கயவர்களின் செல்வாக்கையும், போலி அரசியல்வாதிகளின் வெறுக்கத்தக்க முன்னேற்றத்தையும் விளக்குகின்றார். நெஞ்சில் ஒரு முள், கயமை, அல்லி, அகல் விளக்கு ஆகிய நாவல்கள் அத்தகையன. வாழத் துடிப்போருக்கு வேண்டிய

அறிவுரைகளைத் தம் நாவல் மூலம் வளமாகத் தருகின்றார். கரித் துண்டு, கள்ளோ காவியமோ அத்திறத்தின. வரதராசனாருக்குக் கதை கூறுவது கருத்தன்று; மனத்திற்கினிய கதையினும், மாண்பு மிக்க வாழ்வை உணர்த்துவதே முக்கிய நோக்காகும்.

முறையாகத் தமிழ்கற்று நாவல் புனைய முற்பட்ட மற்றொரு புகழ்பெற்ற எழுத்தாளர், தீபம் ஆசிரியர் நா. பார்த்த சாரதி. பொய்ம்மை நிறைந்த வாழ்வையும், போலி மனிதர்களையும் வெறுத்து விலக்கும் இலட்சியவாதி இல்வாசிரியர். இத்தகைய மாந்தர்களை இவருடைய நெஞ்சக்கனல் என்ற நாவலிலே காணலாம். பணம், புகழ்மேல் கொண்ட மிதமிஞ்சிய பற்றினால் மனிதப்பண்பை இழந்து வாழ்வோரைத் தம் படைப்புக்களிலே எள்ளிநகையாடுவார். தெய்வ பக்தியும், தர்ம நம்பிக்கையும் உடையவர்களையே போற்றுவார். உன்னத நோக்கமும் உயர்ந்த உள்ளமும் கொண்ட பெண்களையே தம் நாவலில் உருவாக்குவார். இளம் நெஞ்சங்களை ஈர்க்கவல்ல ஓர் இலட்சிய நாவல் இவர் இயற்றியுள்ள குறிஞ்சிமலர். அரவிந்தன் பூரணியின் நிறைவேறா மானசீகக் காதலை இந் நூல் பேசுகிறது. சத்தியமூர்த்தி, மோகினி என்ற இருவரின் கைகூடாக் காதலையே பொன்விலங்கு சித்திரிக்கிறது. இவர் நாவல்களிலே நாம் ஆன்மநேய ஒருமையை அளவின்றி நுகரலாம். பண்டைக் கால மக்களின் சமுதாய வாழ்வையும் பண்பாட்டையும் கற்பனை நயத்தோடு கவர்ச்சியான நடையிலே வருணிப்பது இவருடைய மணிபல்லவம் என்ற வரலாற்று நாவல்.

பலதரப்பட்ட நிலைக்களன்களையும், மனவேறுபாடு கொண்ட மாந்தர்களையும் சித்திரிக்கும் குறுநாவல்கள் எழுதியவர் கோவி மணிசேகரன். அவருடைய சரித்திர மணம் கமழும் நாவல்கள் அக்கினிக்கோபம், பீலிவளை, செம்பியன் செல்வி, பத்திரிகைகளில் பல்சுவை குன்றாமல் யவனராணி, கடல்புறா, மலைவாசல், ராஜ திலகம், கன்னிமாடம் போன்ற பல வரலாற்று நாவல்களைப் படைத்து வருபவர் சாண்டில்யன். நந்திவர்மன் காதலி, நாயகி நற்சோணை, திருச்சிற்றம்பலம், பத்தினிக்கோட்டம் போன்ற எண்ணற்ற நாவல்களை எழுதிப் புகழ் பெற்றவர் செம்மாந்த நடை கொண்ட ஜெகசிற்பியன். வினோபாவின் அன்புநெறி

யமைந்த ஆக்கப் புரட்சியை மண்ணின் குரல் என்ற நாவலிலே சித்திரித்துள்ளார். அரு ராமநாதன் எழுதிய வீரபாண்டியன் மனைவி என்னும் நாவலும் கற்பனை கவிதைச் சுவைகள் நிறைந்ததாகும்.

நகைச்சுவை மிளிர நாவல்கள் எழுதுபவர் ஆனந்த விகடனில் ஆசிரியராக இருந்த தேவன். அவர் படைத்த துப்பறியும் சாம்பு, மிஸ்டர் வேதாந்தம் ஆகியவை நம் நெஞ்சில் என்றும் நிலையாக வாழும் பாத்திரங்களாகும்.

'பாலும் பாவையும் ஒன்றே' என்று கதை புனைந்தவர் விந்தன். புல்லைமட்டுமே தின்னும் ஆட்டைப் பெண்ணாகவும், புல்லை மட்டுமன்றி வைக்கோல், பிண்ணாக்கு யாவையும் தின்னும் மாட்டை ஆணாகவும் உருவகித்து, டி. கே. சீனிவாசன் என்பார் 'ஆடும் மாடும்' என்ற கற்பனை நயம் மிக்க நாவலை இயற்றி யுள்ளார். ஆண் பெண் உறவுச்சிக்கலைக், காம விகாரங்களை, தி. ஜானகிராமன் தம் அம்மா வந்தாள்—மோகமுள் என்ற நாவல்களிலே அலசி ஆராய்கின்றார். இளமைக் காலத்து எழும் காதல் போராட்டங்களைச் சாவி விசிறிவாழை என்ற தம் நாவலிலே எடுத்துக் காட்டுகின்றார்.

தொடக்க காலத்தில் பெண்ணுரிமைக்காகப் போராடிய பேரறிஞர் வ. ரா. இந் நோக்கத்திற்காகவே சுந்தரி, கோதைத் தீவு ஆகிய நாவல்களை உருவாக்கினர். பி. எஸ். ராமையா, வரதட்சிணைக் கொடுமையைத் தம் பிரேமஹாரம் என்ற நாவலிலே ஆராய்கின்றார். ஆர். வி. எழுதிய அணையாவிளக்கு என்ற தம் அமரமுத்திரை பெற்ற நாவலிலே கலப்பு மணச் சிக்கலைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கின்றார். அர்த்தமற்ற மூடநம்பிக்கையால் அவதிப்படும் பெண் இனத்தின் அவலக்குரலை, பார்வதி பி. ஏ., ரங்கோன்ராதா போன்ற நாவல்களிலே சித்திரித்து, சமுதாய சீர்திருத்தம் கோருகின்றார் அறிஞர் அண்ணா. தறித் தொழிலாளர்களின் தாங்கொணாத் துயரை நெஞ்சக் குமுறலோடு வருணிக்கின்றார் ரகுநாதன் தம் 'பஞ்சும் பசியும்' என்ற ஆவேச மான இலக்கியப் படைப்பிலே.

கொங்கு மாவட்டக் கவுண்டர்களின் வாழ்வை ஆர் சண்முகசுந்தரம் அறுவடை, சட்டி சுட்டது ஆகிய நாவல்களிலே

விவரிக்கின்றார். மதுரை மாவட்ட மறவர்களின் வாழ்க்கையை தி. சு. செல்லப்பா 'வாடிவாசல்' என்ற நாவலிலே வருணிக்கின்றார். திருவாங்கூர்த் தமிழ்மக்கள் பேசும் பேச்சு மொழியிலே ஹெப்சிபா ஜேசுதாசன் புத்தம் வீடு, டாக்டர் செல்லப்பா ஆகிய நாவல்களை ஆக்கியுள்ளார்.

கோதை நாயகி அம்மையாருக்குப் பின்னர் லட்சுமி என்ற திரிபுரசுந்தரி காஞ்சனையின் கனவு, மிதிலா விலாஸ் போன்ற கட்டுக்கோப்பான நாவல்களைப் படைத்தார். குடும்பப் பாங்கான கதைகளைப் புனைவதில் வல்லவர் சரோஜா ராமமூர்த்தி. லட்சிய வாதம், பனித்துளி, முத்துச்சிப்பி ஆகியவை அவருடைய புகழ்பெற்ற நாவல்கள். சிறுகதை, நாவல் ஆகிய இருதுறைகளிலும் எழுதும் ஆற்றல் படைத்தவர்கள் சூடாமணி, வசுமதி ராமசாமி. மனோதத்துவக் கதைகளை உருவாக்கும் திறம் வாய்ந்தவர் சூடாமணி.

பெண் நாவல் ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க சிறப்பினை யுடையவர் ராஜம்கிருஷ்ணன். கோவா விடுதலைப் போராட்டத்தைப் பின்னணியாக்கி இவர் உருவாக்கியுள்ள வளைக்கரம் என்ற நாவல் அழியாத அமரமுத்திரை பெற்ற நாவலாகும். ஐந்தாண்டுத் திட்டத்தின் படிப்படியான வளர்ச்சியை அமுதமாகி வருக என்ற நாவலிலே அழகாக வருணித்துள்ளார். நீலகிரிப் படகர்களின் வாழ்வை நன்கு விளக்கும் குறிஞ்சித்தேன் என்ற நாவல் சிறந்த வட்டார நாவலாகும்.

குயிலி ராஜேஸ்வரி, கிருஷ்ணா, கோமகள், குமுதினி, அநுத்தமா ஆகியோர் பெரும்புகழ் பெற்ற பெண் எழுத்தாளர்களிலே சிலராவர்.

பிறமொழி நாவல்களை கா. ஸ்ரீ. ஸ்ரீயும், புதுமைப்பித்தன், த. நா. குமாரசாமி, த. நா. சேனாதிபதி, வீழிநாதன், சுத்தானந்த பாரதியார் போன்றோரும் தமிழ்ப்படுத்தினர். இவ்வகையில், சரத்சந்திரர், பங்கிம்சந்திரர், தாகூர் போன்றோரின் வங்க நாவல்களும் டால்ஸ்டாய் போன்றோரின் ருஷ்ய நாவல்களும், பிரெஞ்சு மொழிக் கதைகளும், மராட்டி, குஜராத்தி, மலையாளம், தெலுங்குமொழிக் கதைகளும், தமிழில் வெளி

வந்துள்ளன. இத் துறையில், தென்னிந்திய புத்தக அற நிலையம் (S. I. B. T.) ஆற்றிவரும் தொண்டு அனைவரும் அறிந்ததே! ஆனந்த விகடன், கல்கி, கலைமகள் போன்ற இதழ்கள் அடிக்கடி போட்டிகள் வைத்து நாவல் வளர்ச்சிக்குப் பெருக்கம் அளிக்கின்றன.

தமிழ்மொழியில் கதைத்துறை வளர்ச்சிக்குப் பத்திரிகைகள் ஆற்றும் தொண்டு பாராட்டற்குரியது. ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அறக் கட்டளையும், புகழ்பெற்ற டி. வி. எஸ். தொழில் நிறுவனமும் இத் துறையின் வளர்ச்சிக்குத் துணை புரியப் போட்டிகள் வைத்துப் பரிசுகள் தர முன்வந்துள்ள முயற்சி தமிழ்மொழியின் எதிர்கால வாழ்விற்குப் பெருந்துணை புரிவதாகும்.

உரையாசிரியர்கள் தொண்டு

முன்னுரை

இடைக்காலத்தில் வாழ்ந்துவந்த தமிழ்மக்கள் சங்க இலக்கியங்களின் சிறப்பையறிந்து, தமிழ்மக்களிடையே அந் நூல்களைப் பரப்ப விழைந்தனர். சங்கநூற் பயிற்சியுடைய பெருமக்கள் ஒரு சிலர் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூலுக்கும், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை போன்ற சங்க இலக்கியங்களுக்கும் உரை (Commentary) எழுத முற்பட்டனர். அத்தகைய பெருமக்களைத்தாம் உரையாசிரியர்கள் என்று அழைக்கின்றோம். இவர்கள் இயற்றிய உரைகள், சங்க இலக்கியங்களை நன்கு அறிந்துகொள்ளப் பயன்படும் சிறந்த திறவு கோல்களாகும். இவர்கள் உரை எழுதியதன் வாயிலாகத் தமிழ் உரை நடையின் தோற்றத்திற்கு வித்திட்டனர் எனலாம். அவ்வுரையாசிரியர்களைப்பற்றி ஓரளவு காண்போம். உரையாசிரியர்களில் முதன்மையாகத் திகழ்பவர் இறையனார் அகப்பொருளுக்கு உரை கூறிய 'நக்கீரர்' ஆவர்.

உரையாசிரியர்கள்

1. இளம்பூரணர்

தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த ஆசிரியர்களில் இளம்பூரணர் முதல்வராவர். இவர் இயற்றிய உரைச் சிறப்பின் காரணமாக, இவரை 'உரையாசிரியர்' என்றே அழைப்பர். இவர் உரை சுருக்கமாகவும், வெற்றுச் சொல்லும் வீண் விளக்கமும் இன்றித் தெளிவாகவும் அமைந்துள்ளது. 'பரத்தையர் ஆவார் யார்?' என விளக்குங்கால் "அவர் ஆடலும், பாடலும் வல்லவராகி, அழகும் இளமையும் காட்டி, இன்பமும், பொருளும் வெஃகி ஒருவர்மாட்டும் தங்காதார்" என வரையறை கூறுகின்றார். இத்தகைய சுருக்கமான விளக்கங்களை, இளம்பூரணர் உரையில் காணலாம். இவர் தொல்காப்பியம் முழுவதற்கும் உரை வகுத்துள்ளார். அகநானூறு, புறநானூறு முதலிய 40 பழந்தமிழ் நூல்களிலிருந்து மேற்கோள்களைக் காட்டித் தம் உரையை வளப்படுத்தியுள்ளார்.

2. சேனாவரையர்

இவர் தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு, உரை இயற்றியுள்ளார். இலக்கணப் பயிற்சியோடு, நல்ல இலக்கியத் தேர்ச்சியும் பெற்றவர்; வடமொழி அறிவு மிகுதியாக வாய்ந்தவர். 'வடநூற்கடலை நிலைகண் டுணர்ந்தவர்' என்று இவரைச் சிறப்பித்துக் கூறுவர். இவர், மற்ற உரையாசியர்களை மறுக்கும் திறம் தனிச்சிறப்புடையதாகும். இவர் உரை நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு :—

"வேறுபட்ட வினையுடைய பல பொருட்குப் பொதுவாகிய சொல்லை, ஒன்றற்குரிய வினையால் கிளவார். எனவே பொது வினையால் கிளப்பர் என்றவாறும். இவை அடிசில், அணி, இயம், படையென்னும் தொடக்கத்தன. அடிசில் என்பது உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன என நால்வகைக்கும்; அணி என்பது கவிப்பன, செறிப்பன, பூண்பன என்னும் தொடக்கத்தனவற்றிற்கும்; இயம் என்பது கொட்டுவன, ஊதுவன, எழுப்புவன என்னுந் தொடக்கத்தனவற்றிற்கும்; படை என்பது எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன என்னுந் தொடக்கத்தனவற்றிற்கும் பொதுவாகலின், அடிசில் அயின்றார், மிசைந்தார் எனவும்; அணி அணிந்தார், மெய்ப்படுத்தார்

எனவும்; இயம் இயம்பினர், படுத்தார் எனவும்; படை வழங்கினர், தொட்டார் எனவும் பொதுவினையால் சொல்லுக.''

3. பேராசிரியர்

இவர் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில், சில இயல்களுக்கு மட்டும் உரை கண்டுள்ளார். திருக்கோவையாருக்கும் உரை எழுதியுள்ளார். குறுந்தொகை முதல் இருபது செய்யுட்களுக்கு இவர் உரை எழுதியுள்ளதாகத் தெரிகிறது. பற்பல சங்க இலக்கியங்களையும், மேற்கோள் காட்டி எழுதிச் செல்லுகின்றார்.

4 நச்சினர்க்கினியர்

இவர் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களுக்கும் உரையியற்றியுள்ளார். பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி முதலிய இலக்கிய நூல்களுக்கும் இவர் உரைகள் வரைந்துள்ளார். தம் கருத்தே போல் இலக்கிய வரிகளை அலைத்துப் பொருள் கூறுவாரேனும், இவருடைய உரைநடை மிகச் சிறந்ததாகும். அதனல்தான் இவரை, ''உச்சிமேல் புலவர்கொள் நச்சினர்க்கினியர்'' என்று பண்டையோர் பாராட்டியுள்ளனர். இவருடைய விளக்கவுரை சொல்லழகும், பொருளழகும் மிக்கதாகும் மேனாட்டினர் எழுதிய விளக்கவுரை போன்று இவருடைய உரை தெளிவும், நயமும் மிகுந்து திகழ்வதாகும் என பௌவர் என்பார் குறிப்பிடுகின்றார்.

5. பரிமேலழகர்

இவர் திருக்குறளுக்கு உரையெழுதிய பதின்மரில் ஒருவர் ஆவர். வடமொழி அறிவும், சங்க இலக்கியப் புலமையும் பெற்றவர். சொற்களுக்குத் தக்க பொருள் தந்து, வரையறை செய்வதில் வல்லவர். ''சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து வீடு'' என விளக்குவார். ''விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் அறம்'' என்று கூறுவார். ''மானம்'' என்பது ''எஞ்ஞான்றும் தந்நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும்'' என விளக்கம் தருவார். இவ்வுலகத்து மாந்தரைக் குறிக்குமிடத்துச் ''சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினர்'' எனச் சொற்செட்டுடன் கூறுவார்.

தம் வடமொழி அறிவைக்கொண்டு, இவர் குறளுக்கு உரை எழுத முற்படுவதால் சில இடங்களில் பொருந்தாத கருத்துக் களைப் புகுத்தி இடர்ப்படுகின்றார். இவர் உரைச் சிறப்புக் காரணமாக,

பரித்த உரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்த உரையாமோ தெளி

எனப் பாராட்டுவர். பரிமேலழகரும், அகம், புறம் போன்ற 26 நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார்.

6. அடியார்க்கு நல்லார்

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த பெரியார். இவர், நூல் முழுவதற்கும் உரையெழுதி உள்ளார். ஆனால், சில காதைகளுக்கும் வஞ்சிக் காண்டம் முழுமைக்கும் இவர் எழுதிய உரை கிடைக்கவில்லை! ஐந்திணைக்குரிய பொருள்களைச் சிலப்பதிகாரத்தோடு இவர் இசைத்துக் காட்டும் திறத்திலிருந்து இவரது இலக்கண அறிவை உணர லாம். அரங்கேற்று காதைக்கு இவர் இயற்றியுள்ள உரையி லிருந்து, இவர்தம் இசை நுணுக்க அறிவையும், நாடகத் தமிழ்ப் புலமையையும் அறியலாம்; வானநூலறிவையும் நாம் காணலாம். இன்னின்ன நூலிலிருந்து இம் மேற் கோள்களைத் தாம் எடுத்துக் காட்டுவதாக ஆங்காங்குக் குறித்துச்செல்வது, இவ் வுரையாசிரியரின் தலையாய சிறப் பாகும். ஆழ்ந்த புலமை மிக்க உரையாசிரியராவார் இவ் வடியார்க்கு நல்லார். 89 இயல்தமிழ்நூல்களிலிருந்தும் 7 இசைத் தமிழ் நூல்களிலிருந்தும், 10 நாடகத் தமிழ்நூல் களிலிருந்தும் மேற்கோள்களைக் கையாண்டுள்ளார்.

பிற உரையாசிரியர்கள்

தொல்காப்பிய நூலுக்குக் கல்லாடர், தெய்வச்சிலையார் போன்றோர் உரை கண்டுள்ளனர்.

இவ் வுரையாசிரியர்களையன்றிச், சிலப்பதிகாரத்திற்கு அரும் பதவுரை யாசிரியரும், புறநானூறு, பதிற்றுப்பத்திற்குச் சில உரையாசிரியர்களும் உரையெழுதியுள்ளனர். இவை நமக்குக்

கிடைக்கவில்லை. நன்னூலுக்கு முதன்முதலாக உரை கண்டவர் மயிலைநாதராவார். நன்னூலுக்கு 'விருத்தியுரை' தந்தவர், சங்கர நமச்சிவாயர் ஆவர். சிவஞான முனிவர் சிவஞான போதத்திற்கு 'மாபாடியம்' எனும் உரை விளக்கம் செய்துள்ளார்.

பிற்காலத்தும் சிறந்த உரையாசிரியர் பலர் சங்க நூல்களுக்கு உரையெழுதி யுள்ளனர். நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், ஔவை துரைசாமிப் பிள்ளை, பெருமழைப் புலவர் சோமசுந்தரனர் ஆகியோர் சிறப்பாகப் பாராட்டுதற் குரியவர்கள்.

வைணவ உரையாசிரியர்கள்

நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு உரை வகுத்த ஆசிரியர்களில் **நஞ்சீயரும், நம்பிள்ளையும்** சிறப்புடையவர்களாவர். இவர்களும் இவர்களுக்குப் பின்வந்த வைணவ உரையாசிரியர்களும் தம் உரைகளை மணிப்பிரவாள நடையிலே எழுதினர்.

திருவாய்மொழிக்கு—ஆருயிரப்படி, ஒன்பதினுயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பத்தாருயிரப்படி என ஐந்து பேருரைகள் உள. திருவாய்மொழியின் முதல் பேருரையாகிய ஆருயிரப்படியினை வெளியிட்டவர், திருக்குருகைப் பிரான் பிள்ளான் என்பவராவார். ஒன்பதினுயிரப்படி என்னும் உரையின் ஆசிரியர் நஞ்சீயராவார். நம்பிள்ளை, பெரிய திருமொழி, திருப்பள்ளி எழுச்சி, திருவிருத்தம் என்பனவற்றிற்கு உரை எழுதியுள்ளார்.

அழகிய மணவாளசீயர், திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி எனும் பேருரையை எழுதினர். இருபத்து நாலாயிரப்படி எனும் பேருரையினை இயற்றியவர், பெரிய வாச்சான் பிள்ளையாவார். இவர் நாலாயிரப் பிரபந்தத்தில் திருவாய்மொழி தவிர்த்த ஏனைய மூவாயிரம் பாடல்களுக்கும் உரை வகுத்துள்ளார்.

"படி" என்றால் அளவு என்று பொருளாகும். ஆருயிரப்படி என்றால் ஆருயிரம் கிரந்த அளவினது என்று பொருள்படும்.

இசைத் தமிழ்

முன்னுரை

இசையைக் கேட்டு இன்புறாத உயிர்களே இல்லை. இசை கல்மனத்தையும் கரைந்துருகச் செய்யும்; கொடிய விலங்குகளை யும் நச்சுப் பாம்புகளையும் கூடக் குழைய வைத்துவிடும். இசை வயப்பட்டால் அரியும் கரியும் அருகருகே நிற்கும்; புலியும் புல் வாயும், புலன் ஒன்றி மயங்கும்; பாம்பும் மயிலும் பகை மறந்து நிற்கும். அத்தகைய இயல்பு படைத்தது இசை. கேட்போரை வயப்படுத்தித் தன்வசம் இசைய வைப்பதே இசையாகும். அன்பைப் பெருக்கி ஆருயிரை வளர்ப்பதே இசையாகும்.

இசையின் இத்தகைய அருமையையும், பெருமையையும் உணர்ந்தே, தமிழ்மக்கள் இசைத்தமிழை முத்தமிழுள் நடு நாயகமாக வைத்துள்ளனர். இலக்கிய நூல்கள் அனைத்தையும் இசைத் தமிழாலேயே இயற்றியுள்ளனர்.

பல இயல் பாக்களோடு, இன்னிசையாகிய நிறத்தை (ராகத்தை) இசைத்தலால், இசையென்ற பெயரைப் பெற்றது. இசையினை நெஞ்சு, கண்டம், நா போன்ற எட்டிடங்களிலும் எடுத்தல், படுத்தல், உருட்டல் போன்ற எண்வகைத் தொழில்களால் உருவாக்கிச் சீர்ப்படுத்திப் பாடப்பெறுவது 'பண்'ணாகும். இவற் றிலிருந்து பிறப்பவை 'திறம்' ஆகும். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகியன பண்டைக் காலத்துத் தமிழ்ப்பண்கள் ஆகும். அவற்றைப் பகற்பண்கள் என்றும், இரவுப்பண்கள் என்றும், 'மாலைப்பண்கள் என்றும், பொழுதிற்கேற்றவாறு பாகுபாடு செய்துள்ளனர். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன பழங்காலத்து விளங்கிய ஏழிசைகளாகும்.

சங்க காலம்

பழந்தமிழ் நூலான தொல்காப்பியத்தில், இயல்தமிழ் இசைச் செய்யுள் ஆராய்ச்சிக்கு இன்றியமையாது விளங்குகின்ற இசை

நூல் முடிபுகளும், கூத்து நூல் முடிபுகளும் கூறப்பட்டுள்ளன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள் போன்ற பண்டைய நூல்களிலும், இசைத்தமிழ்பற்றிய அரிய நூல் முடிபுகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் அவற்றின் இனங் களும் இசையை அடிப்படையாகக்கொண்டே திகழ்கின்றன. பரிந்துவரும் இசைப்பாட்டையே பரிபாடல் என்கின்றனர். பரிபாடல் நூலில், இப்பொழுது கிடைத்திருக்கும் பாடல்களில் பலவற்றிற்குப் பாடினுர் பெயரும், பண்ணின் பெயரும், இசை வகுத்தார் பெயரும் குறிக்கப்பட்டுள்ளன. அவர்கள் வகுத் தெழுதிய முறையும் அம் முறைபற்றிய இசைக் குறிப்பும் இக் காலத்தில் கிடைக்கவில்லை.

இறந்துபட்ட இசைநூல்கள் எண்ணற்றனவாகும். இசைத் தமிழ் நூலாகிய பெருநாரை, பெருங்குருகும் பிறவும் தேவ இருடி நாரதன் செய்த பஞ்ச பரதீயமும் முதலாகவுள்ள தொன்னூல்கள் இறந்தன, என்று அடியார்க்கு நல்லார் கூறுகின்ருர். சிகண்டி யெனும் செந்தமிழ் முனிவர் இயற்றிய இசை நுணுக்கம், இந்திர காளியம், அறிவனுர் செய்த பஞ்சமரபு, ஆதிவாயிலார் செய்த பரத சேனுபதீயம், பாண்டிய மதிவாணனுர் செய்த மதிவாணனுர் நாடகத் தமிழ்நூல் ஆகிய ஐந்து நூல்களும் அடியார்க்கு நல்லார் காலத்தில் தமிழ்மக்களால் பயிலப்பெற்றுள்ளன. இந் நூல்கள் கூறும் இசை நாடக முடிபுகளையே ஓரளவு துணையாகக் கொண்டு சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் விரிவுரை இயற்றி யுள்ளார் என்றும் சிலப்பதிகார உரைப்பாயிரம் கூறுகின்றது. மேற்கூறிய நூல்களுள் பஞ்சமரபு தவிர ஏனையவை பிற்காலத்தே அழிந்துவிட்டன.

நமக்குக் கிடைத்துள்ள தமிழ்நூல்கள், பண்டை இசைத் தமிழ் மரபினையும், குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளையும், இசைபாடும் முறையினையும் முறையற்ற வழுக்களையும் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன. பண்டு இசை வளர்த்த குடுப்பத்தாரைப் பாணரென்று அழைத்துள்ளனர். அவர்கள் இயக்கிய யாழ் போன்ற கருவிகளின் இயல்பும் அவர்களுடைய வாழ்க்கை முறைகளும் பழந்தமிழ் நூல்களில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளன.

சீறியாழை இசைப்போரைச் சிறுபாணர் என்றும், பேரியாழை இசைப்போரைப் பெரும்பாணர் என்றும் வழங்கியுள்ளனர். இவர்கள் பாரி போன்ற வள்ளல்களிடம் பாடிச் செல்வர். அவர்கள் பரிசிற் பொருளை வாரி வழங்கி அனுப்புவர்; பரிசில் பெற்ற பாணர்கள், வறிய பாணர்களை அவ் வள்ளல்களிடம் ஆற்றுப்படுத்துவர்.

காவிரிப்பூம்பட்டினத்தில், மருவூர்ப் பாக்கத்தில் பெரும் பாணர்க்கு இருக்கை அமைத்துள்ளனர்; அக்காலத்து வாழ்ந்துவந்த இசையறிஞர்—"துணைக்கருவி இசைப்போர், தோற்கருவி இசைப்போர், துளைக்கருவி இசைப்போர், கண்டத்தால் பாடுவோர் என நால்வகைப்படுவர்" என்று இசை நிகழ்ந்த இயல்பைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது; ஆடல்கள் நாடக அரங்கில் ஆடும்பொழுது இசையாசிரியனும் குழலாசிரியனும், யாழாசிரியனும் அருகமர்ந்து மாதவி ஆடலுக்குத் துணை புரிந்தனர் எனச் சிலப்பதிகார அரங்கேற்று காதை மொழிகின்றது. குறிஞ்சிநில மக்கள் குன்றக்குரவை ஆடினர்; பாலை நில மக்கள் வேட்டுவவரி பாடினர்; முல்லைநிலப்பெண்டிர் ஆய்ச்சியர் குரவையில் முல்லை நிலக் கருவிகளையும், பண்களையும் பயன்படுத்தியுள்ளனர் எனத் தெரிகின்றது. பெண்கள் உலக்கை கொண்டு குற்றும்பொழுதும் பாடினர். (வள்ளைப் பாட்டு); பந்து ஆடும்பொழுதும் பாடினர், (கந்துகவரி), ஊசலாடும்போதும் பாடினர், (ஊசல்வரி); கடற்கரையிலும் களிப்பாகப் பாடினர் (கானல்வரி) எனப் பலவகை வரிப் பாடல்களைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

பல்லவர் காலம்

கி. பி. 300 முதல் 600ஆம் ஆண்டு வரையுள்ள இருண்ட காலப் பகுதியில் இசைக் கலை மிகவும் அருகி மறைபத் தொடங்கியது. எனினும் இக்காலத்தே வாழ்ந்த காரைக்காலம்மையார் அருளிச்செய்த திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகமும் அற்புதத் திருவந்தாதியும், தெய்வத் தமிழிசைப் பாடல்களுக்குச் சிறப்புத் தரும் இலக்கியங்களாகத் திகழ்கின்றன. திருநீலகண்டயாழ்ப்பாணர் தம் மனைவியார் மதங்க சூளாமணியாருடன்

சீர்காழிப்பதிக்கு வந்து, ஆளுடைய பிள்ளையாரை வணங்கி அவர் பாடியருளிய திருப்பதிகங்களைத் தம் யாழில் இசைத்துப் பாடித் தமிழகம் முழுதும் சென்று இசை வளர்த்துள்ளார். கவின்கலை வல்ல காவலனான மகேந்திரவர்மப் பல்லவன், குடுமியாமலைக் கல்வெட்டில் ''எட்டிற்கும், ஏழிற்கும் இவை யுரிய'' என்று குறித்துள்ளான். தெய்வத்தைப் போற்றும் இசைப்பாடலாகிய 'வாரம்' என்னும் பாக்களால், ஞானசம்பந் தரும், திருநாவுக்கரசரும், சுந்தரரும் ஆயிரக்கணக்கான திருப் பதிகங்களைப் பாடியுள்ளனர். இறைவனது திருவருளை நினைத்து நெஞ்சம் ஏங்கி இன்சொற்படுத்தி, இன்னிசைப் படுத்தப்பட்டுப் பாடப்பெற்ற இச் செழும் பாடல்களே 'தேவாரம்' ஆகும். அடியார்கள் இசைபாடி இறைவனைத் தொழ, பெண்கள் ஆண்டவனின் பலதிறப்பட்ட பண்புகளைப் பாடிக்கொண்டே கழல், பந்து, அம்மானை முதலிய ஆட்டங்கள் ஆடியதாகச் சம்பந்தர் பாடுகின்றார். பூவையர்கள், பூக்கொய்தவாறே சுண்ணம் இடித்தவாறே இறைவனின் தன்மைகளைத் தெள் ளேணம், உந்தி பறத்தல், தோள் நோக்கம் முதலிய பாடல் களாக ஆடிப்பாடி மகிழ்ந்தனர் எனத் திருவாசகம் தந்த மணி வாசகர் கூறுகின்றார். அவருடைய நூலில் திருவெம்பாவை, திருப் பள்ளியெழுச்சி, திருவம்மானை, திருப்பொன்னூசல், திருப்பூ வல்லி, திருக்கோத்தும்பி முதலியன முத்தமிழுக்கும் விருந்தாக வல்ல ஒப்பற்ற இலக்கணங்களாகும். நாயன்மார்கள் பாடிய பாக்களிலே கொல்லி, இந்தளம், சீகாமரம், குறிஞ்சி, நட்ட பாடை, வியாழக்குறிஞ்சி, செவ்வழி, புறநீர்மை முதலிய தமிழ்ப் பண்கள் இயைந்துவரக் காணலாம். நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி, பழந்தமிழ்ப் பண்களும் பழைய இலக்கணத் திற்கேற்ற தாளமும் அமையப்பெற்ற நூலாகும்.

சோழர் காலம்

யாழிசையால் யானையை வென்ற உதயணன் கதை கூறும் பெருங்கதையும், சுரமஞ்சரியை இசைபாடி வென்ற சீவகன் வரலாறு கூறுஞ் சீவகசிந்தாமணியும், சொல்வளமிக்க கல்லாட நூலும், கி. பி. 10, 11ஆம் நூற்றுண்டுகளில் தமிழகத்தில்

வழங்கி வந்த இசைத்தமிழின் இயல்பினை ஒருவாறு புலப்படுத்துகின்றன. சேந்தனார் முதலிய ஒன்பதின்மரால் பாடப் பெற்ற திருவிசைப்பாப் பாடல்கள் தேவாரத்தினைப் போன்று பண்ணமைக்கப்பெற்றுள்ளன. பதினோராம் திருமுறையில் அமைந்த கோயில் நான்மணிமாலையிலுள்ள சந்தச் செய்யுட்கள் தாம், பின்னர்த் தோன்றிய அருணகிரிநாதருக்குத் திருப்புகழ்ச் சந்தங்களை அமைக்க ஆதரவாக விளங்கியுள்ளன.

சேக்கிழார் காலத்தில் இசைமரபு அருகிவிட்டது. எனினும் முற்றிலும் மறையவில்லையென்பது, அவர்தம் பெரிய புராண நூலில் கூறும் பழந்தமிழிசை நூற் குறிப்புக்களால் தெளிவாகத் தெரிகின்றது. தேவாரத் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பியும் சோழமன்னரும், அம் முறைகளுக்கு அமைந்த பண் அடைவு தெரியாமல் மயங்கி இறுதியில் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் பரம்பரையில் வந்த ஒரு பெண் மணியைக் காண அவ்வம்மையார் அமைத்துக் கொடுத்த பண் அடைவுகளாகத் திகழ்கின்றன. இராசராசசோழன் தஞ்சைக் கோயிலில் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடுவதற்குப் பெருந் துணை புரிந்துள்ளான். குலோத்துங்கன், இசைக்கலையை அறிந்து இசைநூல் இயற்றியதாகக் கலிங்கத்துப்பரணி கூறுகிறது. நிசங்க சாரங்கதேவர் என்பார், தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் இசைகளை நன்கு அறிந்து, ஆராய்ந்து ''சங்கீதரத்நாகரம்'' என்னும் இசை நாடக நூலை வடமொழியில் எழுதியுள்ளார். அந் நூலில் தேவாரப் பண்கள் சிலவற்றைக் கூறியுள்ளார்.

பிற்காலம்

17, 18ஆம் நூற்றாண்டுகளில், தமிழ்நாட்டில், குழப்பமும் கலகமும் நிகழவே, தெலுங்கர்களான நாயக்க அரசர்களும் மகாராட்டிரர்களும் முகமதியர்களுமாக மாறி மாறி ஆளத் தொடங்கினர்; தமிழ்மொழி பெருவழக்கற்றது; தமிழ் இசைவாணர்கள் ஆதரிப்பராற்றனர்; தெலுங்குப் பாடல்களுக்குச் செல்வாக்கு மிகுந்தது. ஆகையால், தியாகராசர், தம் கீர்த்தனங்களையெல்லாம் தெலுங்குமொழியிலேயே எழுதி வைத்தார்.

எனினும், தமிழிசை யிலக்கியமாகக் கீர்த்தனைகளை இயற்றிய முத்துத் தாண்டவரும், இராம நாடகக் கீர்த்தனை பாடிய அருணாசலக் கவிராயரும், நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளைப் பாடிய கோபாலகிருஷ்ண பாரதியாரும், சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளைப் பாடிய மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்களும் இடைக்காலத்தில் இசைத் தமிழை அழியாது காத்த அருட் செல்வர்கள் ஆவர்.

இவர்களைப் பின்பற்றி **இராமலிங்க அடிகள்,** தமிழ் மணங் கமழ நாமாவளிகளும், கீர்த்தனங்களும் பாடினார்.

19ஆம் நூற்றாண்டில், இசைத்தமிழ்ப் பாடல்களை இயற்றி இசைவளர்த்த பெரியோர்கள், காவடிச்சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியாரும், கீர்த்தனைகள் பல பாடிய மாரிமுத்தாப் பிள்ளையும் ஆவர்.

இயல்தமிழ் இலக்கியங்களான குறவஞ்சியும், பள்ளுப் பாட்டும் சிறந்த இசைத் தமிழிலக்கியங்களாகவும் திகழ்கின்றன.

தற்காலம்

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் **ஆபிரகாம் பண்டிதர்** என்பார், பழந்தமிழ் நூல்களையும், இக்காலத்து வழங்கும் இசை மரபினையும் ஒப்புநோக்கி ஆராய்ந்து, "கருணாமிருத சாகரம்'' என்ற இசைத்தமிழ் நூலை இயற்றி, இசைத்தமிழ் ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்துள்ளார். சங்க நூல்களை ஆராய்ந்து, பழைய யாழ்களைப்பற்றிய விளக்கங்களை மிகச் சிறப்பாக விபுலானந்த அடிகள் 'யாழ் நூல்' எனும் நூலாக வெளியிட்டுள்ளார்.

தெலுங்கு இசையைத் தவிர்க்கச்செய்து, தாய்மொழியாகிய தமிழிலேயே இசைபாடக் கலைஞர்களை ஊக்குவித்த பெருந்தகைகள், ராஜா சர். அண்ணாமலை செட்டியாரும், சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரும் ஆவர். தமிழிசைச் சங்கத்தை அமைத்தும், தமிழிசைக் கல்லூரி ஒன்றை நிறுவியும், இசைத் தமிழ்நூல்களை வெளிட்டும் ராஜா அவர்கள் தமிழிசைக்குத் தொண்டு புரிந்துள்ளார்கள்.

நாடகத் தமிழ்

முன்னுரை

தமிழ் இலக்கியத்தைப் பழங்காலந் தொட்டே இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனப் பாகுபாடு செய்துள்ளனர். இயலும், இசையும் சேர்ந்து கதையைத் தழுவிவரும் கூத்தே நாடகமாகும். சங்கப் பாடல்களில் அகப் பாடல்கள் அனைத்தும் நாடகக் கூற்றுகவே வருவதால் அவற்றை நாடகத் தனிநிலைச் செய்யுட்கள் (Dramatic Monologues) என்பர். பண்டைத் தமிழறிஞர் நாடக இலக்கியங்களைக் கலிப்பா, பரிபாடல்களில் இயற்றியுள்ளனர். நாடகச் சுவைகளைப்பற்றியும், அபிநயங் களைப்பற்றியும் விரிவான ஆராய்ச்சி செய்துள்ளனர். தமிழ் மொழியில் முதன்முதலாகத் தோன்றிய நாடகக் காப்பியம் சிலப்பதிகாரமாகும். இன்று மலையாளிகள் ஆடி மகிழும் 'கதை களி' எனும் கூத்து, சிலப்பதிகாரத்தில் வரும் சாக்கைக் கூத்தே யாகும். எனவே, 'நாடகம்' என்ற ஒன்றைப் பழந்தமிழ் மக்கள் அறியாதவர்களல்லர். ''வாயிற் கூத்தும் சேரிப்பாடலும் கோயில் நாடகக் குழுக்களும் வருகென'' என வரும் சொற்றொடர், கி. பி. 8ஆம் நூற்றுண்டில், தமிழகத்தில் நாடகம் நடிக்கப்பட்டதையும், நாடகக் குழுவினர் இருந்ததையும் பறை யறிவிக்கிறது. *கி. பி. 9ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர், ''நாடகத் தால் உன்னடியார் போல் நடித்து'' எனத் திருவாசகத்தில் கூறுவதாலும், நம்மாழ்வார், 'பிறவி மாமாயக் கூத்தினை' யென்று குறிப்பதாலும், கி. பி. 9ஆம் நூற்றுண்டில் நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டுள்ளன என்பதை நன்கறியலாம். ஆனல் எட்டாம் நூற்றுண்டுவரை 'நாடகம்' எனும் சொல் 'கூத்து' 'Dance' எனும் பொருளைத்தான் குறித்துள்ளது.

முதல் நாடகம்

பல்லவர் காலத்திற்குப் பின், மன்னர் மன்னர்களாக விளங்கிய சோழப் பேரரசர்களது வீர வரலாற்றைத் தமிழ்

*மறைமலையடிகள் கருத்துப்படி கி. பி. மூன்றும் நூற்றுண்டு.

அறிஞர்கள் காவியமாகப் பாடியதோடு நாடகமாகவும் ஆடியுள்ளனர். அதிலொன்று, "இராஜராஜ விஜயம்" என்ற நாடகமாகும். கி. பி. 1119இல் கமலாயபட்டர் என்பார் "பூம்புலியூர் நாடகம்" என்ற ஒன்றை இயற்றியுள்ளார். இதுபோன்று, கோயில்களிலும் பற்பல நாடகங்களை ஆடியுள்ளனர். இவற்றில் ஒரு நாடகமும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, தமிழ்நாட்டில் முதன்முதலில் நடிக்கும் நாடகம் தோன்றியது பெரும்பாலும் 10ஆம் நூற்றூண்டிற்குச் சிறிது முன்பு என்று கூறலாம்.

17 ஆம் நூற்றூண்டு

17ஆம் நூற்றூண்டில் குறவஞ்சி நாடகமும், நொண்டி நாடகமும் இசைப்பாட்டு வடிவில் தோன்றி மக்களுடைய உள்ளங்களைக் கவர்ந்தன. திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய குற்றாலக் குறவஞ்சியும், மாரிமுத்துப் பிள்ளை எழுதிய நொண்டி நாடகமும், ஆசிரியர் பெயர் தெரியாத முக்கூடற் பள்ளும் அத்தகைய சிறந்த நாடகங்களாகும். இவை சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்துவரும் பாமர மக்களின் அன்றாட வாழ்வைச் சித்திரிக்கும் பொதுமக்கள் இலக்கியங்களாகும்.

18 ஆம் நூற்றூண்டு

18ஆம் நூற்றூண்டில் அருணசலக் கவிராயர் இயற்றிய 'ராம நாடகமும்' 'அசோமுகி' நாடகமும், கோபால கிருஷ்ண பாரதியார் இயற்றிய 'இயற்பகை நாயனுர்' நாடகமும் கீர்த்தனை நாடகங்களாகப் பாட்டு வடிவில் அமைந்தனவாகும்.

19 ஆம் நூற்றூண்டு

19ஆம் நூற்றூண்டில் மட்டும் ஏறக்குறைய 500 நாடகங்கள் எழுந்துள்ளன. இவற்றில் நூறு நாடகங்களே அச்சேறி வெளி

வந்துள்ளன. இந் நாடகங்களை நாம் பலவகைகளாகப் பிரிக்கலாம்.

i. **நாடோடிக் கற்பனை நாடகங்கள் :** "மதுரை வீரன் விலாசம்" "நல்ல தங்கை நாடகம்" "பவளக்கொடி நாடகம்" போன்றவை, இப் பகுதியில் அடங்கும்.

ii. **புராண இதிகாச நாடகங்கள் :** தமிழ்நாட்டில் வழங்கி வந்த இராமாயணம், பாரதம் போன்ற புராணங்களில் இடையே வரும் கதைப் பகுதிகளை, ஸ்ரீமகாபாரத விலாசம், அரிச்சந்திர விலாசம், சகுந்தலை விலாசம் என நாடகங்களாக இயற்றி யுள்ளனர்.

iii. **வரலாற்று நாடகங்கள் :** வாய்வழியே வழங்கி வந்த வரலாற்றுக் கதைகளையும் நாடகமாக எழுதியுள்ளனர். "தேசிங்குராச நாடகம்" போன்றன இவ்வகை நாடகத்திற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும்.

iv. **சமூக நாடகங்கள் :** இந் நூற்றுண்டில் சமுதாயக் கேட்டினை விளக்கும் சீர்திருத்த இயல்பு வாய்ந்த நாடகங்கள் பல எழுந்தன. ஒளிமயமாகக் கொள்கைகளைப் பரப்ப முனைந்த காசி விசுவநாத முதலியாருடைய நாடகங்கள் இத்தகைய சீர் திருத்த இயல்பு வாய்ந்தவையாகும். தாசிகள் வலையில் சிக்கிச் சீரழியும் செல்வர்கள் வாழ்க்கையைச் சித்திரிக்கும் "டம்பாச்சாரி விலாசம்" என்ற இவர் இயற்றிய சீர்திருத்த நாடகம் தமிழில் முதன் முதல் தோன்றிய சமூக நாடகம்.

v. **நகைச்சுவை நாடகம் :** 16ஆம் நூற்றுண்டு தோன்றிய 'சனமனோல்லாசினி' என்ற நாடகம் வெறும் நகைச்சுவை நாடகமாகும்.

முகமதியர்கள் 'அப்பாசு நாடகம்' 'அல்லிபாதுஷா நாடகம்' போன்றவற்றைப் புனைந்து தமிழ் நாடக வளர்ச் சிக்குத் தொண்டு புரிந்துள்ளனர். வேதநாயக சாத்திரி என்ற

கிறித்தவப் பெருந்தகையார், தத்துவப்பொருளை உட்பொருளாகக் கொண்ட ஞானத்தச்சன் நாடகம் என்ற மதத் தொடர்புடைய நாடகத்தை இயற்றியுள்ளார். புனித வாழ்வு வாழ்ந்து, தம் கொள்கைக்காக உயிர் துறந்த சிறந்த, கிறித்தவ "வேதசாட்சியாகிய தேவசகாயம் பிள்ளை வாசகப்பா" என்ற நூலினை, உண்மை பிறழாது முத்தையப் புலவரென்பார் நாடகமாக எழுதியுள்ளார். தமிழ்நாட்டுக் கிறித்தவர்கள் அனைவரது உள்ளத்தையும் ஒருங்கே கவர்ந்த நாடகங்களான "ஞானசௌந்திரியம்மாள்" நாடகத்தை 1889இல் முத்து நாயக்கர் என்பாரும், ஊதாரிப்பிள்ளைக் கதையை (Prodigal Son) நாடகமாக 1898இல் மரியதாசர் என்பாரும் எழுதி வெளியிட்டுள்ளனர். இவ்வாறு 19ஆம் நூற்றாண்டில் முப்பெரும் மதத்தாரும் நாடகங்கள் பலவற்றைப் புனைந்து நாடகத் தமிழை வளப்படுத்தினர்.

vi. **பிறமொழி நாடகங்கள்:** 19ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் மேனாட்டுக் கல்வி பரவத் தொடங்கிற்று. ஆங்கிலம் கற்ற தமிழ் அறிஞர்களில் பலர் ஷேக்ஸ்பியர், ரஸின், மோலியா போன்ற மேனாட்டு நாடக ஆசிரியர்களைப் பின்பற்றித் தமிழ் நாடகங்கள் பல புனைந்துள்ளனர். ஷேக்ஸ்பியருடைய Merchant of Venice, Midsummer Night's Dream போன்ற நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். "Cymbeline" நாடகத்தைப் பலர் மொழிபெயர்க்க முனைந்துள்ளனர். சலசலோசனச் செட்டியார் என்பவர் அந் நாடகத்தைச் "சரசாங்கி" என்ற நாடகமாகத் தமிழ்மணங் கமழ வெளியிட்டுள்ளார். ரோமியோ ஜூலியட், சிம்பலின், ஒதெல்லோ போன்ற நாடகங்களைச் சங்கரதாஸ் சுவாமி என்பார் மொழிபெயர்த்துள்ளார். பிரெஞ்சு நாடகப் பேராசிரியராகிய மோலியரின் "லோபி" என்ற நாடகத்தையும், Sophocies என்ற கிரேக்க ஆசிரியரின் இரண்டு நாடகங்களையும் பா வடிவில் நாடகங்களாக 19ஆம் நூற்றாண்டில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர்.

ஆங்கிலம் கற்ற அறிஞர்கள் சிலர், தமிழ் நாடகங்களை உரைநடையில் எழுதி வெளியிடலாயினர். அவ்வாறு 1876இல் **முதன் முதலாக வெளிவந்த உரைநடை நாடகம்** "பிரதாபசந்திரவிலாசம்" ஆகும். இராமசாமி இராசு என்பவர் இதன் ஆசிரியராவார்.

பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை

19ஆம் நூற்றுண்டில் தோன்றிய அறிஞர்கள் அனைவரிலும் தலைசிறந்த நாடக ஆசிரியராகப் பெரிதும் பாராட்டப்படுபவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையாவார். "லார்டு லிட்டன்" எழுதிய "இரகசிய வழி" (The Secret way) என்ற ஆங்கிலக் கதையைக் கருவாகக் கொண்டு தமிழ்மணங் கமழும் 'மனேன் மணீயம்' என்ற நாடகக் காப்பியத்தை இயற்றியுள்ளார். நடிப் பதற்கென்றில்லாமல் படிப்பதற்காகவே இவ் விலக்கியத்தை எழுதியுள்ளார். உலக நிகழ்ச்சிகள் அனைத்தையும் தத்துவ மாகக் காணும் உயர்ந்த உள்ளம் படைத்தவர் இந் நூலாசிரியர். செந்தமிழ்க் காப்பியமாகும் சிறப்பும் நாடகத்திற்கு உண்டு என்பதை உணர்த்திய பெருமை, இந் நூலுக்குரியதாகும். இந் நூலைப் பின்பற்றிப் பிற்காலத்தில் பா வடிவில் பல நூல்கள் எழுந்தன. புலவர் ஆ. பழனி அவர்கள் எழுதிய 'அனிச்ச அடி' கலைஞர்களாலும் அறிஞர்களாலும் பாராட்டப்பெறுவது.

வி. கோ. சூரியநாராயண சாத்திரியார்

ஆங்கில அறிவொடு தமிழ், வடமொழிப்புலமையையும் பெற்று வடமொழி நாடக இலக்கணங்களையும், முறைகளையும் பின் பற்றித் தமிழில் ஒரு சில ஆசிரியர்கள் நாடகங்களை இயற்றினர். **பரிதிமாற்கலைஞன்** என்ற வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் என்பவர் இவர்களுள்ளே தலை சிறந்தவராவர். இவர் "நாடக இயல்" என்ற நாடக இலக்கண நூலை நாடக ஆராய்ச்சிக்கே தொடக்கமாக முதன்முதலாக இயற்றினர். இந்த இலக்கணத் திற்கு இலக்கியமாக, "ரூபாவதி" "கலாவதி" என்ற இரு

நாடகங்களையும் எழுதி வெளியிட்டார். இவர் இயற்றிய மற்றொரு நாடகம் "மானவிஜயம்" ஆகும். இவருடைய நாடகங்கள் உயரிய செந்தமிழ் நடையில் இயன்றவை. இவற்றின் இடையிடையே கீர்த்தனைப் பாக்கள் வரும். இவருடைய நடை பேச்சு நடை அன்று; சிறிது செயற்கை நடையாகும்.

20ஆம் நூற்றாண்டு

சங்கரதாசு சுவாமிகள்

19ஆம் நூற்றாண்டின் இறுதியில், நாடக உலகில் தோன்றிப் பண்டைய நாடகங்களை ஒழுங்குபடுத்தியும், புதிய நாடகங்கள் பலவற்றை எழுதியும், பல நாடகக் குழுக்களுக்கு ஆசிரியராகப் பணியாற்றியும், நாடகங்களில் தாமே நடித்தும் தமிழ் நாடகக் கலைக்கு அரும்பணி புரிந்த பெரியாரான சங்கரதாசு சுவாமிகளைத் தமிழ் உலகம், "தமிழ் நாடகத் தலைமையாசிரியர்" எனப் பாராட்டிப் புகழ்கிறது.

பம்மல் சம்பந்த முதலியார்

உரைநடையில் எண்ணற்ற நாடகங்களை எழுதித் தமிழ் நாடகக் கலைக்குப் புத்துயிர் கொடுத்த பெருமை பம்மல் சம்பந்த முதலியாரையே சாரும். ஏறக்குறைய எண்பத்தைந்து நாடகங்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய நாடகங்களில் "மனோகரா," "லீலாவதி சுலோசனா," "அமலாதித்யன்," "சபாபதி" என்ற நாடகங்கள் தலைசிறந்தனவாகும். அமலாதித்யன் என்ற நாடகம் ஹாம்லெட் என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தின் அருமையான மொழிபெயர்ப்பாகும். சென்ற 65 ஆண்டுகளாகத் தமிழ்மேடையில் அமரத்துவம் பெற்ற நாடகம் "மனோகரா"வாகும். இவர் எழுதிய "லீலாவதி சுலோசனா" என்னும் நாடகம் உரைநடையில் எழுதி அச்சிடப்பெற்ற முதல் நாடகமாகும். இவர் எழுதிய நாடகங்கள் இலக்கியச் சுவை மிக்க உயர்ந்த நாடகங்கள் அல்ல என்று கருதலாம். எனினும், இவர் ஆற்றிய பல் தொண்டுகளால்தான், தமிழகத்தில் நாடகம்

கலை இத்தகைய உயர்நிலை அடைந்தது என்பதை மட்டும் நாம் மறத்தல் கூடாது. நாடகம் நடிப்போரைக் கூத்தாடிகள் என்று இகழ்ந் தொதுக்கிய சமுதாயத்தில், அஞ்சாது தாகே மேடை மேல் ஏறித் தமிழ்உலகம் முழுவதும் சுற்றி நடித்த பெரியார் பம்மல் சம்பந்த முதலியாராவார். காலஞ்சென்ற சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், சத்தியமூர்த்தி, சர். சி. பி. இராமசாமி ஐயர் போன்ற அறிஞர்கள் பலரையும் நடிக்கச் செய்து நாடகக் கலையின் தரத்தை உயர்த்தியவர் இவரே. 1891இல் சென்னை யில் 'சுகுணவிலாச சபை' ஒன்றை நிறுவிப் பின்னர் நாடெங்கும் அதுபோன்ற பல சபைகள் தோன்ற வழிகாட்டிய பெரியாரும் இவரே. எல்லா நாடகங்களும் இன்பமாக முடிய வேண்டிய தில்லை; துன்பமாகவும் முடியலாம் என எழுதிக்காட்டிய நாடக அறிஞரும் இவரேயாவார். நாடகங்களை இவர் பேச்சுநடையில் எழுதியுள்ளார். அதனால், அது பொதுமக்கள் உள்ளத்தோடு உள்ளமாய் ஒன்றிவிடக் காணலாம். இத்தகைய தொண் டாற்றிய பெருந்தகையான பம்மல் சம்பந்த முதலியாரைத் தமிழ்நாடக உலகம் ''நாடகத் தந்தை'' எனப் போற்றி மகிழ்கிறது.

20ஆம் நூற்றாண்டில் தேசியப்பற்று மக்களிடையே தீ போல விரைந்து பரவியது. தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் போன்றோர் 'கதரின் வெற்றி' 'தேசியக்கொடி' 'பம்பாய் மெயில்' போன்ற புரட்சிகரமான நாடகங்களை நாடு முழுவதும் நடித்துக் காட்டி மக்களிடையே சுதந்திர உணர்ச்சியைப் பரப்பினர். 1922ஆம் ஆண்டில் வீர எழுச்சிக்கு வித்திட இந்தியாவில் முதன்முதலாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடித் தூக்கு மேடையில் தொங்கிய வீர பாண்டியக் கட்டபொம்மனின் வரலாற்றை 'முதல் முழக்கம்' என்ற பெயரால நாடகமாக்கி நடித்தனர். இதன் ஆசிரியராகிய ரா. வேங்கடாசலம் என்பார், 'இமயத்தில் நாம்' என்ற எழுச்சி மிக்க மற்றொரு நாடகத்தையும் எழுதி வெளியிட்டார். சுதந்திரம் பெற்ற இன்றும், வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட வீரபாண்டியக் கட்டபொம்மன், இலக்கியச் சுவைமிக்க இராஜராஜ சோழன் என்ற இரு நாடகங்களையும் சிவாஜி மன்றமும் டி. கே.

எஸ். சகோதரர்களும் நாடு முழுவதும் வெற்றிகரமாக நடித்து வந்ததைக் காணலாம்.

20ஆம் நூற்றுண்டில் மேனுட்டுக் கல்வியின் விளைவாக முன்னேர்கள் கண்மூடிப் பின்பற்றிய மூடப்பழக்க வழக்கங்கள் மண்மூடிப் போகவும், சாதிமதச் சடங்குகளும் சம்பிரதாயங் களும் வேரற்று வீழவும், பலர் சமுதாய சீர்திருத்த நாடகங்களை இயற்றி நடித்தனர்; 1922 ஆம் ஆண்டு தொடங்கி, "இளமை மணம், பொருந்தாமணம், வரதட்சிணைக் கொடுமை" ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகரமான "இராஜாம் பாள்," "சந்திரகாந்தா" "மோகனசுந்தரம்" போன்ற சமுதாய மறுமலர்ச்சி நாடகங்கள் மக்கள் மன்றங்களிலே அரங் கேற முற்பட்டன. 1930 ஆம் ஆண்டுக்குப் பின் சமுதாய முற் போக்கு நாடகங்களிலே ஒரு புதுப்போக்கு ஏற்பட்டது.

தமிழ்நாட்டு மக்கள் உள்ளத்தைச் சென்ற சில ஆண்டுக ளாகக் கவர்ந்து விளங்கிய ஒரு சில முற்போக்கு நாடகங்கள் கு. சா. கிருஷ்ணமூர்த்தி எழுதிய "அந்தமான் கைதி" நீல கண்டன் எழுதிய 'முள்ளில் ரோஜா.' சி. என். அண்ணுதுரை எழுதிய 'வேலைக்காரி,' 'ஓர் இரவு,' நாரண துரைக்கண்ணன் எழுதிய 'உயிரோவியம்,' நா. சோமசுந்தரம் எழுதிய 'இன்ஸ் பெக்டர்,' எஸ். டி. சுந்தரம் எழுதிய 'மனிதனும் மிருகமும்,' கல்கி கிருஷ்ணமூர்த்தியின் 'கள்வனின் காதலி,' கலைவாணரின் 'ஐம்பதும் அறுபதும்' ஆகியனவாகும்.

கற்ருேர் படிப்பதற்கென்று இலக்கிய நடையில் வ. சுப் மாணிக்கம் அவர்கள் "மனைவியின் உரிமை" என்ற நாடகத் தையும், டாக்டர் மு. வரதராசனுர் "பச்சையப்பர்" என்ற நாடக நூலையும் இயற்றியுள்ளனர். விபுலாநந்த அடிகள் "மதங்க சூளாமணி" என்ற அரிய நாடகத் தமிழ்நூலினை வெளியிட்டு அழியாப் புகழ் பெற்றுள்ளார்.

பிறமொழிக் கதைகளைத் தழுவித் தமிழில் டி. கே. முத்து சாமி என்பவர் "குமாஸ்தாவின் பெண்" என்ற நாடகத்தை யும், ஆதிமூலம், சோமசுந்தரம் என்பவர்கள் 'மனிதன்' என்ற

நாடகத்தையும் எழுதி மேடைகளில் நடிக்கலாயினர். பி. எஸ், இராமையா என்பவர் பிறமொழிக் கதையைத் தழுவி, 'பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்' என்ற நாடகத்தை இயற்றி வெற்றிகரமாக அரங்கேற்றியுள்ளார்.

பிறநாட்டு நல்லறிஞர் நாடகங்களை மொழிபெயர்க்கக் கருதிய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் 'மிருச்சகடிகம்' என்ற வடமொழி நூலை "மண்ணியல் சிறுதேர்" என அழகாக மொழிபெயர்த்துள்ளார். மறைமலையடிகளார், கவி காளிதாசனின் சாகுந்தலை நாடகத்தைத் தமிழில் திறம்பட மொழிபெயர்த்துள்ளார். சி ஆர். மயிலேறு என்பார், ஷேக்ஸ்பியர் எழுதிய "ஒதெல்லோ" நாடகத்தைத் தமிழில் வெளியிட்டுள்ளார். தென்னிந்திய புத்தக அற நிலையம் (S. I. B. T.) தரமான பிறமொழி நாடகங்களைத் தனித்தனி நூல்களாக வெளியிட்டு வருகின்றது.

வானொலி, செய்தித்தாள், பொருட்காட்சிகள், நாடகக் குழுக்கள் ஆகியவை தமிழ்நாடகங்களை வளர்த்துவரும் பிற சாதனங்களாகும். இன்று திரைப்பட நடிகர்கள் தாமே பல குழுக்களை அமைத்துப், பற்பல நாடகங்களை அரங்கேற்ற முனைவது, நாடகத் தமிழுக்குப் பெருக்கம் தரும் செயலாகும். இவர்களிலே சோ, மனோகர் ஆகிய நடிகர்கள் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

கிறித்துவத் தமிழ்த் தொண்டு

தமிழ்நாட்டிற்கு வந்த மேனுட்டு அறிஞர்களும், தமிழ் நாட்டில் பிறந்து வாழ்ந்த கிறித்தவர்களும் தமிழ்மொழிக்கு ஆற்றிய பணிகளைத்தான் கிறித்தவத் தமிழ்த் தொண்டு என்கிறோம்.

மேனுட்டு அறிஞர்கள்

17, 18 ஆம் நூற்றுண்டுகளில் தமிழகத்திற்கு வந்த சேசு சபைக் குருக்களும் டேனிஷ் மிஷினெரிகளும், தமிழ்நாட்டை ஆள முற்பட்ட ஆங்கில அதிகாரிகளும், தமிழ்மொழியை நன்கு கற்றுத், தமிழ்மொழி வளருவதற்கான பல பணிகளைப் புரிந்துள்ளனர். அத்தகைய பெருமக்களில் தலையாயவர்களைக் காண்போம்.

1. ராபர்ட் டி நொபிலி

இவர் இத்தாலி நாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்த இயேசு சபைக் குரு ஆவார். மதுரையில் சபை நிறுவி மதப்பணி புரிந்தார். 'தத்துவ போதகர்' என்று தம் பெயரையே மாற்றி யமைத்துக்கொண்டு, தமிழ்நாட்டுத் துறவிபோல் வாழ்ந்து வத்தார். இவர் மதச்சார்புடைய வடமொழி கலந்த பல தமிழ் உரைநடை நூல்களை எழுதியிருக்கிறுர். அவற்றில் பல அச்சேருத காரணத்தால் அழிந்துவிட்டன.

2. சீகன் பால்கு

இவர் தமிழ்நாட்டில் முதன்முதலாக புரோட்டெஸ் டண்டு கிறித்தவ மதத்தைப் போதித்த முதல் குரு ஆவார். இவர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவர். அலைபாடிக் கலை வளர்க்கும் தரங்கம்பாடியில் தங்கி மதப்பணி புரிந்துள்ளார்.

தமிழ்நாட்டில் இவர் ஆற்றிய சமய ஊழியத்தைப் பாராட்டி, இங்கிலாந்தில் இவருக்கு இலத்தீன் மொழியில் வரவேற்பு இதழ் படித்து அளித்தபொழுது முதலில் இலத்தீன் மொழியிலும் பின்னர்த் தமிழ்மொழியிலுமாகப் பதிலளித்தமை குறிப்பிடத் தக்கதாகும். தரங்கம்பாடியில் ஓர் அச்சுக்கூடத்தையும், அச்சடிக்கும் காகிதங்களைத் தயாரிக்கும் காகிதத் தொழிற்சாலை ஒன்றையும் பெரும்பொருட்செலவில் நிறுவித், தமிழ்நாட்டில் பண்டிதர் முதல் பாமரர் வரை எல்லா மக்களுக்கும் முதன்முதல் அச்சுப் புத்தகத்தை வழங்கிய இப் பெரியாரின் அருந்தொண்டு எளிதிலே மறக்கக் கூடியதன்று. இவர் பைபிளைத் தமிழ்ப்படுத்தி யுள்ளார். தமிழ் இலத்தீன் ஆகிய இரு மொழிகளுக்கும் பொது வாக வழங்கும் பல சொற்களை விளக்கும் "தமிழ் இலத்தீன் ஒப்பிலக்கண ஆய்வு" (Comparative Study of Tamil & Latin Grammar) என்னும் நூலை இயற்றியுள்ளார்.

3. வீரமாமுனிவர்

இவர் 1680 ஆம் ஆண்டில் இத்தாலி நாட்டில் பிறந்து, தம் முப்பதாம் வயதில் தமிழ்நாடு வந்து ஏறக்குறைய முப்பத்தேழு ஆண்டுகளாகத் தமிழகத்தில் தங்கி மதப்பணி புரிந்த இயேசு சபைக் குரு ஆவார். சந்தா சாகிப்பால் பெரிதும் பெருமைப்படுத்தப்பட்டவர். இத்தாலி, கிரேக்கு, இலத்தீன், எபிரேயம் ஆகிய மொழிகளில் சிறந்த தேர்ச்சியுடையவர். தமிழ்மொழியில் ஆழ்ந்த புலமை பெற்றவர். அவர் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு பலதிறப்பட்டதாகும்.

(i) எழுத்துத் திருத்தம்

முற்காலத்தில் 'எ' கரத்திற்கும் 'ஒ' கரத்திற்கும் வேறு பாடு தெரியாமல், மக்கள் இடர்ப்பட்டனர். இம் மயக்கத்தை நீக்கக் கருதிய வீரமாமுனிவர் 'எ' கர 'ஓ' கரங்களுக்கு நீண்ட புள்ளியையும், மெய்யெழுத்துக்களுக்குச் சுழித்த புள்ளியை யும் பயன்படுத்தி வேறுபாடு காட்டினர். இவ்வாறு இயற்றிய மாற்றமே இன்றைய 'ஏ' 'ஓ' வடிவங்களுக்கு வழிகோலுவ

தாயிற்று. மேலும், 'கெ' 'கொ' என்ற குற்றெழுத்துக் கொம்புகளை மேற்சுழித்து 'கே' 'கோ' என்று மாற்றியமைத்தவரும், வீரமாமுனிவரே யாவார்.

(ii) **செய்யுள் நூல்கள்**

திருக்குறளின் தெள்ளிய நயமும், சிந்தாமணியின் செழுஞ்சுவையும், கம்பராமாயணத்தின் கவியின்பமும் அவர் மனத்தைக் கவர்ந்தன. சிந்தாமணியைப்போல் கிறித்துமதச் சார்புடைய ஒரு பெருங்காப்பியம் செய்ய ஆசைப்பட்டார். அவ் வாசையின் கனியே (1) தேம்பாவணி என்னும் அருங் காப்பியமாகும். இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றைத் தேம்பாவணி சித்திரிக்கின்றது. சிந்தாமணியைப் பின்பற்றி எழுந்த அக் காவியத்தில் திருக்குறளின் மணம் கமழ்கின்றது; கம்பரது கவிநலம் திகழ்கின்றது. கதைப்போக்கிலும் தேம்பாவணி பலவிடங்களில் கம்பரது காவியத்தைத் தழுவிச் செல்கின்றது. அந் நூலைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றுங்கால் அதைக்கேட்டு மகிழ்ந்த புலவர்கள் நம் இத்தாலிய வித்தகருக்கு "வீரமாமுனிவர்" என்னும் பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்ததாகக் கூறுவர். தேம்பாவணி 3 காண்டங்களையும், 3715 விருத்தப் பாக்களையும், 6 படலங்களையும் உடைய காவியமாகும். "இது சீவக சிந்தாமணிக்கு இணையான காவியமாகும்" என்கின்றார், திரு. பூரணலிங்கம்பிள்ளை. "தமிழ் இலக்கியத்தில் தலை சிறந்த நான்கு காவியங்களுள் தேம்பாவணியும் ஒன்று" என்கின்றார் பிஷப் கால்டுவெல். (2)திருக்காவலூரின்கண் எழுந்தருளியிருக்கும் தேவமாதாவின்மீது சந்த இன்பம் நிறைந்த 101 பாக்களைக் கொண்ட "திருக்காவலூர்க் கலம்பக"த்தை இயற்றியுள்ளார். (3) போர்த்துக்கீசிய நாட்டு வேதசாட்சியான கித்தேரி அம்மாள்மீது பாமரரும் படித்து இன்புறத்தக்க "கித்தேரி அம்மாள் அம்மானை" என்ற இனிய எளிய நூலை இயற்றியுள்ளார். (4) தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னனால் துரத்தப்பட்ட கிறித்துவ மக்களுக்கு அடைக்கலங் கொடுத்துக் காத்த திருக்காவலூர் தேவமாதாவின்மேல் 'அடைக்கல நாயகி வெண்கலிப்பா' போன்ற பல பிரபந்தங்

களைப் பாடியுள்ளார். தேவாரப் பதிகம் போன்று, "கருணும் பரப் பதிகம்" ஒன்றையும் பாடியுள்ளார். சில வண்ணச் செய்யுட்களையும் இயற்றியுள்ளார். (5) தமிழில் உள்ள நயமான நீதி நூல்களைத் "தமிழ்ச் செய்யுள் தொகை" என முதன் முதலாகத் தொகுத்தும் வழிகாட்டியுள்ளார்.

(iii) உரைநடை நூல்

மறை கற்பிக்கும் சான்றோர்க்கென்று "வேதியர் ஒழுக்கம்" என்னும் அரிய நூலையும் கிறித்தவ வேதக் கொள்கைகளை எளிதாக விளக்கும் "வேத விளக்கம்" என்ற மற்றொரு நூலையும் இயற்றியுள்ளார். இந் நூலுக்கு எதிர்ப்பாக லூத்தர்சபையினர் வெளியிட்ட 'திருச்சபை பேதகம்' என்ற நூலுக்கு மறுப்பாக "பேதம் மறுத்தல்" "லூத்தர் இனத்தியல்பு" என்ற இரு நூல்களை எழுதியுள்ளார். கிறித்தவர்களுக்கு அறிவு புகட்டும் எண்ணற்ற பல கட்டளைகளையும் சிறு நூல்களையும் இயற்றியுள்ளார். பண்டிதரும், பாமரரும் ஒருங்கே பாராட்டு கின்ற "பரமார்த்த குரு கதை" என்னும் உரைநடை நூலை நகைச்சுவை ததும்ப எழுதியுள்ளார். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இந் நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை, இந்நூலுக்கமைந்த சிறப்பாகும். தமிழில் முதன்முதலாகத் தோன்றிய தலையாய ஏளன இலக்கியமும் (satire) இதுவேயாகும்.

(iv) மொழி பெயர்ப்பு நூல்

திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

(v) இலக்கண நூல்கள்

(i) குட்டித் தொல்காப்பியம் எனப் பலரும் கொண் டாடும் "தொன்னூல் விளக்கம்" என்னும் பொன்னூலை இயற்றியுள்ளார். (ii) உலக வழக்கில் காணப்படும் தமிழ் மொழி இலக்கணத்தைக் "கொடுந்தமிழ் இலக்கணம்" என இலத்தீன் மொழியில் எழுதியுள்ளார். இந் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். முனிவரின் ஆராய்ச்சித் திறத்

தைப் 'போப்' பெரிதும் பாராட்டுகின்றார். டாக்டர் கால்டுவெல் எழுதிய ஒப்பிலக்கண நூலுக்கு இந் நூல் பெரிதும் துணை புரிந்ததெனலாம்.

(vi) **அகராதி நூல்கள்**

(i) தமிழ்ச் சொற்களை அகர வரிசையாகத் தொகுத்துப் பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு அதிகாரங்களாகப் பகுத்துச் "சதுரகராதி" என்னும் அரிய நூலை எழுதி வெளியிட்டுள்ளார். வீரமாமுனிவர் இயற்றிய இவ்வகராதி நூலே, பின்னெழுந்த அகராதி நூல்களுக்கெல்லாம் முதல் நூலாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளது. (ii) 900 தமிழ்ச்சொற்களுக்கு இலத்தீன் மொழியில் பொருள் விளக்கி, 'தமிழ் இலத்தீன் அகராதி' ஒன்றை எழுதியுள்ளார். (iii) "போர்த்துகீசியம்—தமிழ்—இலத்தீன் அகராதி" நூல் ஒன்றையும் இயற்றியுள்ளார். இம் மூன்று அகராதி நூல்களும், தமிழ்நாட்டார் தமிழைக் கற்பதற்கும் பேருதவி புரிந்து வருகின்றன.

இவ்வாறு, வீரமாமுனிவர் கிறித்தவ மக்களுக்குக் காப்பியத் தந்தையாகவும், தமிழ்மக்களுக்கு உரைநடை இலக்கிய முன்னோடியாகவும், [1]அங்கத இலக்கிய ஆசிரியராகவும், அகராதி நூல்களின் தலைவராகவும், மொழி நூலாராய்ச்சியில் முதல்வராகவும், மொழிபெயர்ப்பு நூல்களின் வழிகாட்டியாகவும் விளங்குகின்றார். இத்தகைய முனிவரைத் "தமிழ் வளர்த்த தந்தை" என நாம் நன்றி கலந்த அன்போடு அழைக்கலாம்.

4. எல்லீசர்

சென்னை நகரக் கலெக்டராக வேலை பார்த்துவந்த எல்லீசர் தமிழிலும், வடமொழியிலும் வல்லவர். அருந்தமிழ்ச் சுவடிகளைச் சேகரிப்பதிலும், பாதுகாப்பதிலும் சிறந்த ஆர்வமுடையவர். வீரமாமுனிவரின் வாழ்க்கை வர

1. *அங்கத இலக்கியம்: மறைத்து வசைமொழி கூறும் இலக்கியம்; குற்றங்களைக் கண்டிப்பதும் ஆகும்.*

லாற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிடத் தூண்டிய எல்லீசருக்குத் தமிழகம், என்றென்றும் கடமைப் பட்டுள்ளது. இவர் திருக்குறளின் முதல் 13 அதிகாரங் களுக்குப் பண்டைத்தமிழ் நூல்களிலிருந்து பல மேற் கோள்கள் காட்டி ஆங்கிலத்தில் அரிய உரையெழுதி யுள்ளார்.

5. ரேணியஸ்

இவர் ஜெர்மனி நாட்டினர்; லூத்தரன் மிஷனைச் சேர்ந் தவர். தேர்ந்த தமிழ் அறிஞர் என டாக்டர் போப்பால் புகழப்பட்டவர். "வேத உதாரணத் திரட்டு" போன்ற உரை நடை நூல்களை எழுதியிருக்கின்றார். இவர் எழுதிய தமிழ் இலக்கண நூல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

6. டாக்டர் ஜி. யூ. போப்

தமிழ்மொழியின் உண்மைச் சிறப்பை உலகம் உணரச் செய்த பெருந்தகைகளில் ஜி. யூ. போப் தலைசிறந்தவராவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராகப் பணி புரிந்துள்ளார். திருக்குறளையும், திருவாசகத்தையும், நாலடி யாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். மணி மேகலைக் கதையை ஆங்கிலத்தில் உரைநடையாக எழுதி யுள்ளார். Poets of the Tamil Lands, Extracts from Pura-nanuru & purapporul Venpa Malai, The lives of Tamil Saints போன்ற இலக்கிய நூல்களையும், Elementary Tamil Grammar போன்ற இலக்கண நூல்களையும், ஆங்கில மொழியில் எழுதியுள்ளார். Royal Asiatic Quarterly, The Indian Magazine போன்ற ஆங்கில இலக்கிய இதழ்களில் தமிழின் பெருமையை விளக்கிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி யுள்ளார். தமிழ்மாணவனாகவே இறுதிவரை வாழ்ந்து மறைந்த இப் பெரியார், தமது நடுகல்லிலும், 'நான் ஒரு தமிழ் மாணவன்' எனக் குறிக்கச் செய்தார்.

7. டாக்டர் கால்டுவெல்

அயர்லாந்து நாட்டில் பிறந்து சமயத்தொண்டு புரியத் தமிழ்நாட்டிற்கு வந்தவரும், மதுரையிலும் திருநெல்வேலி

யிலும் அரிய சமயப்பணியும், தமிழ்ப்பணியும் ஆற்றியவரும் ஆகிய பெருந்தகை கால்டுவெல், திராவிட மொழிகள் ஓரினத்தைச் சார்ந்தவை என முதன்முதலில் உலகிற்கு உணர்த்திய பேரறிஞராவார். 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' The Comparative Grammar of the Dravidian Languages என்ற நூலையும், வரலாற்று ஆராய்ச்சிக்குப் பயன்படும் "திருநெல்வேலிச் சரித்திரம்" என்ற நூலையும் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். பல உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார்.

பிற அறிஞர்கள்

திருக்குறளின் முப்பாலையும் **கிரால்** என்பவர் ஜெர்மனியில் மொழி பெயர்த்தார். **ஏரியல், லேமி லேசர்** என்னும் அறிஞர்கள் திருக்குறளைப் பிரெஞ்சுமொழியில் எழுதியுள்ளனர். சிறந்த தமிழ் அறிஞராக விளங்கிய **லாசரஸ்,** தமிழ்நாட்டில் வழங்கிய 2000 பழமொழிகளை ஒன்று திரட்டி நூல் வடிவில் வெளியிட்டுள்ளார். **பாபரீசிரியர்** என்பார், 1779இல் பேச்சு வழக்கிலுள்ள பல சொற்களையும் சேர்த்து, விரிவான அகராதி ஒன்றை வெளியிட்டார் **ராட்லர்** என்பவர் பல்லாண்டுகளாக உழைத்து 37,000 தமிழ்ச்சொற்களைத் தொகுத்து நான்கு பாகங்களாக அச்சிட்டுள்ளார். தமிழ்நாட்டில் மதத்தொண்டு புரிந்துவந்த **பேர்சிவெல்** என்னும் பேரறிஞர் பல காலமாகத் திரட்டிய 67,000 சொற்கள் அடங்கிய அப் பேரகராதியை **வின்சுலோ** என்னும் வித்தகர் பெரும்பொருட் செலவில் பதிப்பித்தார். இப் பதிப்பிற்குப் பெருந்துணை புரிந்தவர் **சாந்தலர்** ஆவர்.

தமிழ்நாட்டுக் கிறித்தவர்கள்

1. அந்தோணிக்குட்டி அண்ணாவியார்

இவர் வீரமாமுனிவர் காலத்தில் வாழ்ந்து வந்த சிறந்த தமிழ்ப்புலவராவார். இயேசுநாதர்மீது உருக்கமான பல பாடல்களைப் பாடியிருக்கின்றார்.

2. இன்பக் கவி

இவர் எட்டயபுரம் அரசராலும், தஞ்சை சரபோசி மன்னராலும் பெரிதும் பாராட்டப்பெற்றவர். 'குறவஞ்சி நாடகம்' ஒன்றை இயற்றியிருக்கின்றார்.

3. முத்துசாமி பிள்ளை

இவர் சென்னைக் கல்விச் சங்கத்தின் தலைவராக இருந்தவர். எல்லீசரின் விருப்பப்படி தமிழ்நாடு முழுவதும் சுற்றிப் பழம் ஏட்டுச் சுவடிகளைத் தேடிக்கொணர்ந்தார். வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார்.

4. வேதநாயகம் பிள்ளை

இவர் தமிழில் நாவல் என்னும் புதினக் கதை இயற்றுவார்க்குப் பிரதாப முதலியார் சரித்திரத்தை முதன் முதலாக எழுதி நல்வழி காட்டியவர்; எம் மதத்தாருக்கும் சம்மதமான சர்வ சமய சமரசக் கீர்த்தனங்களை எழுதி இசைத்தமிழின் பெருமையை நிலைநாட்டியவர்; பாடல் வசனம் கீர்த்தனங்களை எளிய இனிய நடையில் எழுதி, பாரதிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்; நகைச்சுவை நிரம்பிய நூல்களால் தமிழ் மொழியை அழகு செய்தனர்; பெண்களின் முன்னேற்றத்திற்காகப் 'பெண்மதி மாலை' என்னும் அரிய நூலை இயற்றியவர்.

5. எச். ஏ. கிருஷ்ண பிள்ளை

ஆங்கிலத்தில் ஜான் பனியன் எழுதிய "The Pilgrims Progress" என்ற நூலைத் தழுவி "இரக்ஷணிய யாத்திரிகம்" என்னும் காவியத்தை இயற்றியிருக்கின்றார். பாவத்தில் படிந்த உயிர் கவலையுற்று வாடி, ஆன்ம இரக்ஷகராகிய கிறித்து நாதரை நாடி, அவரது அருளால் நித்திய ஜீவனைப் பெற்றுப் பேரானந்தம் அடையும் இயல்பை விரித்துரைக்கும் காவியமே 'இரக்ஷணிய யாத்திரிகம்' ஆகும். இரக்ஷணிய யாத்திரிகம்

ஆத்ம தியாகத்தின் பெருமையை அறிவுறுத்தும் அருங்காவிய மாகும்.

6. வேதநாயக சாத்திரியார்

இயேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராக வைத்துப் ''பெத்லேகம் குறவஞ்சி'' என்னும் நாடக நூலை இயற்றினர். இந் நூலைப் பாராட்டிச் சென்னை நகரத்தார் செய்த சிறப்பை யெல்லாம் கண்டு களிகூர்ந்த வேதநாயகம் 'சென்னைப் பட்டணப் பிரவேசம்' என்ற நொண்டி நாடகத்தை எழுதினர். ஏற்றப்பாட்டின் வழியாக ஞானத்தை ஊட்டக்கருதிய சாத்திரியார் ''ஞான ஏற்றப் பாட்டு'' என்னும் பொருள் பொதிந்த நூலினை யாத்துள்ளார். பராபரன் உலகத்தையெல்லாம் படைத்த பான்மையை வியந்து, 'ஞானத் தச்சன் நாடகம்' என்னும் பாடலைப் பாடியுள்ளார். இவர் எழுதிய பராபரன் மாலை, ஞானக்கும்மி, ஆதியானந்தம் முதலிய நூல்கள் இத்தகைய இயல்பு வாய்ந்தனவாகும்.

ஞானப்பிரகாச சுவாமியார் என்பவர் பன்மொழி வல்லுநர். சொற்பிறப்பாராய்ச்சியில் சிறந்த தமிழ்ப் பேரறிஞர். சொற் பிறப்பு ஒப்பியல் தமிழகராதி (Etymological and Comparative Lexicon)) தமிழ்ச்சொற் பிறப்பு ஆராய்ச்சி போன்ற நூல்களை எழுதி மொழிநூலாராய்ச்சிக்குப் பேருதவி புரிந்துள்ளார். ஈழந் தந்த மற்ெருரு தமிழ்ப்பேரறிஞர் தனிநாயக அடிகள் ஆவர். இவர் பன்மொழி யறிந்தவர். தமிழ்த் தூதாக உலகெலாம் சென்று தமிழ்மொழியின் பெருமையை உணர்த்திய பெருந்தகை யாவர்.

முகமதியத் தமிழ்த் தொண்டு

மற்ற மதத்தினரைப் போலவே, முகமதியர்களும் பற்பல வகை இலக்கியங்களையும், சில உரைநடை நூல்களையும் இயற்றித் தமிழ்மொழியை வளப்படுத்தியுள்ளனர்.

படிக்காசுப் புலவர் நெஞ்சுருகிப் பாராட்டிய சீதக்காதி என்ற முகமதிய வள்ளல் பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றிய புரவலராவார்.

1. பேரிலக்கியம்

உமறுப்புலவர் இயற்றிய சீருப்புராணம் தமிழ்மக்கள் போற்றிப் பேணத்தக்க பெருங்காப்பியமாகும். எட்டயபுரம் அரசவைக் கவிஞரான 'கடிகை முத்துப்புலவர்' இவருடைய ஆசிரியராவர். வட இந்தியப் புலவன் வாலை வாரிதியை வென்று வாகை சூடித் தம் ஆசிரியர் இறந்ததும், இவரே அரசவைப் புலவராக விளங்கினர். முகமதியவள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கிணங்க இப் புராணத்தை இயற்றினர். அரபிமொழியில் "சீரு" என்றால் வாழ்க்கை என்று பொருள்படும். எனவே, சீருப் புராணம் என்றால், முகமது நபியின் வாழ்க்கை வரலாறு என்பதாகும். இந் நூல் மூன்று காண்டங்களையும் 5,026 பாடல்களையும் கொண்டு திகழ்கின்றது. பெருங்காப்பியக் கவிஞர்களான கம்பர், திருத தக்க தேவர் போன்றோரின் சொற்களையும், கருத்துக்களையும் ஆங்காங்குக் கையாண்டு தம் நூலைத் தமிழ்மணம் கமழச் செய்துள்ளார். நூலின் அமைப்பிலும், வருணனைத் திறத்திலும் ஆசிரியர் மரபு வழுவாது போற்றியுள்ளமை அவருடைய புலமைத் திறத்தை நன்கு எடுத்துக்காட்டுவதாகும்.

2. சிற்றிலக்கியங்கள்

தமிழ்நாட்டில் பிற்காலத்தில் பெருவழக்காக இருந்த பற்பலவகையான சிற்றிலக்கியங்களை முகமதியப் புலவர்களும் பின்பற்றி எண்ணற்ற நூல்களைப் படைத்துள்ளனர்.

(i) ஆற்றுப்படை

29 ஆம் நூற்றுண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து 'குலாம் காதிறு நாவலர்' என்பார், இலக்கிய நயமும் நகைச் சுவையும் கொண்ட 'புலவர் ஆற்றுப்படை' என்ற நூலை இயற்றியுள்ளார்.

(ii) பிள்ளைத்தமிழ்

'முகையதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ்' என்ற நூலை சவ்வாதுப் புலவரும், கற்பனையும் கவிதை நயமும் மிக்க 'நபிநாயகம் பிள்ளைத்தமிழை' சையத் மீரா லெப்பையும் எழுதியுள்ளனர்.

(iii) அம்மானை

உமறுப் புலவரின் மகனுர் களஞ்சியப் புலவர் 'அம்மானை என்ற நூலின் ஆசிரியராவார். காலிப் அலியைத் தலைவனுகக் கொண்டு இனிமையாக எளிய நடையில் பாடப்பட்ட 'பப்பரத்தியர் அம்மானை' என்ற நூலின் ஆசிரியர் சையத் மீராப் புலவர் ஆவர்.

(iv) அந்தாதி

மெக்கா நகரத்தைப்பற்றித் 'திருமக்கா திரிபந்தா'தியும், நாகூரை, 'நாகை அந்தாதி'யும் மதீனு நகரத்தைத் 'திரு மதீனுத்து அந்தாதி'யும் சிறப்பித்துக் கூறுகின்றன.

(v) கோவை

சீதக்காதிமேல் உமறுப் புலவர் பாடிய கோவை நூல், சிறப்புமிக்க ஒன்ருகும்.

3. பாமர இலக்கியங்கள்

பாமர மக்களுக்கென்று முகமதியப் புலவர்கள் இயற்றிய எளிய, இனிய நூல்கள் அனைத்திலும் சிறந்தது "மாலை" என்ற நூலாகும். இவை மாலையைப்போல ஒன்ருேடொன்று பின்னிக்கிடக்கும். முகமது நபியின் புகழ் கூறும் 'முதுமொழி

மாலை' 'பொன்னரிமாலை' திருவிழாக் காலங்களில் ஓதப்படும் ''ரசூல்மாலை'' ஆகியவை முகமதியர்களால் சிறப்பிக்கப்படும் நூல்களில் சிலவாகும். இசை இனிமை வாய்ந்த கீர்த்தனை, திருப்புகழ், ஆனந்தக்களிப்பு, சிந்து, கும்மி போன்ற நூல்களையும், தெம்மாங்கு மெட்டில் தோழிப் பெண் பாட்டு, 'ஏசல்' என்ற இலக்கிய வகைகளையும், முகமதியப் புலவர்கள் கணக்கின்றிக் கையாண்டுள்ளனர்.

4. புதிய இலக்கியங்கள்

முகமதியப் புலவர்கள், போரைச் சித்திரிக்கும் 'படைப் போர்,' அல்லாவைத் தொழும் 'முனஜத்,' வரலாறு கூறும் 'கீசா,' வினு விடையாக அமையும் 'மசலா,' மற்றும் 'நாமா' போன்ற புத்தம் புது இலக்கிய வகைகளையும் தமிழ்மொழிக்குப் புதிதாகப் படைத்துத் தந்துள்ளனர்.

5. ஞான நூல்கள்

தாயுமானவரைப் போன்று ஞான நூல்களை எழுதிப் புகழ்பெற்றவர்களில் தலையாயவர், குணங்குடி மஸ்தான் சாயபு ஆவர். இந்து மதக் கருத்துக்களையும், கடவுளரையும் போற்றி 'மனோன்மணிக் கண்ணி' 'முகையதீன் சாதகம்' 'ஆனந்தக் களிப்பு' போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். உயர்ந்த தத்துவார்த்தக் கருத்துக்களை எழுதிப் புகழ் பெற்ற மற்றொரு முக்கியப் புலவர் 'மச்சரேகைச் சித்தன்' ஆவர்.

முகமதியப் புலவர்கள் இவ்வாறு பற்பல நூல்களை இயற்றித் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியுள்ளனர். மத சம்பந்தமான நூல்களையும் மதத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களையும் பல புலவர்கள் இயற்றியுள்ளனர். முகமதியப் புலவர்கள் இயற்றிய, இலக்கிய மணம் கமழும் உரைநடை நூல்கள் மிகச் சிலவேயாகும். 1500-க்கு மேற்பட்ட அரேபிய, உருதுச்சொற்கள் தமிழ்மொழியில் கலந்துள்ளமை, இத்தகைய நூல்களின் செல்வாக்கையே புலப்படுத்துவதாகும்.

சமணத் தமிழ் தொண்டு

சமண முனிவர்கள் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கண வளர்ச்சிக்கு ஆற்றிய பெருந்தொண்டைத் தமிழகம் என்றென்றும் எண்ணிப் போற்றக் கடமைப்பட்டுள்ளது. தேவார காலத்திற்கு முன்னர் வாழ்ந்த சமண முனிவர்கள், அறத்தையே பெரிதாகக் கருதி அறநூல்களையும், சமய நூல்களையுமே இயற்றினர். தேவார காலத்திற்குப் பின்னர் வாழ்ந்த மக்கள், இலக்கணத்துறையில் பேரார்வம் கொண்டு, பற்பல இலக்கண நூல்களையும். புதுப்புதுப் பாட்டினங்களையும் உருவாக்கினர்; இலக்கியத்துறையிலும் ஈடுபட்டு இறவாத பல காப்பியங்களையும், சிற்றிலக்கியங்களையும், வரலாற்று நூல்களையும், இன்னும் பிற நூல்களையும் இயற்றித் தமிழ்மொழி உள்ளளவும் தங்கள் பெயரை நிலைநாட்டிவிட்டனர்.

தொல்காப்பியம், குறள் ஆகிய நூல்களைச் சமணர் இயற்றினர் எனவும், இயற்றவில்லை யெனவும் மாறுபட்ட கருத்துக்கள் தமிழ்உலகில் நிலவுகின்றன. தொல்காப்பியத்தைப் பற்றித் துணிவாகக் கூற முடியாதென்றாலும் திருக்குறளில், சமணமதச் சாயல் உள்ளதென்பதை மட்டும் மறுக்க முடியாது. சமணர்கள் உறுதியாக இயற்றிய பல்வேறு வகை நூல்களைக் காண்போம்.

1. சமணர் இயற்றிய அறநூல்கள்

(1) நாலடியார் (2) நான்மணிக்கடிகை (3) பழமொழி (4) ஏலாதி (5) திணைமாலை நூற்றைம்பது.

(இந்நூல்கள் பற்றிய குறிப்புக்களைச், "சங்கம் மருவிய காலம்" என்ற பகுதியில் காண்க.)

2. காவியங்கள்

(1) சிலப்பதிகாரம் (2) சிந்தாமணி (3) வளையாபதி (4) சூளாமணி (5) நீலகேசி (6) உதயணன் கதை (7) நாககுமார காவியம் (8) மேருமந்திர புராணம் (9) நரிவிருத்தம்.

("சோழர் காலம்" என்ற பகுதியில் காண்க)

3. உரைநடை நூல்கள்

(1) புராணம் (2) கத்ய சிந்தாமணி

("பல்லவர் காலம்" என்ற பகுதியில் காண்க)

4. இலக்கண நூல்கள்

(1) யாப்பருங்கலக்காரிகை (2) யாப்பருங்கல விருத்தி (3) நேமிநாதம் (4) நன்னூல் (5) அகப்பொருள் விளக்கம் (6) தமிழ் நிகண்டு (7) சூடாமணி நிகண்டு.

("சோழர் காலம்" என்ற பகுதியில் காண்க.)

5. பிற நூல்கள்

(1) வானநூல் (2) நெல்லிலக்க வாய்பாடு, சிறுகுழி வாய்பாடு போன்ற எண்சுவடிகள் (3) கணித நூல்கள், (4) ஜினேந்திரமாலை என்னும் சோதிட நூல்.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் தமிழ்மொழியை வளப்படுத்திய சமண முனிவர்களை இசை நாடக இலக்கிய வளர்ச்சிக்குத் தடையாக இருந்தனர், என்றும் கூறுவர்.

பௌத்தத் தமிழ்த் தொண்டு

அசோக மன்னர் காலத்தில், பௌத்த மதம் தமிழ் நாட்டில் புகுந்து வேரூன்றத் தொடங்கியது. பூம்புகார், உறையூர், பூதமங்கலம் போன்ற இடங்களில் தங்கியிருந்து பௌத்தர்கள் தம் மதத்தைப் பரப்பினர். எண்ணற்ற தமிழர்கள் பௌத்தர்களாகி, அன்னிய நாடுகளுக்குச் சென்று அம் மதத்தைப் போதித்தனர். சீனதேசம் சென்ற 'போதி தர்மர்,' இலங்கை சென்ற 'சங்க மித்திரன்' புத்ததத்தர், வச்சிரபோதி, அனுருதா, வடநாடு சென்று நாளந்தா பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றிய திண்ணுகரர், தருமபாலர் போன்ருேர் குறிப்பிடத்தக்க சிறப்புவாய்ந்த தமிழ்ப் பௌத்தர்கள் ஆவர். இன்னும் பல தமிழ்ப் பௌத்தர்கள் பாலி மொழியைக் கற்று, அம் மொழியில் பல இலக்கியங்களைப் படைத்துள்ளனர்; தாய்மொழியாகிய தமிழிலும் பல நூல்களை இயற்றியுள்ளனர்.

நூல்கள்

1. சங்க காலத்தில், 'இளம் போதியார்' பாடிய நற்றிணை 72 ஆம் பாடல். 2. மணிமேகலை 3 குண்டலகேசி.

இரு நூல்களும் காப்பிய வரிசையில் வைத்துப் போற்றப் படும் சிறப்புடையனவாகும்.

4. விம்பசார கதை: இந் நூலின் ஆசிரியர் யார் என்பது புலப்படவில்லை.

5. சித்தாந்தத் தொகை: பௌத்தசமயக் கொள்கைகளைத் தொகுத்துக் கூறும் நூலாகும். இந் நூலின் ஆசிரியர் பெயரும் இன்னது என்பது விளங்கவில்லை. இந் நூல் முழுவதும் கிடைக்கவில்லை.

6. திருப்பதிகம்: புத்தர்பிரானின் பொங்கும் அருளைத் தொழுது ஏத்தும் முறையில், பத்துப் பாடல்களால் பாடப் பெற்ற ஒரு துதிநூலாகும். பிற நூல்களைப்போலவே, இந் நூலைப்பற்றிய ஒரு விவரமும் தெரியவில்லை.

தற்காலப் புதுக் கவிதைகள்

முன்னுரை

சங்க காலத்தில் கவிஞர்கள் அகவற்பா, கலிப்பா, பரிபாடல் ஆகிய யாப்பு வகைகளில் ஒன்றில் தம் கவிதைகளைப் புனைந்தனர். திருவள்ளுவர் காலத்தில், வெண்பா யாப்பு சிறந்து விளங்கிற்று. பின்னர்த் திருத்தக்க தேவர், கம்பர், சேக்கிழார் காலங்களில், விருத்தப்பா செல்வாக்குப் பெற்றது.

இன்றும் மரபுவழிக் கவிபுனையும் கவிஞர்கள் மேற்கூறிய அகவல், விருத்தம், வெண்பா போன்ற செய்யுள் வகைகளில் ஒன்றைப் பின்பற்றியே தம் பாக்களைப் பாடிவருகின்றனர். எனினும், தற்காலக் கவிஞர்களில் பலர் மரபுவழிக் கவிதையோடு எந்த யாப்பிற்கும் இயையாத, முற்றிலும் வடிவிலும் பொருளிலும் கூடப் புதிய பிறவியாகக் காட்சியளிக்கும் புதுக் கவிதைகளைப் பெரு வழக்காக இதழ்களிலும், புத்தகங்களிலும் படைத்து வருகின்றனர்.

அத்தகைய புதிய கவிதைகளின் இயல்பையும், தோற்றத்தையும், அவற்றின் வளர்ச்சியில் பெருகிய பல வகைகளையும் காண்போம்:

தோற்றம்

பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாகப் பிரான்சு நாட்டில் புரட்சிகரமான போக்கைக் கொண்ட ஒரு புதிய சமுதாயம் தோன்றியது. அச் சமூகத்தில் தோன்றிய சிக்கலான பல சிந்தனைகளைப் பாக்களாகப் பாடுவதற்கு முயன்ற பாதலேர், சிம்போ, மல்லார்மே (Baudelaire, Rimbaud, Mallarme) போன்ற புரட்சிக் கவிகள் பழைய மரபுகளை அடியோடு விட்டு, யாப்பு விடுதலை பெற்ற புதிய கவிதைகளைப் பாட முற்பட்டனர். அப்

பாடல்களின் பெயர்தான் *Verse Libre*. அவற்றை ஆங்கிலத்தில் Free Verse என்றனர்.

அப் புதிய கவிப்போக்கைப் பின்பற்றிச் சென்ற நூற்றாண்டில், அமெரிக்காவில் வாழ்ந்த ஆங்கிலக் கவிஞர் வால்ட் விட்மன் வசனத்தையே வெட்டிக்கட்டி வனப்பு மிக்க கவிதை யாக்கினர்.

நம் நாட்டில் வாழ்ந்த வங்கக் கவிஞர் தாகூர் யாப்பு இலக்கணத்தோடு கவிபாடும் திறம் உடையவராயினும், தம் புகழ் பெற்ற கவிதைப் படைப்பாகிய கீதாஞ்சலியை இலக்கணம் மீறிய புதுமைக் கவிதையாகவே படைத்தார்.

கவிதையிலும் வசனத்திலும் பல ஆய்வுகளைச் செய்து பார்த்தவர் நம் பாரதியார். அவர் வங்கக் கவியின் கீதாஞ்சலியையும், வால்ட் விட்மனின் Leaves of grass என்ற நூலையும் படித்துக் களித்து, அதே போக்கில் "காட்சிகள்" என்ற இலக்கணம் மீறிய புதிய கவிதைப் படைப்பை உருவாக்கித் தமிழ் இலக்கிய வரலாற்றிலே முதன்முதலாகப் புதிய கவிதையின் தோற்றத்திற்கு வழி கோலினர். தமிழில் அமைந்த புதுக் கவிதைக்குத் தந்தை நம் புதுமைக கவிஞர் பாரதியாரே. அவர் பாடிய புதிய கவிதைக்கு ஓர் எடுத்துக்காட்டு:

வெம்மைத் தெய்வமே ! ஞாயிறே ! ஒளிக்குன்றே !
அமுதமாகிய உயிரின் உலகமாகிய உடலிலே
மீன்களாகத் தோன்றும் விழிகளின் நாயகமே !
பூமியாகிய பெண்ணின் தந்தையாகிய காதலே !
வலிமையின் ஊற்றே ! ஒளிமழையே ! உயிர்க்கடலே !

(ஞாயிறு புகழ்)

வளர்ச்சி

பாரதிக்குப் பிறகு புதுக் கவிதை படைப்பதில் ஆர்வம் காட்டியவர் ந. பிச்சமூர்த்தி அதே காலகட்டத்தில் இக் கவிதை முயற்சியில் ஈடுபட்ட எழுத்தாளர்கள் கு. ப. ராஜகோபாலன்

புதுமைப்பித்தன் ஆகியோர் ஆவர். 'மயன்' என்ற பெயரிலே க. ந. சுப்ரமண்யமும், 'நாணல்' என்ற பெயரிலே, பேராசிரியர் சீனிவாசராகவனும் கவிதைகள் புனைந்தனர். புதுக் கவிதையைப் போற்றி வளர்த்த புகழ்பெற்ற பிற எழுத்தாளர்கள் சி. சு. செல்லப்பா எஸ். வைத்தீஸ்வரன், வல்லிக்கண்ணன், சிவ சங்கரன், ஞானக் கூத்தன் போன்றோர் ஆவர்.

இலக்கணத் தூய்மையோடு கவிதை இயற்றவல்ல நா. காமராசன், சிற்பி, செந்தமிழ் மாறன், தமிழன்பன், அப்துல் ரகுமான், புவியரசு போன்றோரும், இப் புதுக் கவிதைகளை மிகுதி யாகவே புனைந்துள்ளனர். இக் கவிதைத் துறையில் பெயர் பெற்ற பிற எழுத்தாளர்கள் மேத்தா, இன்குலாப், அபி போன்றோர் ஆவர்.

கலாமோகினி, கிராம ஊழியன், கணையாழி, கசடதபற, எழுத்து, இலக்கியவட்டம், வானம்பாடி, ஞானரதம், தாமரை, தீபம் ஆகியவை இப் பாவாணர்களை ஆதரித்து எழுதவைத்த சில இதழ்கள் ஆகும். இன்றும் கல்கி, அலிபாபா, கலைமகள், விகடன், குமுதம் போன்ற இதழ்களுங் கூட இக் கவிஞர்களின் படைப்பைப் பெரும் அளவில் வெளியிடுகின்றன.

தோன்றக் காரணம்

வயிற்றுப் பிழைப்பும் வாழ்க்கைப்போராட்டமுமே இன்றைய புதுமைக் கால மனிதனை அலைக்கழிக்கும் அன்றாட சிந்தனையாக இருப்பதால், இந்தப் பொறிஊழியில் மக்கள் மத்தியிலே ஒரே பரபரப்பு! பதற்றம்! வேகம்! விறுவிறுப்பு! கலையுள்ளம் இருந்தாலும், காவியங்களையோ, கவிதைகளையோ ஓரிடத்தில் ஓய்வாக உட்கார்ந்து படித்துச் சுவைக்கநேரமுமில்லை; அதற்குரிய கல்வித் திறமும் இல்லை. அதனால் இன்றைய காலகட்டத்தில் கவிதை நடையை விட உரைநடையின் ஆதிக்கமே உச்சநிலையில் உள்ளது. இத்தகைய காலச் சூழலுக்கு ஏற்ப, கற்பனை வளம் படைத்த தற்காலக் கவிஞர்களும்; பார்வைக்கு உரைநடை போன்ற - அதேநேரத்தில் உண்மையில் கவிப்பண்பு வாய்ந்த, புதுக் கவிதைகளைப் புனைவதில் முற்பட்டுள்ளனர்.

பரிமாறும் படைப்பைச் சுவைக்கவிடாமல் சுவைப்பவரைத் தடுத்து நிறுத்தும் ஒரு தடையாகக் கவிஞர்கள் யாப்பினைக் கருதுகின்றனர். நெஞ்சிலே நினைத்த வண்ணம் படைப்பைப் பக்குவமாகச் சமைக்கவிடாமல் செய்யும் சூழ்ச்சியே இலக்கண விதிகள் என்றும் எண்ணுகின்றனர். அதனாலேயே, யாப்பு நெறிகளைக் கைவிட்டு இத்தகைய கவிதைகளைக் கவிஞர்கள் இயற்றுகின்றனர். யாப்பு என்ற கரையையே உடைத்துக் கொண்டு வரும் உணர்ச்சி வெள்ளமே தற்காலக் கவிதை. "கற்பனைகள் உணர்ச்சி பெற்றுக் கவிதைச் சொற்களாகப் பாய்ந்திடும்போது இலக்கணக் கட்டுப்பாடு எனும் கடிவாளத்தை என்னால் பயன்படுத்த முடியவில்லை; அது எனது பலவீனம்தான்'' என்கிறார், புதுக் கவிதை புனையும் முன்னாள் முதல்வர், கலைஞர் கருணாநிதி அவர்கள். புதுக்கவிதையின் இவ்வியல்பை ஒரு கவிஞர் வசன கவிதையாகவே வடித்துவிடுகிறார்.

> **எதுகையும் மோனையும்**
> **வேண்டவே வேண்டாம்**
> **சீரும் கீரும்**
> **சுத்தச் சனியன்கள்**
> **வெண்பாவும் கிண்பாவும்**
> **விருத்தமும் திருத்தமும்**
> **வேண்டாத தொல்லைகள்** என்கிறார்.

புதுக் கவிதை மதிப்பீடு

புதுக் கவிதை புனைவோர் இயற்கையின் எழிலைப் பாடுவதை விட, வாழ்க்கை நிகழ்ச்சிகள் நம் இதயத்தில் ஏற்படுத்தும் உணர்வு நெகிழ்ச்சிகளையே தம் கவிதைகளில் வடிக்க முயல்கிறார்கள். மனித இயற்கையின் மறைபொருள், மாயங்கள், மானிடனின் மனத்தடுமாற்றங்கள், சலனங்கள், பணக்கார வர்க்கத்தின் பகட்டு ஆணவங்கள்; பாட்டாளி வர்க்கத்தின் பாடுகள்; பட்டினிக் கோலங்கள் ஆகியவற்றைக் கருத்துப் பொருளாகக் கொண்டு இக் கவிஞர்கள் தம் படைப்புக்களை உருவாக்குகின்றனர்.

கம்பனின் கவிமொழியில் இவையும் ''செவிநுகர் கனிகளே'' என்றாலும் சிலர் வார்த்தைச் சேர்க்கைகளையே வனப்பு மிக்க கவிதைகளாகக் கருதுகின்றனர். ஆரவாரச் சொற்களை அடுக்கடுக்காகக் கொட்டினால், கவிதைகள் உருவாகிவிடுவதாகக் கற்பனை செய்கின்றனர்.

தம் இச்சைகளையெல்லாம் பச்சையாகப் படைத்துக் கவிதைகளைக் குறைப் பிரசவமாக ஆக்கிவிடுகின்றனர். படிமங்களைப் (images) படைப்பதிலேயே கருத்தாக இருந்து புலனுக்கோ, புத்திக்கோ, புரியாத வண்ணம் சிலர் புதுக் கவிதைகளைப் புதிர்க் கவிதைகளாகப் புதிய ஓவியம் (modern art) போல வரைந்துவிடுகின்றனர். இதனால், இலக்கிய உள்ளம் கொண்ட பலருக்குப் புதுக் கவிதை என்றாலே எரிச்சல் ஏற்பட்டு விடுகிறது. இக் கவிதைகளைக் 'கோவேறு கழுதைகள்' என்று கிண்டல் செய்கின்றனர். மேனாட்டுக் கற்பனைகளும், பிறமொழிக் கலப்பும் இப் புதுக் கவிதைகளில் மிகுதியாக விருப்பதைக் குறை கூறுகின்றனர்.

புதுக் கவிதைக்குச் சில சான்றுகள்

சித்திர கவியாக அமைந்துள்ள ஒரு புதுக்கவிதை :

கி

பூ

வி

லே

ஒரே கூட்டம்

கலைஞர். மு. கருணாநிதியின் கவிதைகளிலே உணர்ச்சி மிக்க சொல் ஓட்டமும், சொல் விளையாட்டும் இருக்கும். சொல் ஓட்டமான ஒரு புதுக் கவிதை:

எத்தனை ஆறு
இத்தரை மீது

பத்தரை மாற்று
முத்திரைப் பொன்னும்
சித்திர நெல்லைச்
சிரிக்கச் செய்தது; பச்சைப்பட்டு
விரிக்கச் செய்தது; வறுமைப்பேயை
எரிக்கச் செய்தது.

சொல் விளையாட்டிற்குச் சில எடுத்துக்காட்டுகள்:

சேலத்தில் நடந்த கவியரங்கத்தில் பாடுகின்றார்:

ஒட்டுமா பழம் உறவு எனக் கேட்பீர்
ஒட்டுமாம் பழ உறவு
ஒட்டு மாம்பழ உறவு சேலத்தில் இயற்கை!

* * * *

எனக் கிருக்கும் எத்தனையோ வேலைக்கிடை—இதுதான் கவிதை
எனக் கிறுக்கும் எனை அழைத்து என்பால்
தனக் கிருக்கும் பேரன்பை வெளிப்படுத்தப் பெருந்
தயக் கிறுக்கர் அடிகளார் அழைத்திட்டார்.

குன்றக்குடி அடிகளாரை நோக்கிக் கூறுகின்றார்:

தமிழ்த்துறவி என்கின்றார் நும்மை
நான் ஏற்பதில்லை—எதைத் துறந்திடினும்
தமிழை மட்டும் துறந்திடேன் எனச்சொல்லும் நீவிர்
தமிழ்த் துறவி அல்லவே அல்ல.

அறிஞர் அண்ணா இறந்த நிலையில் மிக உருக்கமாகப் பாடுகின்றார்:

காலையிலே மாலையிலே
கடும்பணி ஆற்றுகையில்
எப்பொழுதும் எந்நேரமும்

எப்பொருளிலும் அன்னையே! நீ இருக்கின்றாய்.
அம்மட்டோ!
எங்கள் பணி முடிந்து
என்றோ ஒரு நாள்
உன் மடியில் தூங்க வரும்போதும்
அன்னையே! நீ
அங்கேயும் இருக்கின்றாய்—என்கின்றார்.

புதுக் கவிதைகளிலே பளிச்சிடும் சில சொல் மின்னல்கள்:

ரிக்ஷா—போக்குவரத்தின் சவலைப்பிள்ளை

குழந்தைகள்—இல்லறப் பள்ளியறை வெளியிடும் ஆண்டு மலர்கள்

அனாதைகள்—ஊமையன் பாடிய பாடல்கள்
உயிர் நிழல் இல்லாக் கோடைகள்.

கடல்—முத்துக்களின் பள்ளம்
கப்பலின் சமவெளி
நதிகளின் கல்லறை.

மலர்கள்—வசந்த புத்ரிகள்!
எங்களுடைய பூமித்தாய் ஏந்தும் வர்ண ஜால தீபங்கள்
எங்களைப் பாடவைக்கும் மௌனங்கள்.

தியாகிகள்—வேலியைப் பாதுகாக்க மடிகின்ற பயிர்கள்.

புத்தகம்—கருத்துக்கள் உறங்கும் காகிதப் படுக்கை.

(—நா. காமராசன்
கவிதைகள்)

நிழல்கள்—மண்ணின் மச்சங்கள்
மரத்தின் எச்சங்கள்
வெய்யில் தாங்காமல்
விரைந்து வரும் காலுக்குச்
சிறிது நேரச் செருப்புகள்!
சூரிய நெருப்பு
சுடுகின்ற பாதத்தில்
ஒத்தடம் கொடுக்கும்
நிழல் ஒற்றர்கள் (மேத்தா)

புதுக்கவிதை வடிவில் அமைந்த ஒரு சொல்சித்திரம் உரிமைப் போராட்டத்தை அப்துல் ரகுமான் ஓர் ஓவியமாகவே வரைந்து காட்டுகின்றார்:

உடல் தூரிகைகள்
கண்ணீர் வியர்வை ரத்த
வண்ணங்கள் தோய்ந்து
தியாகத் திரைச் சீலையில்
தீட்டிய சித்திரம்
இந்தச் சுதந்திரம் என்கின்றார்.

இது போன்று புதுக் கவிதையில் எண்ணற்ற சொல் சித்திரங்கள் உண்டு. நிலவைப்பற்றி ஒரு நையாண்டிச்சித்திரம்:

விட்டெறிந்த இட்டலியோ
கட்டி வைத்த பழஞ்சோறே
கொட்டி விட்ட கப்தயிரோ
சுட்டு வைத்த அப்பந்தானே?

என்ன இழவேயானாலும்
எட்ட இருந்து சிமிட்டுது கண்
கிட்ட வந்து எட்ட வில்லை
பாடுபட்ட பாட்டாளி

கொட்டாவி விடுகின்றேன்
ஆவ்.........
உறக்கம் வருது பசி மறக்க.

ஒரு சிரிப்புச் சித்திரம்:

தலையைச் சொறி
நாக்கைக் கடி
பல்லை இளி
முதுகை வளை
கையைக் கட்டு
காலைச் சேர்
என்ன இது ?
வயிற்றைக் கேள்
சொல்லு மது.

சரிந்து கிடக்கும் இன்றைய சமுதாயத்தை இப் புத்திளம் கவிஞர்கள் நொந்து பார்க்கும் நோக்கு நம் நெஞ்ச இமைகளை நனைக்கிறது.

ஏழைகளே என் தெய்வம்! சேரிகளே என் சேவை!
அவர்களுக்குச் சுகம் கொடுக்கும் தலைவனுக்கு
நான் தொண்டன்! என்கின்றார்.

அவர்கள் வாழும் வீட்டை வேதனையோடு வருணிக்கின்றார்.

வெயிலடித்தால் மண்மேடு
மழை விழுந்தால் புதைசேறு
புயல் அடித்தால் காற்றடி ஆகும்
கூரைவீடு!
மழை விழுந்தால் குளமாகும்
வெயிலடித்தால் குடை பிடிக்கும்
அழுக்கான பழங் கூரை. என்கின்றார்.

* * * *

கங்கை நதி பாய்ந்தாலும்
சமூகத்தில் மேடு பள்ளங்கள்
தகர்க்கப் படாதவரை எனது
தாய்நாடு ஒரு சகாராதான்!
இங்கே எத்தனை மனித ஜீவன்கள்
அவையெல்லாம் சகாராவைத்
தாண்டாத ஒட்டகங்கள் தானே!

* * *

நாங்கள்...நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்
ஆடைவாங்குவதற்காக.

என்று நா. காமராசன் விலைமகளிர் வாழ்வை மிக உருக்கமாக உரைக்கின்றார்.

அவரைப் போலவே, கவிஞர் மேத்தா, மிகச் சோகமாகக் கண்ணீர்ப் பூக்கள் என்ற தம் நூலிலே நாட்டின் நலிந்த நிலையைத் தீட்டிக் காட்டுகின்றார்.

'தேசப் பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி' என்ற தலைப்பில் பாடுகின்றார்:

தேசப் படத்திலுள்ள கோடுகள்
விடுதலைக்குப் போராடிய
வீரத் தியாகிகளின்
விலா எலும்புக் கூடுகள்

தேசம் போகிற போக்கைப் பார்த்தால்
பிறந்த நாள் உடையே
எங்கள் தேசிய உடை
யாகிவிடும் போல் இருக்கிறது.

* * *

சேரிகளில் மட்டுமே நீ
யாத்திரை செய்வாய்
என்பதைத் தெரிந்துகொண்டதால்
உன்னை நேசித்தவர்கள்
தேசத்தையே
சேரியாக மாற்றிவிட்டார்கள்.

*　　*　　*

எங்கள் வயிற்றைப் புறக்கணித்துவிட்டுக்
காம்புகளை நேசிக்கிறார்கள்.

எங்களுக்குத் தீவனம் கிடைக்காவிட்டாலும்
மேய்ப்பர்களுக்கு மட்டும்
எப்படியோ இனும் கிடைத்துவிடுகிறது.

அணைக்கட்டுகளில்
திறக்கப்படும் தண்ணீர்
பள்ளங்களை ஏமாற்றிவிட்டு
மேட்டை நோக்கியே
பாய்கிறது.

—என்று மேத்தா உருக்கமாகப் பாடுகிறார்.

இத்தகைய உள்ளம் தோய்ந்த உணர்ச்சிமிக்க புதுக் கவிதைகளுக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்று உறுதியாகக் கூறலாம்.

பல்கலைக் கழக வினாக்கள்

சங்க காலம்

1. "தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலமே தலைசிறந்த காலம்" — இக் கொள்கையை ஆராய்க.

2. பாண்டியர் மதுரையில் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தார்கள் என்பதற்குச் சான்று தருக.

3. சங்கத் தமிழின் சிறப்பியல்புகளைச் சுருக்கமாக உணர்த்துக.

4. சங்க இலக்கியத்தின் தனிச் சிறப்புக்களைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

5. புறநானூறு (அல்லது) பத்துப்பாட்டு பற்றிய இலக்கிய வரலாறு என்ன?

6. புறநானூறு (அல்லது) பதிற்றுப்பத்து வரலாற்று நூலாகவும் விளங்குகின்றது என்பதைத் தெளிவுபடுத்துக.

7. தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியத்தின் சிறப்பை மதிப்பிடுக.

8. எட்டுத்தொகை அல்லது பத்துப்பாட்டு பற்றி ஒரு கட்டுரை வரைக.

9. 'சங்க இலக்கியங்களின் பெற்றி' என்பது பற்றிக் கட்டுரை எழுதுக.

10. கடியலூர் உருத்திரங்கண்ணனார், ஒளவையார், நக்கீரர் இவர்களுள் இருவர் ஆற்றிய தமிழ்த் தொண்டினை விளக்குக.

11. சங்க இலக்கியத்தில் தொகை நூல்கள் அல்லது சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகள் அல்லது தமிழ் இலக்கிய உலகில் தொல்காப்பியம் என்பது பற்றிக் கட்டுரை வரைக.

சங்கம் மருவிய காலம்

1. சங்க காலத்து நீதி நூல்களின் சிறப்பை எழுதுக.
(பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள நீதிநூல்களைத்தான் இவ் வினா குறிக்கிறது)
2. பதினெண் கீழ்க்கணக்கின் இலக்கிய வரலாறு யாது?
3. சிலப்பதிகாரம் அல்லது திருக்குறள் தமிழ் இலக்கியத்தில் பெருமையுடன் விளங்குதலை ஆராய்க.
4. தமிழில் காப்பிய வளர்ச்சிபற்றிக் கட்டுரை எழுதுக.
5. நப்பூதனார், முன்றுறையரையர் இருவரும் ஆற்றிய தமிழ்த் தொண்டினை விளக்குக.
6. தமிழ்க்காப்பியங்கள், அல்லது சங்கம் மருவிய காலத்து நீதிநூல்கள் பற்றிய விளக்கக் கட்டுரை எழுதுக.

பல்லவர் காலம்

1. பக்தி இலக்கியம் வளர்ந்த வரலாறுபற்றி எழுதுக.
(சைவ வைணவ இலக்கியங்களை எழுத வேண்டும்.)
2. தேவார திருவாசகம் அல்லது நாலாயிரப் பிரபந்தம் பற்றிக் கட்டுரை வரைக.
3. இடைக் காலத்துப் பக்தி இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கட்டுரை எழுதுக.
4. இடைக்கால உரையாசிரியர்கள பற்றி எழுதுக.
5. பௌத்த சமணர்கள் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உதவிய நூல்கள் பற்றி விளக்கி எழுதுக.
6. பக்தி இலக்கியங்கள் அல்லது முத்தொள்ளாயிரம் திரிகூடராசப்பக் கவிராயர் அல்லது உரையாசிரியர்கள் தமிழ்த்தொண்டு என்பதுபற்றி விளக்கி எழுதுக.

சோழர் காலம்

1. தமிழில் பெருங்காப்பியம் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறுக. (ஐம்பெருங் காப்பியங்கள்)
2. கம்பர் காலத்துத் தமிழ் இலக்கியம்பற்றி நீவிர் அறிவன யாவை?
3. கம்பருக்கு முற்பட்ட தமிழ்க் காவியங்களைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (ஐம்பெருங் காப்பியங்கள்)
4. ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர், அல்லது சேக்கிழார் பற்றிக் கட்டுரை எழுதுக.
5. பிற்காலச் சோழர் கால இலக்கியங்கள் என்பதுபற்றிக் கட்டுரை எழுதுக.

நாயக்கர் காலம்

1. பிள்ளைத்தமிழ், குறவஞ்சி—இவற்றுள் ஏதேனும் ஒன்றன் அமைப்பும் நயமும் காட்டி ஒரு கட்டுரை எழுதுக.
2. குமரகுருபரர், சைவ மடங்கள், தமிழ் வளர்த்த திறத்தினைப்பற்றி எழுதுக.

ஐரோப்பியர் காலம்

1. மேலைநாட்டு நல்லறிஞர் தமிழ்மொழிக்குச் செய்துள்ள சேவையை மதிப்பிடுக.
2. கிறித்தவப் புலவர்கள் தமிழிலக்கியத்திற்குச் செய்த தொண்டு.
3. பௌத்தர்கள் தமிழ்த்தொண்டு.
4. சமணர்கள் அல்லது ஐரோப்பியர்கள் தமிழ்வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுபற்றி மதிப்பிடுக.
5. முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்பற்றி எழுதுக.

6. தமிழ் இலக்கியத்தில் உரையாசிரியர்கள் பெற்றுள்ள இடத்தையும், சிறப்பையும்பற்றி ஒரு கட்டுரை வரைக.
7. உரைநடை இலக்கிய வளர்ச்சி: ஒரு கட்டுரை எழுதுக.
8. தமிழ் உரைநடையின் வளர்ச்சி: ஒரு கட்டுரை வரைக.
9. இருபதாம் நூற்றாண்டுபற்றிய இலக்கிய வரலாற்றை எழுதுக.
10. இருபதாம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை நூல்கள் பற்றி மதிப்பிடுக.
11. சிறுகதையின் இலக்கணம் கூறி, அஃது ஒரு சிறந்த இலக்கிய வகையாகும் என்பதை ஆராய்க.
12. தமிழில் சிறுகதையும் நாவலும்பற்றிய வரலாற்றை எழுதுக.
13. இசைத்தமிழின் இலக்கிய வரலாறு யாது?
14. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாடக வளர்ச்சி என்பதைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
15. நாடக நூலாசிரியர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
16. பௌத்தர்கள் தமிழ்வளர்ச்சிக்குச் செய்த தொண்டு எத்தகையது?
17. வீரமாமுனிவரின் புலமையும் தொண்டும்பற்றி ஒரு கட்டுரை வரைக.
18. ஐம்பெருங் காவியங்கள்பற்றி விளக்கம் எழுதுக.
19. தற்கால உரைநடை வளர்ச்சிபற்றி எழுதுக.
20. தமிழில் கதை இலக்கியம்பற்றி விளக்கி எழுதுக.
21. நக்கீரர், சேக்கிழார், நச்சினார்க்கினியர், சிவப்பிரகாசர் —இவர்களுள் இருவர் ஆற்றிய தமிழ்த்தொண்டை விளக்குக.
22. சங்க இலக்கியம் அல்லது பக்திப் பாடல்கள்பற்றி எழுதுக.
23. நாடக இலக்கியம்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

24. குமரகுருபரர், ஆறுமுகநாவலர், இராமலிங்க சுவாமிகள், வேதநாயகம் பிள்ளை, மறைமலையடிகள், திரு. வி. கலியாணசுந்தரனார்—இவர்களுள் இருவர் ஆற்றிய தமிழ்த்தொண்டை விளக்குக.

25. காவியங்களின் வளர்ச்சி (அல்லது) சிறுகதை இலக்கியம் (அல்லது) உரையாசிரியர்களின் தொண்டுபற்றி ஒரு கட்டுரை எழுதுக.

26. ஐரோப்பியர் தொடர்பால் தமிழ் அடைந்த வளர்ச்சியைப்பற்றியாவது, இந்த நூற்றாண்டின் சிறந்த கவிஞர் ஒருவரைப்பற்றியாவது விளக்கம் தருக.

27. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (அல்லது) சமய இலக்கியங்கள் (அல்லது) தமிழ் உரைநடை வளர்ச்சி.

28. உமறுப்புலவர், சிவப்பிரகாசசுவாமிகள், மகாவித்துவான மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார், திரு. வி. க. இவர்களுள் இருவர் ஆற்றிய தமிழ்ப்பணிகளை விளக்குக.

29. தமிழ்க்காப்பியங்கள் (அல்லது) சிற்றிலக்கியங்கள் (அல்லது) தமிழ் இசை வளர்ச்சிபற்றி எழுதுக.

30. வீரமாமுனிவர், அருணாசலக்கவிராயர், ஆறுமுகநாவலர், சோமசுந்தர பாரதியார், டாக்டர் உ. வே. சாமிநாதையர், பாரதிதாசன்—இவருள் இருவர் ஆற்றிய பணிகளை விளக்குக.

31. ஒன்றுபற்றி இலக்கிய வரலாற்றுக் கட்டுரை எழுதுக.

எட்டுத்தொகை நூல்கள்.

பிற்காலத்துத் தோன்றிய அறநூல்கள்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கதை நூல்கள்.

32. திரிகூடராசப்பக் கவிராயர், அருணகிரிநாதர், வி. கோ. சூரியநாராயண சாத்திரியார், டாக்டர் கால்டுவெல், சம்பந்த முதலியார் - இவர்களுள் இருவர் ஆற்றிய தமிழ்த்தொண்டினை விளக்குக.

33. ஒன்றுபற்றி இலக்கிய வரலாற்றுக் கட்டுரை எழுதுக.
(i) பத்துப் பாட்டு (ii) வைணவ இலக்கியங்கள் (iii) இருபதாம் நூற்றாண்டின் இசைத் தமிழ் இலக்கிய வளர்ச்சி.

34. தாயுமான சுவாமிகள், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, வீரமாமுனிவர், பாரதிதாசன் இவர்களுள் இருவர் ஆற்றிய தமிழ்த் தொண்டினை விளக்குக.

35. ஒன்றுபற்றி இலக்கிய வரலாற்றுக் கட்டுரை எழுதுக.
(i) சங்ககாலம் தமிழ் இலக்கியத்தின் பொற்காலம்.
(ii) சமணர் தமிழ்த்தொண்டு.
(iii) தமிழில் உரைநடை வளர்ச்சி.

36. ஒட்டக்கூத்தர், குமரகுருபரர், புகழேந்திப்புலவர், நக்கீரர், புதுமைப்பித்தன் இவர்களுள் இருவர் ஆற்றிய தமிழத்தொண்டினை விளக்குக.

37. ஒன்றுபற்றி இலக்கிய வரலாற்றுக் கட்டுரை எழுதுக.
(i) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.
(ii) ஐம்பெருங் காப்பியங்கள்.
(iii) தமிழில் சிறுகதை வளர்ச்சி.

38. கபிலர், நச்சினார்க்கினியர், வில்லிபுத்தூரார், சிவப் பிரகாசர், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை—இவர் களுள் இருவர் ஆற்றிய தமிழ்த்தொண்டினை விளக்குக.

39. கீழ்க்கண்டவற்றுள் ஒன்றுபற்றி இலக்கிய வரலாற்றுக் கட்டுரை எழுதுக.
(i) பல்லவர் காலத்தெழுந்த பக்தி இலக்கியங்கள்.
(ii) மேலை நாட்டவர் செய்த தமிழ்த்தொண்டு.
(iii) தமிழில் நாவல் வளர்ச்சி.

40. நப்பூதனார், முன்றுறையரையர், கச்சியப்பர். தாயுமானவர், கல்கி – இவர்களுள் இருவர் ஆற்றிய தமிழ்த் தொண்டினை விளக்குக.

41. இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள்: கட்டுரை எழுதுக.

42. இராமலிங்க அடிகள், புதுமைப்பித்தன்—இருவரைப் பற்றி விளக்கி எழுதுக.

43. ஆறுமுக நாவலரும் மறைமலையடிகளும்—தமிழுக்குச் செய்த தொண்டுகள்பற்றி விளக்கி எழுதுக.

44. திரு வி. க., வேதநாயகம் பிள்ளை – இவர்களின் தமிழ்த் தொண்டுகள்பற்றி விளக்கம் தருக.

45. இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்கள்பற்றிய கட்டுரை அல்லது தமிழில் எழுந்த சிறுகதை நாவல்களின் வரலாறுபற்றி எழுதுக

46. பாரதிதாசன் தமிழ்த் தொண்டு, அல்லது தொடக்ககால நாவல்களும இக்கால நாவல்களுமபற்றி எழுதுக. (அ) தமிழில் சிறுகதைகளபற்றி ஆயவுரை எழுதுக.

47. 'கவிஞர் பாரதியார் புதுமை இலக்கியச்சிற்பி': ஆராய்க.

48. இக்கால நாடகத்தமிழ் அல்லது இக்காலத் திங்களிதழ்கள்பற்றிக் கட்டுரை வரைக.

49. இருபதாம் நூற்றாண்டுத்தமிழ் மறுமலர்ச்சியின் உயிர் நாடி பாரதிதாசன் என்னும கூற்றினைச் சான்றுகள் காட்டி விளக்குக.

50. இருபதாம் நூற்றாண்டில் புனைகதை இலக்கியம் அடைந்திருக்கும் வளர்ச்சியை ஆராய்க.

———

தலைமை நிலையம் :

79, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி-6

மதுரை-1 கோயமுத்தூர்-1

கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

அப்பர் அச்சகம், சென்னை-1.